# இராமாமிர்தம்

இதழ் – 01

## கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்
## இராமநாதபுரம்
## கிளிநொச்சி
## 2012

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமாமிர்தம்


க.தண்டாயுதபாணி
சமாதான நீதவான்
(அகில இலங்கை)
03/12/வதி/கீழ்/540
இராமநாதபுரம்,
கிளிநொச்சி.


## இதழ்: 1


கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்
கிளிநொச்சி
2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| **நூல்** | : | இராமாமிர்தம் |
| **வெளியீடு** | : | **01** |
| **பதிப்பு** | : | கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்<br>கிளிநொச்சி |
| **அச்சுப்பதிப்பு** | : | மதி கலர்ஸ் பிறிண்டர்ஸ்<br>முருகேசர் லேன்,<br>நல்லூர்.<br>**021 2229285** |
| **பக்கங்கள்** | : | xvii+213 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூரநோக்கு (Vision)

**மாறிவரும் உலகில் நெருக்கடி மிக்க சாவல்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய அறிவு, பொருளாதார நோக்குடைய கல்வியை வழங்குதல்.**

*Offer an education to face the challenges of the changing and traddicking world inteectually and economicaly*

## பணிக்கூற்று (Mission)

**மாற்றமடைந்து வரும் உலகில் மாற்றங்களை எதிர்கொள்ளக் கூடிய சிக்கல் நிறைந்த சவால்களுக்கு தீர்வுகாணும் உடல், உள, திறன் வளர்ச்சியுடைய மாணவர் சமுதாயத்தை உருவாக்கி சமுதாயத்துடன் இணைத்தல்**

*Create a student society which will face the challenging and changing world physicaly, psychologically and skilfully in order to join the larger comunity.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அதிபர்

திரு. சி. முருகானந்தன்

சி.ந.தண்டாயுதபாணி
சமாதான நீதவான்
(அகில இலங்கை)
03/12/வகி/நீமு/540
இராமநாதபுரம்,
கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக்கீதம்

இராகம் : பிலஹரி

தாளம் : ஆதி

வளர்புகழ் ஓங்குகவே வளர்மதி போல்
வான்புகழ் தாங்குகவே வளர்மதி போல்
காலையிலே எழு கதிரவன் ஒளிபோல்
ஞாலம் முழுதும் ஒரு ஞான சூரியன் என
(வளர்)

செந்நெல் நிறைகளனி வண்ணப்பலாவின் சோலை
தென்னை கமுகொடுமா கன்னல் வாழை செழிக்க
கன்னித் தமிழ்வளர கணிதம் கலைவளர
இராமநாதபுர மகா வித்தியாலயம் வளர

இயல் இசை நாடகம் இன்தமிழுடனே
வயமுறு காவியம் ஓவியம் வளர
செயன்முறை விஞ்ஞானம் சிறந்த விவசாயம்
நயமுறும் இலக்கியம் நன்மணம் கமழ

வற்றா வளம்திகழ் இராமநாதபுரம்
வையகம் மீதினிலே நன்றே வாழியவே
கற்றார் மதித்திடும் மகா வித்தியாலயமே
காலமெல்லாம் பணி செய்தே வாழியவே.
(வளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர் வெளியீட்டுக் குழு

**முதல்வர், காப்பாளர்**
திரு.சி.முருகானந்தன் (அதிபர்)

**இணைப்பாளர்**
திருமதி இ.திருநாவுக்கரசு (பிரதி அதிபர்)

**பொறுப்பாசிரியர்**
திரு செ.இராஜேஸ்வரன் (ஆசிரியர்)

**செயலாளர்**
திருமதி ச.பராசக்தி (ஆசிரியை)

**பொருளாளர்**
திரு.க.ஜெயக்குமார் (ஆசிரியர்)

**இதழாசிரியர்கள்**
திருமதி ச.நிர்மலன்
திருமதி சீ.கலைவாணி
திருமதி ஸ்ரீ.இளங்குமரன்

**ஆலோசனையும் பகுப்பாய்வும்**
திருமதி த.சிவலிங்கம
திரு.இ.ரமேஷ்குமார்
செல்வி.தே.பொன்னுத்துரை
செல்வி.அ.யாழினி
திரு.சி.சுதாகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண கல்வி அமைச்சு செயலாளரின் ஆசிச்செய்தி

1955ம் ஆண்டு விவசாயக் குடியேற்றத் திட்டமாக உருவாக்கப்பட்ட இராமநாதபுரம் கிராமத்தில் கிளி/இராமநாதபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை என்ற பெயருடன் ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலையானது ஒன்றுபட்ட மனித உள்ளங்களின் உழைப்பினால் படிப்படியாக விரிவடைந்து இன்று கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம் என்ற பெயருடன் மாணவச் செல்வங்களுக்கு தன்னிகரற்ற கல்விச் சேவையை வழங்கி வருவதையிட்டு உளம் பூரிப்படைகின்றேன்.

2010ஆம் ஆண்டு இடம்பெற்ற மீள் குடியமர்வின் பின்னர் இப்பாடசாலை மீளவும் செயற்படத் தொடங்கியது. சேதமடைந்த பாடசாலை கட்டடங்கள் புதுப்பிக்கப்பட்டதுடன் பாடசாலைச் சுற்றுப்புறம் பூந்தோட்டங்களால் அலங்கரிக்கப்பட்டு பாடசாலையை பழைய நிலைக்கு கொண்டு வந்திருப்பது மிகவும் பாரட்டத்தக்கவொரு அம்சமாகும்.

மாணவர்களுக்கு கற்பிக்கும் கல்வியானது சமூக விழுமியங்களைப் பாதுகாத்து மேம்படுத்தவும் மனநிறைவை கொடுப்பதாகவும் அமைதல் வேண்டும் அது மாத்திரமல்லாது குறை நிலையிலிருந்து தானும் பிறரும் வாழ்வதற்கான அதிக வாய்ப்புக்களை உருவாக்கி உயர் நிலையை நோக்கி வழிநடத்தக்கூடிய வகையில் கல்வி அமைய வேண்டும். அத்துடன் கல்வியானது மாணவர்களுக்கு மனப்பக்குவத்தை மட்டுமல்லாது வாழ்வையும் சமூகத்தையும் உயர்த்தக்கூடிய வகையில் கல்வியை அதிபரும் ஆசிரியர் குழாத்தினரும் தமது கடமை என கருதாது அப்பால் சென்று பணியாற்ற வேண்டும் என்பதே எனது பேரவா.

மேலும் பாடசாலை வரலாறு ஆவணப்படுத்தப்பட வேண்டும் என்ற உயரிய சிந்தனையோடு முதன் முதலில் பாடசாலையின் "இராமாமிர்தம்" எனும் நூலினை வெளியிட வேண்டும் என்ற முயற்சி வரவேற்கத்தக்க ஒரு விடயமாகும். இந் நூலானது மாணவர்களுக்கு பயன்படத்தக்க நல் ஆக்கங்களையும் கல்விச் சமூகத்தினருக்கு தேவையான கருத்துக்களையும் தாங்கி வர வேண்டும் என எதிர்பார்க்கின்றேன்.

மாணவர்களின் ஆற்றலை வெளிக்கொணர்வதில் ஆர்வமுடைய அதிபரையும், அர்ப்பணிப்பு மிக்க ஆசிரியர்களையும் கொண்ட இக் கல்விச்சாலை பெற்றோர்களின் ஒத்துழைப்புடனும் பழைய மாணவர்களின் பங்களிப்புடனும் மென்மேலும் சிறந்த சேவையை நாட்டிற்கு வழங்க வேண்டும் என வாழ்த்தி இறையாசியையும் வேண்டி நிற்கின்றேன்.


**சி.சத்தியசீலன்**

செயலாளர்

கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு

வடமாகாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக உயர்வுக்காய் உழைத்து உயர வாழ்த்துக்கள்

கிளிநொச்சி மாவட்டத்தின் தொன்மைமிகு குடியேற்ற வரலாற்றில் குடியான்கள் குடியேற்ற திட்டமாக ஆரம்பிக்கப்பட்ட இராமநாதபுரம் 1958ம் ஆண்டில் தொடங்கப்பட்ட போது குடியேற்றவாசிகளின் கல்வி அபிவிருத்திக்காக நிறுவப்பட்ட மாவட்டப் பாடசாலைகளில் கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயமும் ஒன்றாகும். இந்த கல்வி மையத்துக்கூடாக நிகழ்த்தப்பட்ட கல்வி சாதனைகள் பற்றி நான் அறிவேன். அறிவு, திறன், உளப்பாங்கு ஆகிய மூன்று செயன்முறைகளுக்கூடாக அறிதல் புலத்தில் பலரை துலங்கச் செய்துள்ள இப்பாடசாலை சமூகம் மதிக்கும் பல நல்ல மாணாக்கர்களை உருவாக்கி தனது முத்திரையை பதித்துள்ளது. அவ்வாறான பெருமை மிகு சேவையில் உழைத்து நிற்கும் அதிபர் ஆசிரியர்கள் பெற்றோர்கள் அனை வரையும் நான் உளமார பாராட்டுவதுடன் நாளைய உலகில் நல்ல பிரஜைகளாக முளைவிடும் அனைத்து மாணவச் செல்வங்களையும் பாராட்டி மகிழ்வடைகின்றேன்.

**திருமதி. றூ. கேதீஸ்வரன்**
அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்,
கிளிநொச்சி மாவட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி

கிளிநொச்சி கல்வி வலயத்திலுள்ள முன்னணி வகிக்கின்ற பாடசாலைகளில் ஒன்றாக கிளி/இராமநாதபுரம் ம.வியும் மிளிர்கின்றது. எமது வலயத்தின் கல்வி, கலை, பண்பாட்டு நிகழ்வுகள் யாவற்றிலும் முனைப்புடன் செயற்பட்டு கோட்டம், மாவட்டம், தேசியம் ஆகிய மட்டங்களில் கலந்து கொண்டு வாகை சூடிய பெருமையும் இப்பாடசாலைக்கு உரித்தாகும்.

இங்கே 2007ஆம் வருட காலப்பகுதியிலே நான் அதிபராக கடமையாற்றிய காலத்தில் "சுட்டாலும் சங்கின் வெண்மை மாறாததாய்" பாரம்பரியங்கள், பழக்கவழக்கங்கள் என்பனவற்றால் பின்பற்றப்பட்டு வந்தமையை நன்கறிவேன். அத்துடன் பொதுப்பரீட்சைகளில் அதிசிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்டதுடன் பல்கலைக்கழக அனுமதிக்காக செல்கின்ற வீதமும் அதிகரித்துக் கொண்டே செல்வதைக் காணமுடிகின்றது.

இனிமையாகச் செயற்பட்டுக் கொண்டிருந்த காலப்பகுதியிலே தான் புயல்வீச ஆரம்பித்தது எனலாம். யுத்த அனர்த்தத்தினால் இடம்பெயர வேண்டிய சூழ்நிலையும் பாடசாலையின் அபிவிருத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தியது. மீள்குடியேற்றத்தின் பின்பு, முன்பு இருந்த அடையாளச் சின்னங்கள் அழிவடைந்திருந்தாலும் இன்று மெருகூட்டப்பட்டு எழிலுடன் காட்சி தருவதனையும் காணமுடிகின்றது.

இதுவரை காலமும் காணப்பட்ட விடயங்களை ஆணிவேராய் ஊன்றித் துளிர்ந்திடும் விருட்சமாக "இராமாமிர்தம்" என்னும் பெயருடன் வெளியீடு செய்யப்படுகின்ற இக் கன்னிச் சஞ்சிகைக்கு எனது நல்லாசிகளை நல்குகின்றேன். இச் சஞ்சிகை போன்று எதிர்வரும் காலங்களிலும் பயனுறுதி மிக்க சஞ்சிகைகளை வெளியீடு செய்து மேன்மைபெற எனது மனப்பூர்வமான வாழ்த்தினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.க.முருகவேல்**
வலயக் கல்விப் பணிப்பாளர்
வலயக் கல்வி அலுவலகம்
கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

வட்டக்கச்சி இராமநாதபுர மகா வித்தியாலயத்தில் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வு நடைபெறவுள்ளது. வித்தியாலயம் 1956 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படிருந்தாலும் ஐம்பத்தாறு ஆண்டுகளுக்குப் பின்னர் இராமாமிர்தம் என்ற பெயரில் சஞ்சிகை ஒன்று வெளிக்கொணரப்படுகின்றது. இவ்வெளியீட்டுப் பணிக்காக வட்டக்கச்சி இராமநாதபுர மகா வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் பெருமுயற்சி செய்வது பாராட்டத்தக்கது. திரு. சி. முருகானந்தன் தன்னுடைய அதிபர் கடமை களுடன் இத்தகைய பண்பாட்டுப் பணியினையும் செய்வது சிறப்பு மிக்கதாகும்.

ஆசிரியர் திரு. செ. இராஜேஸ்வரன் அவர்கள் இந்த இதழுக்கு உயிர் வழங்குவதிலே மிகுந்த ஈடுபாடுடையவராக உள்ளார். வித்தியாலயத்தினு டைய நிகழ்ச்சிகள், முன்னேற்றங் கள், மாணவர்களுடைய திறன் வளர்ச்சிகள் ஆகியவற்றினை ஆவணப்படுத்துதற்கு இத்தகைய இதழ் பேருதவியாக இருக்கும். ஆசிரியர்கள் மாணவர்கள் ஆகியோர் ஒற்றுமையாக இம் முயற்சியிலே ஈடுபடுவதன் மூலம் ஒற்றுமையுணர்வு, தலைமைத்துவம் ஆகியன வளர்ச்சி யடையும். மாணவர்களுடைய எழுத்தாற்றலை வளர்க்கவும் இவ்விதழ் உதவுமென்பதில் ஐய மில்லை. எனவே, இராமாமிர்தம் இதழ் சிறப்பான முறையிலே வெளிவருதற்கு என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

**பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ்**
வாழ்நாட் பேராசிரியர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

1978 ஆம் வருடம் யூன் மாதம் இரண்டாம் திகதி, எனது வாழ்வின் வசந்தகாலம். ஆம் எனது படிப்பினை இடைநிறுத்தி மாணவன் என்ற கட்டத்தினைத்தாண்டி, ஆசிரியர் பதவியினை எனக்களித்த பாடசாலைதான் உங்கள், இல்லை எங்கள் இராமநாதபுரம் மகா வித்தியாலயம் என்றால் வியப்பாக இருக்கின்றதா! இற்றைக்கு 34 வருடங்கள் பறந்தோடி விட்டன. அன்று எனக்கு வயது 20 தாண்டியது. இப்போது 55 வயதைத் தாண்டியது. அன்று இளைஞன். இன்று வயோதிபன். மூன்று தசாப்தங்கள் தாண்டி நினைத்துப்பார்க்கின்றேன்.

என்னுடன் திருவாளர்கள் மகேந்திரம், அருந்தவரட்ணம் ஆகியோரும் இப்பாடசாலைக்கு ஆசிரியராக நியமனம் பெற்றனர். அப்பொழுது ஆசிரியர்களான திருவாளர்கள் செல்லையா (எனது குரு), ஐயாத்துரை, கோபால பிள்ளை, சாம்பசிவம், கதிர்காமத்தம்பி, அப்பையா, மரியதாஸ், கிருஷ்ண மூர்த்தி, சின்னராசா, தியாகராஜா, மருதைனார், ஆலாலசுந்தரம், தயாளன், மகேந்திரராசா, ஆகியோருடன் ஆசிரியைகளான பார்வதி, நாகம்மா, கண்ணம்மா, இந்திராவதி, செல்வராணி.... என பல்துறை சார்ந்த ஒரு ஆசிரியர் கூட்டம் இருந்தது. இவற்றுக்கெல்லாம் மேலாக சிறந்த தலைமைத்துவம் வழங்கிய பேராசான் ஜே.எம்.பி.ஜெயராசா அதிபர் எமக்கு வாய்த்த ஒரு கொடை என்றால் மிகையாகாது.

பல வருடங்களா தடைப்பட்டிருந்த பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியினை தியாகராஜாவுடன் இணைச்செயலாளராக, பல சவால்களுக்கு மத்தியில் யாழ் நகரத்தில் உள்ள பாடசாலைக்கு நிகராக நடாத்தி முடித்தமை இன்னும் பசுமையான நினைவுகளாக நிழலாடுகின்றன. அதிபரின் விளையாட்டுத்துறை சார்ந்த தலைமைத்துவமம், சிறந்த வழிகாட்டலும் ஆசிரியர்கள், மாணவர்களின் அயராதமுயற்சியும் பக்கபலமாக அமைந்ததென்று குறிப்பிடலாம். சிறந்த விளையாட்டுமைதானம் இல்லா நிலையில் இரவோடு இரவாக விளையாட்டுமைதானம் அமைத்தவையும் மறக்கமுடியாத சம்பவமாகும்.

அந்தக் காலகட்டத்தில் மக்கள் தமது விவசாயத்தினையே முதன்மை யாகக் கருதினார்கள். விதைப்பு, அறுப்பு, சூடடிப்பு என்று வயல்சார்ந்த வேலைகளுக்கே முதன்மையளித்தனர். அதனால் அக்காலங்களில் மாணவர்கள் வரவு வெகுவாகக்குறைந்து, "கர்த்தால்" நேரங்களில் உள்ள மாணவர் வரவினை நிகர்த்து இருக்கும். இத்தகைய போக்கினை மாற்றியமைப்பதற்காக எமது ஆசிரியர் குழாம் வெகுவாக உழைத்தது என்பது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு பதிவுசெய்யப்படவேண்டிய அம்சமாகும். மாலை நேரங்களில் இலவச வகுப்புக்கள், முக்கியமான பாடங்களிற்கு நடாத்துதல் (மாலையில் யானை வரும் என்று கட்டடித்து மாணவர்கள் போவது வேறு விடயம்), பாடசாலைப் படிப்பை நிறைவு செய்தவர்கள், அல்லது இடை விலகிய இளம்பருவத்தினரிடம் அதிகரித்துக் காணப்பட்ட தற்கொலை முயற்சிகள் அப்பொழுது அதிகரித்துக் காணப்பட்டது. அதனை இல்லாமற் செய்வதற்கு அல்லது குறைப்பதற்கு எமது ஆசிரியர்களில் சமூக அக்கறையுள்ளவர்கள், பல வழிகளில் உழைத்தனர். மாணவர்களிடையே விழிப்புணர்வுட்டி எதிர்காலம்பற்றிய நம்பிக்கை ஒளியூட்டியது எமது பணியாக இருந்தமை இன்றும் மறக்கமுடியாத நினைவாகும். மேலும் பெற்றோர்களிடையே கல்வி யின் முக்கியத்துவத்தினை உணர்த்தி பின்னைய காலங்களில் கல்வியில் எழுச்சிபெற நாம் கால்கோள் இட்டோம் என்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

மேலே குறிப்பிட்டவாறு பல வழிகளில் பாடசாலையும் சமூகமும் உயர்வு பெறுவதற்கான ஆரம்பமுயற்சிகள் அப்பொழுது ஆரம்பிக்கப்பட்டமைதான் பின்னாளில் பல எழுச்சிகளைக் காண வழிசமைத்தது என்றால் மிகையாகாது. 1978 இலேயே க.பொ.த உயர்தரத்தினைக் கொண்டிருந்த, மகா வித்தியாலய தரத்திலிருந்த பாடசாலை இன்றும் அதே தரத்தில் இருப்பது ஏன் என்று எனக்கு விழங்கவில்லை. அப்பொழுது அ.த.க வாக இருந்த பாடசாலை எப்படி உயரந்தது, இதனால் ஏன் முடியவில்லை என்பது இப் பாடசாலை சார்ந்த கல்விச்சமூகத்தினரின் கவனத்தில் வரவேண்டும், பாடசாலை தரமுயர அனைவரும் உழைக்கவேண்டும் என்பது எனது அன்பான வேண்டுகோளாகும்.

இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தில் வரலாற்றினைப் பதிவுசெய்யும் இவ்வரிய முயற்சியில் எனக்கும் ஒரு குறிப்பு எழுதக்கிடைத்தமையைப் பெரும்பேறாகக்கருதுகின்றேன். இவ்வரிய முயற்சியினைக் குறிப்பிட்டு, என்னை எழுதுமாறு வேண்டிய அதிபர் திருவாளர் எஸ். முருகானந்தன் அவர்களின் பாடசாலைபற்றிய அக்கறை என்னைக்கவர்ந்துள்ளது. இதே போலவே அன்று என்னுடன் சக ஆசிரியராகக் கடமையாற்றிய திருமதி. தி. இந்திராவதி இப்போது உப அதிபராகத் திகழ்வது மிக்கமகிழ்வாக உள்ளது. இப்பாடசாலை பல்துறைசார்ந்து தேசியமட்டத்தில் பேசப்படும் பாடசாலையாகச் சகல வளங்களுடனும் திகழ எனது இதய பூர்வமான வாழ்த்துக்கள் என்றென்றும்.

**திரு. சி. இதயராஜா**

**பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்)**

**வலயக் கல்விப் பணிமனை**

**கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமாமிர்தம் உதயத்தாள் கவர்ந்த இதய வாழ்த்துக்கள்

உறவினில் உதித்த அணுவை உதிரத்தில் உயிராக்கி உலகத்துக்கு வழங்கும் தாய்மையின் பேற்றினால் இயங்கிவரும் இவ்வுலகில் மனிதனாயுள்ள ஒவ்வொருவருக்கும் தூய்மையின் மகத்துவம் புரிவதற்கரிய உயிர்க் கொடையாகும். இதனால் தான் "பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவவானிலும் நாளி சிறந்தனையே" என்று அமுத்தம் தரும் ஆன்றோர் மொழியானது அனைவரும் அகங் கொள்ளும் வேதவாக்கியமாகும்.

மனிதனாய் பிறந்த ஒவ்வொருவனும் தான் மனிதன்தான் என்று நிலைநிறுத்தவதற்கு அறிவு என்னும் தகைமை அனுசரனையாகவுள்ளது. இவ்வறிவானது பெறப்படும் ஊட்டங்களின் ஒருங்கிணை நடவடிக்கைகளை மையமாக கொண்டே பெறப்படுகின்றது. இதற்கு பரம்பரை அலகுகள், சூழல் காரணிகள், இடைத்தாக்கங்கள், வாழும் சமூக நிலைகள் போன்ற பல காரணிகள் உதவுவதாக உளவியல் வல்லுனர்கள் வாதாடுகின்றனர். இவையெல்லாம் நூற் சுவடிக்கும், தகமைப் பரீட்சைகளுக்கும் விடையெழுதுவதற்குமே பெரும்பாலும் உதவுகின்றது.

உண்மையான உருப்படி நிலைகளை உற்று நோக்குகின்ற பொழுது ஒவ்வொருவரின் தலைவிதியே குருவால் பெறும் அறிவைத் தீர்மானிக்கின்ற தென்ற கருத்தை முற்று முழுதாக மறுதலித்து வாதிட முடியாதுள்ளது. காரணம் தான் வாழும் பிரதேசமே குருவால் பெறும் உருப்படியான அறிவை ஊட்டும் மையமாகக் திகழ்ந்துள்ளது. அதாவது பிடித்த பொன்னாட்டின் மகிமைக்கேற்ப ஒரு மனிதன் தன் ஆரம்ப அறிவைப் பெறுகின்றான். கற்றேன் என்ற தகமை யைப் பெறுவதற்கு இடப்பட்ட அத்திவார அறிவானது தன்தகைமையை ஒருவன் காட்டுகின்ற பொழுது மகிமை பெறுகின்றது. இவ்வாறு பல மானுடர்களைச் சான்றோர்களாக்கும் கலைக் கூடங்களின் வரிசையிலே "இராமாமிர்தம்" வழங்கும் இவ்வித்தியாலயம் அறிவாற்றலுள்ள பல்தகைமைச் சான்றோர்களை இக்கிராமத்துக்கும், மாவட்டத்திற்கும் ஏன் இத் தேசத்துக்கும், சர்வதேசத்துக்கும் வழங்கி வரும் பெருமையைத் தன்னகத்தே கொண்டு புகழ்பரப்பி வருகின்றது. இச்செயற்பாடுகளை நூலாகத் தாங்கி வரும் "இராமிர்தம்" உயர் உள்ளடக்கத்தை தகைமையுடன் தொடர்ந்து வெளிவந்து மாணவர்கட்கு உசாத்துணையாகவும், ஊருக்கு பெருமை பயப்பதாகவும் உலகிற்கு நிலைமை விளக்குவதாகவும் அமைக்க சிறப்புயர,வாழ்த்துவதில் புளகாங்கிதம் மேலோங்குகின்றது. தற்போது இவ்வித்தியாலயத்திலுள்ள மாணவர்களின் திறமைகளும், புலமைகளும் ஆவணப்படுத்தப்பட்டு நூலுருவாக்கம் பெறுகின்ற பொழுது இனி வரும் மாணவ சந்ததிக்கு ஒரு எடுத்துக் காட்டாகவும் வரலாற்றுப் பதிவாகவும் திகழக் கூடிய இந்நூல் உருவாக்க உளம் கொண்டு ஊக்குவித்த ஆசிரியப் பெருத்தகைகளுக்கு மனமார வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் ஊக்கமும், உதவியும் வழங்கிய அதிபரின் நல் முயற்சிக்கும் மனமார்ந்த நன்றிகள். அத்துடன் .இராமாமிர்தம்" நூலுருப் பெற இயைபாக்கம் செய்த இதழாசிரியர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கம் பெற உதவிய பதிப்பாசிரியர், செலவீட்டினைப் பகிர்த்து கொண்ட பொருளுதவிப் பெருந்தகைகள் ஆக்கங்களை உருவாக்கிய ஆசிரிய, மாணவ வித்தகர்கள் யாவருக்கும் வகை வகையாகப் புகழ்ச்சியினை வழங்குதல் முறையானதாகும்.

இராமநாதபுர மண்ணில் நெடிது காலம் நீடுயர்ந்து நிழல்பரப்பி அறிவுப் பசியினை அகல வைத்துக் கொண்டிருக்கும் எம் இதயமான இவ்வித்தியாலயத் தின் போக்கில் ஒரு புது முயற்சியாக வெளிவரும் "இராமாமிர்தம்" இங்கு வாழ் மக்கள் தம்பிப்பிள்ளைகளின் சிறப்பான முயற்சி கண்டு பூரிப்படையக் கூடிய ஒரு வெளியீடாகவும் அமைகின்றது. அதாவது "கற்றல் வெளிக்கொணர்கைச் செயற்பாட்டின் ஒரு அங்கமாக தங்கள் ஆக்கங்களை மலர வைப்பதனூடாக பிற்காலத்தில் இத்துறைகள் விருத்திக்கு ஒரு முன்னாயத்த நிலைமையினை யும் புலப்படுத்தி நிற்கின்றது

"தம்மின் தம்மக்கள் அறிபுடமை
மாநிலத்து மன்னுயிர்க் கெல்லாம் இனிது"

எனும் வள்ளுவர் முதுமொழி இக்கல்விச்சாலையின் இளந்தலைமுறையின் உயர்ந்த நோக்கம் கொண்ட கல்வி எழுச்சியின் மூலம் எம் மகவுகள் பெற்று வரும் அறிவு விருத்தியானது அவர்களை உருவாக்கிப்பெற்ற உள்ளங்களுக்கு பேருவகையான நிலையினை வழங்கக் கூடியதாக அமைகின்றது. எழுச்சி பெறும் கல்விச்சாலையாக இனிது உயர்வுபெற்று எம் இராமநாதபுர மானிலம் கற்றோரைத் தன்னகத்தே கொண்டு எஞ்ஞான்றும் வாழ்ந்திட இனிவரும் பணிபோல் பலபணிகள் உயர்ந்தோங்கிச் செழிப்புற எம் குலவிருத்திக்காய் நிலை நெடிதுயர் இராமநாதபுரம் மகா வித்தியாலயம் வையகமெங்கனும் புகழோங்கி வாழ்ந்து வரும் என்ற நம்பிக்கையில் அன்னைக்குச் சமர்ப்பணமாம் இவ் இதயதாழ் வாழ்த்துரையாய் அமைகின்றது.

**திரு.கோ.செல்வராசா**
பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி முகாமைத்துவம்)
வலயக் கல்வி அலவலகம், கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றென்றும் ஒளிபெற ....

இராமநாதபுரத்தின் ஒளிர் மகுடமாக மிளிர்கின்ற உயர்நிலைப் பள்ளியில் இராமாமிர்தம் என்ற பெயர் தாங்கி வெளிவரும் மலருக்கு வாழ்த்துக் கூறுவதில் மட்டற்ற மகிழ்வடைகின்றேன்.

இராமநாதபுரம் வடக்கு அரசினர் தமிழ்க் கல்வன் பாடசாலையாகக் கால்பதித்து, இன்று பல சாதனைகளைப் புரிந்து உயர்நிலைப் பள்ளியாக காட்சியளிக்கின்றது. G.P.II நிகழ்ச்சித் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்டு அடுக்கு மடிகளுடன் கரைச்சி கிழக்குப் பகுதியில் பலநூறு மாணவர்களின் அறிவுத் தேடலுக்கு அச்சாணியாகத் திகழ்கின்றது.

பண்பும், பணிவும், வாய்மையும் மிக்க மாணவர்கள் இப்பள்ளியிலிருந்து உருவாக்கம் பெறுகின்றார்கள் என்றால் மிகையாகாது. எக்காலத்தும் தனக்குரிய அடையாளம் குன்றாமல் தலைநிமிர்ந்து நிற்பது இதன் சிறப்பு,

“நவீன உலகின் சவால்களை வெற்றி கொண்ட ஆற்றல் மிக்க சமூகத்தினை மேம்படுத்திட உறுதியுடன் அனைவரும் இத்தருணத்தில் உழைக்க வேண்டும்” இதுவே கலைத்தாய்க்கு நாம் செய்யும் பேருதவி யாகும். இதனை ஆழ்மனதில் இருத்திச் செயற்படும் மாணவர்களுக்கு ஆசிரியர்களும் இச்சாலையில் நிரம்பியிருக்கின்றனர்.

வரலாற்றுப் புகழ் மிக்க கண்டி – யாழ் பழைமை முதன்மைச்ச ாலையில் சாதனைகளைப் புரிந்து தேசிய, சர்வதேசிய நிலைகளில் தனது தடத்தினைத் தொடர்ந்து உறுதிப்படப் பதித்திட வாழ்த்துகின்றேன்.

**சி. கணேசலிங்கம்**
**உதவிக் கல்விப் பணிப்பாளர்**
**ஆரம்பக்கல்வித்துறை**
**வலயக்கல்வி அலுவலகம்**
**கிளிநொச்சி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்டக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி

இராமநாதபுரம் மகா வித்தியாலய மாணவர்கள் "இராமாமிர்தம்" எனும் சஞ்சிகையை வெளியீடு செய்வது பெருத்த மகிழ்வைத் தருகிறது. பாடசாலை வெறுமனே காலத் திட்டத்தை மட்டும் ஒப்புவிக்கும் இடம் அல்ல மாணவர்களின் எதிர்கால வாழ்வு சிறப்படைய வேண்டிய எல்லாவிதமான பண்புகளையும் வளர்ந்துவிடும் களம் ஆகும்.

எருதும் ஆழ்தல் என்பது அருக வருகிறது கணினியின் தோற்றம் எழுதுவதற்கான தேவையைக் குறைத்து விட்டது பேனாவால் எழுதும் போது அதன் முறையில் மை சொட்டுவது போல் பிள்ளைகளின் மனங்களில் சிந்தனைகள் முகிழ்ச்சிகின்றன. ஆக்கங்களைப் படைப்ப தற்காக அவர்கள் பல தேடல்களை மேற்கொள்கிறார்கள். இவை பன்முக ஆற்றல்களை வழங்குகின்றன. தற்போதைய காலகட்டத்தில் சஞ்சிகை வெளியிடுவது மிகவும் சிரமமானது. இராமநாதபுரம் மகாவித்தியாலயத்தின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர் நலன் கருதி உழைப்பது பாரட்டத்தக்கது.

"இராமாமிர்தம்" பல சிறப்பான ஆக்கங்கள் தாங்கி வெளிவர எல்லாம் வல்ல மாவடி அம்மன் அருள்வேண்டிப் பிரார்த்திக்கிறேன் மாணவ செல்வங்கட்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**அ.அமிர்தலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரின் உள்ளத்திலிருந்து ....

மங்காத குன்றிமணியாய் விளங்கிவருகின்ற எமது பாடசாலையின் புடம்போட்ட தங்கமாக மிளிரச் செய்வது சமூகத்தின் பொறுப்பாகும். எமது பாடசாலையை பயனுறுதி மிக்கதாக மாற்றி "குன்றிலிட்ட தீபமாக" பிரகாசிக்கச் செய்து வருகின்ற சாதனைகளும், கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளும் ஆழப் பதிந்து நிற்கின்றது. வேரினை, விழுதறிய வைக்கும் பொருட்டு பாடசாலையின் வரலாற்றுப் பதிவுகளைக் கோர்வையாக்கி மாலையாக வெளியீடு செய்கின்ற பெருமை "இராமாமிர்தம்" என்னும் இம் முதல் இதழுக்கே சமர்ப்பணமாகும்.

துரித கதியில் மாறிவரும் உலகிற்கேற்ப மாறிக் கொள்வதும், மாற்றங்களை ஏற்படுத்துவதும், குறுகிய வளங்களைப் பயன்படுத்தி நிறைவான, வினைதிறன் மிக்க செயற்பாடுகளை மேற்கொள்வதும் இன்றைய யுகத்தின் அடிநாதமாகும். ஓடும் நதியில் எதிர்நீச்சலடித்துச் செல்கின்ற படகைப் போல இத்தகைய யுகத்திலே ஆசிரியர்களும் மாணவர்களும் தேடல்களை உற்சாகப்படுத்தி ஆளுமையை வளர்த்திடும் வகையில் செயற்படுதல் வேண்டும். எனினும் செல்லும் வழியில் தடங்கள் பதித்து அழியாத விருட்சமாய் பரிணமிக்கச் செய்ய வேண்டும். இவற்றை ஒருமுகப்படுத்தி சிறிய வியாசத்துள் உள்ளடக்கி "இராமாமிர்தம்" என்னும் பெயருடன் புதுமணங்கமழ மலர்ந்திடும் இதழானது பயனுள்ளதாக அமையும் எனலாம்.

சென்றொழிந்த காலம் திரும்பி வரமாட்டாது என்ற கவி வரிகள் எமது பள்ளியின் காலங்களைத் தான் நினைவூட்டுகின்றன. பல சவால்களுக்கு மத்தியில் சாதனைகளைப் பதித்து ஏணியாக ஏற்றம் புரிந்த பாடசாலையின் அடையாளச் சின்னங்களையும் வரலாற்றுப் பதிவுகளையும் அனர்த்த நெருக்கடிகளால் இழந்திருக்கின்றோம். எனினும் இடப்பெயர்வின் பின்னர் துவண்டிடாமல் புதுப்பொலிவுடன் வீறுநடைபோட்டு வெற்றிப் பாதையில் தடம் பதித்துச் செல்கின்றது.

தித்திக்கும் தேனமுதாய் தெவிட்டிடாத இனிய இதழாய் வாகையின் அடிச் சுவடுகளை பதிவுகளாக்கி முகிழ்ந்திடும் "இராமாமிர்தம்" எனும் இதழ் வெளிகிவருவின்றமையால் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இவ்வகையில் மாணவர்களையும் ஆசிரியர்களையும் தேடல் முறையில் உட்படுத்தி அவற்றை ஒன்று திரட்டிக் கோர்த்து "இராமாமிர்தம்" எனும் பெயருடன் வெளிவருவதற்கு உதவிய பொறுப்பாசிரியர் அவர்கட்கு அவருடன் அயராது முயற்சிக்கின்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் பல ஆசிரியர்களுக்கும் மனமார்ந்த பாராட்டுக்களையம் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதுடன் இந்நூலுக்கு ஆசியுரை, வாழ்த்துரை, மற்றும் கட்டுரை தொகுப்பு வழங்கிய கல்விமான்கள் மற்றும் யாவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு எமது பாடசாலையின் வரலாற்றைத் தாங்கி முதல் இதழாக வெளிவருவதும் எமக்கும் எமது பாடசாலைச் சமூகத்திற்கும் பெருமிதத்தை தருவதடன் இது போன்ற மலர்கள் இனிவரும் ஆண்டுகளில் தொடர்ந்து வெளிவரவும் வான் மழையாய் விளங்கவும் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. சி. முருகானந்தன்**
அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதி அதிபரின் வாழ்த்துச்செய்தி

பிள்ளைப் பருவத்திலிருந்து கற்று, உயர்கல்வி முடித்ததிலிருந்து தொண்டராசிரியராகப் பணிபுரிந்து, முதன்நியமனத்திலிருந்து ஆசிரியராக, பிரதி அதிபராக மொத்தத்தில் எனது வாழ்நாள் முழுவதும் ஒன்றித்த எமது கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தினால் முதன் முதலாக வெளியிடப்படும் "இராமாமிர்தம்" சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு மட்டிலா மகிழ்ச்சி யடைகிறேன்.

பாடசாலை வரலாற்றைப் பதிவு செய்வதோடு, மாணவச் செல்வங் களின் கற்றற் செயற்பாடுகளிலும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் உயர் தேர்ச்சியைப் பெற ஊக்கம் அளிக்கும் நோக்கோடும் இச்சஞ்சிகை வெளிவருகிறது.

"இராமாமிர்தம்" மாணவர் பெற்ற தேர்ச்சிகள், விருதுகள், வெற்றிகள், எழுதிய ஆக்கங்கள் என்பவற்றைத் தாங்கி வருவதன மூலம் அவர்களுக்கு ஊக்கம், உற்சாகம், தேடல் முயற்சி, சிந்தனைத் தூண்டல் என்பவற்றை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

இவ்வருடம் பரிசளிப்புவிழாச் செய்து சஞ்சிகையும் வெளியிட்டே ஆகவேண்டுமென்று திடசங்கல்ப்பம் பூண்ட அதிபர், மறந்தோ சோர்ந்தோ இருக்க விடாது அடிக்கடி ஆர்வமூட்டி ஆக்கங்களைப் பெற்று நூலுருவாக்கம் செய்ய முற்று முழுதாக உழைத்த இதழாசிரியர், மற்றும் இதழாக்கக் குழுவினர், மாணவச் செல்வங்கள், மேலாக வாழ்த்துச் செய்திகளை வழங்கிய பெருந்தகையாளர்கள் யாவரும் நீடு வாழிவேண்டும். உதவிய பெற்றோர்கள், நலன்விரும்பிகள் என்றென்றும் பக்க பலமாகத் திகழ வேண்டும் மேலும் இச் சஞ்சிகை ஒரு உசாத்துணை நூலாகப் பயன்படும் வகையில் சிறந்த பெறுமதி வாய்ந்த ஆக்கங்களைக் கொண்டு ஆண்டுதோறும் மலர்ந்து எமது வித்தியாலயத்தின் பெருமையை உலகிற்குப் பறைசாற்றி நிற்க வேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்து எனது அன்பு கலந்த வாழ்த்துக்களை வழங்கி நிற்கின்றேன்.

**திரு. இ. திருநாவுக்கரசு**
**பிரதி அதிபர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பப் பிரிவு வகுதித் தலைவரின் வாழ்த்துரை

எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் பாதார விந்தங்களை வணங்கிக் கொண்டு எமது பாடசாலையான கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா மலருக்கான வாழ்த்துரையினை ஆரம்பக்கல்விப் பகுதித் தலைவர் என்ற வகையில் வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன்.

"கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றுப் பிற"

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க செல்வங்களுள் சிறந்த செல்வமாகிய கல்விச் செல்வத்தினை திறம்பட ஊட்டி பல்லாயிரக்கணக்கான ஆற்றலும் திறமையும், குணச் சிறப்பும் மிக்க மாணவர்களை உருவாக்கி, பாரிய யுத்தம் ஒன்று முடிவடைந்த பின் மீண்டும் நல்லதொரு மாணவ சமுதாயத்தை கட்டி யெழுப்பும் நோக்கில் எமது பாடசாலையானது அர்ப்பணிப்போடு செயற் பட்டு, பரிசளிப்பு விழாவினையும் மலரினையும் வெளியிட்டு தலைநிமிர்ந்து நிற்பதைக் கண்டு எமது உள்ளங்கள் யாவும் பெரு மகிழ்வடைகின்றன.

இந்த வித்தியாலயத்தின் வளர்ச்சியை மெருகூட்டிக் காட்டும் இவ்வாறான செயற்பாடுகள் பாடசாலை மாணவர்களுக்கும், பாடசாலைச் சமூகத்தினருக்கும், பெற்றோருக்கும் ஒரு உத் வேகத்தையும் மன நிறைவையும் நம்பிக்கையையும் தரும் செயற்பாடாக அமையுமென்றால் அது மிகையாகாது.

மேலும் எமது பாடசாலையானது கல்வியோடு மட்டுமல்லாது இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் மிகத் திறமை காட்டி வருவதும் பாராட்டுக்குரியது.

அந்தவகையில் இனிவரும் காலங்களிலும் எமது பாடசாலையானது பல்துறைகளிலும் முன்னேறி சாதனைகள் பல படைக்க வேண்டும் என எல்லாம் வல்ல பரம்பொருளைப் பிரார்த்தித்து இன்றைய இந் நன்னாளில் இப் பரிசளிப்பு விழா மலரிற்கான வாழ்த்தினையும் வழங்கி விடைபெறு கின்றேன்.

**திருமதி யோ.விஸ்வநாதன் ஆசிரியர்**
**(ஆரம்பப்பிரிவு பகுதித்தலைவர்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்பாசிரியரின் உள்ளத்திலிருந்து ...

விநாயகப் பெருமானின் பாதார விந்தங்களைப் பணிந்து அவனாசிகள் பெற்றிட ஏத்துகின்றேன் வாழ்த்துரை கால வெள்ளத்தால் அழிந்து போனவை போக எஞ்சியதைக் காப்பாற்ற வேண்டியது சான்றோனின் கடமையாகும். அவ்வகையில் இராமநாதபுரம் ம.வி என்ற பாடசாலையின் பெயரினை அணிவகுக்கும் முகமாக “இராமாமிர்தம்” எனும் சஞ்சிகையை முதன் முதலாக வெளியிடத்துணிந்தமையை யிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

“விசும்பின் துளிவீழின் அல்லால் மற்று ஆங்கே
பசும்புல் தலை காண்ப அரிது”

மேகத்திலிருந்து மழைத்துளி விழாவிட்டால் பூமியிலிருந்து பசுமையான புல்லின் முளையையும் காணமுடியாது. அதேபோன்று அதிபரது ஒத்துழைப்பும், பிரதி அதிபரது கருத்துக்களும் ஆசிரியர்களது, மாணவர்களது ஆக்கங்களும் ஒரு சேரக்கிடைத்ததி னாலேயே சஞ்சிகை எனும் உருவாக்கத்திற்கு வழிகோலியது எனலாம்.

துரிதகதியில் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கும் இவ்வுலகமதனில் விசையாகவே செயற்பட வேண்டியது ஒவ்வொருவரதும் கடமையாகும். எனவே ஒவ்வொரு ஆசிரியர்களி னதும், மாணவர்களினதும் அறிவு, ஆளுமை, அர்ப்பணிப்பு, தேடல், எழுத்தாற்றல் என்பன வற்றின் வெளிப்பாடாக இச் சஞ்சிகை அமைந்துள்ளது. எதிர்காலத்தில் மாணவர்கள் பொறுப்புள்ளவர்களாக சிறந்த பண்புள்ளவர்களாக திகழ்வார்கள் என்பதற்கு தேடல் அவசியமானது தேடிப்பெற்ற காலத்தின் பதிவுகளாக விளங்கும் இச்சஞ்சிகையின் ஆக்கங்கள் மாணவர்களுக்கு என்றும் பயன்படும் என்பது எனது எதிர்பார்ப்பாகும்.

கடந்த காலப் பதிவுகளை சான்றுபகரும் வகையில் அமிர்தமாக மிளிர்ந்து முதல் இதழாக வெளிவரும் இச் சஞ்சிகையை வாழ்த்தி இதேபோன்று இனிவரும் ஆண்டுகளிலும் இன்னும் பல இதழ்கள் மணம் வீச வேண்டும் என இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

“என்றென்றும் சுடர்விட்டு ஒளிந்திடுவாய் இராமாமிர்தம்”

**பொறுப்பாசிரியர்**
**திரு.செ.இராஜேஸ்வரன்**
B.A (Hons) Dip.in.Edu

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளரின் எண்ணத்திலிருந்து ....

நீண்ட வரலாறு கொண்ட எமது பாடசாலையானது இராமாமிர்தம் எனும் நூலினை வெளியிடுவதையிட்டு பெரு உவகை கொள்கிறேன்.

மாணவர் உள்ளார்ந்த ஆற்றல்களை வெளிக் கொணர்வதற்கு பல்வேறு இணைப்பாட விதானச் செயற்பாடுகள் விளங்குகின்ற போதும் அவை எழுத்துருவம் பெறும் போது தனித்துவம் பெறுகிறது.

மாணவர்களின் சாதனைகளையும் வெறும் பாரட்டுதலோடு நிறுத்திவிடாது அவற்றை எழுத்துவடிவம் கொடுத்து ஏனைய சந்ததிக்கும் பார்க்க வாய்ப்பளிக்கும் களமாக இந்நூல் விளங்கும் என்பதில் ஐயமில்லை.

எனவே இவ்வாறான ஒரு பெரும் முயற்சியில் தடம்பதித்த பாடசாலை முதல்வர் அவர்களையும் பிரதி முதல்வர், பொறுப்பாசிரியர், ஆசிரியர்கள், மாணவர்களை வாழ்த்துவதுடன் இந்நூல் வெளியீடு இத்துடன் நின்று விடாது ஏனைய ஆண்டுகளுக்கும் தொடர வேண்டுமென இறைஆசி வேண்டுகின்றேன்.

**திரு.தே.நிகேதரன்**
**பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பழைய மாணவர் சங்க செயலாளரின் வாழ்த்து செய்தி

கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தின் வரலாறு கூறும் வகையில் மாணவர் சாதனைகளை தாங்கி "இராமாமிர்தம்" எனும் நூல் வெளியீடு செய்வதையிட்டு பழைய மாணவர்கள் சார்பாக நான் மிக அகமகிழ்வடைகின்றேன்.

இந்நூல் வெளியீடு செய்ய உதவிய அனைவருக்கும் பழைய மாணவர்கள் சார்பாக நன்றிகளை தெரிவித்து எமது பாடசாலை நீண்ட வரலாறு கொண்டது பல சாதனைகளை உருவாக்கிய போதிலும் அவை எழுத்துருவம் இல்லாமல் போய்விட்டது. ஆனால் "இராமாமிர்தம்" நூலானது எமது பாடசாலையின் முதல் நூலாக வெளிவருவதையிட்டு பெருமையடைகின்றேன். இனிவரும் காலங்களிலும் எமது மாணவர்களின் சாதனைகளை யும் வரலாறுகளையும் நூலாக தொடர்ந்து வெளியீடு செய்து இளைய தலைமுறைக்கு கொடுக்க வேண்டும் என்று கேட்டு பழைய மாணவர் ஆசி என்றும் இருக்கும் என்று பாராட்டி வாழ்த்துகின்றேன்.

**பழைய மாணவர் சங்க செயலாளர்**

**லோ.பிரகலாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் பிரதி அதிபர்

திருமதி. இ. திருநாவுக்கரசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் விபரம்

| | முழுப்பெயர் | தகைமை | ஆசிரியர் தரம் |
|---|---|---|---|
| 1. | திரு.சின்னத்தம்பி முருகானந்தன் (அதிபர்) | கல்விமாணி Por.Dem (Dsm) | SLPS 2II |
| 2. | திருமதி. இந்திராவதி திருநாவுக்கரச (பிரதிஅதிபர்) | கலைப்பட்டதாரி பட்டப்பின் டிப்ளோமா | SLTS I |
| 3. | திருமதி. சிவலோகம் சிவலோகநாதன் | பயிற்றப்பட்ட ஆங்கிலம் | SLTS I |
| 4. | திருமதி. ஶ்ரீரஞ்சிதமலர் இளங்குமரன் | கலைப்பட்டதாரி பட்டப்பின் டிப்ளோமா | SLTS I |
| 5. | திருமதி. தயாநிதி சிவலிங்கம் | கலைப்பட்டதாரி பட்டப்பின் டிப்ளோமா | SLTS 2II |
| 6. | அருட்சகோதரி மேரி றீற்றா | பயிற்றப்பட்ட ஆங்கிலம் | SLTS 2II |
| 7. | திருமதி. கோமதி ஶ்ரீதரன் | தொழில் நிர்வாகமானி பட்டப்பின் டிப்ளோமா | SLTS 2II |
| 8. | திருமதி. ஜெகதாம்பிகை சோதுகாவலர் | பயிற்றப்பட்ட சமயம் | SLTS 2II |
| 9. | திருமதி. மிருணாளினி மன்னவன் | பயிற்றப்பட்ட சமயம் | SLTS 2II |
| 10. | திரு. செல்வராசா இராஜேஸ்வரன் | கலைப்பட்டதாரி பட்டப்பின் டிப்ளோமா | SLTS 2II |
| 11. | திரு. இராசையா ரமேஸ்குமார் | கலைப்பட்டதாரி கல்வி டிப்ளோமா உளவளத்துணை டிப்ளோமா | SLTS 2II |
| 12. | திருமதி. ஜெயசீலி செபக்குமார் | டிப்ளோமா கிறீஸ்தவம் | SLTS 2II |
| 13. | திருமதி. ஜெயாழினி குமாரகிருஷ்ணன் | டிப்ளோமா உடற்கல்வி | SLTS 3I |
| 14. | திரு. மகேந்திரன் பிரதீஸ் | பயிற்றப்பட்ட கடல்வளம் | SLTS 3I |
| 15. | திரு. கந்தையா ஜெயக்குமார் | கலைப்பட்டதாரி | SLTS 2II |
| 16. | திரு. உதயகுமார் கோகுலன் | டிப்ளோமா சித்திரம் | SLTS 3II |
| 17. | திரு. சித்திரவேலாயுதம் சுதாகரன் | டிப்ளோமா விசேடகல்வி | SLTS 3II |
| 18. | திரு. தங்கராசா ஜெபசுதன் | வணிகப் பட்டதாரி | SLTS 3I |
| 19. | திரு. கதிரவேலு பிரதீபன் | கலைப்பட்டதாரி | SLTS 3I |
| 20. | திருமதி. சிவாஜினி ஜெயராஜிதன் | கலைப்பட்டதாரி | SLTS 3I |
| 21. | திருமதி. இவிலின் ஜெனிற்றா சுரேஸ் | நுண்கலைப் பட்டதாரி | SLTS 3I |
| 22. | திரு. அருளம்பலம் யோகேஸ்வரன் | விஞ்ஞானப்பட்டதாரி | SLTS 2II |
| 23. | திருமதி. சுமித்திரா நிர்மலன் | கலைப்பட்டதாரி பட்டப்பின் டிப்ளோமா | SLTS 2II |
| 24. | திருமதி. கலைவாணி சீவதாசன் | நுண்கலைப் பட்டதாரி | SLTS 3I |
| 25. | செல்வி. சங்கீதா கந்தசாமி | நுண்கலைப்பட்டதாரி | SLTS 3I |
| 26. | திரு. பிரன்சிஸ் யூட்வில் பிரட் | வணிகப் பட்டதாரி | SLTS 3I |
| 27. | திரு. தம்பிப்பிள்ளை வசந்தநாதன் | கலைப்பட்டதாரி | SLTS 3I |
| 28. | திருமதி. வானதி மகிந்தன் | நுண்கலைப்பட்டதாரி | SLTS 3I |
| 29. | திருமதி. கௌசலாதேவி ரகு | பட்டப்பின் டிப்ளோமா | SLTS 2II |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 30. திருமதி. தாரணி தேவராஜன் | டிப்ளோமா உடற்கல்வி | SLTS 3I |
| 31. செல்வி. தேவகி பொன்னுத்துரை | டிப்ளோமா தமிழ் | SLTS 3I |
| 32. செல்வி. லலிதா ஆனந்தலிங்கம் | பயிற்றப்பட்ட விஞ்ஞானம் | SLTS 2II |
| 33. திரு. சின்னத்தம்பி ரங்கநாதன் | தொழில்நிர்வாகமாணி முதுமாணி | SLTS 2II |
| 34. திருமதி. சுதர்சினி றம்சன் | கல்வி டிப்ளோமா பட்டப்பின் டிப்ளோமா | SLTS 2II |
| 35. திருமதி. காமினி நாகேந்திரராஜா | நுண்கலைப் பட்டதாரி | SLTS 2II |
| 36. செல்வி. யாழினி அண்ணாமலை | டிப்ளோமா உணவுத் தொழில்நுட்பம் | SLTS 3I |

# ஆரம்பக்கல்வி பாட ஆசிரியர்கள்

| முழுப்பெயர் | தகைமை | ஆசிரியர் தரம் |
|---|---|---|
| 1. திருமதி.யோகலெட்சுமி விஸ்வநாதன் | பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி | I |
| 2. திருமதி.கிருஷ்ணகுமாரி இரவீந்திரன் | பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி | 2II |
| 3. திருமதி.பராசக்தி சத்தியநாதன் | கல்விமாணிப் பட்டம் | 2I |
| 4. திருமதி.ஜெலலிதா குலேந்திரன் | கல்விமாணிப் பட்டம் | 2I |
| 5. திருமதி.சரஸ்வதி ஜெயக்குமார் | பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி | 2II |
| 6. திருமதி.கீதாஞ்சலி றதீஸ்குமார் | பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி | 2II |
| 7. திருமதி.நளாயினி காண்டீபன் | கல்வியற்கல்லூரி டிப்ளோமா | 3I |
| 8. செல்வி.நடராசா கவிஅரசி | பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி | 2II |
| 9. திருமதி.சர்மிலா ஜெயக்குமார் | பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி | 2II |
| 10. திருமதி.மேரிஸ்ரெலா பகீரதன் | பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி | 3II |
| 11. திருமதி.விஜயராணி சிவகுமார் | பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி | 2II |
| 12. திருமதி.சுமதி கலாதரன் | பட்டதாரி பட்டப்பின் டிப்ளோமா | 2II |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலய ஆசிரிய ஆளணியினர் - 2012

**முதல் நிரை (இ.வ.) :** திருமதி. ஜெ. குலேந்திரன், திருமதி. செ. சேதுகாவலன், திருமதி. ஸ்ரீ. இளங்குமரன், அருட்சகோதரி. மேரி நீற்றா, திரு. சி. முருகானந்தன் (அதிபர்), திருமதி. இ. திருநாவுக்கரசு (பிரதி அதிபர்), திரு. யோ. விசுவநாதன் (வகுதித் தலைவர்), திருமதி. சி. சிவலோகநாதன், திருமதி. த. சிவலிங்கம், திருமதி. ப. சத்தியநாதன்

**இரண்டாவது நிரை (இ.வ.) :** செல்வி. யா. அண்ணாமலை, திருமதி. கா. நாகேந்திரராஜா, திருமததி. ஜே. குமாரகிருஷ்ணன், திருமதி. கீ. றதீஸ்குமார், செல்வி. ல. ஆனந்தலிங்கம், திருமதி. சு. றம்ஷன் செல்வி. தே. பொன்னுத்துரை, செல்வி. ச. கந்தசாமி, செல்வி. க. நடராசா, திருமதி. ஜெ. செபக்குமார், திருமதி. மீ. மன்னவன், திருமதி. சு. நிர்மலன், திருமதி. ச. ஜெயக்குமார் திருமதி. வி. சிவகுமார், திருமதி. ச. ஜெயக்குமார், திருமதி. கி. ரவீந்திரன், திருமதி. தா. தேவராஜன்,

**மூன்றாவது நிரை (இ.வ.) :** திருமதி. ஜெ. சுரேஸ், திருமதி. செ. ஜெயராஜிதன், திருமதி. மே. பகீரதன், திருமதி. ந. காண்டீபன், திரு. க. பிரதீபன், திரு. இ. ரமேஸ்குமார், திரு. செ. இராஜேஸ்வரன், திரு. சி. சுதாகரன், திரு. சி. ரங்கநாதன், திரு. த. வசந்தநாதன், திரு. அ. யோகேஸ்வரன், திரு. உ. கோகிலன், திரு. ம. பிரதீஸ், திரு. த. ஜெபசுதன், திரு. பி. யூட்வில்விறெற், திருமதி. கௌ. ரகு, திருமதி. கா. சீவதாசன், திருமதி. கோ. ஸ்ரீதரதரன், திருமி. வா. மகிந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


பக்கம்

- பாடசாலை வரலாறு பற்றிய பார்வை 01-03
- இராமநாதபுரம் மகா வித்தியாலயம் (42 ஆண்டுகளுக்குப் பின் ஒரு பார்வை) 04-06
- மிஷ்பயர் 07-11
- சுந்தரர் பாடிய சீபர்ப்பதம் 12-15
- பணியுமாம் என்றும் பெருமை 16-17
- தமிழும் பிறமொழியும் 18-21
- 'வாழக் கல்' 22-23
- இலங்கையில் தாள் உலோக நாணயங்களின் வரலாறும் அதன் வளர்ச்சிப் போக்கும் 24-29
- வாலிவதம் ஒரு பார்வை 30-32
- தொலைக்காட்சிப் போட்டி நிகழ்ச்சிகள் ஆரோக்கியமற்ற சமுதாயத்தை நோக்கி ... 33-35
- வணிகப் புள்ளிவிபரவியல் 36-38
- இயற்கையின் விநோத விந்தைகள் 39-40
- புனைகதை இலக்கியத்திற்கு புகழ் சேர்ந்த படைப்பாளி 41-46
- பங்குடமை கணக்கு 47-51
- வணிகச் சூழல் 52-53
- இலக்கிய வரலாற்றில் அகம் பற்றிய நோக்கு 54-58
- வணிகத்துறையில் போக்குவரத்து 59-61
- வணிகத் தரவுகளைப் பகுப்பாய்வு செய்தல் 62-65
- சிகிரியா ஓவியங்களும் சுவர்க் கவிகளும் 66
- நான் விரும்பும் கவிஞர் பாரதிதாசன் 67-69
- உயர்ந்து நில்லுங்கள் 70-71
- இணைபாடவிதானச் செயற்பாடுகள் கற்றலின் தூண்டியாகும் 72-73
- நிறைபோட்டி நிறுவனத்தின் குறுங்காலச் சமநிலை 74-75
- சுற்றாடலும் சுற்றாடல் தொடர்பாக மதங்கள் வெளிப்படுத்தும் போதனைகளும் 76-77
- நாடகத்தில் நாட்டிய சாஸ்திரம் கூறுகின்ற நாயகன் நாயகியின் இலக்கணப் பேதங்கள் 78-79
- உண்மை விருட்ச முறை 80-87
- 'பிள்ளையின் வளர்ச்சியில் பெற்றோரின் பங்கு' 88-92
- பாப்பாப்பாட்டும் பள்ளிப்படிப்பும் 93-95
- தைத்திருநாளே வருக 96
- தேடல் 97
- நிலமானிய முறைமை 98-105
- சிதைக்கப்பட்ட கலசம் 106
- சிறப்புப் பெயரால் குறிக்கப்படும் சான்றோர்கள் 107
- பள்ளிக்காலம் 108
- எரிமலை 109-117
- சுருக்கக் குறியீடுகளும் அவற்றின் விரிவும் 118
- வரலாற்று சம்பவங்களும் அவை நடைபெற்ற ஆண்டுகளும் 119



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பழமொழிகள் 120-121
- பிறநாட்டுப் பழமொழிகள் 122
- நிறுவனமும் தொடர்பாடல் முறையும் 123-125
- சங்கத்து நங்கை 126
- வாழ்வியலுக்கு வழிகாட்டும் இலக்கியங்கள் 127-129
- கணனி வைரஸ் 130-131
- Environmental Pollution 132
- இன்டர்நெற் ஓர் அறிமுகம் 133-135
- சிந்துவெளி நாகரீகம் 136-138
- உலகமயமாக்கல் 139-142
- கனவு 143-145
- 'முயற்சித்தால் முன்னேறலாம்' 146-147
- நன்மை செய்வோம் 148-149
- கனவில் தோன்றிய ஆராய்ச்சி 150-151
- ஆபத்தில் உதவிய நண்பர்கள் 152
- வாழ்வியலுக்கு இயற்கையின் கொடை 153-154
- Writing makes an exact man 155
- கல்பனா சௌலா 156
- Whose Bride 157-158
- எயிட்ஸ் (HIV/AIDS) நோயைத் தடுப்போம் 159-163
- நீர்க்கோளம் 164-165
- ஹிந்துஸ்தானி இசையில் பிரபல்யம் வாய்ந்த வாக்கேயகாரர் 166-167
- வாழ்க்கையின் முன்னேற்றத்திற்குச் சிறந்தது அறிவே 168-169
- கல்விக்கும் பொருளாதாரத்திற்கும் இடையிலான உறவு 170-176
- Good Health Habbits 177
- தாயன்பு 178
- இளமையிற் கல்வி 179
- விஞ்ஞான பொதுஅறிவு 180
- Science and Technology 181
- பாடசாலையும் வாழ்க்கையும் 182-183
- மாணவரின் கல்வி வளர்ச்சியில் ஆசிரியரின் பங்கு 184-186
- உளநல மேம்பாட்டில் அழகியலும் நல்லாசிரியரின் பண்புகளும் 187-188
- முதலுதவியாளன் 189-190
- Improve Your GK 191-192
- வழிகாட்டல் என்பது வாழ்ந்து காட்டுதல் 193-194
- A trip you enjoyed 195-196
- எதிர்காலத்தில் ஐந்தாவது புரட்சியாக மலரும் நனோத்தொழில்நுட்பம் 197-200
- பாடசாலை அபிவிருத்திக் குழுக்கள் 201-204
- பரிசில் தினம் 2012 205-213
- நன்றியுரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை வரலாறு பற்றிய பார்வை
## கிளி/இராமநாதபுரம் ம.வி

திருமதி. இ. திருநாவுக்கரசு
பிரதி அதிபர்

1955ஆம் ஆண்டு விவசாயக் குடியேற்றத் திட்டமாக உருவாக்கப்பட்ட இராமநாதபுரம் கிராமத்தில் 1956.05.02ஆம் திகதி எமது பாடசாலை கிளி/இராமநாதபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை என்ற பெயரோடு திரு.S.நமசிவாயம் அவர்களை அதிபராகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. அப்போது ஒரு ஆண் ஆசிரியரும், இரு பெண் ஆசிரியர்களும் 90 மாணவர்களும் இருந்தனர். தரம் 5 வரை வகுப்புகள் நடைபெற்றன. பாலர் கீழ்ப்பிரிவில் (ஆண்டு 1) முதலாவது சேர்விலக்கத்தில் சேர்க்கப்பட்ட மாணவி செல்வி நடராசா ஆனந்நாயகி என்பது அறியக் கிடக்கிறது.

1960ல் திரு.சங்கரப்பிள்ளை அதிபர் பொறுப்பேற்றார். இவர் கற்றற் செயற்பாட்டுடன் இணைப் பாடவிதானச் செயற்பாடுகளிலும் ஊக்கம் காட்டி பாடசாலையில் விளையாட்டுப் போட்டி கலை விழாக்களை நடாத்தி பெற்றோர் மாணவர்களின் பாராட்டைப் பெற்றார்.

1963ல் திரு.ஆ.கந்தையா அவர்கள் அதிபராக வந்த காலத்தில் வகுப்புக்கள் தரம் 8 வரை உயர்த்தப்பட்டன. (J.S.C) என இது அழைக்கப்பட்டது. இக்காலத்தில் பெற்றோர்கள் தமது சொந்த ஊர்களில் கற்ற பிள்ளைகளைக் கொண்டு வந்து சேர்த்தனர். இக்காலத்தில் ஏறத்தாழ 150 மாணவர்கள் இருந்தனர்.

1964ல் திரு.பொன்னம்பலம் அவர்கள் அதிபராக வந்த காலத்தில் முதன்முதலாக க.பொ.த (சா.த) பரீட்சைக்கு (அப்போது S.S.C) விண்ணப்பித்துப் பரீட்சை எழுதிச் சித்தியும் அடைந்தனர். எமது வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற திருமதி அன்னமுத்து சின்னத்தம்பி அவர்களும் இதிலொருமாணவியாவார்.

யா/வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியில் அதிபராக இருந்த திரு.ஆ.மகாதேவன் அவர்கள் 1966ல் அதிபராக நியமிக்கப்பட்டார். இக்காலத்தில் பாடசாலை குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பெற்றது. யாழ்ப்பாணத்திலிருந்து வந்து கற்பித்த திரு.சு.திருநாவுக்கரசு, திரு.செல்லத்துரை, திரு.பொ.சுப்பிரமணியம் போன்ற ஆசிரியர்களும் உறுதுணையாக இருந்தனர். ஏறத்தாழ 300 மாணவர்கள் வரை கற்றனர். பாடசாலை மகா வித்தியாலயமாக தரம் உயர்த்தப்பட்டு "கிளி/இராமநாதபுரம் வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை" என்ற பெயர் மாற்றப்பட்டு "கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்" என்ற பெயரைப் பெற்றது. பாடசாலைக் கொடியின் நிறம் கரும்சிவப்பு. பாடசாலைச் சின்னம் கரும் சிவப்பு நிறத்தைப் பின்புலமாக, ஏர், நெற்கதிர், ஏடு, கோபுரம் என்பவற்றைக் கொண்டதாக அமைக்கப்பட்டது. மகுடவாக்கியம் "ஏட்டிற்கும் ஏருக்கும் ஏற்றம் தருவோம்"

இக்காலத்தில் ஆசிரியராக இருந்த காலம் சென்ற திரு.பொ.சுப்பிரமணியம் ஐயா அவர்களின் முயற்சியோடு மதிப்பிற்குரிய திரு.வீரமணிஐயா அவர்களால் இயற்றப்பட்ட பிலஹரி இராகம் ஆதி தாளத்தில் அமைந்த "வளர்புகழ் ஓங்குகவே" என்ற பாடசாலைக்கீதம் நடைமுறைக்கு வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1969ல் திரு காராளபிள்ளை அவர்கள் அதிபராக வந்து மாணவர்களின் கல்வி இணைப்பாட விதானச் செயற்பாடுகளை அக்கறையோடும் ஆர்வத்தோடும் முன்னெடுத்துச் சென்றார். பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று பட்டம் பெற்று வெளியேறிய மாணவர்களைக் கொண்டு மேலதிக வகுப்புக்களை நடாத்தினார். இவற்றின் மூலம் பயன்பெற்றவர்களில் தற்போதைய கிளிநொச்சிக் கல்வி வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு.கோ.செல்வராசா றோயல் கல்லூரி பிரதி அதிபர், திரு.கணபதிப்பிளளை ஆகியோரும் அடங்குவர். உடற்பயிற்சிப் போட்டியில் மாணவர்களை யாழ் மாவட்டத்தில் பங்குபற்றச் செய்தார். அன்புடன் கூடிய கண்டிப்பால் மாணவர் ஒழுக்கம், ஆங்கிலக் கல்வி என்பவற்றிலும் முன்னேற்றத்தை ஏற்படுத்தினார். உயர் கல்வி பதவிகளலிருப்பவர்கள் காராளபிள்ளை சேர் பற்றி நினைவு கூர மறவார்.

இவருக்குப் பின்னர் திரு. தியாகராசா, திரு.விஷ்ணு, திரு.மார்க்கண்டு, திரு.சோமலிங்கம், திரு.கோபாலபிள்ளை போன்ற அதிபர்கள் கடமையாற்றினர்.

1977ல் J.M.P ஜெயராசா அதிபராக வந்த காலத்திலும் மாணவர்களின் கல்வி, ஒழுக்கம், விளையாட்டு, ஆங்கிலக்கல்வி என்பவற்றல் முன்னேற்றம் காணப்பட்டது. இவர் ஒரு உடற் கல்வி ஆசிரியராகையால் உடற்பயிற்சிப் போட்டிகளில் முதலாமிடம் பெறவகை செய்தார். சாரணர் இயக்கத்திலும் அக்கறை கொண்டு மாணவர்களைச் சாரணியத்தில் வளர்த்தார். தற்போது எமது வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளரான (நிர்வாகம்) திரு.சி.இதயராசா அவர்களும் திரு.ஜெயராசா அதிபருக்குத் தோள் கொடுத்த ஆசிரியர்கள் ஒருவராவார். 1986ல் திரு.த.இராமநாதன் அதிபராகப் பொறுப்பேற்றார். ஆங்கில மொழி மூலம் கற்ற இந்தியன் பட்டதாரி. ஆங்கிலக் கல்வியில் அக்கறை காட்டியவர். தமது கடமைக் காலத்தில் கருத்தரங்கு ஒன்றில் பங்குபற்றச் சென்ற போது மாரடைப்பால் கொழும்பில் காலமானவர். இவரின் கண்ணீர் அஞ்சலி நிகழ்வு எமது வித்தியாலயத்திலேயே அன்றைய கல்விப் பணிப்பாளராக இருந்த திரு பொன் சபாபதி அவர்களால் ஒழுங்கு செய்து நடாத்தப்பட்டது. அக்காலப் பகுதியில் பிரதிக் கல்விப்பணிப்பாளர்களாக இருந்த திரு.ப.அரியரத்தினம், திரு.த.குருகுலராசா, திரு.க.சின்னராசா ஆகியோரும்கலந்து நினைவுரைகளையாற்றினர்.

தொடர்ந்து 1993, 1994 காலப்பகுதிகளில் இக்கிராமத்தைச் சேர்ந்தவர்களான திரு.வை. தனிநாயகம், திரு.ச.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் கிராமப்பற்றோடு பாடசாலையை நிர்வகித்தனர். தொடர்ந்து யாழ்ப்பாண இடப்பெயர்வால் இடம் பெயர்ந்த மக்கள் பாடசாலையில் தஞ்சமடைந்த காலப்பகுதியான 1995ல் திரு சிவசாமி, 1996ல் திருமதி.இ.திருநாவுக்கரசு ஆகியோர் பாடசாலையைத் தக்க வைக்க வேண்டிய நிலையேற்பட்டது.

1997லிருந்து 2007வரை திரு.வெ.க.இரத்தினகுமார் அவர்கள் அதிபராக இருந்த காலப் பகுதி பாடசாலை வரலாற்றில் "ஒரு பொற் காலம்" என எல்லோராலும் புகழப்படுகின்ற காலமாகும். இடம்பெயர்ந்த மாணவர்கள் பலர் இங்கு கற்றனர். ஏறத்தாழ 2600 மாணவர்கள் இருந்தனர். கிளிநொச்சிக் கல்வி வலயத்தில் மிகக் கூடிய மாணவர்களைக் கொண்டிருந்தது. இரு வேளைப் பாடசாலை நடைபெற்றது. தொடர் மாடிக் கட்டிடங்கள் இரண்டு, நூலகம், செயற் பாட்டறை, அழகியலறை, பொதுஅறை, விஞ்ஞானகூடம் என அழகிய கட்டிடங்கள் அமைக் கப்பட்டன. பாடசாலைக்கு முன்பாகவுள்ள அரச காணியில் ஆரம்பப் பிரிவுக்கான கட்டிடம் அழகு படுத்தப்பட்டு பாலர் வகுப்புக்கள் நடைபெற்றன. குழாய்நீர் வசதி செய்யப்பட்டது. பூந்தோட்டம், சிறுவர் பூங்கா, மதில், கேற்வளைவு, எனப்பாட சாலை அழகுடன் பொலிவுற்றது. இரவு வேளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் மாணவர்கள் இருந்து கற்பதற்கு மின் வெளிச்ச வசதி செய்து கொடுக்கப்பட்டது. கற்றல் கற்பித்தற் செயற்பாட்டின் முன்னேற்றத்தை தரம் 5 புலமைப்பரிசில் பெறுபேறும் பல்கலைக்கழக அனுமதியும் பறைசாற்றின. அநேக மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து பாராட்டு விழாக்கள் செய்யப்பட்டன. முதன்முத லில் பல்கலைக்கழகத்திற்கு மாணவர்கள் தெரி வாகிய பெருமை இவரையே சாரும். தொடர்ந்து பல மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்றனர். சாரணர் இயக்கத்தைப் பாடசாலையில் திறம் படச் செயற்படுத்திய ஜனாதிபதி விருதுபெற்ற ஆசிரியர் திரு.ம.ஜெகதீஸ்வரன் அவர்களின் வழிநடாத்தலில் செல்வன் கெங்கேஸ்வரன் பிரசாந் என்ற மாணவன் ஜனாதிபதி விருது பெற்றார். செல்வன் ஜெயராசா ஜெயமாருதி சதுரங்கப் போட்டியில் தேசியத்தில் முதலாமிடம் பெற்றார். இக்காலப் பகுதியில் யாழ்ப்பாணத்தில் தனியார் கல்வி நிலையங்களின் புகழ்பெற்ற ஆசிரியர்கள் எமது பாடசாலையில் கடமை யாற்றியமையும் வெளிநாடுகளிலிருந்து பழைய மாணவர்கள் நிதி சேகரித்து வழங்கியமையும் பாடசாலை வளர்ச்சிக்கு வரப் பிரசாதமாக அமைந்தது எனலாம்.

இடையில் ஒரு வருடகாலம் (2004ல்) திரு.இராஜமகேந்திரன் அவர்கள் அதிபராக இருந்து பாடசாலையை நிர்வகித்தனர். 2007ல் தற்போதைய கல்வப் பணிப்பாளர் திரு.க.முருக வேல் அவர்கள் பாடசாலையைப் பொறுப்பேற்றார். இக்காலப்பகுதி வேதனை மிகுந்த காலமாக இருந்தது. பிள்ளைகளையும் மாணவர்களையும் பிரிந்தும் இழந்தும் நடைப் பிணங்களாகத் தவித்த காலம். மாணவர்களோ, ஆசிரியர்களோ, கல்வி யதிகாரிகளோ, கல்வித்துறையில் கவனம் செலுத்த முடியாத காலமாக இருந்தது. இருந்தும் பாடசா லைய்ய சோரவிடாது மிளிர வைக்கப்பட்டது.

2008ல் திரு.சி.முருகானந்தன் அவர்களிடம் வித்தியாலயம் ஒப்படைக்கப்பட்டது. இவர் வரும் போது கிளிநொச்சிப் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து வந்த மக்களால் பாடசாலை நிரம்பி வழிந்தது. தொடர் யுத்தத்தினால் முற்றாக இடம் பெயர்வு 2009.01.06ல் இடம்பெயர்ந்து சென்று 2010.04.26ல் மீள ஆரம்பிக்கப்பட்ட போது பாட சாலை சுடுகாடாகக் காட்சியளித்தது. தொடர்ந்து மீள்குடியேற வரும் மக்களின் முகா மாகப் பேணப்பட்டது. அதிபரின் முயற்சியால் இடிந்த கட்டிடங்கள் திருத்தப்பட்டு சுற்றி வேலிகள் போடப் பட்டு பாடசாலைச் சுற்றுப்புறம் பூந்தோட்டங்களால் அலங்கரிக்கப்பட்டு, மாணவர்களுக்கு குழாய் நீர் வசதியேற்படுத்தப்பட்டு பாடசாலைச் சுற்றுச் சூழல் கவின் நிலைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும் சிறுவர் பூங்கா, சுற்றிவரமதில், அமைப்ப தற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கணினி வகுப்புக்கள் திறம்படச் செயற் படுத்தப்பட்டுள்ளன. க.பொ.த (சா/த) உயர்தர பெறுபேறு, பல்கலைக்கழக அனுமதியை புலமைப் பரிசில் பெறுபேறு என்பவற்றை உயர்த்துவதற் காகப் பல்கலைகழக அனுமதி பெற்ற மாணவர்கள் மூலம் மேலதிக வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

பாடசாலைப் பாரம்பரியத்தைக் கட்டிக் காக்க வேண்டுமென்பதில் திடமான கருத்தையுடைய இவர், திரு.க.இரத்தினகுமார் அதிபர் காலத்தில் மாற்றியமைக்கப்பட்ட பாடசாலைக் கீத இராக த்தை, பழைய மாணவர்களின் வேண்டுதலையும் கருத்தில் கொண்டு வழமையான இராகத்தில் பாடுவதைச் செயற்படுத்தினார். மேலும் “ஏட்டிற் கும் ஏருக்கும் ஏற்றம் தருவோம்” என்ற மகுட வாக்கியத்தையும் பாடசாலைச் சின்னத்தில் பொறிப்பதற்கு ஆவண செய்யப்பட்டுக் கொண்டி ருக்கிறது. மேலும் பாடசாலை வரலாறு ஆவணப் படுத்தபட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்த துடன், பரிசளிப்பு விழா மூலம் மாணவர் கல்வியை உயர்த்தும் உயரிய நோக்கோடு முதன்முதலில் பாடசாலைச் சஞ்சிகையொன்றை வெளியிடும் பெருமையும் இவரையே சாரும் என்றால் அது மிகையல்ல.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமநாதபுரம் மகா வித்தியாலயம்

## 42 ஆண்டுகளுக்குப் பின் ஒரு பார்வை

மா. கணபதிப்பிள்ளை
பிரதி அதிபர், றோயல் கல்லூரி
கொழும்பு 07

1969/70ம் ஆண்டுகளில் இப்பாடசாலையில் க.பொ.த சாதாரண தர மாணவனாகச் கல்வி கற்றேன். இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் இக்காலத்தில் க.பொ.த சாதாரண தர வகுப்புக்களை இல்லாதாக்கிய காரணத்தினால் நான் இம்மகாவித்தியாலயத்தில் மாணவனாகச் சேர்ந்தேன். இக்காலத்தில் இம்மகாவித்தியாலயத்தின் நிலை தொடர்பான சில குறிப்புக்களை பகிர்ந்து கொள்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

இராமநாதபுரம் வட்டக்கச்சி கிராமங்கள் 1953ம் ஆண்டு காலப்பகுதியில் இரணைமடு குளத்தை மையப்படுத்திய குடியேற்றத்திட்டமாக வழங்கப்பட்டது. யாழ்ப்பாணத்திலுள்ள 13, D.R.O பிரிவுகளிலிருந்து இப்பிரதேசத்தில் மக்கள் குடியேறியிருந்தனர். அக்காலத்தில் தாங்கள் வாழ்ந்த இந்த பிராந்தியத்திற்குரிய கலாசாரத்தில் வாழ்வதற்கு மாறாக தாம் முன்ப வாழ்ந்த பிரதேசங்களின் பெயர்களைக் குறிப்பிட்டு தம்மை அடையாளப்படுத்திக் கொண்டமை இம்மக்களுடைய பிரதான அம்சமாகக் காணப்பட்டது. இராமநாதபுரத்திற்கென்று தனித்ததொரு கலாசாரத்தில் மக்கள் சேராத காரணத்தினால் இம்மக்களுக்குக் கிடைக்கக்கூடிய பல சந்தர்ப்பங்கள் நழுவிவிடப்பட்டன. இக்குடியேற்றத்தில் குடியேறிய மக்கள் இராமநாதபுர மக்களென தம்மை அடையாளப்படுத்தாது தத்தம் பிராந்தியங்களைக் குறிப்பிட்டுக் கொண்டமையினால் இம்மக்களைக் கூறுபோட்டனர். இதனால் மக்களின் வரப்பிரசாதங்கள் கை நழுவிச் சென்றது.

இக்காலம் 1970ம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் உக்கிரமடைந்த நேரம். இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தின் அதிபராக அணலைதீவைச் சேர்ந்த திரு.கராளபிள்ளை அவர்கள் நியமிக்கப்பட்டிருந்தார். கிளிநொச்சி கனிஷ்ட மகாவித்தியாலய அதிபராகக் கடமையாற்றிய இவர் ஏதொ ஒரு காரணத்தினால் இராமநாதபுரத்திற்கு மாற்றப்பட்டார் என்று அக்காலத்தில் பேசப்பட்டது. ஆனால் இராமநாதபுரத்து மாணவர்களைப் பொறுத்தவரை வரப்பிரசாதமாகவே அவர் காணப்பட்டார். சென்னை பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை முடித்திருந்த அவர் இலங்கை பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமாவை முடித்திருந்தார். ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் மிகச்சிறந்த புலமை பெற்றிருந்த அவர் இப்பிராந்தியத்திலுள்ள விவசாயக்குடியானவர்களின் பிள்ளைகளின் வறுமை கற்றலுக்குத் தடையாக இருக்கக் கூடாது என்பதற்காக பல உத்திகளையும் உபாயங்களையும் கையாண்டு கற்றலில் பிள்ளைகளுக்கு நாட்டத்தை வரவைத்தார். தரமான நூல்நிலையத்தை ஏற்படுத்தினார். தானே வகுப்பறைகளுக்குச் சென்று கற்பித்தார். அதிபர் ஒருவரின் வேலைப்பழு பாடசாலைகளில் பாரிய அளவில் காணப்படும். தன்னால் வகுப்பறைகளுக்கு செல்லமுடியாதிருக்கும் சந்தர்ப்பங்களைச் சீர் செய்வதற்காக அக்காலத்தில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இருந்து சித்தியடைந்திருந்த திரு.நடராஜா அவர்களை மாணவர்களின் கற்றல் முயற்சிக்கு பயன்படுத்தினார். பரம்பரை இடைவெளி குறைந்த மிகக் குறைந்த வயதுள்ள திரு.நடராஜா அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களின் அபிலாசைகளுக்குப் பொருத்தமான வகையில் கற்பித்தலை மேற்கொண்டார். 1970களில் கல்வி கற்ற எல்லா மாணவர்களும் மிகச் சிறப்பான முறையில் சித்தியடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இன்று இவர்கள் பல்வேறு இடங்களில் மிகப் பெரிய பதவிகளில் பிரகாசிக்கின்றார்கள்.

1970களில் இப்பாடசாலையின் நிலை உயர்வாக இருந்தமைக்கு பல்வேறு ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான பணி காரணமாகும். காலஞ்சென்ற திரு.பொ.சுப்பிரமணியம், அமரர் திரு. திருநாவுக்கரசு அமரர் திரு.கோபாலபிள்ளை, அமரர் திரு.கங்காதரன், அமரர் திரு.பொன்னம்பலம், அமரர் திருமதி.சரஸ்வதி, அமரர் திருமதி. பார்வதி, அமரர் திருமதி.மாணிக்கம், திருமதி. கண்ணம்மா தணிகாசலம், முன்னைநாள் கனிஷ்ட வித்தியாலய அதிபர் திரு.நடராஜா போன்றோர் மட்டுமல்ல மற்றும் பலர் என் ஞாபகத்தில் வராத பெயர்கள் கொண்ட அகிலாண்ட நாயகி எனும் ஆசிரியர்கள் அர்ப்பணிப்போடு செயற்பட்டார்கள். மாணவர்களின் முன்னேற்றத்தில் அக்கறையுடன் அவர்களாற்றிய பணி அப்பிரதேச மாணவர்களை முன்னிலைப்படுத்தி நின்றது.

அக்காலத்தில் யாராவதொரு திறமைசாலி கிளிநொச்சி மாவட்டத்தில் ஆசிரியப்பணிக்கு வருவாரானால் அவர் பல்வேறு காரணங்களை சுட்டிக்காட்டி அவர்கள் இடமாற்றத்திற்கு உட்படுத்துவார். இவ்வகையில் அதிபர் வரிசையில் திரு.காராளசிங்கம் அவர்கள் க.பொ.த சாதாரணதர வகுப்பில் மூன்றுக்கு மேற்பட்ட பாடங்களையும் கற்பித்துக் கொண்டிருந்தார். க.பொ.த சாதாரணதரப் பரீட்சை நெருங்கிக் கொண்டிருக்கும் வேளையில் வன்னேரிக்குளம் என்னும் மிகப் பின்தங்கிய இடத்திற்கு அவர் இடமாற்றம் செய்யப்பட்டார். இச்செயல் எமக்கு நேரடியாகவிழுந்தது. எமது துயரைக் காட்டுவதற்காகவும் அதிபருக்கு நன்றி செலுத்து முகமாகவும் பிரிவுபசார விழாவினை நடாத்தினோம். 100 வீதமான மாணவர்களும் என்னோடு துணைநின்றார்கள். வரலாறு காணாத பிரியாவிடையொன்று திரு.காராளபிள்ளை அவர்களுக்கு வைக்கப்பட்டது. பிரியாவிடையைக் குழப்ப பல்வேறு பிரயத்தனங்கள் எடுக்கப்பட்ட போதும் திரு.மகேந்திரன் போன்றோரின் அனுசரனையுடன் வெற்றிகரமாக அதை நடத்தி முடித்தோம்.

1970களில் 16 வயது மாணவர்களாகிய எங்களால் அடையாளப்படுத்தப்பட்ட பொருத்தமற்றவர்களை 2012 வரை வயது முதிர்ந்தவர்களும் பெரியவர்களும் அடையாளப்படுத்த முடியாமையிருப்பது துர்ப்பாக்கியமான விடயமாகும்.

பாடசாலைகள் என்ற நிலை கல்வி வளர்ச்சி சிந்தனையுள்ள எந்த தனிமனிதராலும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இவ்வாறு புத்திசாதுரியமற்ற நடவடிக்கைகளால் கல்வி நிலைமை சீரழிக்கப்பட்ட பொழுதும் நமக்கிருக்கக்கூடிய ஒரெயொரு விடிவுக்கான பாதை கல்வியில் முன்னேற்றம் மட்டுமே என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

எனவே எமது வருங்கால குழந்தைகளை செவ்வையாக முறைப்படி கல்வியூட்டி வளர்ப்பது எமது பிரதான கடமையாகும். உலகச் சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய ஆங்கிலக்கல்வி, தகவல் தொழில்நுட்பம், ஆகியவற்றிலே நாட்டம் காட்டி அப்பாடல்களில் அதி முன்னேற்றகரமான அடைவுகளுக்கு வழிசெய்தல் வேண்டும். அடுத்து தாய்மொழி, கணிதம், விஞ்ஞானம், வரலாறு போன்ற பாடங்களில் இம்மாணவர்கள் மிகச் சிறப்பாகத் துலங்குவதற்கு ஊக்குவித்தல் வேண்டும். ஆடுதல், பாடுதல் ஆகிய உணர்வுகளை பிரதிபலிக்கக்கூடிய அழகியற்கல்வியை செவ் வையாக மாணவர்களுக்கு ஊட்டி மனித ஆதங்கங்களுக்கு மதிப்பளிக்கின்ற எதிர்காலச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்ததியை உருவாக்குதல் வேண்டும். உடலா ரோக்கியமுள்ள ஒரு சமுதாயத்தை உருவாக்க முறையான உடற்பயிற்சியும், விளையாட்டுக்க ளும் வழங்கப்படுதல் வேண்டும். புத்தாக்கச் சிந்தனையுள்ளவர்களாக மாணவர்களை உருவாக்கி அவர்களில் இளம் கண்டுபிடிப்பாளர் களை அடையாளப்படுத்தி பாடசாலை இயங்கு நிலைச்சக்தி உள்ளதாக ஆக்கப்படுதல் வேண் டும். அத்தகைய பாடசாலைகளை நோக்கி தூர இடங்களிலிருந்தும் மாணவர்கள் வந்து சேர்வர்.

விவசாயப்புல மாணவர்கள் இவர்களுக்கு கல்வி வாய்ப்புக்கள் எதற்கு? அவர்களால் கற்க முடியாது என்ற எதிர்க்கணிய மனப்பாங்குடன் ஆசிரியர்கள் நோக்காது அவர்களால் சாதிக்க முடியும். அவர்களிலிருந்து முதற்தர மாணவர்க ளைத் தோற்றுவிக்க முடியும் என்ற நேர்க்கணி யச் சிந்தயையுடன் செயற்படும் போது ஆற்றலு ள்ள மாணவர்களை, அங்கே துலங்கச் செய்ய முடியும். "கற்றலுக்கு வறுமை தடையாக அமை யக்கூடாது" நிறைந்த வறுமையிலும், அரைப் பட்டினியிலும் இருக்கக்கூடிய அந்த மாணவர்க ளால் தான் சாதிக்கமுடியும். அவ்வாறு சாதித்துக் காட்டியிருக்கிறார்கள். ஆக்கமுள்ள எதிர்காலச் சமூகத்தின் விருத்திக்காக அயராது உழையுங் கள். நாம் அவர்களால் தான் இந்நாட்டில் நீண்ட கலாசாரத்துடன் வாழவிருக்கின்றோம் என்பதை எண்ணிக் கொள்ளுங்கள்.

என்னை நானாக்கிய என்னுடைய பாட சாலைக்குத் தலை வணங்குகின்றேன்.

**ஒரு மனிதனுடைய வாழ்க்கையைப் புரிந்து**
**கொள்வதற்கு அவன் என்ன செய்கிறான்**
**என்பதை மட்டும் தெரிந்து கொண்டால் போதாது.**
**அவன் எதை வேண்டுமென்றே**
**செய்யாது விடுகிறான் என்பதையும்**
**தெரிந்துகொள்ள வேண்டும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழ் குழுவினர் - 2012

முதல் நிரை (இ.வ.) :

திருமதி. ஸ்ரீ. இளங்குமரன் (வகுதித் தலைவர்), திரு. செ. இராஜேஸ்வரன் (இதழ் பொறுப்பாசிரியர்), திரு. சி. முருகானந்தன் (அதிபர்), திருமதி. இ. திருநாவுக்கரசு (பிரதி அதிபர்), திருமதி. த. சிவலிங்கம் (வகுதித் தலைவர்)

இரண்டாவது நிரை (இ.வ.) :

திருமதி. க. சீவதாசன், திருமதி. சு. நிர்மலன், திருமதி. ப. சத்தியநாதன், திரு. சி. சுதாகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிஷ்:.பயர்

இதயராசன்
பிரதிக்கல்விப்பணிப்பாளர் (நிர்வாகம்)
வலயக்கல்வி அலுவலகம்,
கிளிநொச்சி

வழமையாகவே காலைப் பிரார்த்தனைக்குரிய மணி அடிப்பதற்கு முன்பே பாடசாலைக்குச் சென்றுவிடுவேன். போன செவ்வாய்க்கிழமை ஏனோ நேரம்பிந்திவிட்டது. நான் பாடசாலைக் கேற்றினை அடையும் பொழுது வழமையான குதூகலமோ சலசலப்போ இல்லாமல் ஒரு அசாதாரண சூழ்நிலை காணப்பட்டது. என்னவாக இருக்கும் என்ற கேள்வியுடன் அலுவலகத்தில் கையெழுத்து இட்டு விட்டு வகுப்பறையை நோக்கி நடக்கின்றேன். என்னை எதிர்த்தாற்போல் அதிபர் துவரங்கம்பினை வீசியபடி விறுமாப்புடன் நடந்து வருகின்றார். அவர் முகத்தினைப் பார்க்கின்றேன் வழமையாக உள்விழுந்த கண்கள் இரண்டும் இன்று வெளிப்பிதுங்கி முட்டைபோல் உருண்டு சிவந்து காணப்படுகின்றன. அக்கண்களை உருட்டி உருட்டிப் பார்க்கின்ற பார்வையே ஒரு கொலையாளிக்குரிய பார்வையாக எனக்குப் படுகின்றது. அதிபர் என்னை அண்மித்துவிட்டார்.

**"குட்மோணிங் சேர்"**

பதிலுக்குக் குட்மோணிங் சொல்லாவிட்டாலும் பறவாயில்லை போசாமல் போயிருக்கலாம் ஆனால் அவர் காலையிலிருந்து அடக்கி வைத்திருந்த எல்லாவற்றினையும் என்மீது தாராளமாகப் பொழிந்து தள்ளுகின்றார். எனக்கு இருண்டது விடிஞ்சது தெரியாமல் முழிக்கின்றேன். எனக்கு அருகில் அரைச்சுவருக்குள் வகுப்பறையில் இருந்த மாணவன் மெல்ல எனக்கு மட்டும் கேட்கும் அளவுக்குக் கிசுகிசுக்கின்றான்.

"சேர், அதிபர் காலையிலிருந்து இப்படித்தான் எல்லாரிலையும் எரிஞ்சுவிழுகிறார். நீங்கள் கணக்கெடுக்காமல் வகுப்புக்குப் போங்கோ சேர்."

ஏதோ நடக்கக்கூடாதது நடந்துவிட்டது என்பது மட்டும் நிச்சயமானது என்று நினைத்தபடி அன்றைய நேரசூசிகையின்படி சமூகக்கல்விப் பாடத்துக்குரிய எட்டாம் வகுப்புக்குள் நுழைகின்றேன். என்ன ஆச்சரியம் அந்த வகுப்பில் பெரியராசு வாத்தியார் பாடம் நடாத்திக் கொண்டிருக்கின்றார். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. என்னைக்கண்டவுடன் ஏழாம் வகுப்பு என்று சைகைகாட்டுகின்றார். ஓரளவுக்கு நிலைமையினை விளங்கிக்கொண்டு, அந்த வகுப்பினை நோக்கி மிகவேகமாக அடுத்த அடியினை எடுத்து வைக்கின்றேன். வகுப்பறைக்குள் நான் நுழைந்ததுதான் தாமதம் அலமந்துபோய் இருந்த மாணவர்கள் அமைதியாக எழுந்து அடுத்தவகுப்புக்குக் கேட்காமல் எனக்குமட்டும் கேட்க,

**"குட்மோனிங் சேர்"**

நேரம் பிந்தி வந்ததில் இருந்து பாடசாலையில் நடக்காதன எல்லாம் நடக்கின்றன. எனக்கு என்ன ஏது என்று யோசித்து யோசித்தே தலை குழம்பிவிட்டது. அப்படியே நாற்காலியில் உட்கார்ந்து விட்டேன். அடுத்து ஒரு ஆச்சரியம். கரும்பலகையிலோ கொப்பியிலோ ஏதாவது எழுதிக் கொண்டிருந்தால் போதும் மாணவர்கள் சத்தம்போட்டே அப்பிரதேசத்தை அமர்க்களப்படுத்தி விடுவார்கள் ஆனால் இன்று நான் எதுவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசாமல் அமைதியாக இருக்கின்றேன் நடுக் காட்டில் கரடியின் உறுமல் கேட்டு, குலைநடுங்கி நிற்குமாப்போல் மாணவர்கள் இருக்கின்றார் கள். இன்று நரி முகத்தில் விழித்தேனோ தெரிய வில்லை எல்லாமே தலைகீழாகவே நடக்கின்றன.

அடுத்த பாடத்திற்கான மணி ஒலிக்கின் றது. யாரும் யாருடனும் பேசியதாகத் தெரிய வில்லை. மதிய இடைவேளை வரைக்கும் பாடங் கள் மாறி மாறி நடந்துகொண்டே இருக்கின்றன. மதிய இடைவேளையை அண்மித்த பொழுதில் பாடசாலையில் பொலிஸ் ஜீப் ஒன்று பிறேக் அடித்து நிற்கின்றது. தடல்புடலென இரண்டு பொலிஸ்காரர் அலுவலகத்துள் நுழைகின்றனர். அதேவேகத்தில் அதிபருடன் வெளியேறி ஆரம்ப பிரிவு மண்டபத்தினை நோக்கிப் போகின்றனர். நான் மெதுவாகச் சுவரின் மேலால் எட்டிப்பார்க் கின்றேன். அங்குள்ள வகுப்புகளில் உள்ள கரும் பலகைகளைப்பார்த்து அதிபர் சொல்லிக்கொண் டிருக்கின்றார், பொலிஸ்காரர் தமது குறிப்புப் புத்தகத்தில் அதனைக் கவனமாக எழுதிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் எழுதிமுடிய வும் மதியவேளைக்கான மணி அடிக்கவும் சரி யாக இருந்தது.

கல்லடிபட்ட குளவிக்கூட்டிலிருந்து குளவிகள் கூட்டம் கூட்டமாக விர் என்று வெளிக் கிளம்புவதுபோல் மணிச்சத்தம் கேட்டதுதான் தாமதம் மாணவர்கள் வகுப்பறைக்கு வெளியே சந்தோஷக் கூச்சலுடன் பாய்ந்து ஓடிக்கொண்டி ருந்தனர். அடக்குமுறை என்பது அடக்குமுறை யாளருக்கு ஒழுங்கு, கட்டுப்பாடு, அமைதி என்று அவர்நலன்சாரந்து தென்படலாம், அதற்காக அவர்கள் குதூகலித்துப் பெருமையடிக்கலாம். ஆனால் அடக்கப்படுபவர்கள் எதற்காக, எப்படி அடங்கி ஒடுங்கி இருக்கிறார்கள் அவர்களது மனநிலை எத்தகையது என்பதை யாரும் கண்டு கொள்வதே இல்லை. பாடசாலை முற்றத்தில் எறிக்கும் வெய்யிலிலும் அவர்கள் முகமலர்ச்சி யுடன் தமது சகாக்களுடன் சந்தோஷிப்பதை எப்படி விபரிப்பது. அதற்கு வார்த்தைகள் போது மானதா என்ன? மாணவர்களின் கலகலப்பில் நான் என்னை மறந்து, முந்தைய சூழலை மறந்து குதூகலித்தபடி நண்பர்களைத் தேடிப் போகின் றேன். நண்பன் சிவாதான் நடந்ததை விளக்க மாகவும் சுருக்கமாகவும் எடுத்துக் கூறினான்.

"இராத்திரி யாரோ ஆரம்பப்பிரிவு கரும்பலகை எல்லாவற்றிலையும் சோக்குக்கட்டி யாலை அதிபரையும் நளினி ரீச்சரைப்பற்றியும் தூஷணத்திலை எழுதியிருக்காம். அதைப் பார்த்த அதிபர் கொதிப்பில நிக்கிறார். இப்ப பொலிசுக்கும் சொல்லி அவரிட்ட முறைப்பாடு கேட்டு எழுதுகிறார்கள். யார் யாரில கோவமோ அவை எல்லாரையும் மனிசன் சொல்லப் போகுது, என்ன நடக்குமோ என்று தெரியேல்ல. பிள்ளையளைப் பார்த்தா வெக்கமா இருக்கு."

மூச்சு விடாமல் தனது ஆதங்கத்தினைச் சிவா சொல்லி முடித்தான்.

********

போன செவ்வாய்க்கிழமை அதிபர் கொடுத்த முறைப்பாட்டின்படி அதிபருக்கு எதிர் என அவர் நினைத்த அனைவரது பெயருக்கும் சனிக்கிழமை பொலிஸ் நிலையத்திற்கு விசா ரணைக்கு வரும்படி கட்டளை வந்திருக்கிறது. அதன்படிதான் காலையில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்குப் போவது பற்றியே எனது சிந்தையெல்லாம். அதில் வேறு நான் சாட்சி என்று குறிப்பிட்டுள்ளதுவே, மேலும் என் னைக் குழப்புவதற்குக் காரணம்.

உறக்கம் வந்ததோ என்னவோ சுவர் மணிக்கூடு டாங்.. டாங்.. என்று ஐந்துமுறை அடித்து ஓய்ந்தது. முற்றத்தில் சேவல் கூவுவதும், தென்னஞ்சோலையிலிருந்து கிளிகள் இரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடிப் போவதற்கு ஆயத்தமாக கீச்சிடுவதும் கேட்டது. அதற்குமேல் பாயில் என்னவேலை. காலைக்கடன் முடித்து வெளிக்கிடவும் ஆறுமணி பஸ்சுக்கு நேரம் சரியாகவும் இருந்தது.

**"பொலிஸ் நிலையம் இறங்கிறவை இறங்குங்கோ"**

என்று கண்டெக்டர் குரலெடுத்துக் கத்தியது விசேடமாக எமக்காகவே சொல்வது போல்பட்டது. சன நெரிசலில் எனது நண்பர்களைப் பார்த்தேன். அவர்களில் ஒருவர் கண்களினால் சைகைகாட்டினார். இதில வேண்டாம் பஸ் ஸ்ராண்டில இறங்குவம் என்பதுபோல். எனக்கும் அதுவே சரியாகப்பட்டது. இதில் நாம் இறங்கினால் சனம் என்ன நினைக்கும்.

**"என்ன மாஸ்ரர் மார் எல்லாம் பொலிஸ் நிலையத்திலை இறங்கினம். ஏதாச்சும் கேஸோ"**

என்று தமக்கு வேண்டியமாதிரி மூக்கும் முழியும் வைத்து வெற்றிலை சப்பித்துப்பியும் விடுவார்கள். என்பதால் யாம் பஸ் நிலையத்தில் இறங்கி, சலூனில் சென்று தலைவாரி, கசங்கிய சட்டையைச் சீர்செய்து, தேநீர்க்கடையில் சற்று நேரம் தேநீர்பருகி விசாரணைக்கு எப்படி முகம் கொடுப்பது என்பதுபற்றி கலந்தாலோசித்தோம். இதில் பொன்னுத்துரை வாத்தியார்தான் மூத்த ஆசிரியர். அவர் பல களம்கண்ட அனுபவஸ்தர். அவர்தான் எமக்குத் தெம்பூட்டினார்.

"தம்பியவை எம்மை விசாரிக்க கல்வி அதிகாரிக்குத்தான் முடியும். நாம் என்ன கிறிமினல் வேலை செஞ்சதோ பொலிசிலை விசாரிக்க. என்ன நடக்குதென்று பார்ப்பம். நீங்கள் ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம். நான் பார்த்துக் கொள்கிறன்."

சிங்கத்தின் குகைக்குள் தாமதமாகச் சென்ற முயலைப்போலத் தயங்கித் தயங்கிப் பொலிஸ் நிலையத்திற்குச் செல்கின்றோம். மாமரங்கள் நெடுத்துச்சடைத்து இருந்தன. ஆயினும் பாலை வனத்தில் நிற்பதுபோல் உடலெல்லாம் தகதகத்துக் கொண்டே இருந்தது, அந்தக் காலைப் பொழுதிலும். மாமரத்துக்குக் கீழ் இருந்தவர்கள் எல்லாம் திடுக்கிட்டாப்போல் எழுந்துநின்றார்கள். அங்கே நின்ற மூன்று நான்கு பொலிஸ்காரர் நிமிர்ந்து நின்று "சலூட்" அடித்தனர். திரும்பிப் பார்க்கின்றேன் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வருகின்றார். நான் கற்பனை பண்ணிய உருவத்திற்கு நேர் எதிர் மறையாக சிமாட்டான ஓரளவு கடுமையான முகத்துடன் அவர் காட்சியளித்தார். யாரையும் பார்க்காமல் திடுதிடுப்பென தனது அலுவலகத்தில் நுழைந்துவிட்டார். அவர் அழைக்கும் மட்டும் மாமரத்தின் கீழே நிற்கவேண்டியதுதான். றோட்டால் சயிக்கிளில் போனவர் ஒருவரைப் பார்க்கின்றேன். அவர் அண்ணரின் நண்பர் போல் இருந்தது. என்னைப்பார்த்தால் என்ன நினைப்பார். மாமரத்துக்குப் பின்னால் மெள்ள மறைந்து கொள்கின்றேன்.

வகுப்பறையில் எத்தனை மாணவர்களை விசாரித்திருக்கின்றோம். தண்டனை கொடுத்திருக்கின்றோம். அப்போதெல்லாம் அந்தப் பிஞ்சு மனங்கள் என்னபாட்டிருக்கும். அவர்கள் பூனைகளாய்ப் பதுங்க, சிங்கங்களாய்ப் பிடரிமயிர் சிலுப்பிக் கர்ச்சிக்கும் ஆசிரியர்கள் எத்தனைபேர். என்னோடு சேர்ந்து வந்திருக்கும் ஆசிரியர்கள் இக்கணப்பொழுதை நினைவில் வைத்திருந்தால் மாணவர்களிடம் மனிதாபிமானம் காட்டத் தவறவே மாட்டார்கள்.

மிக வேகமாக வந்துநின்ற ஜீப்பிலிருந்து தொப் தொப் எனக்குதித்த பொலிஸ்காரர் ஜீப்பிலிருந்து ஆறு, ஏழு பேரை விலங்குபோட்டபடி இறக்கினர். அவர்களின் கழுத்து, கைகள், தோள்கள் எல்லாம் அவர்கள் களவெடுத்த கோழிகளால் சோடித்து விடப்பட்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"நாங்கள் கோழிக் கள்ளர்"**

என்ற சுலோகத்தினை உரத்துச் சொல்லும்படி பொலிஸ் அதிகாரி கட்டளையிட்டார். அப்படிச் சொன்னவாறு சந்தையை ஒருமுறை வலம்வரும்படி இன்னொரு கட்டளையையும் இட்டு, இரண்டு பொலிஸ்காரரை அதனை அவதானிக்கவும் கூடவே அனுப்பிவைத்தார். அந்தக் கோழிக்கள்ளரின் ஊர்வலம் வித்தியாசமாகவே இருந்தது. சுற்ற நின்றவர்கள் யாபேரும் வேடிக்கை பார்த்தனர். ஆனால் எனக்கு அதை ரஷிக்கும் மனநிலை இல்லை என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

ஒன்பது மணிக்கு எமக்கு விசாரணை தொடங்கியது. முதலில் அதிபரின் முறைப்பாடு, அடுத்து ஒவ்வொரு ஆசிரியரிடமும் வாக்கு மூலம் பெறப்பட்டது. பொன்னுத்துரை வாத்தியார் ஆசிரியர் பக்கத்து நியாயத்தினைக்கூறி, ஒரு சட்டத்தரணிபோலவே வாதாடினார். முக்கியமான குற்றச்சாட்டு அதிபரையும் நளினி ரீச்சரையும் பற்றி அவதூறாக எழுதியமையே ஆகும். ஆனால் அதை எழுதியவர் யார் என்பதற்குக் கண்கண்ட சாட்சிகள் யாரும் இல்லை. இந்த வகையில் விசாரணை செய்த பொலிஸ் அதிகாரிக்கு எதோ ஒரு உண்மை தெளிவாகி இருக்கவேண்டும், விசாரணையை நிறுத்திக் கொண்டார். அதிபர் என்னைத்தான் சாட்சியாகக் குறிப்பிட்டபடியாலும், உள்ளவர்களில் குள்ளமாக இருந்தபடியாலும் என்னை முன்னுக்கு வரும்படி அழைத்தார். என்னை உச்சியிலிருந்து உள்ளங்கால்வரை கூர்ந்து பார்த்துவிட்டு, என்னிடம் எந்தக் கேள்வியும் கேட்கவில்லை.

யாரும் எதிர்பார்க்காத ஒரு முடிவினை பொலிஸ் அதிகாரி எடுத்தார். எல்லோரும் நில்லுங்கோ நான் வெளியில போட்டுவாறன் என்றவாறு எழுந்தார். எனக்குக்கிட்ட வந்து எனது கையைப் பற்றித் தன்னுடன் வருமாறு அழைத்தார். மகுடிக்குக் மயங்கிய பாம்பாட்டம் அவர் பின்னால் தொடர்கின்றேன்.

**"நான் காலைச்சாப்பாடு இன்னமும் சாப்பிடேல வாரும் கன்ரினில சாப்பிட்டபடி பேசுவம்"**

என்று பொலிஸ் அதிகாரி சொல்லியவாறு நடக்கின்றார். என்னால் ஏதுதான் கூற முடியும் நடப்பது நடக்கட்டும் என்று மனதைத் தைரியப்படுத்தியவாறு பின்தொடர்கின்றேன். பொலிஸ் அதிகாரிக்கு தோசையினை வைத்து, சாம்பார் ஊற்றிய வெயிற்றர் எனக்கு தேநீர் கொண்டுவந்து வைக்கின்றான். நான் தயங்கித் தயங்கி தேநீர் கோப்பையினை கப்பன்சோஸருடன் தூக்குகின்றேன். அவை ஒன்றுடன் ஒன்று ஏதோ ஒரு சுருதிக்குத் தாளமிட்டு நர்த்தனமிடுகின்றன. நிலைமையினைப் புரிந்துகொண்ட பொலிஸ் அதிகாரி,

"தம்பி ஏன்பயப்படுகிறீர் நான் உம்மட்ட விசாரணை செய்யப்போவதில்லை. உம்மை எனது தம்பியாக நினைத்துக் கேட்கிறேன். பள்ளிக்கூடத்தில் ஏதோ பிரச்சனை இருக்கு அதிபர் அதனைச் சரியாகக் கையாளவில்லை என்பது மட்டும் எனக்குப் புரியுது. நீர் என்ன பிரச்சனை என்பதை மட்டும் பயப்பிடாமல் சொல்லும்."

என்று தைரியம் ஊட்டினார். இந்த வார்த்தைகளின் பின் ரைப் அடித்த கைவிரல்கள் சமநிலை பெற்றன. தேநீரை ஆசுவாசமாகக் குடித்து முடித்தேன். பாடசாலையில் நடந்த விடயங்கள் யாவற்றினையும் ஒளிக்காமல் வரிசைக் கிரமமாகச் சொல்லி வைத்தேன். அத்துடன் போன திங்கட்கிழமை நடந்த விடயத்தினை இறுதியாகச் சொன்னேன்.

அதிபர் உட்பட ஐந்து ஆசிரியர்கள் தினமும் திங்கட்கிழமை புகைவண்டியில் வந்து, பஸ்சில் பாடசாலைக்குப் போக இரண்டாம் பாடம் முடிந்துவிடும். ஆனாலும் அந்த ஆசிரியர்கள் திங்கட்கிழமை தொடக்கம் வியாழக்கிழமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை மாலைநேர வகுப்புக்களை இலவசமா கவே நடாத்திவருகின்றனர். வெள்ளிக்கிழமை மதிய இடைவேளையுடன் புறப்பட்டு விடுவார் கள். இதுதான் பாடசாலையின் வழமையான நடைமுறையாகும். ஆனால் போன திங்கட் கிழமை வழமைபோல எல்லோரும் பஸ்சால் இறங்கி வரும்போது, அதிபர் மிகவிரைவாகச் சென்று தனது கையொப்பத்தினை எட்டுமணி என்று இட்டபின்னர் சிகப்புக் கோடு இட்டு பத்துமணி என்று நேரமும் குறிப்பிட்டிருந்தார். இதுதான் பலநாள் பிரச்சனைகள் பூதாகரமான வெடிப்பதற்குக் காரணம் என்று நினைக்கின் றேன். ஆனால் இந்தவேலையை அவர்கள் செய் திருக்க மாட்டார்கள். இடையில் யாரோ குளிர் காய்பவர்கள்தான் செய்திருக்கவேண்டும் என்றும் இந்தச்செயலால் ஆசிரியர் என்ற வகை யில் யாம் எல்லோரும் வெட்கப்படுகின்றோம் என்பதையும் சொல்லிவைத்தேன். நான் மனம் திறந்து பேசியதும் எல்லாவற்றினையும் ஒளிக் காமல் சொன்னதும் பொலிஸ் அதிகாரிக்குப் பிடித்திருக்கவேண்டும் எனது முதுகில் தட்டிக் கொடுத்து, என்னைப்பாராட்டினார்.

நானும் பொலிஸ் அதிகாரியும் திரும்பி வரும்போது எம்மை ஆவலுடன் எல்லோரும் பார்த்துக்கொண்டிருந்தனர். ஒன்றும் கூறாமல் தனது ஆசனத்தில் அமர்ந்த பொலிஸ் அதிகாரி அதிபரிடம் கேட்டார். கரும்பலகையில் என்ன எழுதியிருந்தது என்று. அதிபர் எவ்வித கூச்ச நாச்சமுமின்றி வரிசையாகச் சொல்ல முற்பட் டார். அப்போது இடைமறித்த அதிகாரி,

"என்ன காணும் பிறின்சிபல் எழுதிய வங்கள் ஒருக்கால்தான் எழுதினாங்கள், நீர் அதை எத்தனைதரம் சொல்லுகிறீர். "ஏதோ கீதை வாக்கியம்; போல, இந்தத்தம்பியிட்ட கேட்ட பொழுது கெட்டவார்த்தைகள் என்றுதான் சொன்னார். உமது வயதுக்கு நீர் சொல்லிறது தகுமோ?"

என்று ஒரு போடு போட்டார். அதிபர் முகம் கறுத்து விறுவிறுத்துப்போனார். பொலிஸ் அதிகாரி தொடர்ந்து பேசினார்.

"என்ன பிறின்சிப்பல் பேசாமல் நிக்கி நீர். இங்க எனது அலுவலகத்தில் நிக்கிறவை யைப் பாரும். எல்லாரின்ர கையிலையும் துவக்கு இருக்கு அவர்கள் பிந்திவருகிறார்கள் என்று சிகப்புக் கோடு தினமும் போட்டால் என்ன நடக்கும். ஏதோ ஒருநாள் கோபக்கார பொலிஸ் காரனின் கையிலுள்ள துப்பாக்கி மிஷ் ஃபயர் ஆகும். எனது கதையும் அத்தோடு முடிஞ்சிது. என்ன சரிதானே. அப்படித்தான் உமக்குக் கீழ் வேலை செய்கிற ஆசிரியர்மாரிடம் சோக்குக் கட்டி இருக்கு, நீர் சிகப்புக் கோடுபோட்டீர், சோக் குக்கட்டி மிஷ் ஃபயர் ஆச்சுது. என்ன விளங் குதோ பிறின்சிபல். இனியாவது மிஷ் ஃபயர் வராமல் தோழமையோடு பிள்ளையளுக்குப் படிப்பிக்கின்ற வேலையைப் பாருங்கோ."

என்று நீண்ட சொற்பொழிவை பொலிஸ் அதிகாரி நிகழ்த்தி முடித்துவிட்டு எம் மைப்பார்த்துப் புன்னகைத்தார். அதிபர் உட்பட நாங்கள் யாபேரும் அவரின் யதார்த்தபூர்வமான பேச்சைக்கேட்டு ஆச்சரியத்தில் உறைந்து போனோம். நாங்கள் பொலிஸ் நிலையத்தை விட்டு அமைதியாக வெளியேறுகின்றோம். அசாதாரணமான அந்தப் பொலிஸ் அதிகாரியை நினைத்துப் பார்க்கின்றேன். அவரது அலுவல கத்துக்கு முன்னாலுள்ள மாமரம் போதிமரமாய் எனக்குக் காட்சியளிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுந்தரர் பாடிய சீபர்ப்பதம்

ச. லலீசன் M.A(தமிழ்)
விரிவுரையாளர்
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

பல்லவர் காலப் பக்திப் பாடல்களைப் பாடியோருள் சுந்தரருக்குத் தனிச் சிறப்புண்டு. இயற்கை அழகை இரசித்துப் பாடும் இவரது ஆற்றல் அற்புதமானது. திருக்காளாத்தி மலையைத் தொழுதபின் சுந்தரர் அங்கு தங்கியிருக்கும் நாள்களில் சீபர்ப்பதத் தலத்தைப் பணிந்து வணங்கியது போல மகிழ்ந்து பாடியதே "சீபர்ப்பதம்" என்ற பதிகமாகும். இதனை

**வடமாதிரத்துப் பருப்பதமும்**
**திருக்கேதார மலையும் முதல்**
**இடமா அரனார் தாம் உவந்த**
**எல்லாம் இங்கே இருந்து இறைஞ்சி**
**நடம் ஆடிய சேவடியாரை**
**நண்ணினார் போல் உள்நிறைந்து**
**திடம் ஆம் கருத்தில் திருப்பதிகம்**
**பாடிக் காதல் சிறந்திருந்தார்**

(பெ.பு.: 3357)

என்ற பெரிய புராணப் பாடல் எடுத்தியம்புகின்றது.

திருநாவுக்கரசர் திருப்பருப்பதத்தை நேரில் சென்று வணங்கிய செய்தியைப் பெரிய புராணம் காட்டுகின்றது

**மானவிஞ்சையர் வானநாடர்கள்**
**வான்இயக்கர்கள் சித்தர்கள்**
**கான கின்னரர் பன்னகாதியர்**
**காமசாரிகளே முதல்**
**ஞானமோனிகள் நாளும் நம்பரை**
**வந்து இறைஞ்சி நலம்பெறும்**
**தானம் ஆன திருச்சிலம்பை**
**வணங்கி வண்தமிழ் சாற்றினார்**

(பெ.பு.: 1619)

சீபர்ப்பதம் என்ற தலம் தமிழ் வழக்குப்படி திருப்பருப்பதம் என அழைக்கப்படுகின்றது. இதனை திருச் சிலம்பை எனவும் அழைத்தனர். இந்தியாவில் தற்போது ஸ்ரீசைலம் என இத்தலத்தை அழைக்கின்றனர் (திரு – ஸ்ரீ, சைலம், பருப்பதம் என்பன மலையைக் குறிக்கும் சொற்களாகும்) இயற்கை அழகு நிரம்பப் பெற்ற இத்தலத்தின் இறைவனைத் தரிசிக்க வருபவர்களின் பட்டியலை மேற்காட்டிய பெரிய புராணப் பாடல் எமக்குக் காட்டுகின்றது.

### சீபர்ப்பதம் – இன்று

இந்தியாவில் ஆந்திர மாநிலத்தில் வடமேற்கில் உள்ள எழில் நிறைந்த தலம்தான் ஸ்ரீசைலம். சக்தி பீடங்களுள் "மாதவி பீடம்" என்றும் சிவலிங்கங்களுள் "ஜோதிர் லிங்கம்" அமைந்திருக்கும் தலமாகவும் இது விளங்குகின்றது. தமிழகத்தில் பன்னிரு தலங்களில் ஜோதிர் லிங்கம் இருப்பதாகக் கொள்ளப்படுகின்றது. இறைவன் திருநாமம் மல்லிகாஜுன சுவாமி. இறைவி பிரமராம்பிகா.

அருணன் என்னும் அசுரன் ஐந்து கால்கள் வரையுள்ள பிராணிகளால் தனக்கு ஆபத்து நேர்ந்துவிடக் கூடாது என அறைவனிடம் வரம் வாங்கியிருந்தான். இவனது கொடுமைகள் கண்டு பொறுக்க முடியாத இறைவி பிரமரம் என்ற வண்டாக உருவெடுத்து (வண்டு – ஆறு கால்கள் உடையது) அருணனைக் கொன்றாள். இதனால் இறைவி பிரமராம்பிகா என்ற பெயரைப் பெற்றாள். அசுரனைக் கொன்ற உக்கிர கோலத்துடனேயே இறைவி இத்தலத்தில் காட்சி கொடுக்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோதிர் லிங்கமும் சக்தி பீடமும் ஒன்றாகச் சங்கமித்த தலமாதலால் இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் அடியவர்கள் இத்தலத்தை

சீபர்ப்பதம் தல முகப்பு

நாடி வழிபாடாற்றுகின்றனர். சிவராத்திரி விரதம் இத்தலத்தில் சிறப்பாகக் கொண்டாடப்படுவதாகவும் இந்நாளில் ஈசனுக்கும் பிரமராம்பிகாவுக்கும் திருமணம் நடாத்தப்படுவதாகவும் அறிய முடிகின்றது. இத்திருமணத்திற்கு ஸ்ரீ சைலம் மலைப் பகுதியில் வாழ் ஆதிக் குடிகள் சீதனம் கொண்டு வருவார்களாம். இன்றும் இந்நடைமுறை தொடர்ந்த வண்ணம் உள்ளது.

**சீபர்ப்பதம் – அன்று**

பல்லவர் காலத்தில் (கி.பி. 7 ஆம் நூற்றாண்டில்) சீபர்ப்பதம் (ஸ்ரீசைலம்) தலத்தின் இயற்கை எழிலைச் சுந்தரர் தன் பதிகத்தின் ஊடாகப் பதிவு செய்கிறார். பத்துப் பாடல்களுள் ஒரு பாடலில் மட்டுமே அதாவது 8 ஆவது பாடலில் மட்டுமே இறைவனை நேரடியாக நினைக்கிறார்.

"திரியும் புரம் நீறாக்கிய செல்வன்" என அவரது நினைப்பு மேலிடுகின்றது. பத்தாவது பாடலில் பாடற் பயன் சொல்கின்றார். ஏனைய எட்டுப் பாடல்களும் இம்மலையில் இருக்கும் இறைவனை வணங்கச் சென்றால் அருமையான இயற்கைக் காட்சிகளைக் காணலாம் என்ற ஆசையையூட்டுவதாக அமைந்திருக்கின்றன.

சுந்தரர் திருக்காளாத்தி மலைக்குச் சென்று அங்கிருந்தவாறே சீபர்ப்பதத் தலத்தைத் தனது ஞானக் கண்களால் தரிசித்துப் பதிகம் பாடினார். சுந்தரரது இலக்கிய ஆளுமை இப்பாடல்களுடாக வெளிக்காட்டப்படுகின்றது.

**சீபர்ப்பதம் பதிகத்தின் ஊடாக வெளிப் படும் இயற்கைக் காட்சிகளும் மலையில் இடம் பெறும் செயற்பாடுகளும்**

மானும் மரையினமும் மயிலினமும் எங்கும் உலாவுகின்றன. தமக்குரிய உணவுகளைத் தேடியுண்டு பெரிய சுனைகளில் நீரைப் பருகி வாழ்கின்றன. மலையில் பூக்களையுடைய பெரிய மரங்கள் நெருக்கமாகச் செறிந்து காணப்படுகின்றன. அம்மரங்களில் உராய்ந்து சென்று தேமாமரச் சோலையை அடைந்து அதன் நிழலில் அவை உறங்குகின்றன.

மலைச் சாரலுக்கு அப்பாலிருந்து வரும் யானைகளைச் சீபர்ப்பத மலை வாழ் வேடர்கள் பிடித்துத் தங்கள் மலைக்குக் கொண்டு வந்து கட்டி வைத்து வலிந்து உணவூட்டுகின்றனர். இவ்வேளையில் இக்காட்சியைக் கண்ட பெண் யானைகள் தமது ஆண் யானைகளும் இவ்வாறு பிடிக்கப்படுமோ எனக் கலங்கி அவற்றை அழைத்தவாறு ஓடுகின்றன. என்ன நடந்தது என்பதை அறியாத அம்மலையில் உள்ள ஆண் யானைகள் தம் பெண் யானைகள் பிடிபட்டுவிட்டனவோ எனக் கலங்கிப் பிளிறுகின்றன. திகைத்துத் தம் பிடியைத் தேடுகின்றன.

இளமைச் சொற்களையுடைய இளம் பெண்கள் அங்குள்ள தினைப் புனத்தைக் காவல் செய்கின்றனர். இளங்கிளிகள் வந்து தினைத் தாளைக் கோதிக் கதிர்களைக் கோலுகின்றன. அப்போது "என்னை மதிக்காது இக்கிளி வந்து தினைத்தாளைக் கோதி உண்கிறதே" எனக் கோபித்த குறமகள் சினந்து கவணை எடுத்துக் கல்லை வைத்து அடிக்கிறாள். அவ்வழகிய கிளி தன் எண்ணம் மாறிப் பறந்து செல்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினைப் புனத்தைக் காக்கும் பெண்கள் "ஆய் ஓ.." எனச் சத்தமிட்டவாறு செயற்படுகின் றனர். அதற்கும் கிளிகள் பறப்பதாக இல்லை. கவ ணெடுத்து வீசுகின்றனர். சிவந்த வாயையுடைய கிளிகள் ஒலியெழுப்பியவாறு அஞ்சியோடி ஒளிக் கின்றன.

ஆண் யானைகள் கூட்டமாகத் தம் பெண் யானைகளைத் தேடுகின்றன. பெண் யானைகளும் தமது ஆண் யானைகளின் குர லோசையைக் கேட்பதற்காக செவியைத் தாழ்த்தி நிற்கின்றன. இக்காட்சியைக் கண்ட வேடர்கள் இரக்கம் கொண்டு இலையாற் கல்லை செய்து தேனை அப் பெண் யானைகளுக்கு இனிது ஊட்டி விடுகின்றனர்.

மாற்றுக் களிறடைந்தாய் என மதம் வேழம் தன் துதிக்கை எடுத்துச் சினக்கின்றது. "நீர் இவ்வாறு பழி தூற்றினால் நான் உயிர் தரிக்க மாட்டேன்" எனப் பெண் யானை தற் கொலைக்குத் துணிகின்றது. தன் தவறின்மை யைத் தெளியச் செய்து ஆண் யானையைத் திருப்திப்படுத்துகின்றது.

கிளிகள் மீண்டும் மீண்டும் தினைப்புன த்தை நோக்கி வருகின்றன. "அப்போதும் வந்தண்டீர்கள். நான் இரங்கி அதட்டாதிருந் தேன். எப்போதும் உமக்கு இதுவே தொழிலாகி விட்டது. இவ்வாறு நீர் உண்டீரானால் எம்மை எம்முறவினர்கள் கோபிக்கமாட்டாரோ?" என்று குறமகள் கிளியை நோக்கி எறிகின்றாள்.

மலைச் சாரலில் பன்றிகள் நிலத்தைக் கிளறுகின்றன. நெருப்பை ஒத்த தோற்றமுடைய மாணிக்கக் கற்கள் அங்கு வெளிப்படுகின்றன. அதனைக் கண்டு நெருப்பெனப் பயந்த மான் மரை போன்ற விலங்குகள் அவ்விடத்தை விட்டு ஓடுகின்றன. பின்பு மலையிலுள்ள சோலைக ளில் காணப்படும் தேனைக் குடித்துக் களிப்படை கின்றன. இத்தகைய இயற்கை வர்ணனைகளை எடுத்துக் கூறிய சுந்தரர் இப்பாடல்களைப் பாடுப வர்கள் "ஒல்லை செல உயர் வானகம் ஆண்டங் கிருப்பாரே" என்றும் குறிப்பிடுகின்றார்.

**சீபர்ப்பதம் பதிகம் பல்லவர் கால இலக்கியப் பண்பு களுடன் பொருந்தும் விதம்**

சுந்தரர் பாடிய சீபர்ப்பதம் என்ற பதிகம் தமஜழ் இலக்கிய வரலாற்றில் பல்லவர் காலத் துக்குரியதாகும். இப்பதிகத்தில் பல்லவர் காலத் திற்குரிய பண்புகள் காணப்படுகின்றன.

- பல்லவர் கால இலக்கியங்கள் தல வர்ண னையை வெளிப்படுத்திப் பக்தி உணர்வை வளர்க்கும் இயல்புடையவை. இங்கும் பக்தி அனுபவங்களைக் வெளிப்படுத்துவதற்காக இறைவன் வீற்றிருக்கும் தலமாகிய சீபர்ப் பதத்தைப் பற்றிச் சுந்தரர் பாடுகின்றார்.
- பல்லவர் கால இலக்கியங்கள் இயற்கையில் இறைவனைக் காண்பவையாக உள்ளன. இதனால் இயற்கை வர்ணனைக்கு அவை முதன்மை வழங்கின சீபர்ப்பதம் பதிகத்தி லும் மலைவளம் கூறுவதனூடாகச் சுந்தரர் இயற்கையில் இறைவனைக் காண்கிறார்
- வன ஜீவராசிகளதும் வனவாசிகளதும் வாழ்வியலைத் தமிழர் பண்பாட்டுச் சூழலி னூடாக வெளிக் கொணரல் (உதாரணமாக விருந்தோம்பல்)
- பல்லவர் காலத்தில் சமய நம்பிக்கைகளைக் கட்டி எழுப்புவதற்காகப் புராணக் கதைக ளைத் தம் இலக்கியங்களில் வெளிப்படுத்தும் வண்ணம் பாடினர். சீபர்ப்பதம் பதிகத்திலும் சுந்தரர் புராணக் கதை ஒன்றைப் பயன் படுத்துகின்றார். (உதாரணம் : திரிபுர தகனம் பற்றிய எட்டாவது பாடல்)
- தாம் கண்ட தலச் சிறப்புக்களையும் வாழ்வி யலையும் வாசகர் கண்டு இன்புறுமாறு பாடுதல்
- ஒரு விடயத்தைப் பத்துப் பாடல்களில் கூறு கின்ற பதிக அமைப்பைச் சீபர்ப்பதம் கொண் டிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பல்லவர் காலப் பதிகங்கள் அதனைப் படிப்போர் அடையும் பயனையும் வெளிப்படுத்தும் இயல்புடையவை. சுந்தரர் சீபர்ப்பதம் பதிகத்தைப் படிப்போர் விரைவாக வானகம் சென்று அதனை ஆண்டிருப்பர் எனப் பயன் கூறுகின்றார்.
- பல்லவர் காலத்தில் முத்திரைக்கவி பாடும் வழக்கம் காணப்படுகின்றது. சீபர்ப்பதம் பதிகத்திலும் இறுதிப் பாடல் முத்திரைக் கவியாக அமைந்துள்ளது.

இதே வேளை சீபர்ப்பதம் பதிகத்தில் சங்க இலக்கியங்களின் தாக்கத்தையும் இனங்காட்டலாம்.

**சீபர்ப்பதப் பதிகத்தில் காணப்படுகின்ற சங்க இலக்கியங்களின் தாக்கம்**

- சங்க இலக்கியங்கள் இயற்கை வர்ணனைக்கு முதன்மை வழங்கின. சீபர்ப்பதம் பதிகமும் இயற்கை வர்ணனைக்கு முதன்மை வழங்கியுள்ளது.
- குறப்பெண்கள் தினைப்புனத்தைக் காத்தலென்பது சங்ககாலத்தின் வாழ்வியற்கூறுகளுள் ஒன்று. சீபர்ப்பதம் பதிகத்தில் இக்காட்சி காணப்படுகின்றது.
- சங்க அகத்திணை ஒழுக்கக் கூறுகளுள் ஒன்று ஊடல் ஆகும். இந்த ஊடல் ஒழுக்கம் விலங்கினங்களில் ஏற்றிப் பாடப்படுகின்றது. குறிப்பாக மானிடர்களுக்குரித்தான அன்பின் ஐந்திணை ஒழுக்கத்தை யானைகளில் ஏற்றிச் சுந்தரர் பாடியுள்ளார்.

**சீபர்ப்பதப் பதிகத்தின் ஊடாகத் தற்கால வாழ்வியலுக்கு நாம் பெறக்கூடியவை**

சீபர்ப்பதப் பதிகத்தைச் சமயம் கடந்த நிலையில் அனைவரும் படித்து உணர வேண்டும். இதனூடாக இக்காலத்திற்கும் தேவையான வாழ்வியல் கருத்துக்கள் நிறைவாக உள்ளன. உயிர்களுக்குத் தேவையானவற்றை இறைவன் படைத்தளித்துள்ளான். சீபர்ப்பதத்தில் வாழும் உயிரினங்கள் யாரிலும் தங்கியிருக்காது சுதந்திரமாக வாழ்கின்றன. நாமும் யாரிலும் தங்கியிருக்காது வாழ வெண்டும் என்பதை இப்பதிகம் உணர்த்துகின்றது. அன்பான இல்லறத்தில் வாழ்வதற்கான அடிப்படையை இப்பதிகம் உணர்த்துகின்றது. அத்துடன் ஒருவனுக்கு ஒருத்தி என்ற கற்பு நெறியையும் போதிக்கின்றது. யானைகளே கற்பு நெறியைக் கடைப்பிடிக்கின்றன என்றால் மனிதர்கள் இந்நெறியைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வை இப்பதிகம் தருகின்றது.

பிறரது துன்பத்தைத் தீர்ப்பதற்குரிய உணர்வையும் இப்பதிகம் ஏற்படுத்துகின்றது. கொடும் கொலைத் தொழில் புரிகின்ற இரக்கம் காட்டாத வேடர்கள்கூட இலையாற் கல்லை கோலி தேனைப் பிழிந்து யானைகளுக்கு ஊட்டிவிடுகின்றனர். இக்காட்சி பிறருக்கு உதவும் மனோபாவத்தை வளர்க்கின்றது. அத்துடன் பசித்தோருக்கு உணவளிக்க வேண்டும் என்ற உணர்வையும் ஏற்படுத்துகின்றது.

**நிறைவாக**

இயற்கை வர்ணனைக்கு முதன்மை கொடுத்து வாழ்வியல் அம்சங்களை வெளிப்படுத்துவதனூடாக பக்தி உணர்வைச் சுந்தரர் வளர்த்தெடுக்கிறார். சீபர்ப்பதம் இதனை அழகிய முறையில் வெளிக்காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணியுமாம் என்றும் பெருமை

ம. மேதுஷா
2013 கலை

"பணியுமாம் என்றும் பெருமை" என்பது ஆன்றோர் வாக்கு. அறிவினால் ஏற்படும் பெருமை தானாகவே பணியும். பணபலம், பத்திரிகைப்பலம், சமூகச் செல்வாக்கு என்பவற்றை பயன்படுத்திச் சிலர் பெருமை மிக்கோராகத் தங்களை இனங்காட்டிக் கொள்ளுகின்றனர். இத்தகையோரின் பெருமை நீண்ட நாட்களுக்கு நிலைக்காது. இதனாலேயே நம் முன்னோர் கல்வியினால் பெறும் பெருமையே கருத்தனம் என்று கருதினர்.

ஒருவருக்கு கல்வி அறிவு மூலம் பெறப்படும் பெருமையே உண்மையான பெருமையாகும். நாலடியார் என்னும் நன்னூலும் "கல்வி அழகே அழகு" என்றுரைத்துள்ளமை இதனையே வலியுறுத்துகின்றது. "நிறைகுடம் தளம்பாது" என்பர் அறிவுடையோர் முற்றிய நெற்கதிர் தலை சாய்ந்து நிற்கும். அதேபோன்று ஆழ்ந்தகன்ற அறிவுடையோர் எப்போதும் தம்மைப்பற்றி புகழமாட்டார்கள். பெருமை பேச மாட்டார்கள். இனிய வார்த்தைகளைப் பேசுவோராக பணிவுடையோராக, அமைதியான குணப்பண்புடையோராக விளங்குவர். தேவையற்ற வார்த்தைகளைப் பேசமாட்டார்கள். அறிவிலிகளே அதிகம் பேசுவர். அறிவுடையோர் நிறைகுடம் போன்றவர்கள் அறிவிலிகள் குறைகுடம் போன்றவர்கள்.

எந்நாளும் பணிவுடையோர் மக்கள்தம் மதிப்பிற்குரியவர்களாவார். அவர்களது செயல்தான் நல்லனவாக மற்றவர்க்கு நன்மை பயப்பனவாகவே அமையும். வீண் ஆடம்பரங்களை விரும்பமாட்டார்கள் பட்டம் பதவிகளை எதிர் பார்த்து ஓடமாட்டார்கள் அவை தாமாகவே தன்னலமற்றவர்களாக விளங்குவர். அத்தகைய பண்பு இயல்பாகவே அவர்களிடம் காணப்படும் இன்னா செய்தாருக்கு இனியவே செய்யும் குணமுடையவராகக் காணப்படுவர்.

பணிவற்றோர் செருக்குடன் நடப்பர் பிறர் தம்மை மதிக்க வேண்டும் என்பதற்காகத் தேவையற்ற இடங்களில் தலையிட்டுத் தம் அறவீனத்தை இனம் காட்டிக்கொள்வர். மெல்லென பாயும் தண்ணீர் கல்லையும் கரைக்கும் என்பது பழமொழி மென்மையான விடயங்களை அணுகி ஆராய்ந்து செயற்படும் ஆற்றல் பெருமைக்குணமுடைய சான்றோரையே சாரும் பகைவனையும் நண்பனாகக் கருதிச் செயற்படும் பண்பு பெருமை சான்ற பெரியோர்களுக்கே உண்டு.

பெருமைக்குணமுடைய சான்றோரை எவரும் இலகுவில் அணுகித் தம் குறைநிறைகளை உரைத்திட முடியும் அற்ப குணத்தோரை அணுகுதல் அரிது. அணுகியபோதும் அவர்கள் தம் பெருமைகளையே பேசுவரன்றி நம் குறைகளைப் போக்க முற்படார் அவர்தம் சொல்லும் செயலும் குறைவுடையவையாக விளங்கும்.

உலக வரலாற்றை நாம் பார்ப்போமாயின் பெருந்தன்மை மிக்கோரே பணிவுடையோரே மக்கள் தலைவர்களாக நீண்டகாலம் மாண்பு பெற்றிருந்ததைக் காணமுடியும் மகாத்மா காந்தியடிகள் ஆபிரகாம் லிங்கன், அன்னை தெரேசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மையார் போன்றோர் இதற்கு ஏற்ற எடுத்துக் காட்டுக்களாவார்.

எல்லா மக்களையும் சமமாக இறைவனது பிள்ளைகள் எனக் கருதிப் பணி செய்யும் பண்பு பெருமை சான்ற பெரியோர்களுக்கே உண்டு தாழ்ந்தவர், உயர்ந்தவர் என்ற பேதம் பாராட்டாது எல்லோரையும் அன்போடு போற்றி தவறு நிகழ்ந்தவிடத்து அதனைச் சுட்டிக் காட்டித் திருத்தி நல்வழியிலிட்டுச் சொல்வாரோ பெருமை மிக்க பெரியோராவர். அத்தகையோரிடம் அன்பும், பணிவும், அமைதியும் என்றும் நிலைத் திருக்கும் அவர்களது செயல்களே அதனை நமக்கு உணர்த்திவிடும்.

பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒரு வற்கு அணியல்ல மற்றுப் பிற" என்பது வள்ளுவர் தம் வாக்காகும். அடக்கமான பண்பும் இனிமை யாக பேசும் இயல்பும் தவறு ஒருவருக்கு சிறந்த அணிகலன் வேறில்லை என்கிறார் வள்ளுவர். பணிவுடைமையே என்றும் பெருமைதரும் இந்த உண்மையை நாம் என்றும் மறத்தலாகாது. நல்லவற்றை எந்த அளவுக்குக் கேட்கிறோமோ அந்த அளவுக்கும் பெருமை கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் நாம் வாழ வேண்டும்.

"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத் தான் ஆன்ற பெருமை தரும்" என்னும் குறளினை நாம் மறத்தலாகாது.

எனவே அறிவுடைச் சான்றோர், அரசியல் தலைவர்கள், சமூகத் தொண்டர்கள், சரித்திர நாயகர்கள் அனைவருக்கும் பணிவு ஏற்ற அணி கலமாகும். இந்த அணிகலனையே சமூகமும் எதிர்பார்க்கிறது. பணிவுடன் வாழ்வோரே உண் மையான மனித வாழ்வு வாழ்பவர்களாவார். வாழ்வாங்கு வாழும் முறையும் அதுவே ஆத லாற்றான நமது முன்னோர் "பணியுமாம் என்றும் பெருமை" என்று கூறி வைத்தனர். இதன் உண்மை உணர்ந்து நாமும் பணிவுடன் வாழ் வாங்கு வாழ முற்படுவோமாக!

## வேண்டுகோள்




அன்பு இதயத்தில் வேண்டும்
ஆர்வம் கல்வியில் வேண்டும்
இரக்கம் பார்வையில் வேண்டும்
ஈகை செய்கையில் வேண்டும்!

உண்மை உதட்டில் வேண்டும்
ஊக்கம் உழைப்பில் வேண்டும்
எளிமை நடத்தையில் வேண்டும்
ஏற்றம் தொழிலில் வேண்டும்!

ஐக்கியம் உறவில் வேண்டும்
ஒழுக்கம் வாழ்வில் வேண்டும்
ஓய்வு முதுமையில் வேண்டும்
அவ்வழியே நடந்திட வேண்டும்!

கி. டனிஸ்
தரம் 5A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழும் பிறமொழியும்

மு. வேணுகா
2013 (12) கலை

பாரத கண்டத்திலே பேசப்படும் மொழிகளை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன முண்டமொழி, திராவிடமொழி, ஆரியமொழி, வங்களா நாட்டிலுள்ள மக்களுள் சண்டாளர் எனும் கூட்டத்தினர் பேசும் சந்தாலி என்னும் மொழியும் முண்டாரி, ஆசரி, கொர் வாரி, சபர ஆகிய இம் மொழிகளும் பிறவும் முண்டமொழிப் பிரிவைச் சேர்ந்தவை. இம் மொழிக்கூட்டம் இந்தியாவுக்குக் கிழக்கேயுள்ள நிக்கோபார் தீவிலும் மலாயாத் தீபகற்பத்திலு முள்ள பூர்வீகக் குஷிகளின் மொழியுடன் தொடர்புள்ளன என்பது அறிஞர் கருத்து. தமிழ், தெலுங்கு, கன்னடம், துளு, மலையாளம் முதலிய வளர்ச்சியடைந்த மொழிகளும் குடகு கோட கொண்டி தோட குறுக்மால்த்தோ மூ. கொலாமி பிராகு, முதலிய வளர்ச்சியடையாத மொழிகளும் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை.

இம்மொழிக் குடும்பம் இந்தியாவுக்கு வெளி யேயுள்ள நாடுகளில் இல்லையென ஆராய்ச்சி யாளர் பலர் கருதி வந்தனர். ஆனால் கால்டு வெல் பாரதியர் ஷினாடர் வொன் ஹெனச் முதலிய ஆராய்ச்சியாளர்களினால் காலம் தாம் செய்து வந்த ஆராய்ச்சிகளினால் ஊறல் மலைத் தொட ருக்குத் தென்கிழக்கே உள்ள சீதிய குடும்ப மொழிகள் திராவிடக் குடும்ப மொழிகளைச் சேர்ந்தவை எனக் கருதி வந்தனர். இப்போது நடக்கும் மொழியாராய்ச்சிகளினால் இக்கருத்து மென்மேலும் வலியுறுத்துகின்றது ஹாலிய கூட்ட மொழிகளாகிய மின்னிஷ் எஸ்தோனியன் லிவொனியன் வெப்சியன் வொற்றியாக் முதலி யவை திராவிடமொழிகளுடன் தொடர்பு உள் ளவை என ஒருவாறு முடிவுக்கு வருகின்றனர். சங்கதபர், பாகதம் ஆகிய பழைய ஆரிய மொழி களும் இந்தி, வங்காளி, குசராத்திமராட்டி, பஞ்சாபி முதலிய இக்கால மொழிகளும் ஆரிய குடும்பத்தைச் சேர்ந்தவை.

முதலில் தமிழுக்கும் ஏனைய திராவிட மொழிகளுக்கும் உள்ள தொடர்பினைப் பார்ப் போம் திராவிட மொழிக்குடும்பத்தில் உள்ள எல்லா மொழிகளுக்கும் பொதுவான அடிப்படைச் சொற்கள் பல இருக்கின்றன இச்சொற்கள் திராவிட மொழிகள் ஒவ்வொன்றிலும் அவ்வவ் மொழிகளின் ஒலி முறைக்கேற்ப உருவ வேறு பாடு அமைந்து விளங்கும் “சின்ன” என்ற சொல் தெலுங்கில் “கின்ன” என்றே வழங்கும். ஆனால் கன்னடத்தில் அது “கின்ன” என்று நிற்கும் “செவி” என்னும் தமிழ்ச் சொல் தெலுங்கிலும் “செவி” என்றே நிற்கும் ஆனால் கன்னடத்தில் “கிவி” என்று வழங்கும் செய்ய என்னும் தமிழ்ச் சொல் தெலுங்கில் “சேய்” என வரும் கொண்டி மொழி யில் “கீயா” என்று நிற்கும் இங்கு காட்டப்பட்ட சொற்களில் தமிழிலும், தெலுங்கிலும் வரும் சரம் கன்னடம் கொண்டி ஆகிய மொழிகளில் காரமாக மாறி நிற்கும்.

ஒரு சில திராவிட மொழிகளில் தகரம் சகர மாய் மாறிவரும் தமிழ் மொழியுள்ளும் இம் மாற்றம் வருமென்பதை “படித்தேன்” என்பது “படிச்சேன்” என்று வருவதிலும் “ஐந்து” என்பது “அஞ்சு” என்று வருவதிலும் காணலாம். மலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாளத்தில் தகரம் சகரமாய் மாறி வருதல் பெரு வழக்கு.

போர்த்துக்கேயர் தமிழ் நாட்டிற்கு வந்த பொழுது பல போர்த்துக்கேய மொழிச் சொற்கள் தமிழில் வந்து ஏறின. அலுமாரி, கதிரை, மேசை, அலவாங்கு, கொய்யா முதலியவை இப்படியே வந்தேறிய சொற்களாய் இவர்களுக்கு பின் வந்த ஒல்லாந்தரது மொழிச் சொற்கள் சிலவும் தமிழுக்கு வந்து சேர்ந்தன. தோம்பு, இறசால் முதலியன இதற்கு உதாரணங்களாகும். நிலமளக்கும் உத்தியோகத்தரை "உலற்தா" என அழைப்பர். "உலாந்தா" என்பது Hollander என்னும் பெயரின் தமிழுருவம் அக்காலத்திலே நிலமளக்கும் கோலை "சலாந்தாக்கோல்" என்று அழைத்தனர். இப்போது உலாந்தாக் கோல் இல்லாவிட்டாலும் நில மளப்போரை உலாந்தா என அழைதல் மரபாகி விட்டது.

ஆங்கிலேயர் தமிழ் நாட்டிற்கு வந்ததும் ஆங்கிலச் சொற்கள் எத்தனையோ தமிழில் வந்து சேர்ந்தன படிக்காதவர்கள் கூட ஆங்கிலச் சொற்களைத் தங்கள் பேச்சுக்கு இடையில் கலந்து பேசுதல் கௌரவம் எனக் கொண்டனர். புதுமுறையாகக் கண்டுபிடிக்கப்பட்ட எந்திரம் முதலியவற்றுக்குத் தமிழ்ச் சொற்கள் அமைத்துக் கொள்வது கடினம். அதனோடு நேரக் கெடுமாம் அக்காரத்தால் அவற்றை ஆங்கிலப் பெயர் கொண்டே அழைத்தனர். இறயில், மோட்டார் கார், லொறி, வஸ், சைக்கிள், இஞ்சின், தாங்கி மிசின், மில் முதலியவை இதற்கு எடுத்துக் காட்டுக்கள் இன்னும் பென்சன், பென்சில், பேனை, றப்பர், கேயாப்பின், கிளாசு, கோடு, றோட்டு, ஏசண்டர், அப்புக்காத்தர், பிறக்கிறாசி, ஓவிசியர், நொத்தாரிசு, கிளாக்கர், இறயித்தார், டாக்குத்தர், ஓடலி, சாய்ப்பு, கோணமேந்து, சக்கடத்தார், இஞ்சிப்பத்தர், கூப்பன், பொலிசு. சாசன் முதலியவை சிறுசிறு மாற்றங்களோடு தமிழ் மக்கள் வழங்கும் ஆங்கிலச் சொற்களாகும்.

இக்காறும் பிறமொழிகளிலிருந்து தமிழிலே வந்த வழங்கும் சொற்களைப் பற்றச் சிறிது பேசினோம். இனித் தமிழ் மொழியிலிருந்து பிற நாட்டு மொழிகளுக்குப் போய் வழங்கும் சொற்களை சிறிது நோக்குவோம். பண்டைக் காலத்தில் தமிழர் மேல்நாட்டாரோடு வணிகத் தொடர்பு வைத்திருந்தனர். வாலிப காலத்தில் மேல்நாட்டார் தமிழ் நாட்டிற்கு வந்து இங்குள்ள பொருட்களைக் கொண்டு சென்று வணிகஞ் செய்து வந்தனர். இச்செய்தி பாளி மொழியிலுள்ள பல்வேறு ஜாதகத்தில் குறிக்கப்பட்டுள்ளது. அதனால் சில தமிழ்ச் சொற்கள் எமிதேய மொழியில் சென்று வழங்கின இதனை நாம் விவிலிய நூலிலே காணலாம். இது கி.மு 1000 ஆண்டு அளவில் என்பர். மயிலைக் குறிக்கும் "தோகை" என்னும் தமிழ்ச் சொல் "துகி" அல்லது "தூகி" எனவும் வழங்கிற்று. அக்காலத்துத் தலைசிறந்த வணிகர்களாகிய பினீசியர் மூலம் இச்சொல் எபிரேயத்திற்குப் போயது என்பர். அல்கும் என்னும் நறுமணமுள்ள மரக்கட்டையைக் குறிக்கும் சொல் தமிழில் உள்ள "அகில்" என்னும் சொல்லின் திரிபே யாம்.

இன்னும் அரிசி என்னும் தமிழ்ச் சொல் கிரேக்க மொழியில் "ஒறுசா" என்றும் சிறுவர் என்னும் சொல் "கார்ப்பியன்" என்னும் அம் மொழியில் வழங்குகின்றது. "கறுவா" என்னும் இச்சொல் அராபிய வணிகர் மூலம் மேல் நாடுகளுக்குச் சென்ற போதும் ஏனெனில் இதனை அராபிய மொழியில் "கர்வேட்" என்பர். பழைய துருக்கி மொழியில் தலையாரியைன் "கான்" எனக் குறித்தனர். இப்பொழுது Khan என்பர். இச்சொல் அரசனைக் குறிக்கும் "கோன்" என்னும் தனிச்சொல்லின் திரிபேயாம்.

சீன, யப்பானிய மொழிகளிலுள்ள சில சொற்கள் தமிழ்ச் சொற்கள் சிலவற்றின் உருவங்களி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னைப் பெரிதும் ஒத்திருக்கின்றன. அதனால் குறிப்பிட்ட இச் சொற்களுக்கும் தமிழ்ச் சொற்களுக்கும் ஏதும் தொடர்புண்டோ என ஆராய்ச்சியாளர் சிலர் ஐயுறுவர் (ங்) பெயர் என்னும் சீனச் சொல் கண்ணைக் குறிக்கும். Tso "செய்" என்னும் பொருள்படும். Mek என்பது இளமையைக் குறிக்கும். தமையனைக் குறிக்கும் யுமய என்னும் சீனுச் சொல்லுக்கும் தமிழிலுள்ள அக்கா எனும் சொல்லிற்கும் தொடர்புண்டோ தெரியவில்லை. தமிழிற் "கட்டு" என்னும் வினைச் சொல்லைச் சீனத்தில் "Kit" என்பர். அரி, இரி, ஓரி, உரி எனும் யப்பானியச் சொற்கள் இருத்தலைக் குறிக்கும் "இரு" எனும் வினையடியிலிருந்து பிறந்த சொற்களோ தெரியவில்லை. Kuro "கறுப்பு" எனும் பொருளைக் குறிக்கும். இச்சொல் கறுப்பினைக் குறிக்கும் கரு எனும் தமிழ்ச் சொல்லுடன் தொடர்புடையதோ தெரியவில்லை. Baru அல்லது Haru என்றால் யப்பானிய மொழியில் பரப்புதல் எனும் பொருளைத் தரும். இது பர என்னும் வினைஅடியிலிருந்து தோன்றியதோ என் ஐயுறுவர்.

ஆங்கிலத்தில் வழங்கும் தமிழ்ச் சொற்கள் சிலவற்றைச் சிறிது கவனிப்போம். "அணைக் கட்டு" என்பது Anicut எனவும், வெற்றினை என்பது போர்த்துக்கேய Betle என்னுஞ் சொல்லுக் கூடாகச் சென்று Betel எனவும் "சுருட்டு" என்பது Areca என்று ஆங்கிலத்தில் Arecanut என்ற சொல்லை நோக்குக "காசு" என்னும் சொல் போர்த்துக்கேய மொழியில் வழங்கும் Caixe எனும் சொல்லுக்கூடாகச் சென்று ஊயளா என்று வழங்கு அன்றியும் "கட்டுமரம்" என்பது Catamaran ஆகவும் "கயிறு" என்பது போர்த்துக்கேய Cairo என்பதனூடாகச் சென்று Coir ஆகவும் "கறி" என்பது Curry ஆகவும் வழங்கும். அப்பு எனும் வினையடியாகப் பிறந்த அப்பம் என்றும் தமிழ்ச் சொல் Hopper என நிற்கும். மிளகு தண்ணீர் Muligatawny என்றும் "பையன்" Peon என்றும் பாளைக்காரன் Poligar எனும் தேக்கு Teak என்றும் "பலகனி" என்பது Balckony என்றும் திரிந்து ஆங்கிலத்தில் வழங்கும்.

இது காறும் சொற்களைப் பற்றி ஒரு சிறிது சொன்னோம். இனி வசன அமைப்பைப் பற்றியும் சிறிது பேசுவோம். தமிழ் சங்கதமொழி தொடர்பு கொண்டிருந்த காலத்தில் அம்மொழியின் உரை நடை முறையும் இலக்கண அமைதியும் ஓரளவில் தமழுக்கு வந்து சேர்ந்தன. அது போலவே ஆங்கில மொழியில் உரைநடை மரபும் ஓரளவிற்குத் தமிழ்மொழியில் வந்து சேர்ந்திருக்கின்றன. அம்மொழி வழங்கி வரும் கற்பனைகளும் அகவுருவங்களும் படிப்படியாகத் தமிழுக்கு வந்து சேர்ந்தன. ஆங்கிலத்தில் I have done well in the Examination என்பதன் நேரடியான மொழி பெயர்ப்பாக "நான் சோதனையில் நல்லாய்ச் செய்திருக்கிறேன்" என்பர். இதனைத் தமிழ் மரபின்படி சொல்ல வேண்டுமானால் "நான் சோதனையில் நல்லாய் எழுதினேன்" என்றே சொல்லுதல் வேண்டும். இம் மரபின் படியே வீணை மீட்டுதலை "வீணை விளையாடுதல்" என்று சொல்வர். Under the chairman ship என்னும் ஆங்கிலச் சொற்றொடரைப் "பின் பற்றித் தலைமையில்" என்று சொல்ல வேண்டி யதை "தலைமையின் கீழ்" என்பர். இதேபோல் நித்திரை கொண்டேன் என்று சொல்ல வேண்டி யதை ஆங்கிலத்தில் I went to sleep என்ற சொற் றொடரை நேரே மொழி பெயர்த்து "நான் நித்திரைக்குப் போனேன்" என்பர். இவ்வகையான நேர் மொழி பெயர்ப்பு Vocal என்பதை "வாய்ப்பாட்டு" என்று சொல்வதிலும் காண்ப. இவ்வகையான ஆங்கிலத் தமிழ் வழக்க ஆங்கிலம் படித்த தமிழர் பேச்சு வழக்கிலும், இக் காலத்து உரைநடை இலக்கியங்களிலும் மிகுதியாகக் காணலாம்.

ஆங்கிலத் தொடர்பினால், உரைநடை வரையும் பொழுது நிறுத்தக் குறியீடுகள் இட்டு எழுதும் வழக்கமும், பந்தி பிரித்து எழுதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கமும் வசனங்களைச் சிறிதாகவும் தெளிவாகவும் எழுதும் பழக்கமும் தமிழில் வந்து சேர்ந்தன என்று கூறலாம்.

நிற்க பண்டைத் தமிழறிஞர் இலக்கியங்களில் உரைநடையை மிகுதியாகக் கையாளவில்லை. உரைநடையிட்ட பாட்டுடைச் செய்யுள்களையும் உரையாசிரியர் எழுதிய உரைகளையுந் தவிர வேறிடயங்களில் உரைநடை இடம் பெறவில்லை. ஐரோப்பியர் தமிழ் நாட்டுடன் தொடர்பு பூண்டதன் பின்னரே தமிழ் உரைநடை வளர்ந்தது எனக் கூறுதல் மிகையாகாது.

இலக்கிய உரைநடை, பத்திரிகை உடைநடை ஆகிய இரண்டும் இக்காலத்தில் தமிழுக்குப் பெரிதும் ஆக்கக் கொடுத்தன கொடுக்கின்றன. இலக்கிய வகைகளில் உரைநடை இலக்கியம் இன்று பெரிய நிலையை வகிக்கின்றது. நாவல், சிறுகதை, கட்டுரை. இலக்கியம், ஓரங்க நாடகங்கள் ஆகிய இவை யாவும் மேல் நாட்டார் தொடர்பால் தமிழுக்கு வந்தவை. இவற்றைவிட இக்காலத்து வெளிவரும் தமிழ் நூல்கள் பல ஆங்கில நூல்களையும் பிற நூல்களையும் தழுவி எழுதப்படுகின்றன. இன்னும் தமிழ் மொழியின் சிறப்புக்களை தனிப்பண்பையும் இன்று நாம் அறிய ஏதுவாக இருந்தது மேல் நாட்டு ஆராய்ச்சி முறையே என்பதை மறந்து விடக் கூடாது. இரண்டும் மொழிகளுக்கிடையில் தொடர்பேற்படும் போது கருத்துக்கள் பரிமாறப்படும். அவ்வாறு பரிமாறல் ஏற்படும் போது நாம் அம் மொழியில் சிறப்பானவற்றையே எடுத்துத் தமிழினை மேலும் சிறப்புறச் செய்தல் வேண்டும்.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும். இறவாத புகழுடைய புது நூல்கள் தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்.

**வாழ்க தமிழ் மொழி வாழ்க நற்றமிழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வாழக் கல்"

இ. சகீதா
2013 கலை

மனிதன் வாழக் கற்க வேண்டும் என்ற கோட்பாடு இன்று உலகெங்கும் நிலை பெற்றுள்ளது. "கற்றது கை மண்ணளவு கல்லாதது உலகளவு" என்னும் அறிவுரையை மக்கள் நற்குணர்ந்தனர். இதனாலேயே இன்று வாழும் வரை அதாவது இப் பூமியிலிருந்து விட்டு நீங்கும் வரை கற்க வேண்டும் என்னும் கோட்பாடு வலுப்பெற்றுள்ளது. "பாடை ஏறினும் ஏடது கைவிடேல்" என்ற முதுமொழியும் இதனையே வலியுறுத்துகிறது.

கற்றல் என்பது பண்டை நாள்முதல் மக்கள் கடைப்பிடித்து வரும் பெருமைக்குரியது. நாம் நன்கு வாழ வேண்டுமாயின் கற்றல் மிகவும் அவசியமாதொன்றாகும்.

"கல்வி தறுகண் இசைமை கொடையெனச் சொல்லப்பட்ட பெருமிதம் நன்கே...." என்பது ஒல்காப் பெரும் புகழ் தொல்காப்பியனார் வாக்காகும். கல்வி கரையில்லாதது கற்பவர் நாட்சிலது என்றுரைக்கிறது நாலடியார் எனவே வாழும் நாளைப் பயனுடையதாகப் நாம் வாழக் கற்ற வேண்டும்.

**"கற்கை நன்றே கற்கை நன்றே**
**பிச்சை புகினும் கற்கை நன்றே"** என்று கூறுகிறது வெற்றி வேட்கை.

**"பழையன கழிதலும் புதியன புகுதலும்**
**வழுவன கால வகையினானே"** என்பதற்கமைய நாம் வாழும் வரை கற்க வேண்டும். பழையனவற்றை மட்டுமல்ல புதியனவற்றையும் கற்க வேண்டும். தொடர்ந்து கற்றுணந்தாத்தான் காலப்போக்குக்கேற்ற புதியனவற்றை நாம் புரிந்து கொள்ள முடியும். எனவே கல்வி கற்றல் என்பது தொடர் செயலாக அமைதல் வேண்டும் "கருவறை முதல் கல்லறை வரை கல்வி தொடர வேண்டும்" என்ற கூற்றும் இதனையே நமக்கு உணர்த்துகிறது.

மனிதன் தன் ஆயுள் முழுவதும் கற்றுக் கொண்டே இருக்க வேண்டும் என்பது கல்வியியலாளர் தம் கருத்தாகும். "கற்க மறுப்பவன் வாழ றுப்பவன் ஆகின்றான்" என்ற கூற்றும் இதனையே வலியுறுத்துகிறது. கல்வி மூலம் அறிவை, சூழலை, சமூகத்தை நமது பண்பாட்டு மரபை நாம் ஆராய்ந்து கொள்ளலாம். ஆய்தலுக்கு கல்வியே ஏற்ற கருவியாகும். கல்வியானது மனதனிடத்துள்ள பூரணத்தை வெளிப்படுத்துகிறது. அறியாமைத் திரையை அகற்றி அறிவென்னும் ஒளியைக் கொடுக்கிறது. ஒருவனிடத்து உள்ளமைந்து கிடக்கும் ஆற்றல்களை திறமைகளை வெளிப்படுத்தக் கல்வி துணைபுரிகன்றது. அவனது திறன்களை, பண்புகளை வளர்த்துக் கொள்ள வழிசெய்கிறது. ஆளுமை வளர்ச்சிக்கும் அறிவு வளர்ச்சிக்கும் கல்வி வழிகாட்டுகிறது. எனவே தான் வாழக்கற்க வேண்டும் எனப் பெரியோர்கள் வலியுறுத்துகின்றனர்கள்.

ஆங்கிலப் பெரும் புலவரான வில்லியம் வோட்ஸ்வர்த் "மனிதத் தன்மையினை மனிதர் பெற உறுதுணையாய் விளங்குவது கல்வி" என்கிறார். இதனையே "கைப்பொருள் தன்னின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்ப்பொருள் கல்வி" என்று இடித்துரைக்கின் றது கொன்றை வேந்தன்.

**"ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு எழுமையும் ஏமாப்புடைத்து"** என்கிறது திருக்குறள். கல்வி கற்றலின் சிறப்பைக் நன்கு புலப்படுத்து கின்றது.

"மாந்தர் தம் கற்றனைத் தூறும் அறிவு" என்பது வள்ளுவர் கண்ட உண்மையாகும். கல்வி என்பது மனத அடிப்படை உரிமைகளில் ஒன்றாக இன்று கருதப்படுகின்றது. அனைவருக் கும் கல்வி என்பது அரசுகளின் குறிக்கோளாக வுள்ளது. "அறிவு அற்றங்காக்கும் கருவி" என்பர். அறிவியற்கல்வி, அழகியற்கல்வி சமூக அறி வியற்கல்வி ஆகிய மூன்றும் இன்று மனித வாழ்க கைக்கு அவசியமானவையாகக் கருதப்படுகின் றது. வாழ்வாங்கு வாழ வழிகாட்டுவது கல்வி மனிதனை சூழ்நிலைக்கேற்ப சிறந்த முறையில் வாழ்வதற்கு வழிப்படுத்துவதாக கல்வி திகழ்கி றது. சிறந்த சீரிய, ஒழுக்க நெறியில் மனிதனை வாழச் செய்வது கல்வியாகும். ஒருவனது நுண்ணறிவும் திறமையும் பணப்பான்மையும் கல்வி மூலமே வளர முடியும். எனவே தான் வாழக் கல் என வலியுறுத்தப்படு கின்றது.

கல்வி தொழிலுக்கு வழிகாட்டுகிறது. வாழ்க்கை வாழ்வதற்காக உதவும் கருவியாக கல்வி திகழ்கிறது. "கண்ணுடையார் என்பர் கற்றோர்" என்னும் உண்மையை நாம் மறந்து விடக் கூடாது. வாழ்க்கையின் நோக்கம் – இலட்சியம் என்ன என்பதை நாம் அறிந்து கொள்ளக் கல்வி உதவுகிறது. கற்றபடி ஒழுக நாம் பழக வேண்டும்.

**"கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்கு தக"**

என்னும் வள்ளுவர் வாக்கின்படி வாழ்க்கையை நெறிப்படுத்தவும் மேம்படுத்தவும் நாம் பழகிக் கொள்ள வேண்டும்.

**"ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்**
**கெழுமையும் ஏமாப் புடைத்து"**

என்னும் குறளின் பொருளை அறிந்து கொண் டால் கல்வயின் பயனை இலகுவில் விளங்கக் கொள்ளலாம். ஒரு தலைமுறையில் பெறும் கல்வி அறிவானது . ஏழேழு தலைமுறைக்கும் வள்ளுவர் இளமையிலும் வறுமையிலும் உதவ வல்லது கல்வி. எனவே அழிவற்ற செல்வ மான கல்வியை நாம் அனுதினமும் கற்க வேண் டாம். தனிமனிதன் பெறும் கல்வி அறிவானது சமுதாய மேம்பாட்டிற்கு உதவும் வகையில் அமைய வேண்டும். அறிவயல் நாளுக்கு நாள் வளர்ந்த வண்ணமுள்ளது. அவற்றை அறந்து கொளா நாம் நாளாந்தம் கற்க வேண்டியவர் களாயுள் ளோம்.

நூல்கள் வாயிலாகவும் கற்று வல்ல பொ யோர்களது தொடர்புகள் மூலமும் பயன் தரும் விடையங்களை கற்றிட வேண்டும் நாம் கற்க வேண்டியன உலகளவே உள்ளன. நாம் கற்றது கை மண்ணளவு என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். வாழ்க்கை வாழ்வதற்கே அதுவும் பயனுள்ள வாழ்க்கையாக அமைய வேண்டும் அதற்குரிய ஒரே வழி கல்வியை கருவியாக கொண்டு செயற்படுதலேயாகும் கற்கும் வழிகள் பல உள்ளன அவற்றை தெரிந்து முறையாக கற்றல் நமது கடமையாகும்.

கல்வி நமது வாழ்க்கைக்கு வழிகாட்டும் தகைமை வாய்ந்தது அதனை நாம் வாழநாள் முழுவதும் தேடிக் கொள்ள வேண்டும் கசறக் கற்று கற்றாங்கு ஒழுக முற்பட வேண்டும். "கல்வி அழகே அழகு" என்னும் நாலடியார் கூறும் நல்லு ரையை நன்கு மனதிற்கு கொண்டு செயற்படு வோமாக.

**வாழக் கற்போம்!**
**வாழ்வாங்கு வாழ்வோம்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தாள் உலோக நாணயங்களின் வரலாறும் அதன் வளர்ச்சிப் போக்கும்

த. ஜெபசுதன் B.Com
ஆசிரியர் வணிகக்கல்வி

நாணயம் என்பது சுற்றோட்டத்தில் உள்ள நாணயத்தாள்கள் மற்றும் நாணயக்குற்றிகள் என்பவற்றைப் பயன்படுத்தி பண்டங்கள் மற்றும் பணிகளுக்கான கொடுப்பனவுகளைச் செய்தல், கடன் தீர்த்தல், பெறுமதி ஒதுக்கமாக செயற்படுதல் ஆகிய அடிப்படை கடமைகளை நிறைவேற்று கின்ற ஒரு பரிமாற்று ஊடகமே நாணயம்/ பணம் என அழைக்கப்படுகிறது. இலங்கையில் நாணயங்களை அச்சிட்டு வெளியிடும் நிறுவன மாக மத்தியவங்கி செயற்படுகின்றது.

### இலங்கையில் உள்ள உலோக நாணயங்களின் வரலாறு

- பண்டமாற்றுக்கு பதிலான பணப்பயன் பாட்டின் ஆரம்ப காலம் மனித நாகரிகத்தின் முக்கிய காலகட்டமாகும் பணப்பயன்பாட்டின் ஆரம்பம் கி.மு 630களில் துருக்கி லிடியா வில் உருவானது என சான்றுகள் கூறுகின் றன இலங்கையில் ஆரம்ப உலோக பயன் பாடு கி.மு 2ம் நூற்றாண்டில் இருந்துள்ளது.
- இலங்கையில் கஹவனு என அழைக்கப்பட்ட ஆரம்ப உலோக நாணயம் வட இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்டது என நம்பப்படுகின்றது. கி.பி 9ம், 10ம் நூற் றாண்டுகளில் பொன்கஹவனு எனும் பெயரி லான தங்க நாணயங்களும் பயன்பாட்டில் இருந்துள்ளது.
- சீன, அராபிய, ரோம பேரரசர்களின் குறியீடு களுடன் கூடிய நாணயங்களும் தென் இந்திய சோழ மன்னர்களுடைய நாணயமும் யாழ்ப்பாணத்தை ஆரிய சக்கரவர்த்தியின் பெயரிலான நாணயங்கள் பற்றியும் சான்று கள் உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.
- 1505–1948 வரை இலங்கையை ஆட்சி புரிந்தவர்களால் போர்த்துக்கல், ஒல்லாந்து, பிரித்தானியா போன்ற நாடுகளில் பயன் படுத்தப்பட்ட பணமுறை இந்த நாட்டிலும் பயன்படுத்தப்பட்டிருந்தது எனினும் போர்த்துக்கேயரே இலங்கையில் முதன் முதலாக நாணயத்தை அறிமுகம் செய்தனர்.
- கி.பி 1650–1976 காலப்பகுதியில் ஒல்லாந் தர் ஆட்சிக்காலத்தில் பயன்படுத்தப்பட்ட அச் சிடப்பட்ட தாள் நாணயங்களும் பயன்படுத் தப்பட்டிருந்தன. அதை தொடர்ந்து 1796–1948 வரை ஆட்சி புரிந்த பிரித்தானியர் காலத்திலேயே பணப்பயன்பாடு மிக நன் றாக வளர்ச்சியடைந்துள்ளது.
- 1872ம் ஆண்டில் பிரித்தானிய காலணித்துவ ஆட்சிக் காலத்தில் நாணய தசம் முறை அறி முகப்படுத்தப்பட்ட போதிலும் 1892ம் ஒக் டோபர் மாதத்திலேயே முழுமையாக பயன் படுத்தப்பட்டது. அப்போது இலங்கையிலுள்ள பிரித்தானியாவின் இந்தியரூபாய், இலங்கை வெள்ளிக்காசு, செப்புக்காசு ஆகியன பயன் படுத்தப்பட்டன.
- 1884ம் ஆண்டின் 32ம் இலக்க கடதாசி, நாணயத் தாள்கள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் தாபிக்கப்பட்ட ஆணையாளர் சபை யினால் நாணயங்கள் வெளியிடப்பட்டன வாகும். அதைத் தொடர்ந்து இலங்கையில் நாணயங்கள் தொடர்பான புதிய சட்டங்கள் உள்ளடங்கிய 1941ம் ஆண்டின் 21ம் இலக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாணயக் கட்டளை சட்டத்தின் மூலம் கடதாசி நாணயத்தாள் கட்டளை சட்டம் இரத்து செய்யப்பட்டது.

இப்புதிய கட்டளைச் சட்டத்தின் மூலம் ரூபாய் அங்கீகாரம் பெற்ற அலகாக தீர்மானிக்கப்பட்டது அதை தொடர்ந்து 1949ம் ஆண்டின் 58ம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் கீழ் 1950ம் ஆண்டில் இலங்கை மத்திய வங்கி தாபிக்கப்பட்டது. இதன் பின்னர் இலங்கையில் நாணயங்களை வெளியிடும் அதிகாரம் மத்திய வங்கி கொண்டிருந்ததைக் காணலாம்.

**இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள நாணயத்தாள்கள்**

- இலங்கை மத்திய வங்கியினால் நாணயங்கள் அச்சிடப்படும் வரை நாணய ஆணையாளர்கள் சபையினால் அச்சிடப்பட்ட நாணயங்களே வெளியிடப்பட்டன. 1952ம் ஆண்டு ஜனவரி மாதம் 04ம் திகதி மத்திய வங்கி முதலாவது நாணயத்தாள்களை அச்சிட்டு வெளியிட்டது.

இலங்கை மத்திய வங்கி தாபிக்கப்பட்ட தினத்தில் இருந்து 2011ம் ஆண்டு வரை பல்வேறு ஆண்டுகளிலும் 11 நாணயத்தாள் தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன. வெளியிடப்பட்டுள்ள நாணயத்தாள் தொகுதியின் தொனிப்பொருள் பற்றிய தகவல்கள் பின்வருமாறு காணப்படுகிறது.

1. **1வது நாணயம் 6வது ஜோர்ஜ் மன்னருடைய உருவப்படத்துடன் கூடிய தொகுதி**

1948ம் ஆண்டில் பிரித்தானிய காலணித்துவ ஆட்சி முறையில் இருந்து விடுதலை பெற்ற போதிலும் இலங்கை ஒரு குடியரசாக ஆகியிருக்கவில்லை. ஆகையால் பெரிய பிரித்தானியாவின் முடிக்குரிய நபரே இலங்கையின் மன்னராகவும் கருதப்பட்டார். அதனால் எமது மன்னராகவும் கருதப்பட்ட 6வது ஜோர்ஜ் மன்னருடைய உருவப்படத்துடன் கூடிய 1வது நாணயத்தொகுதி வெளியிடப்பட்டது.

2. **இரண்டாவது எலிசபெத் மகாராணியின் உருவத்துடன் கூடிய நாணயத்தாள் தொகுதி**

1952ம் ஆண்டு 6வது ஜோர்ஜ் மன்னன் இறந்ததன் பின்னர் பிரித்தானியாவின் இராணியாக விளங்கிய அவரது புதல்வியான 2வது எலிசபெத் இராணியின் உருவப்படம் இந்த நாணயத்தாள் தொகுதியின் தொனிப்பொருளாக கொள்ளப்பட்டது. இந்நாணயத் தொகுதியின் நாணயத் தாள்களுக்கு பிரதான பாதுகாப்பு குறியீடாக சிங்கம் பயன்படுத்தப்பட்டது.

3. **இலங்கை அரச இலச்சனையுடன் கூடிய நாணய தொகுதி**

1956ம் ஆண்டு இலங்கை அரசியல் வரலாற்றில் திருப்பு முனையானதாகும். இந்த மாற்றங்கள் வெளியிடப்பட்ட 3வது நாணயத்தாளின் மீது காணப்பட்டது. நாணயத்தாளின் மீது காணப்பட்ட பிரதானமான சொல்வரிகள் ஆங்கிலத்தில் இருந்து சிங்களத்திற்கு மாற்றமடைந்ததோடு நாணயத்தாளின் பெறுமதி சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதுவரை காலமும் இருந்த பிரித்தானிய இராணியின் உருவம் நீக்கப்பட்டு இதற்கு பதிலாக அரச இலச்சனை இடப்பட்டது.

4. S.W.R.D **பண்டாரநாயக்காவின் உருவப்படத்துடன் கூடிய தொகுதி**

1962ல் வெளியிடப்பட்ட அடுத்த நாணயத்தாள் தொகுதி இலங்கையின் பிரதமர் ஒருவரின் உருவப்படத்தைக் கொண்ட 1வது நாணயத்தாள் தொகுதி ஆகும். 1959ல் கொலை செய்யப்பட்ட S.W.R.D பண்டாரநாயக்காவின் உருவப்படத்தை பயன்படுத்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிடப்பட்டதாகும்.

5. 1வது மகாபராக்கிரபாகு மன்னருடைய உருவப் படத்தைக் கொண்ட தொகுதி

1965ம் ஆண்டில் 1வது மகா பராக்கிரமபாகு மன்னருடைய (கி.பி 1153-1185) உருவப் படத்தைக் கொண்ட புதிய நாணயத்தாள் களை இலங்கை மத்திய வங்கி வெளியிட்டு இதுவரை சிங்களத்தில் மாத்திரம் குறிப்பிடப் பட்டிருந்த "இலங்கை மத்திய வங்கி" என்ற வாசகம் 1969ல் தமிழ் மற்றும் ஆங்கிலத்தி லும் குறிப்பிடப்பட்டன.

6. இலங்கை அரசு இலச்சனையுடன் கூடிய தொகுதி

1972ம் ஆண்டு மே மாதம் 22ம் திகதி நடை முறைக்கு வந்த புதிய அரசியலமைப்பின் கீழ் இலங்கை சோசலிச ஜனநாயக குடியரசு தாபிக்கப்பட்டதோடு 1975ம் ஆண்டு புதிய அரச இலட்சனை அறிமுகப்படுத்தப்பட்டு நாணயத்தாளிலும் கொண்டு வரப்பட்டது.

7. வனவிலங்குகள் மற்றும் தாவரங்களை பிரதிபலிக்கும் தொகுதி

1979ம் ஆண்டு வெளியிடப்பட்ட புதிய நாணயத்தாள் தொகுதியில் இலங்கையின் ஒருவரின் ஓவியப்படங்களைக் கொண்டு உருவாக்கப்பட்டிருந்தது. அதில் இலங்கை யின் தாவரங்கள் வனஜீவராசிகள், பறவை கள், வண்ணத்துப்பூச்சி இனங்கள், இயற்கைச் சூழல் போன்றன உள்ளடக்கப்பட்டிருந்தன.

8. வரலாற்று ரீதியான மற்றும் தொல் பொருளி யல் ரீதியான தொனிப்பொருட்களுடன் கூடிய தொகுதி

1981ம் ஆண்டில் வெளியிடப்பட்ட நாணயத் தாள் தொகுதியில் வரலாற்று மற்றும் தொல் பொருளியல் ரீதியான படங்கள் அலங்கரிக் கப்பட்டிருந்தது. இதில் மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் போவத்தென்ன நீர்த்தேக்கம், கந் தளாய் நீர்த்தேக்கம் என்பன காணப்பட்டது.

9. வரலாற்று ரீதியான மற்றும் அபிவிருத்தி ரீதியிலான தொனிப்பொருட்களைக் கொண்ட தொகுதி

1987ம் ஆண்டில் மேம்பட்ட பாதுகாப்பு குறியு டன் கூடிய புதிதாக வடிவமைக்கப்பட்ட நாண யத்தாள்களில் கண்டி தலதாமாளிகையின் கற்செதுக்கல்கள், அபயகிரி விகாரை, விக் டோரியா அணைக்கட்டு, ருகுணு பல்கலைக் கழகம் என்பன பிரதிபலிக்கப்பட்டதுடன் முதற்தடவையாக "Central Bank of Ceylon" என்பதற்குப் பதிலாக "Central bank of Sri Lanka" என குறிப்பிடப்பட்டிருந்தது.

10. இலங்கையின் புராதன மரபுரிமைகளை கொண்ட தொகுதி

1991ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட நாணயத்தாள் தொகுதியில் பழமை வாய்ந்த கற்களினால் ஆன செதுக்கல்கள், பாரம்பரிய முகமூடிகள், நடனமாடுபவர்கள், மேளம் தட்டுபவர்கள், ஊர்வலத்தில் செல்வதற்காக அலங்கரிக்கப்பட்ட யானைகள், தாதுகோபு ரங்கள், கண்டி தலாதாமாளிகை, பழைய பாராளுமன்றம், பாரம்பரிய மீனவர், தேயிலை கொழுந்து பறிக்கும் பெண்கள் ஆகிய படங்கள் பிரதிபலிக்கப்பட்டிருந்தது.

11. அபிவிருத்தி சுபீட்சம் மற்றும் இலங்கையின் நடனக் கலைஞர்களைக் கொண்ட தொகுதி

2010ம் ஆண்டு நீட வருடத்திற்கு பின்னர் அபிவிருத்தி, சுபீட்சம் போன்ற தொனிப் பொருளில் நாணயம் வெளியிடப்பட்டது. மத்திய வங்கியினால் அதிக பணப் பெறுமதி கொண்ட 5000/- நாணயத்தாள் இவ் வருடம் வெளியிடப்பட்டதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நாணயத்தாள் தொகுதி

| தொகுதி | தொனிப்பொருள் | பெறுமதி | நாணயத்தாள் பிரசன்ன ஆண்டு |
|---|---|---|---|
| 1 | 6வது ஜோர்ஜ் மன்னருடைய உருவப்படம் | 1, 10 | 1951 |
| 2 | 2வது எலிசபெத் மகாராணி உருவப்படம் | 1,2,5,10,50,100 | 1952 |
| 3 | இலங்கை அரச இலட்சனை | 1,2,5,10,50,100 | 1956 |
| 4 | S.W.R.D பண்டாரநாயக்கா உருவப்படம் | 2,5,10,50,100 | 1962 |
| 5 | 1வது மகாபராக்கிரபாகு உருவப்படம் | 2,5,10,50,100 | 1965 |
| 6 | இலங்கை அரச இலட்சனை | 50,100 | 1975 |
| 7 | வனவிலங்குகள் மற்றும் தாவரங்கள் | 2,5,10,20,50,100 | 1979 |
| 8 | வரலாற்று ரீதியான தொல்பொருள் ரீதியான பொருட்தொகுதி | 5,10,20,50,100 500,1000 | 1981 |
| 9 | வரலாற்று ரீதியிலான அபவிருத்தி மற்றும் தொனிப்பொருட்கள் கொண்ட தொகுதி | 500,1000 | 1987 |
| 10 | இலங்கையின் புராதன மரபுரிமைகளை கொண்ட தொகுதி | 500,1000,2000 | 1991/2005 |
| 11 | அபிவிருத்தி, சுபீட்சம், இலங்கையின் நடனகலைஞர்கள் கொண்ட தொகுதி | 20,50,100,500 1000,5000 | 2010 |

### இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள நாணயக் குற்றிகள்

- 1951ல் இருந்து 1963வரை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள குற்றி நாணயங்களின் முகப்பில் பிரித்தானிய முடிக்குரிய உருவப்படம் காணப்பட்டது. குறிப்பாக சதங்களான 1, 2, 5, 10, 25, 50 களிலும் 1 ரூபா நாணயத்திலும் பொறிக்கப்பட்டிருந்தது.
- ரூபா 1, 5 பெறுமதி கொண்ட குற்றி நாணயங்கள் இங்கிலாந்தின் ரோயல் நாணயத் தயாரிப்பு கூட்டுத்தாபனத்தின் தயாரிக்கப்பட்டு மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டது. இது 2500ம் ஆண்டு புத்த ஜயந்தியை கொண்டாடும் முகமாக 1957ம் ஆண்டு வெளியிடப்பட்டதாகும்.
- 1963ல் இலங்கையின் அரச இலட்சனை தோற்றம் கொண்டதாக ரூபா 1 சதங்களான 50, 25, 10, 5, 2, 1 என்பன வெளியிடப்பட்டன.
- 1972ல் அரச இலட்சனைக்கு பதிலாக இலங்கை குடியரசின் சின்னம் நாணயக் குற்றிகளின் முகப்பில் இடப்பட்டிருந்தது. லங்கா என்ற பெயர் ஸ்ரீலங்கா என 1972ல் மாற்றப்பட்டிருந்தது.
- 1984ல் அதிக பெறுமதியைக் கொண்ட ரூபா 2, 5 சுற்றோட்டத்தில் சேர்க்கப்பட்டன.
- 2005 ரூபா 5, 2, 1 சதம் 50, 25 ஆகியனவும் முதற்தடவையாக ரூபா 10 பெறுமதியுடைய குற்றி நாணயத்தை வெளியிட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள ஞாபகார்த்த குற்றி நாணயங்கள் மற்றும் நாணயத்தாள்கள்

| இல | தொனிப்பொருள் | வெளியிட்ட ஆண்டு | முகப்பெறுமதி | உலோகம்/ மேற்பரப்பு |
|---|---|---|---|---|
| 1 | 2500ம் ஆண்டு புத்த ஜெயந்தி | 1957 | 5,1 | வெள்ளி |
| 2 | 2வது உலக உணவு மாநாடு | 1968 | 2 | செப்பு/நிக்கல் |
| 3 | அணிசேரா நாடுகள் 5வது மாநாடு தொகுப்பு | 1976 | 5, 2 | செப்பு/நிக்கல் |
| 4 | 1வது நிறைவேற்று ஜனாதிபதி பதவியேற்பு | 1978 | 1 | செப்பு/நிக்கல் |
| 5 | சர்வாஜன வாக்குரிமை கிடைத்து 50 ஆண்டுகள் | 1981 | 5 | தங்கம் (கரட்12) |
| 6 | மகாவலி அ/தி திட்டம் | 1981 | 2 | செப்பு/நிக்கல் |
| 7 | உலக வீடமைப்பு ஆண்டு | 1987 | 10 | செப்பு/நிக்கல் |
| 8 | இலங்கை மத்திய வங்கியின் 40வது ஆண்டு நிறைவு | 1990 | 500 | வெள்ளி/நிக்கல் |
| 9 | 5வது தென்ஆசிய சம்மேளன விளையாட்டு | 1991 | 500,100 | தங்கம் (12கரட்)<br>வெள்ளி |
| 10 | நிறைவேற்று ஜனாதிபதி பதவியேற்பு | 1992 | 1 | தங்கம் (12கரட்)<br>வெள்ளி<br>செப்பு/ நிக்கல் |
| 11 | 2300 அனுபுத்த மிஹிந்த ஜயந்தி | 1993 | 500 | வெள்ளி |
| 12 | உணவு கமத்தொழில் அமைப்பின் 50வது ஆண்டு நிறைவு | 1995 | 2 | செப்பு/நிக்கல் |
| 13 | ஐக்கிய நாடுகள் அமைப்பின் 50ஆண்டு நிறைவு | 1995 | 5 | செப்பு/நிக்கல் |
| 14 | ஐக்கியநாடுகள் சிறுவர் நிதியம் 50 ஆண்டு நிறைவு | 1996 | 1 | செப்பு/நிக்கல் |
| 15 | இலங்கையின் 50வது சுதந்திரதினம் | 1998 | 500,1000<br>10,200 | தங்கம்(22கரட்)<br>வெள்ளி/நிக்கல்<br>பெரலிமர்<br>(நாணயஉறை) |
| 16 | 1996 உலக கிரிக்கட் கிண்ணவெற்றி | 1999 | 5,1000 | வெள்ளி, நிக்கல்<br>பித்தளை |
| 17 | இலங்கை இராணுவ படையின் 50வது ஆண்டு நிறைவு | 1999 | 1 | நிக்கல் முலாமிடல் |
| 18 | இலங்கை மத்திய வங்கியின் 50வது ஆண்டு நிறைவு | 2000 | 1000 | வெள்ளி |
| 19 | இலங்கை கடற்படை 50வது ஆண்டு நிறைவு | 2000 | 1 | செப்பு/நிக்கல் |
| 20 | இலங்கை விமானப்படை 50வது ஆண்டு நிறைவு | 2001 | 1 | செப்பு/நிக்கல் |
| 21 | கொழும்புத்திட்டம் 50து ஆண்டு நிறைவு | 2001 | 2 | செப்பு/நிக்கல் |
| 22 | சிலாமோப சம்பதாவின் 250 வது ஆண்டு நிறைவு | 2003 | 5 | நிக்கல்/<br>பித்தளை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 23 | புத்தர் பரிநிர்வாணம் 2550 ஆண்டு நிறைவு | 2006 | 1500 | வெள்ளி |
| | | | 2000 | வெள்ளி |
| | | | 5 | பித்தளை முலாம் |
| 24 | உலக கிண்ண கிரிக்கட் 2007 | 2007 | 1000 | நீலக்கல் முலாம் |
| | | | 5 | உருக்கு பித்தளை முலாம் |
| 25 | சேமலாபநிதிய 50 ஆண்டு நிறைவு | 2008 | 1000,2 | நிக்கல் முலாம் உருக்கு |
| 26 | இலங்கை சங்க அதிகாரசபை 60வது ஆண்டு | 2009 | 200 | வெள்ளி, |
| 27 | இலங்கை இராணுவப்படை 60வது ஆண்டு | 2009 | 1000 | வெள்ளி, செப்பு நிக்கல் |
| 28 | சமாதானத்தையும் சுபீட்சத்தையும் அடையாள ப்படுத்தியவர்களின் ஞாபகார்த்தநாள் | 2010 | 1000 | நாணயத்தாள் |
| 29 | இலங்கை மத்திய வங்கியின் 60வது ஆண்டுநிறைவு | 2011 | 5000 | வெள்ளி |
| 30 | இலங்கை விமானப்படை 60ஆண்டு நிறைவு | 2011 | 20 | நிக்கல் |
| 31 | 2600 சம்புத்த ஜெயந்தி ஜயந்தி | 2011 | 1000 | வெள்ளி |

**இலங்கை மத்திய வங்கியின் பொருட்டு நாணயத்தாள்களை அச்சிடுதலும் நாணயக் குற்றிகளை தயாரித்தலும்**

- இலங்கையில் நாணயங்களை அச்சிட்டு வெளியிடுவதற்கு மத்திய வங்கியின் அதிகாரத்துடன் 1வது நாணயத்தாள் தொகுதியை பிரித்தானியாவின் பிராட்பரி வில்கின்சன் கம்பனியில் அச்சிடப்பட்டது. தொடர்ந்து 1983ம் ஆண்டில் ஐக்கிய இராட்சியத்தின் பிரெட்பரி வில்கின்சன் (PLC) கம்பனிக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையே தாபிக்கப்பட்ட "பிரெட்பரி வில்கின்சன் லங்கா தனியார் கம்பனி" 1987ம் ஆண்டு தொடக்கம் பியகம ஏற்றுமதி வலயத்தில் அச்சுத் தொழிலை ஆரம்பித்தது.
- 200ரூபா பொலிமர் ஞாபகார்த்த நாணயத்தாள் அவுஸ்ரேலியா நாணயத்தாள் அச்சுக் கம்பனியால் அச்சிடப்பட்டது.
- 1998ல் டீலா ரூ (PLC) கம்பனியின் கீழ் செயலாற்றி வருகின்றது. அத்துடன் நாணயக் குற்றிகளை ரோயல் மின்ட் கம்பனி தயாரித்து வருகின்றது.
- இலங்கை மத்திய வங்கி நாணயங்களை வெளியிடும் அதிகாரம் கொண்ட ஒரே ஒரு நிறுவனமாக இலங்கையில் திகழ்கின்றது.

**உசாத்துணை நூல்கள் :**

இலங்கை மத்திய வங்கியின் குறிப்பேடு

வணிகக்கல்வி நூல் – பேராசிரியர் ஜகத் பண்டாரநாயக்கா

எதிர்காலம் பற்றிய சிந்தனை இருக்க வேண்டும் – நீங்கள் அங்கே தான் அதிககாலம் வாழப் போகிறீர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாலிவதம் ஒரு பார்வை

இ. நிஷாந்தன்
2013 கலை

வாலிவதம் இராமாயணத்திலே இடம்பெறுகின்ற ஒரு முக்கியமான பகுதியாகும். இராமாயண காவியத்தில் கிஷ்கிந்தா காண்டப் பகுதியில் காணப்படும் இந்த வாலிவதம் எனும் விடயம் பற்றி பல வேறுபாடு உள்ளதான கருத்துக்கள் வெளிப்படுத்துகின்றன. குறிப்பாக இவ்விடயம் பற்றி, இராமபிரான் வாலியை வதம் செய்தது தர்மமானது எனக் கூறுவோம் இல்லை இது அதர்மமான செயல் எனக் கூறுவோரும் உள்ளனர். ஆகவே இது பற்றிய தெளிவான நிலைப்பாட்டினை இங்கே நோக்குவோம்.

இராமபிரான் தன்னுடைய வனவாச காலப் பகுதியில் தனது மனைவி சீதையுடனும், தம்பி இலஷ்மணனுடனும் பரத்வாஜ முனிவரின் வேண்டுகோளுக்கு இணங்க பஞ்சவடி எனும் பகுதியில் வாசித்து வருகின்றனர். அந்த வேளையில் மாரீசன் எனும் மாய சக்தியினாலே இராவணனால் சீதை கவர்ந்து செல்லப்பட்டு இலங்கையில் சிறை வைக்கப்படுகின்றாள். சீதையினுடைய பிரிவுத்துயரை தாங்க முடியாத இராமபிரான் சோர்வடைகிறான். இதனை கம்பர்

**"சிரித்த பங்கயம் ஒத்த செங்கலன் இராமன்**
**தன் உயிராம் சீதை போக அழிந்து**
**சோர்வடைந்தான் ..."** என

கூறுகிறார். பின் இலஷ்மணன் ஆறுதல் கூறவும் இருவரும் சீதையைத் தேடி செல்லுகின்றனர். வழியில் சீதை இராவணனால் கவர்ந்து சென்றமையை ஜடாயு மூலம் அறிகின்றனர். இதன்படி தொடர்ந்தும் தேடிச் செல்லும் போது இராமபிரானின் வருகைக்காக காத்திருந்த சபரியை காண்கின்றனர். சபரியானவன் இராமபிரானை நோக்கி "நீங்களிருவரும் கிஷ்கிந்தைக்கு சென்று வானரராஜன் சுக்கரீவனை சந்தியுங்கள் உங்கள் துயரம் நீங்கப் பெறும் ...." எனக் கூறுகின்றனர். சபரியினுடைய கூற்றின் படி கிஷ்கிந்தை நோக்கி செல்லுகின்றனர். இவர்களை கண்டதும் வாரை ராஜன் சுக்கரீவன் அச்சம் கொண்டு தனது மந்தரியும் வாயுபுத்தரனும் ஆகிய அனுமனை அனுப்பி அவர்களை பற்றி அறிந்து வருமாறு கூறுகின்றான்.

அனுமனும் மாறுவேடத்தில் சென்று அவர்களை பற்றி அறிந்ததும் தன்னை அவர்கள் இருவருக்கும் அறிமுகம் செய்த பின்னர் அவர்களை அழைத்துச் சென்று சுக்ரீவனுக்கு அறிமுகம் செய்து இவர்கள் இருவரும் உங்கள் உதவியை நாடி வந்ததாகவும் அனுமன் கூறினான்.

அதன்பின் இராமனும் சுக்கிரீவனும் தங்களை அறிமுகம் செய்த படி இருவரும் நட்புக் கொள்கின்றனர். பின் இராமனும் சுக்கிரீவனும் தத்தமது சோகக் கதைகளை பரிமாறிக் கொள்கின்றனர். இதன்படி அவர்கள் இருவரும் ஒரே விடயத்தில் ஒற்றுமைபட்டு இருந்தனர். அதாவது இராமன் தனது இராட்சியத்தை இழந்தும் தனது மனைவியை இழந்தும் இருக்கின்றான். அதேபோல் சுக்கிரீவனும் தன்னுடைய இராட்சியத்தை இழந்தும், தனது மனைவியை இழந்தும் இருக்கின்றான். ஆகவே இருவரும் சந்தோஷத்திலும் துக்கத்திலும் சம அளவு பங்கு கொண்டு அக்கினியை சாட்சியாகக் கொண்டு இருவரும் ஒருவருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொருவர் உதவி புரிவதாக வாக்கு அளிக்கின்றனர். அந்தவகையில் இராமன் சுக்கிரீவனை நோக்கி "நான் வாலியை கொன்று உனது இராட்சியத்தையும் மனைவியையும் மீட்டுத்தருவேன்" என அங்கு உறுதியளிக்கின்றான். அதே போல் சுக்கிரீவனும் "நானும் உனது மனைவி இருக்கும் இடத்தை கண்டுபிடித்து அவனை மீட்டுத் தருவேன்" எனக் கூறுகின்றான்.

இவ்வாறான நிலையில் வாலியைப் பற்றி நோக்குவது சிறப்புக்குரியது இந்திரன் மகனான வாலி ஒரு மிகச் சிறந்த வீரன். இந்திரன் அவனுக்கு வழங்கிய வரத்தின் படி தன் எதிரில் எதிர்த்து நிற்பவர் யாராயினும் அவர்களன் பலத்தில் பாதி யளவு பலம் வாலியிடம் வந்து சேர்ந்து விடும் இவ்வாறான வாலியின் தோற்றத்தினை கம்பர் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றார்.

**"ஞாலமும் நால்திசைப் புனலும் நாகரும் மூலமும் முற்றிட**
**முடிவில் தீக்கும் அக்காலமும் ஒத்தனன் கடலில்**
**தான் கடை ஆலமும் ஒத்தனன் எவரும் அஞ்சவே"**

எனக் குறிப்பிடுகின்றான். இவ்வாறான நிலையில் எதிர்த்து நிற்க முடியாமல் வாலியினால், சாபத்தின் காரணமாக வர முடியாத பகுதியில் தனது நான்கு மந்திரிகளுடன் வசித்து வருகின்றான். சுக்கிரீவன்

இருப்பினும் தற்போது இராமனது வாக்குறுதியால் நம்பிக்கை வாலியை யுத்தத்திற்கு அழைக்கின்றான் சுக்கிரீவன் இதனைக் கேட்ட வாலி மிகுந்த கோபம் கொள்ளுகிறான். இதனை

**"வெண்மயர் பொடித்த வெம்பொறி"**

எனக் கூறுகின்றார் கம்பர். அதன்பின் வாலி சுக்கிரீவனும் யுத்தம் புரிகின்றான். இவ்வாறு வாலியும் சுக்கிரீவனும் போர் புரிகின்ற போது மறைந்து நின்ற இராமனுக்கு பெரும் வியப்பும், குழப்பமும் ஏற்படுகின்றது. அவர்களது தோற்றம், உடல் தேஜஸ், வீரம், யுத்தம் செய்யும் விதம் ஆகியவற்றால் வாலியும் சுக்கிரீவனும் ஒன்று பட்ட விதத்தில் இருந்தமையால் இராமனால் யார் வாலி என கண்டு பிடிக்கமுடியவில்லை.

இந்த நிலையில் இராமன் வாலியைத் தாக்குவான் என எதிர்பார்த்த சுக்கிரீவன் ஏமாற்றமடைந்து வாலியின் தாக்குதலை சமாளிக்க முடியாமல் தப்பி ஓடி விடுகின்றான். இவ்வாறான நிலையில் இராமனுடைய செயலினால் இராமன் மீது மிகுந்த கோபம் கொள்ளுகிறான் சுக்கிரீவன் இந் நிலையில் இராமன் தான் அம்பு ஏய்யாமைக் குரிய காரணத்தை கூறி சுக்கிரீவனை சமாதானப் படுத்தினான். பின் இராமனது வேண்டுகோளுக்கு இணங்க மலர்க் கொடியை மாலையாக சூட்டுகின்றான் இலஷ்மணன். இப்போது சுக்கிரீவனை நோக்கி இராமன் "இப்பொழுது உங்களில் யார் வாலி என கண்டுபிடிக்க முடியும் ஆகவே மீண்டுமொரு முறை வாலியை யுத்தத்திற்கு அழைப்பாயாக" என வேண்டுகின்றான் இராமன்.

இதன்படி மீண்டும் வாலியை யுத்தத்திற்கு அழைக்கின்றான் சுக்கிரீவன். இதனால் பெரும் கோபமற்ற வாலி தனது மனைவி தாரையான வள் தடுக்கவும் சுக்கிரீவனுடன் யுத்தத்திற்கு செல்லுகின்றான். இம்முறை அவர்கள் இருவரும் மிகவும் கொடூரமாக யுத்தம் புரிகின்றனர். இந்தக் காட்சியை கம்பர் பின்வருமாறு பாடுகின்றார்.

**"இப்பாரில் திரியும் பனிமால்வரை அன்ன பண்பார்**
**மூரித் திசையானை இரண்டு என முட்டினரே"**

இப் பூமியை எட்டுத் திசைகளிலும் காவல் புரியும் யானைகளில் இரண்டு யானைகள் தமக்குள் சண்டையிட்டதை போல இங்கு இவர்கள் புரியும் யுத்தம் இருந்ததாக கூறுகின்றார்.

இந்த நிலையில் வாலியை கொல்வதற்கு சந்தர்ப்பம் பார்த்து நின்ற இராமன் வாலியின் நெஞ்சை குறிபார்த்து அம்பினை எய்கின்றான் கோதண்டம் எனும் வில்லில் இருந்து சீறிச் சென்ற இராமபாணம் வாலியின் மார்பில் பாய்கின்றது. இதனைக் கம்பர் "கதலிக் கனியில் ஊசி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறுவதைப் போல, இராமனின் பானம் வாலியின் மார்பில் பாய்ந்தது....." எனக் கூறுகின்றார். இந்த நிலையினை வாலி சற்றும் எதிர்பார்க்கவில்லை. அம்பு யாருடையது எனப் பார்க்கின்றான். "இராமபாணம் எனப் பொறிக் கப்பட்டிருந்தது. அப்போது அங்கே இராமன் வருகின்றான் வாலி இராமனை நோக்கி "ராமா அகிலம் போற்றும் ஸ்ரீராமனாகிய நீயா இவ்வாறு செய்தாய், தர்மத்தின் வழியில் வாழும் நீ இவ்வாறான அதர்மமான செயலைச் செய்தாய். அதுவும் நான் வேறு ஒருவனுடன் யுத்தம் செய்யும் போது இவ்வாறு மறைந்திருந்து என்மீது அம்பு ஏய்தாய் சுக்கிரீவனுக்காக இவ் வாறு நீ ஒரு அதர்மமான வழியில் செயற்பட்டாய்..." என வாலி இராமன் மீது கோபம் கொண்டு கூறுகின்றான்.

அப்போது வாலியினுடைய வார்த்தைகளை கேட்ட இராமன் வாலியை நோக்கி "வானர வீரனே, நான் செய்த செயல் அதர்மமானது என வாதிடுகின்றாய் நீ செய்த காரியங்களை சற்று எண்ணிப்பார் மனைவி இருந்தும் கூட பிறர் மனைவி மீது ஆசை கொள்பவன் நீ, பிறர் மனைவி மீது மோகம் கொள்பவர்கள் ஒரு போதும் மன்னிக்கப்படுவதில்லை. அவ்வாறு இருக்க நீ உனது தம்பியாகிய சுக்கிரீவனை உன் உடன் பிறந்த சகோதரன் என எண்ணாது அவனை இராட்சியத்தை விட்டு துரத்தியும் தம்பி மனைவி எனப் பாராது சுக்கிரீவனின் மனைவி யையும் கவர்ந்து வைத்திருக்கின்றாய். ஆகவே இவ்வாறு அதர்ம வழியில் செல்லும் உன்னை மறைந்திருந்து கொன்றது எந்த விதத்திலும் தவறானது அல்ல. இது ஒரு போதும் அதர்மமான செயலும் அல்ல எனக் கூறுகின்றான். இவ்வாறு கூறி இராமன் தனது விஷ்ணு வடிவைக் காட்டினான். தன்னுடைய தவறினை உணர்ந்து "இராமனுடைய அம்பினால் இறப்பது எவ்வளவோ மேலானது..." எனக் கூறி இராமனிடம் சரணமடைகின்றான். பின் சுக்கிரீ வனை நோக்கி அவனிடம் மன்னிப்புக் கோரி அவனடம் ஆட்சியை ஒப்படைக்கின்றான். தனது அன்பு மகன் அங்கதனை இராமனிடம் ஒப்படை த்து விடுகின்றான். அதன்பின் மார்பிலே பாய்ந்து நிற்கின்ற அம்பினை நளன் அகற்றிவட வாலி யின் உயிர் பிரிகின்றது.

இது கம்பர் காட்டும் வாலி வதம் எனும் நிகழ் வாகும் இதில் இராமனுடைய செயல், அதாவது மறைந்து நின்று அம்பு எய்தமை எந்த விதத்தி லும் அதர்மமான செயல் அல்ல. ஆகவே தான் வாலி அதனை ஏற்றுக் கொள்கின்றான். இங்கு இராமன் மீது வாலி கொண்ட பக்தியானது இராமனின் அம்பு வாலியின் மார்பில் தரித்து நின்றதன் ஊடாக வெளிப்படுகிறது. குறிப்பாக பகைவர் மீது செய்யும் இராமனது அம்பு அவர் களின் மார்பில் தரித்து நிற்காது. மேலும் வாலி அதர்மான வழியில் சென்றமையை ஏற்றுக் கொண்டதும் குறிப்பிடத்தக்கது. இதனாலேயே அவனை மறைந்து நின்று இராமன் கொன்ற மையை வாலி பின் மேலான செயலாக ஏற்கி றான்.

ஆகவே இவ்வாறான காரணங்களின் ஊடாக, வாலியை இராமன் வாலியை மறைந்து நின்று கொள்வதற்கு "வாலி பெற்ற வரமும்" காரணமாயிற்று. குறிப்பாக வாலியன் எதிரில் எதிர்த்து நிற்பவர் யாராயினும் அவர்களின் பாதி பலம் அவர்களுடன் சேர்ந்து விடும் இதற்கு இராமனும் விதிவிலக்கல்ல.

எனவே இவ்வாறான நிலைப்பாட்டின் ஊடாக இராமன் வாலியை மறைந்து நின்று அம்பு எய்து வதம் செய்தமை ஒரு போதும் அதர்மமான செயலன்று என்பதை இங்கு தெளிவாக காணலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைக்காட்சிப் போட்டி நிகழ்ச்சிகள் ஆரோக்கியமற்ற சமுதாயத்தை நோக்கி ...

அ. கௌசிகா
2013 கலை

விஞ்ஞான உலகம் பெற்றுத்தந்த சாதனங்களுள் தொலைக்காட்சியும் ஒன்றாகும். இன்று தொலைக்காட்சி முக்கியமானதொரு பொழுது போக்கு ஊடகமாக மாறிவிட்ட நிலையில் மக்களது வாழ்வில் தொலைக்காட்சிகள் பெருமளவில் தனது ஆதிக்கத்தைச் செலுத்தி நிற்கின்றன. அவ்வாறான நிகழ்ச்சிகள் நேரடிப் போட்டி நிகழ்ச்சிகள் எனப்படும். உண்மை நிகழ்ச்சிகள் முக்கிய பங்கு வகிக்கின்றது.

இந் நேரடிப் போட்டி நிகழ்ச்சிகளுள் உள் ஒளிந்திருக்கும் வியாபார நோக்கு என்ன என்பதைச் சற்று நோக்கினால் ஆரம்ப நாட்களில் தொலைக்காட்சி நிறுவனங்கள் தம்மைப் பிரபல்யப்படுத்தும் நோக்கில் தொடங்கிய இசை, நடனப்போட்டி நிகழ்ச்சிகளே இவை தொடக்க நாட்களில் சமூகத்தின் பிரபல்யமான நட்சத்திரங்கள் போட்டியிட்டு தமது தனித்திறமைகளை வெளிக்காட்டி அதிலிருந்து வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இவ்வாறே பிரபல்யங்களில் இருந்து விலகி சாதாரண மக்களைக் குறிவைத்தது.

சுவாரசியமும் போட்டி மனப்பாங்கும் மேலோங்கி நிற்கும் மாயதனமான நிகழ்ச்சிகளையே தொலைக்காட்சிகள் எமக்கு வழங்குகின்றன. பார்வையாளரை சுவாரசியப்படுத்தும் நோக்கிலும் போட்டியையும் போட்டியாளரையும் பிரபல்யப்படுத்தும் நோக்கிலும் ஒளிபரப்பப்படும் சித்தரிக்கப்பட்ட சண்டைகள், வாக்குவாதங்கள், தகராறுகள் சமூகத்திற்கு ஒரு மாயையான விம்பத்தையே வரைந்து நிற்கின்றன.

எந்த ஒரு சமூகச் சிந்தனையுமற்று நடத்தப்படும் இப்போட்டி நிகழ்ச்சிகள் இளம் சமுதாயத்தினையே குறிவைத்து நிற்கிறது. திறமைகளை வெளிக்கொணருதல் எனும் போர்வையில் நடாத்தப்படும் இப்போட்டிகளில் சாவி வழங்கப்பட்ட பொம்மைகளாகவே இளைஞர்கள் செயற்படுகிறார்கள். பிரபல்யம் எனும் அடையாளத்திற்காய் தமது கல்வி, உழைப்பு என்பவற்றை இடைநிறுத்தும் செயற்பாடுகளை ஊடகங்கள் தமது நிகழ்ச்சிகளுக்குக் கிடைத்த பெரும் வரவேற்பாகவே சித்தரிக்கிறது உதாரணமாக சிரச சுப்பர் ஸ்டார் – 02 இல் பங்கேற்ற வைத்தியபீட மாணவன் தனது ஒரு வருட கல்வியையே இந் நிகழ்ச்சிக்காக இடைநிறுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

வெற்றி தோல்வியை சமகண் கொண்டு பார்க்கும் தன்மை இளைஞர்களுக்கிடையே அருகி வருவதை இந்நிகழச்சியினூடு நாம் காணக்கூடியதாக இருக்கிறது. காரணம் ஒரு போட்டியாளரை வெளியேற்றும் போது நடுவர்கள் அதை வெளிப்படுத்தும் விதமும் வெளியேற்றலின் பின்னர் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளரால் கேட்கப்படும் கேள்விகளும் அவை ஒளிபரப்பப்படும் விதமும் தோல்வியை மேலும் மிகைப்படுத்திக் காட்டுவதாகவே அமைகிறது. இது நிகழ்ச்சியை சுவாரசியப்படுத்துவதாக அமைந்தாலும் போட்டி பற்றியும் வெற்றி தோல்வி பற்றியுமான இளையவர்களின் கண்ணோட்டத்தைப் பிழையான பாதையில் திசை திருப்புகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழலை மாறாச் சிறுவர்களிடத்திலும் கூட இவ்வாறான நிகழ்ச்சிகள் தணிக்கப்பட்டுள்ளதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. இங்கு பெற்றோர் தமது பிள்ளைகளை நடிக நடிகைகளாக ஆக்கும் முயற்சியிலேயே மேடைப் பயத்தைப் போக்கி தனித் திறமைகளை வளர்க்கும் நோக்கில் இவை நடாத்தப்படுகின்றன என்றும் இது ஒரு புதிய முயற்சி என்றும் தொலைக்காட்சி நிறுவனங்கள் தம்மை விளரம்பரப்படுத்தி நிற்கின்றன. இதையே தான் எமது பாடசாலைகளும் காலங்காலமாக வருடாந்தம் ஆங்கிலவிழா கலைவிழா போன்ற நிகழ்வுகளில் செய்து வருகின்றன. அதில் தமது பிள்ளைகள் பங்கேற்பதில் ஆர்வஞ்செலுத்தாத பெற்றோர் கூட தமது சிறார்கள் ஒரு தடவையேனும் தொலைக்காட்சியில் தோன்ற வேண்டும் என்ற நோக்கில் இந் நிகழ்ச்சிகளுக்குப் பிள்ளைகளை அனுப்புகிறார்கள். உளவியல் நோக்கில் பார்த்தால் கூட சிறுவர்களின் மனதில் பிரபலம், அங்கீகாரம் போன்ற நிலையற்ற விடையங்களுக்கான முக்கியத்துவம் அதிகரித்துவிடும்.

"ஒரு நிமிடத்திலும் நட்சத்திரமாகலாம்" இது சிறுவர்களுக்கான பிரபல்யமான போட்டி நிகழ்ச்சி. ஒரு நிமிடத்திலும் நட்சத்திரமாகலாம் எனும் எண்ணமே சிறார்களின் முயற்சி, உழைப்பு, ஊக்கம், உற்சாகம் என்பவற்றிற்கு முட்டுக் கட்டையாகி விடுகிறது. சிறுவயதிலேயே உழைப்பை உதாசீனப்படுத்தும் போக்கையும் குறுக்குவழியிலும் முன்னுக்கு வரலாம் என்ற தவறான நோக்கையும் இது போன்ற நிகழ்ச்சிகள் சுட்டி நிற்கின்றன.

இந்நிகழ்ச்சிகள் மக்களிடையே பெரும் வரவேற்புப் பெற்றுப் பருவமாக நடத்தும் அளவுக்கு இப்போது முன்னேற்றம் கண்டுவிட்டன. ஆனால் முன்னைய போட்டிகளின் வெற்றியாளர்கள் நட்சத்திரங்களின் உண்மைநிலை எந்த ஒரு ஊடகத்தாலும் வெளிக்காட்டப்படுவதில்லை போட்டியில் ஜெயிப்பீர்களாயின் உங்கள் வாழ்வில் என்றும் காணாத சிறப்பையும் புகழையும் எய்த வழிவகை செய்வோம் என போட்டியர்களையும் பார்வையாளர்களையும் பரவசப்படுத்தக் கூறப்படும் வார்த்தைகள் வெறும் பொலிகாளைகளை உருவாக்கும் செயற்பாடாகவே அமைகிறது.

இவ்வாறான வர்ணனை வார்த்தைகளையும் உணர்வு பூர்வமான உரையாடல்களையும் ஒளி, ஒலிபரப்பியே எமது ஊடகங்கள் பெரும் வருமானத்தை ஈட்டி வருகின்றன. வெற்றியாளரைத் தெரிவு செய்யும் நடைமுறையில் கூட குறுந்தகவல் வாக்குண எனும் வருமானம் அள்ளித் தரும் வழிமுறை கைக்கொள்ளப்படுகிறது.

சாதாரண குறுந்தகவலுக்குரிய கட்டணத்தை விடக் கிட்டத்தட்ட பத்து மடங்கு கட்டணத்தைச் செலுத்தியே நாம் எமது வாக்குகளை வழங்குகிறோம். இதில் வரும் வருமானம் தொலைக்காட்சி நிறுவனத்திற்கே தவிர போட்டியாருக்கல்ல. போட்டியாளரை முன்னிறுத்தி ஈட்டப்படும் வருமானத்தில் ஊடகங்கள் குளிர் காய்ந்து கொண்டிருக்கின்றன.

மக்களே வெற்றியாளரைத் தீர்மானிப்பர் எனின் நடுவர்கள் எதற்கு? ஊடகங்களுக்கு வருமானத்தை பிரபல்யத்தையும் தேடித்தரக்டிய போட்டியாளர்களைத் தக்கவைப்பதற்கு நடுவர்கள் எனும் பாலம் ஊடகங்களுக்குத் தேவைப்படுகிறது.

ஊடகங்களின் புகழ் வருமானநோக்கு விளம்பர அனுசரணையாளர்களின் ஆதிக்கத்தின் களத்தில் அரங்கேறும் போட்டி நிகழ்ச்சிகள் முற்று முழுதாக ஒரு கலைஞனை இனங்காணத் தவறுகின்றது. முதலாளித்துவ மனோநிலையில் தீர்மானங்கள் எடுக்கப்பட்ட பின்னரே சமூகத்தை நோக்கி வர்ணம் பூசிய நரிகளாக இப்போட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ச்சிகள் மக்கள் மத்தியில் வலம் வருகின்றன.

மேலைத்தேய நிகழ்ச்சிகளை அடியொற்றி நடாத்தப்படும் நிகழ்ச்சிகளில் தமக்குரிய தனித்துவத்தை இழந்து மேலைத்தேய பாணி, உடை கலாசாரத்தை வெளிப்படுத்தும் வகையில் பங்கேற்கிறார்கள். இது நிகழ்ச்சிகளின் பிரபல்யத்துக்காக போட்டியாளர்களிடையே ஊடகங்களால் திணிக்கப்படும் செயற்பாடு காலப்போக் கில் அத்தகைய கலாசாரப் பழக்கவழக்கங்கள் சமூகத்தின் மத்தியிலும் ஊடுருவத் தொடங்கி விட்டது. எமக்குரிய தனித்துவத்தை மறந்து பிற நாட்டுக் கலாசாரத்துக்கு நம்மை அறியாமலேயே அடிமையாகிறோம்.

எமது நாட்டில் இத்தகைய நிகழ்ச்சிகளின் பிரபல்யத்தில் இந்திய நிகழ்ச்சிகளின் ஆதிக்கம் மேலோங்கி நிற்கிறது இந்தியாவில் இத்தகைய நிகழ்ச்சிகள் மக்களது அன்றாட வாழ்வில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி நிற்கின்றது. டெல்லியில் இத்தகைய நிகழ்ச்சியொன்றில் இறுதிச் சுற்று வரையும் பங்கேற்று இறுதிச் சுற்றில் பரிசை வெல்லாத சிறுமி அவ்அதிர்ச்சியின் விளைவால் சுயநினைவிழந்து சுகனவீனமுற்றார். இச்சம்பவம் இவ்வாறான போட்டிகள் சமூகத்தில் எந்தளவுக்கு ஆதிக்கம் செலுத்துகின்றன. என்றும் அது உளவியல் ரீதியாக எத்தகையதொரு பாதிப்பை ஏற்படுத்தி நிற்கிறது என்பதையும் எமக்கு புலப்படுத்தி நிற்கிறது. அச்சம்பத்தை தொடர்ந்து டெல்லியில் இவ்வாறான போட்டி நிகழ்ச்சிகள் தேவைதானா என்ற விவாதமும் நடந்தது ஆழ் மனதை பாதிக்கும் இப்போட்டிகள் இன்னமும் எமக்கு தேவை தானா என்பதே இவ்விவாதத்தின் முக்கிய கேள்வியாக இருந்தது.

ஒரு காலகட்டத்தில் மக்கள் தங்கள் பொழுது போக்கிற்காக நூல்களை வாசிக்கவும் பல்வேறு பொது இடங்களில் கூடி உணர்வுகளை வெளிப்படுத்தவும் பண்பாட்டை பகிர்ந்து கொள்ளவும் முயன்றனர். அந்தப் பண்பாட்டுப் பகிர்வு தற்போது முடக்கப்பட்டு விட்டது. மக்களை வெளியே செல்லவிடாமல் வீட்டுக்குள்ளேயே பூட்டி முடக்கி வைக்கும் ஒரு சுயநலச் செயலை இந்த நிகழ்ச்சிகள் செய்து வருகின்றன. மொத்தத்தில் மக்களின் சமூக சந்திப்புக்கள் முற்றிலும் சாத்தியமின்றிப் போய்விட்டது. ஏற்கனவே சமூகத்தோடு தொடர்பைத் துண்டித்துக் கொண்டு பொதுச் சந்திப்புக்களை தனிமையில் இருத்திக் கொள்ள விரும்பிய நடுத்தர பணக்கார வர்க்கத்தினருக்கு மேலும் ஒருசில கவர்ச்சிகளை வழங்கி வீட்டுக் குள்ளேயே புழுங்கிப் போகச் செய்கிற ஒரு சமூக விரோதப் பணியை இந்த நிகழ்ச்சிகள் செய்து வருகின்றன. நவீன மனிதர்களுக்கு மிருகம் போன்றதொரு இருப்பை ஏற்படுத்தித் தருவது தான் இதன் பிரதான நோக்கம்.

உலக மயமாதலின் தொடரும் விளைவுகளான வளச் சுரண்டல் உழைப்புச் சுரண்டலையே ஊடகங்களும் அரங்கேற்றி வருகின்றன ஏகாதிபத்திய மனோநிலையில் நடாத்தப்படும் இப் போட்டி நிகழ்ச்சிகள் உண்மையில் ஆரோக்கியமான போட்டிகளை வேண்டி நிற்கவில்லை.

போட்டிகள் வரவேற்கத்தக்கன. இது சமூகத்தை தனிமனித வாதத்தில் இருந்தும் விடுவித்து பரஸ்பர மனோநிலைக்கு இட்டுச் செல்லும் அங்கு தீர்வுகள் பொதுப்புத்தி மன நிலையிலிருந்து நீங்கி எடுக்கப்பட வேண்டும்.

ஆனால் இன்றைய நாட்களில் ஊடகங்களால் நடாத்தப்படும் போட்டி நிகழ்ச்சிகள் அத்தகைய செயற்பாடுகளை நிறைவேற்றத் தவறுகின்றன. இன்னமும் சமூகத்தைச் சமூக கலாச்சார பொருளாதார சீரழிவுகளுக்கே இட்டுச் செல்கிறது. போட்டிகள் ஆரோக்கியமானதாகவும் எந்த ஒரு புறக்காரணிகளதும் ஆதிக்க மற்றும் நடாத்தப்படுமிடத்து நிச்சயமாக அவை சமூகத்திற்குப் பயனுள்ளதாக அமையும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணிகப் புள்ளிவிபரவியல் ஓர் அறிமுகம்
# Business Statistics

தெ. பிரதா
2013 வர்த்தகம்

வளர்ந்து வரும் உலகில் புள்ளிவிபரவியல் தொடர்பான பயன்பாடு அதிகம் காணப்படுவது டன் அதன் முக்கியத்துவமும் அத்துறையின் வளர்ச்சியும் அதிகமாகவே காணப்படுகின்றன. ஆரம்பகாலங்களிலே மக்களின் தொகை மதிப்பு, வரிக் கணிப்பீடு, நில அளவீடு அதன் பங்கீட்டு அளவு. வணிகச் செயற்பாடு போன்ற விடயங் களில் புள்ளிவிபரவியல் அதிக செல்வாக்கு செலுத்தியுள்ளது.

இப் புள்ளிவிபரவியலானது இன்றைய கால கட்டங்களில் பயன்படுத்தப்படாத துறை எதுவும் இல்லை எனும் அளவுக்கு முக்கியத்துவம் பெற்றது.

"இப்புள்ளி விபரவியல் வணிகத்துறையில் எந்தளவில் பங்களிப்புச் செய்கிறது மற்றும் அதன் பயன்பாடு எவ்வாறு உள்ளது என்பது பற்றிய ஒரு கற்கைநெறியே வணிகப் புள்ளிவிபரவியல் ஆகும்"

இப்புள்ளி விபரவியலானது
1. விபரணப்புள்ளி விபரவியல்
2. அனுமானப்புள்ளி விபரவியல்

என இரண்டாக வகைப்படுத்த முடியும்.

விபரணப்புள்ளி விபரவியல் (Descriptive Stotistics) என்பது சேகரிக்கப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு தொகுத்து வழங்கும் ஒரு செயற்பாடாகும்.

இதில் எண்ணளவில் தரவுகளை வெளிப் படுத்துதல்
- சராசரி அளவீடுகள் மூலம் குறிப்பிடுதல் (இடை, இடையம், ஆகாரம்)
- விகிதாசார அளவீடுகளில் மதிப்பிடுதல் (நியமவிலகல், மாறற்குணகம்)
- வரைபடங்கள் அட்டவணைகளை பயன் படுத்தி தரவுகளை வெளிப்படுத்தல் போன்ற செயற்பாடுகள் இடம் பெறுகின்றன.

அனுமானப் புள்ளி விபரவியல் (Inferential Statistics) என்பது மாதிரி ஆய்வின் பெறுபேறுக ளைப் பயன்படுத்தி குடித்தொகை தொடர்பான தீர்மானம் எடுத்தல் ஆகும்.
இதில் கருதுகோள்களை சோதித்தல்.

- எதிர்காலத்திற்கான அளவீட்டு பெறுமானத் தினை கணித்தல் (பிற்செலவு, இணைபு)
- காலத்தொடர்புகளில் மாறிகளின் மாறும் தன்மையினை அளவிடுதல்
- இரண்டு காரணிகளின் மாற்றங்களுக்கிடை யிலான மாற்றல் விகிதத்தினை அளவிடுதல் (சுட்டெண் கணிப்பீடு)
- மாறல் திறன்களுக்கிடையிலான ஆய்வு (அனோவா பரிசோதனை)
- அவதானிக்கப்பட்ட தரவுகளின் சராசரித் தன்மை (கைவர்க்க சோதனை)

என்பன முக்கியம் பெறுகின்றன.

ஆங்கிலச் சொல்லான Statistics ஒருமை யிலோ பன்மையிலோ பயன்படுத்தலாம். இதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்து ஒரு அளவினை குறிப்பதாகும். அதாவது பரம்பல்களின் நடுமட்டம் என்ற கருத்தினை வழங்குகின்றது.

இப்புள்ளிவிபர அளவீடானது முதன்முதலாக 1663இல் தோன்றியதாக ஜான் சிராண்ட் என்பவர் அவ்வாண்டில் எழுதிய நச்சுரல் அண்ட் பொலிடிகல் ஒப்சவேர்சன் அபான்ஸ்தி பில்ஸ் ஒப் மோடாலிடி (Natural and Political Obeservations Upon the Bills of Mortality) என்ற கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளார். நாட்டின் மக்கள் தொகை மற்றும் பொருளாதார தேவைகளின் அடிப்படையில் அறிஞர்கள் கொள்கைகளை உருவாக்க நினைத்தால் ஆங்கிலத்தில் தொடக்கத்தில் Stat என்ற சொல் தோற்றத்திற்கு காரணமாக அமைந்தது. புள்ளிவிபரவியல் என்ற கருதுகோள்கள் 19ம் நூற்றாண்டில் மேலும் விரிவாக்கப்பட்டது. அதாவது தரவுகளை சேகரித்தல் மற்றும் அதனை ஆராய்ந்து பார்ப்பது என்பவையும் உள்ளடக்கப்பட்டது. இன்று அரசாங்கத் துறை, வணிகத்துறை மற்றும் சமூகத்துறை, அறிவியல் போன்ற துறைகளில் முக்கிய ஒரு அம்சமாக கருதப்படுகின்றது.

புள்ளிவிபரவியல் தொடர்பாக பல்வேறு அறிஞர்கள் பல்வேறு வகைகளில் வரைவிலக் கணங்களை தொகுத்து வழங்கியிருப்பினும் பேராசிரியர் குறொக்ஸ்டன் மற்றும் கௌடன் என்பவர்களால் வழங்கப்பட்டுள்ள வரைவிலக்கணமே நடைமுறையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

அதாவது "புள்ளி விபரவியல் என்பது ஆய்வொன்றுக்கான எண்தரவுகளை சேகரித்து அவைகளை ஒழுங்குபடுத்தி அதனை பகுப்பாய்வு செய்து அதற்குரிய முடிவுகளைப் பெற்று அத்துறை சார்பாக வியாக்கியானம் கூறும் செயற்பாடு எனக் கூறுகின்றனர்"

**புள்ளிவிபரவியலின் பணிகள் / முக்கியத்துவம்**

1. தரவுகளை ஒப்பீடு செய்தல்
2. சிக்கலான தரவுகளை இலகுவாக்குகின்றது
3. கருதுகோள்களை பரீட்சித்தல்
4. எதிர்வு கூறல்
5. தீர்மானங்களை மேற்கொள்ள உதவுதல்
6. ஆய்வாளனின் அறிவினை வளக்கின்றது.

**வணிகத்துறையில் புள்ளி விபரவியலின் பயன்பாடுகள்**

1. பொருள் ஒன்றின் கேள்வியை அல்லது சந்தைப் பாங்கினை ஆராய்தல்
2. நிறுவனம் ஒன்றினை நிறுவுதல்
3. உற்பத்தியை திட்டமிடல்
4. இருப்பின் மட்டத்தினை பேணுதல்
5. நிதித் திட்டமிடல்
6. ஒத்த தன்மையினைக் கொண்ட ஏனைய நிறுவனங்களுடன் ஒப்பீடு செய்தல்
7. நிறுவனம் ஒன்றின் போக்கினையும் எதிர் கால திட்டமிடலையும் மேற்கொள்ளுதல்

**பொருளியல் துறையில் புள்ளிவிபரவியலின் பயன்பாடுகள்**

1. விலைத் திட்டமிடல்களை மேற்கொள்ளல்
2. பொருளாதார பிரச்சனைகளை ஆராய்தல்
3. நாட்டின் தேசிய வருமானம், தலாவருமானம் என்பவற்றையும் ஏனைய நாடுகளுடன் ஒப்பிட்டு வருமான வேறுபாட்டினை ஒப்பிடுதல்
4. நாட்டின் சனத்தொகை வளர்ச்சி, அதில் செல்வாக்கு செலுத்தும் பிற காரணிகள், எதிர்காலத்தில் அவற்றின் போக்கு எவ்வாறு அமையும் என்பதனை மதிப்பிடுதல்
5. நாட்டின் பொருளாதார கொள்கைகளை உருவாக்கும் திட்டங்களை மேற்கொள்ளுதல்
6. வள ஒதுக்கீட்டு செயற்பாட்டினை மேற்கொள்ளல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசாங்கத்துறையில் புள்ளிவிபரவியலின் பயன் பாடுகள்

1. அரசாங்க பாதீடு / வரவு செலவுத்திட்ட கணிப்பீட்டுக்கு உதவுகின்றது.
2. அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ளுதல்
3. வரிவிதிப்பு / மானியம் வழங்கல் செயற் பாட்டிற்கு உதவுதல்
4. சுற்றுலாத்துறைக்கான திட்டங்களை நடை முறைப்படுத்தல்
5. சமூக மேம்படுத்தல் திட்டங்களை மேற் கொள்ளல்

## முதலீட்டாளர்களுக்கு புள்ளிவிபரவியலின் பயன் பாடுகள்

1. தெரிவு செய்யப்பட்ட முதலீட்டில் எதிர் காலத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய இலாப மட்டத்தினை தீர்மானித்தல்
2. ஒன்றுக்கு மேற்பட்ட முதலீட்டு திட்டங்களில் இருந்து பொருத்தமான திட்டத்தினை தெரிவுசெய்தல்
3. கடந்தகால தரவுகளை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தில் அதற்கான விளைவுகளை நிச்சயப்படுத்தல்
4. முதலீட்டு கம்பனிகள் தமக்கிடையே தமது செயற்திறன்களை, இலாப அடைவு மட்டங் களை ஒப்பிட்டு அறிந்து கொள்ளுதல்
5. வரைபடங்கள், வரைபுகள் என்பவற்றை பயன்படுத்தி அவற்றின் போக்கின் தன்மை களை சாதரண மக்களும் புரியக் கூடிய வகையில் வெளிப்படுத்தல்

## புள்ளிவிபரவியல் சம்பந்தமான சில கருத்துக்கள்

1. புள்ளிவிபரவியல் எல்லாம் எண் தரவுக ளாகும். ஆனால் எண் தரவுகள் எல்லாம் புள்ளிவிபரவியல் அல்ல
2. புள்ளிவிபரவியல் என்பது நீங்கள் சிறப்பா கவோ தவறாகவோ உருவகிக்கக்கூடியவாறு உங்கள் கையிலிருக்கும் களிமண் போன்றது.
3. புள்ளிவிபரவியலானது முகாமைத்துவத்தின் முழுமையான பயன்பாட்டுக் கருவியாக ஏற்கப்படுவதில்லை
4. புள்ளிவிபரவியல் என்பது தீர்மானம் எடுத் தல் செயற்பாட்டின் முக்கிய ஒரு பகுதியாகும்.
5. புள்ளிவிபரவியல் சம்பந்தமான எவ்வித அறிவோ அல்லது பயன்பாட்டு முறை பற்றியோ அறியாதவர்கள் கையில் புள்ளி விபரவியலானது அபாயகரமான கருவியாக காணப்படுகின்றது.
6. புள்ளிவிபரவியல் இன்றிய விஞ்ஞான விளைவு எதனையும் கொண்டிருப்பதில்லை. விஞ்ஞானம் இன்றிய புள்ளி விபரவியல் வேர் எதனையும் கொண்டிருப்பதில்லை.
7. புள்ளிவிபரவியல் என்பது நிச்சயமின் மைக்கு எதிரே சாதுரியமான தீர்மானங் களை மேற்கொள்ள பயன்படுத்தப்படும் நுட்ப முறைகளில் தொகுதியாகும்.
8. புள்ளிவிபர முறைகளின் நோக்கம் அதிக அளவிலான எண் தரவுகளை எளிதாக காட்ட லாம்.
9. புள்ளிவிபரவியல் இன்றிய திட்டமிடல் சுக்கானும் திசையறிகருவியுமற்ற கம்பல் ஒன்றை போன்றது.
10. புள்ளிவிபரவியல் என்பது ஒரு விஞ்ஞான மும் கலையுமாகும். அது பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஒவ்வொருவர் வாழ்க்கைக் கும் ஒளியூட்டி வழிகாட்டத்தக்கது.

இவ்வாறாக புள்ளிவிபரவியலானது பல் வேறு துறைகளில் முக்கியத்துவம் பெறுகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையின் விநோத விந்தைகள்

ப.ஜீவனி
2013 (12) கலை

இயற்கை அன்னை பேரருள் மிக்கவள். நீண்டகால இம் மானுட வாழ்வை அருளிய இவள் இப் பூமியை ஒரு வியக்கத்தகு விந்தை மிக்க, எழில்கொழியும் பூமியாகவே படைத்துள்ளாள். இப் பூமியில் தோன்றும் எந்த ஒரு உயிர்களின தும் கனிந்த நெஞ்சங்களில் வசந்தக் காற்றே உலவிய வண்ணம் காணப்படும். இவ்வாறான இயற்கை வளங்களாக பூமி, கடல், காற்று, மழை, சூரியன், சந்திரன், இரவு, பகல், நட்சத்திரம், காடு, மலை, பறவைகள், விலங்குகள் போன்றவற்றை குறிப்பிடலாம். இப்பூமியில் பிறந்த எந்த ஒரு மனிதனும் இயற்கையை நுகர்ந்து ரசித்து அதனை அனுபவித்தவனாகவே காணப்படுகிறான். இவ்வாறு இயற்கை இரசனை அற்ற ஒருவனை உயிரற்ற வெறுமையான கூடு என்றே கருதலாம்.

வாழ்வின் மீது இயற்கை தெளிந்த அற்புதக் காட்சிகளில் வான்வெளியும், கடற்பரப்பும் முக்கிய இடம் பெறுகின்றன. அதிகாலையில் துயில் நீங்கி எழும்பும் எந்த ஒரு உயிர்களுக்கும் இனிய அமு தமே முதற் பரிசாக கிடைக்கும். ஐந்து மணியள வில் பறவைகள் ஒலியெழுப்பிய வண்ணம் காணப் படுகின்றன. குயிலினங்கள் தமது மெல்லிய குரல்களால் மெல்லின கீதங்கள் இசைத்து மேனியை சிலிர்க்க வைத்து ஒரு பரவசத்தை உண்டு பண்ணுகின்ற. இருட் கதவை தட்டி சூரியன் தனது பொற்கதிர்களை மண்மீது ஸ்பரிசம் செய் கிறான். ஆழ்ந்த உறக்கத்தில் உறங்கி எழுந்த அனைத்து உயிர்களுக்கும் கதிரவன் தனது காலை வணக்கத்தை தெரிவிக்கிறது. உயிரினங் களும் சுபீட்சகரமாக துயிலெழுந்து தமது கருமங் களை தொடங்குகின்றன. இவை அனைத்தும் ஓர் அற்புத விநோதங்களாகும்.

சந்திர ஓசைகளை எழுப்பி தமது வாழ்வை ஆனந்தத்தின் உச்ச எல்லையில் கொண்டு செல்லும் பறவைகளை பார்க்கும் எந்த ஒரு மனிதனுக்கும் பறக்க மனமிருந்தும் பறக்க முடியாமல் தவிர்க் கின்றான்.

ஏனெனில் அவனுக்கு சிறகு இல்லை என்ற வருத்தமாகும். தென்னை மரங்கள் இளந் தென்றல் வருடி இளநீர்கள் சுமந்து களையோடு வருவோரை காத்து நிற்கின்றது. பச்சோலை சலசலப்பதனால் எழும் இசையிலேயே சிலர் சங்கீதம் கற்று விடுவர். தென்னை மரங்களில் அணிலோடும் வேகத்தை பார்த்தால் சிலர் மெய் மறந்து நின்று விடுவர். சிறு குழந்தைகள் கூட அதை கண்குளிர்ந்து ரசிப்பார்கள் பச்சை கம்பளம் விரித்தாற் போல காணப்படும் வயல் வெளி களை தூரத்துப் பார்வையில் நோக்கும் போது ஓர் இன்பக் குளிர்ச்சி ஏற்படும். வயல் வெளி களில் இருந்து இதமான தென்றலை அனுபவித் தற்கு நாம் இயற்கை தாய்க்கு நன்றி சொல்ல வேண்டும்.

நீர் நிறைந்து தளும்பும் பொய்கைகள் மரக தக் கம்பளத்திலே பதிக்கப்பட்ட நீல மணிகள் போல மிகவும் பிரகாசமாக ஒளிர்கின்றன. இவ் வாறு காட்சி கொடுக்கும் பொய்கையில் செந் தாமரை கள் சௌர்ந்தர்யமாக மலர்ந்து சிரித்து மனதை கொள்ளை கொள்கின்றன. கதிவனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கதிர்களை கண்டவுடன் தாமரை தனது தங்க இதழ்களை விரிக்கும் அழகு இனிமை தரும் காட்சியாகும். துன்பம் வரும் வேளை களில் இப்பொய்கைகளுக்கு அருகில் நடந்தால் காலில் பரவசம் ஏற்படும், நெஞ்சில் வலி நீங்கும். அதன் அருகில் காணப்படுகின்ற குடை பிடித்த மலர்கள் என்பன இவ்வாறான துயரங்கள் எல்லாவற்றையும் நீக்கி விடுகின்றன.

இயற்கை விந்தைகளில் புதுமையான ஒன்று பூமித் தாயின் மழை எனும் தெய்வமே ஆகும். வாழ்வு செழித்து விளங்கவும் பயிர்ச் செய்கை சிறந்து கொழிக்கவும் இதுவே காரணமாக திகழ் கிறது. ஆகாயம் இடிஇடித்து மின்னல் பறித்து வானம் தாழ் திறந்து வானப் பெருவெளியில் இருந்து இந்த மண்ணிற்கு மழையாக பொழிகி றது. மேல்நோக்கி தொடர்ந்து செல்கின்ற எந்த ஒரு செயற்பாட்டை விடவும் கீழ்நோக்கி பொழி கின்ற மழையே முக்கியம் வாய்ந்ததாக திக்ழ்கி றது. இதனையே கவிமாரி பொழியும் கவிஞர் வைரமுத்து அவர்கள் இது பற்றி பின்வருமாறு கூறியிருக்கிறார்.

**மேல்நோக்கி எரியும் தீ**
**மேல்நோக்கி முட்டும் விதை**
**மேல்நோக்கி உயரும் – முகில்**
**மேல்நோக்கி வளரும் – மனிதன்**
**எல்லாம் மேல்நோக்கியே!**

**கீழ்நோக்கி பொழியும்**
**மழை மட்டும் பெய்த்து விடின்**

மேல்நோக்கி வளர்வன பூமியில் ஏது? இயற்கை கொடையான மழைச் சிறப்பை இனிய மொழிச் சிறப்பால் விளக்கியுள்ளார்.

சில பூக்களில் தேன் துளிகளும், சில பூக்க ளில் பனித் துளிகளும், சில பூவில் வண்டினங் களும் வாசனை மிகுந்த இந்த மலர்களில் இருப் பிடம் கொண்டமைந்து காணப்படுவது ஒரு சிறப்பான விந்தையாகும். பொன்னந்தி மாலை யிலும் பூமலரும் வேளையிலும் விண்மீனை காவல் வைத்து வெண்ணிலவு தூங்கும் காட்சி மிக்க கண்கொள்ளாக் காட்சியாகும.

இவ்வாறாக இயக்கை எமக்கு அளித்த விநோதமான விந்தைகள் எண்ணற்றவை யாகும். நாம் பூமியை நேசித்து, பூக்களை ரசித்து, மண்ணை துதித்து இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ வேண்டும். இவ்வாறான விந்தை களை அனுபவிப்பதற்கு நாம் மானிடனாக இவ் இயற்கைப் பூமியில் அவதரிக்க வேண்டும்.

**"பூசுரர் தங் கைம்மலரும் பூங்குமுதமும் முழைப்பக**
**காசினியிற் தாமரையும் கண் விழிப்ப"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனைகதை இலக்கியத்திற்கு புகழ் சேர்த்த படைப்பாளி

திருமதி. கீதாஞ்சலி
றதீஸ்குமார்
ஆசிரியர்

எமது நாட்டின் தமிழ் இலக்கியத்துக்குப் பல்வேறு தொழில்துறை சார்ந்த எழுத்தாளர்கள் சிறப்பும் செழுமையும் சேர்ந்துள்ளனர் என்பது வரலாற்றுண்மை. மருத்துவத்துறையில் ஈடுபட்டிருக்கும் ஒருவர் இருபத்திநாலு மணி நேரமும் சுறுசுறுப்பாக நோயாளிகளைக் கவனிப்பது. ஆலோசனைகள் வழங்குவது, ஆராய்ச்சிகளில் ஈடுபடுவதென சேவை மனப்பான்மையுடன் இயங்க வேண்டியவர் இவ்வாறான பொறுப்புக்களைச் சுமந்து கொண்டிருந்த பேராசிரியர் வைத்திய கலாநிதி செ.சிவஞானசுந்தரம் (1928-2005) அவர்கள் தமது ஓய்வு நேரங்களைப் பயன்படுத்தி தமது மருத்துவப் பணிகளுக்கு எவ்விதத்திலும் துணைநிற்கத் தேவைப்படாத படைப்பு இலக்கியத்துறையிலும் ஈடுபட்டு தலைசிறந்த இலக்கிய சிருஷ்டிகளைத் தந்துள்ளமை வியப்பையும் அவரிடமிருந்த பன்முக ஆற்றல்களையும் வெளிப்படுத்துவனவாக உள்ளன.

பல்கலைக்கழக மருத்துவபீடாதிபதி சமூக மருத்துவ நிபுணர் இலக்கியப் படைப்பாளி, நாடகாசிரியர், நடிகர், மேடைப்பேச்சாளர், இலக்கிய இயக்கச் செயற்பாட்டாளர் எனப் பல துறைகளிலும் ஆழமாகக் காலூன்றி நின்று அவ்வத்துறைகளில் அர்ப்பணிப்பான செயற்பாடுகளினால் தமது ஆற்றல்களை வெளிப்படுத்தியவர் நந்தி அவர்களைத் தவிர வேறு எவராகவும் இருக்க முடியாது.

ஒரு வைத்தியரினால் எவ்வாறு ஒரு நோயாளி உடம்பிலுள்ள நோயைக் கண்டுபிடித்து குணமாக்க முடியுமோ அவ்வாறே சமூகத்தைப் பீடித்துள்ள நோய்களையும் கண்டறிந்து அவற்றை இலக்கியத்தின் மூலமாக ஓரளவுக்கு சீர்ப்படுத்தலாம் என்ற இலட்சியம் கொண்டவராக இலக்கியப் பிரவேசம் செய்தவர், "நந்தி". பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் அவர்களுக்கு "நந்தி" எனனும் புனைப்பெயரைச் சூட்டியவர் மூத்த தமிழ்ப் பேரறிஞர் இராஜாஜி அதற்கு முன்னரே வி.செ.சி, பென்சிலின் மகன். ஜெய்ஹிந்த, சாஸ்திரியார் முதலிய புனைப்பெயர்களில் கட்டுரைகள், உரைச்சித்திரங்கள், சிறுகதைகள் என எழுதிக் கொண்டிருந்தார். அவரது முதலாவது சிறுகதை சஞ்சலமும் சந்தோஷமும் 1947ல் வீரகேசரியில் வெளியாகியது.

சிறுகதைகளும் நாவல்களும் புனைகதைகள் என்ற வகைப்படுத்தலில் அடங்குகின்றன. "நந்தி" அவர்களின் 16 தமிழ் நூல்கள் அச்சில் வெளியாகியுள்ளன. அவற்றில் ஆக்க இலக்கியப் படைப்புக்களாக "ஊர் நம்புமா?" (1966) கண்களுக்கப்பால் ... (1984) நந்தியின் கதைகள் (1994) தரிசனம் (2002) ஆகிய நான்கு சிறுகதைத் தொகுதிகளும், மலைக்கொழுந்து (1964) தங்கச்சியம்மா (1977) நம்பிக்கைகள் (1998) ஆகிய மூன்று நாவல்களும் குரங்குகள் (1975) என்னும் நாடகமும் விளங்குகின்றன.

சென்ற அறுபதுகளுக்கு முற்பட்ட காலத்தில் நந்தி அவர்கள் எழுதிய சிறுகதைகளில் தனித்த மனித உறவுச் சூழலில் நிகழும் சம்பவங்கள் உணர்வுகள் காதல், பாசம், பல்கலைக்கழகச் சூழலில் நடுத்தர தொழிலாளர் வர்க்கத்தை சேர்ந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களின் ஆசைகள், நாகரிக மோகம், கடவுள் நம்பிக்கை போன்றவை மனிதாபி மானத்துடன் கலையம் கொண்டவையாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன.

பேராசிரியர் "நந்தி" அவர்களின் இளமைக் காலம் பெரும்பாலும் பளை, இடைக்காடு, காங் கேசந்துறை முதலிய கிராமங்களிலே கழிந்தது. உயர் கல்வியை றோயல் கல்லூரி, இலங்கைப் பல்கலைக்கழகம் கொழும்பு வைத்தியக்கல்லூரி போன்றவற்றில் பயின்றவர் மலையகத்தில் நீண்டகாலமாக மருத்துவராகப் பணியாற்றிய வர். குருநாகல், ஹரிப்பிட்டிய முதலிய வைத்திய சாலைகளில் பணியாற்றிய காலத்தில் சாதார ணச் சிங்கள மக்களுடனும் பழகும் வாய்ப்பைப் பெற்றவர். பல நாடுகளுக்கு தொழில் காரணமா கப் பயணங்கள் செய்தவர். அதனால் பல்வகை யான மக்களுன் பழகி அவர்களின் உணர்வு களை நுட்பமாக உள் வாங்கி மனதைத் தொடும் படியான கலாசிருஷ்டிகளாக அவர் இலக்கிய உலகில் உலவவிட்டார்.

நந்தி அவர்கள், பன்றி குட்டி போடுவதைப் போல் படைப்புக்களை எழுதிக் குவிப்பதில்லை. ஆண்டொன்றுக்கு மூன்று அல்லது நான்கு சிறு கதைகளைய சிருஷ்டிப்பது வழக்கம். கதைக் கான கரு ஒன்று அவரின் மனதில் பதிந்து திருப்தி யாக உருவாகிய பின்னரே மேலோட்டமாக எழுதிப் பார்த்து மீண்டும் மீண்டும் வேண்டிய திருத்தங்களைச் செய்த பின்னரே அவர் அதனை அச்சுக்கு அனுப்புவது வழக்கம். தேவையற்ற ஒரு சொல் கூட அதில் இடம் பெற்றிருக்காது. சிறு சிறு வசனங்களாலான கம்பீரமான நடை உயர் கொண்டெழும் பாத்திரவார்ப்பு. நிசமான சம்ப வம் போன்ற காட்சி வர்ணனை தர்மா வேசத்தை வெளிப்படுத்தும் வள்ளல்கள் என்பன நந்தி அவர்களுக்கேயுரிய தனித்துவம். இக் காரணங் களாலேயே 1960களுக்குப் பின் நந்தியவர்களின் இலக்கிய சிருஷ்டிகள் ஒவ்வொன்றும் முத்தி ரைப் படைப்புக்களாகத் திகழ்ந்தன.

பன்னிரு சிறுகதைகளைக் கொண்ட "ஊர் நம்புமா?" என்னும் "நந்தி" யின் முதலாவது சிறு கதைத் தொகுதி. அவரின் நெருங்கிய நண்பர் கள் சிலரால் தொகுக்கப்பட்டு நூலுருவாக அவ ரின் திருமணப்பரிசாக வழங்கப்பட்டது. அதில் அடங்கியுள்ள கதைகளில் ஆசையின் ஓசை, அதிகாரி, காதலுக்கு மருந்து என்பவையை மருத்துவ அதிகாரி சிலரைப் பின்புலமாக வைத்து எழுதப்பட்டவை. ஆசையின் ஓசையில், கடமை யுணர்வுடன் புரிந்த சேவைக்காக, ஒருவன் நீட்டிய பணத்தை முதலில் மறுத்த வைத்தியர், பின்னர் அதைப் பெற்றிருக்கலாமோ எனச் சஞ் சலப்படுவதையும், "அதிகாரி" என்ற சிறுகதை மருத்துவமனையில் பணிபுரியும் சிற்றூழியன் தனது குழந்தைக்காகச் சிறிது பால்மாவைக் கையாடியதைக் குற்றமெனக் கண்டிருக்கும் வைத்திய அதிகாரி தமது பிரயாணப் படிக்காக பொய்க் கணக்குக் காட்டுவதையும், பெண்பித் துப் பிடித்த நோயாளி ஒருவனுக்கு, பொறுப்பற்ற வகையில் ஆலோசனை வழங்கிய வைத்தியர், அது அவரின் மகளுக்கே தீங்காக அமைவதை காதலுக்கு மருந்து கதையும் சித்தரிக்கின்றன. ஊர் நம்புமா? சிறுகதை, தான் குடும்பக் கட்டுப் பாடு செய்து விட்டதாக மனைவியிடம் பொய் கூறி அவளுடன் உடலுறவு வைத்துக் கொண்ட கணவனையும், அதன் காரணமாக கர்ப்பந்தரித் துக் கொண்ட மனைவி, மானத்தைக் காப்பதற்கு மரண மெய்துவதையும் கூறி மலையகத்தில் நிலவும் அவலங்களில் மனதைத்தொடும் வகை யாகச் சித்தரிக்கிறது. தாய்க்கு மகன் செய்யத் தவறிய உதவிகளை வேறொருவன் செய்ததை அறிந்த மகன், அவன் மீது பாசங்கொள்வதை பாததரிசனம் எடுத்துச் சொல்கிறது. அழகில்லாத குழந்தை பிறந்து விட்டதைக்கண்டு மனம் குமுறல் கொள்ளும் தந்தையின் உணர்ச்சி வெளிப்பாடு கண்ணாடி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னைப்போல் மகளும் பிச்சையெடுக்கும் தொழிலில் ஈடுபடக் கூடாது என்பதற்காக அச் சிறுமியை அநாதை விடுதியில் சேர்க்கும். தாயின் கதை நூலைப் போல ... கழித்துவிட்ட பலவகை வெட்டுத்துணிகளைக் கொண்டு ஏழைத் தையற்காரர் தமது மகளுக்கு சட்டை தைத்துக் கொடுப்பதை பூச்சட்டை சித்தரிக்கிறது. நொடித் துப்போய் ஒரு குடும்பத்துக்கு உதவி புரியும் ஒரு உறவுக்காரர், சில நிமிட மன அவசத்தினால், அவ் வீட்டின் தலைவியுடன் உடலுறவு கொண்டதை அவர் தமது வாழ்நாள் முழுவதும் நினைத்து வருவதை மாமா விளக்குகிறது. தூரத்தில் நின்று தரிசிக்கும் போது அருட்பொலிவு கொண்டு விளங்கும் ஆலய மூலமூர்த்தி, மிக அருகில் சென்று பார்க்கும் போது கல்லாக மனிதர்களின் கண்களுக்கு தெரிவதை கல்லோ கடவுளோ என காணமுடிகிறது. கனவான், மிகல், சுகிர்தம் ஆகியவை. பல்கலைக்கழக சூழலில் பயிலும் மாணவர்கள் சார்ந்த கதைகள் முன்னதில், கனவான் வேடத்தில் உலவுபவனின் வலையில் வீழ்ந்து உண்மை தெரிந்து குமுறும் பெண்களை யும், அடுத்ததில், ஏழை என்பதைக் காட்டிக் கொள்ளாமல் ஆடம்பரமோகத்தில் உழலும் மாணவியொருத்தியைக் காதலித்த மாணவன், அவளின் குடும்பச் சூழலை நேரில் அறிந்த போது எய்தும் மன உணர்வையும், சித்தரிப்பவை.

கணக்குகளுக்கப்பால் சிறுகதைத் தொகுப்பி லும் பன்னிரு சிறுகதைகள் அடங்கியுள்ளன. தனிமனித உணர்வுகள், யாழ்ப்பாண சமூகத்தில் நிலவும் சாதித்தடிப்பு, அந்தஸ்து, போட்டி, பொறாமை, சிறுவர்களை வேலைக்கு அமர்த்தும் பிரச்சனை, மலையக தொழிலாளர்களின் வறுமை. கல்வின்மை போன்றவை வெகு இயல் பாக இக்கதைகளில் சித்தரிக்கப்பெற்றன. கதை கள் நிகழும் சூழல், கதாமாந்தர்களின் பேச்சு வழக்கு முதலியவை இக்கதைகள் யதார்த்தமான வையாகவோ என்று உணர்வை ஏற்படுத்து கின்றன.

இத்தொகுப்பிலுள்ள காப்பு சிறுகதை, கடன் பட்டு வாங்கிக் குழந்தைக்கு அணிவித்த காப்பை, குழந்தை இறந்த பின் கூடி கழற்ற முடியாமல் பாசத்தில் துடிக்கும் தந்தையின் உணர்வைச் சித்தரிப்பது "யாழ்ப்பாணச் சமூகத்தின் வாழ்க் கையில் காணப்படும் சொத்துணர்வு ஏற்படுத்தும் மனித விகார உணர்வுகளையும் அந்த உணர்வு விகாரங்களுக்கிடையேயும் குமிழ்விட்டு மேலே குளம்பும் மனிதாயத்தையும் காப்பு காட்டுகிறது" என்பார் பிரபல இலக்கிய விமர்சனங்களும் பேராசிரியருமான கா.சிவத்தம்பி நந்தி அவர் களின் மிகச் சிறந்த கதைகளில் இதுவும் ஒன்று. சதையும் சாம்பரும் குடும்பப் பிரச்சனைகளில் மனைவி, தாய் போன்றோரிடம் சீறிச் சினந்து விழும் ஆண், பகல் நேரச் சுடலை ஞானத்தில் தான் அப்படிச் செய்வது தவறு என உணர்ந்தும், மாலையில் வீட்டுக்கு வந்தவுடன் பழையபடி வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய கதை போலாகி விடுவாள் நேர்த்தியாகச் சித்தரிக்கிறது.

அன்னமன்னாவும், ஷீக்ரன உம் யாழ் சமூகத் தின் மனப்பாங்கைச் சித்தரிப்பவை தும்மல் யாழ்ப்பாண கிராமப்புற உறவினர்களிடம் நிலவும் அர்த்தமற் போட்டி பொறாமைகளின் வெளிப்பாடாக விளங்குகிறது. ஆண்களோடு ..... பெண்கள், நாடகங்களில் ஆண்களுடன் சேர்ந்து நடித்தால் அந்தஸ்து கெட்டுவிடும் என்ற யாழ்ப்பாணத்தவர்களின் தவறான அபிப்பிரா யத்தை விட்டுக் காட்டுகிறது. அசுரனின் தலை, கணக்குகளுக்கப்பால் ஆகிய இரண்டும் யாழ்ப் பாணச் சமூகத்தில் நிலவும் இறுக்கமான சாதிக் கட்டமைப்பின் கொடிய அநீதிகளைச் சுட்டுவன மலையக மக்கள் அவர்களை அறியாமலே சுரண் டப்படுவதையும் கல்வியறிவின் பின் தங்கியிருப் பதையும் பார்த்தால் தெரியும் பச்சைப் பூக்கள் ஆகிய சிறுகதைகள் வெளிச்சத்துக்கு கொண்டு வருகின்றன. உயர்பதவி வகித்து ஓய்வு பெற்ற வர், தமது அந்தஸ்தை தொடர்ந்து பேணுவதற் காக சமயப்பணி என்ற போர்வையுள் புரியும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலித்தனத்தைத் தோலுரித்துக் காட்டும் சிறு கதை ஒரு பகலும் ஒரு இரவும்.

நந்தி அவர்களின் மூன்றாவது சிறுகதைத் தொகுப்பான நந்தியின் கதைகளில் அடங்கியுள்ள 11 சிறுகதைகளில் சரஸ்வதியின் வேண்டுகோள், ஒரு பாவாடை கொடியாகிறது என்பதை வீட்டு வேலைக்காரச் சிறுமிகள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை வெளிப்படுத்துவன. மலையக சிறார்களின் படிப்பைக் கெடுத்து பெற்றோர்கள் தமது ஏழ்மை காரணமாகப் பிள்ளைகளை வீட்டு வேலைக்காரிகளாக அனுப்பிவிட, வேலை செய்யும் வீடுகில் அச்சிறுமிகள் அனுபவிக்கும் அவலங்கள், வேதனைகள் சொல்லுந்தரமல்ல. இவை மனித நேயமற்ற கொடுமைகளைச் சித்தரிக்கும் கதைகள் வீதியின் அர்த்தங்கள் என்ற கதை வளர்ப்பதற்காகத் தத்தெடுத்த பிள்ளையை தமக்கென சொந்தமாகப் பிள்ளையொன்று பிறந்ததும், வக்கிர, எண்ணங்கொண்ட தம்பதியர் அவளை வேலைக்காரியாக நடத்துவதைச் சாடியுள்ளது. பண்புமிக்க ஆசிரியர் ஒருவர் உயர் பதவி வகிக்கும் ஆனால் ஒழுக்கம் குன்றிய தமது பழைய மாணவனிடம் நன்னடத்தைச் சான்றிதழ் பெறச் சொல்வதையும், அவனின் தாய் தனது மகனின் ஆளுமையைச் சீர்படுத்துமாறு ஆசிரியரை நாடுவதையும் சம்பந்தப்பட்டவர்களுக்கு என்னும் கதையில் உறைக்கும் வண்ணம் சித்தரிக்கப்பட்டுள்ளது.

உள்ளத்தால் உயர்ந்து ஊரில் பெரியவராக மதிக்கப்படும் உயர் குடியில் பிறந்த ஒருவர், தொழிலால் சிற்றூழியர்களாக மருத்துவ மனையொன்றில் பணியேற்க நேர்ந்ததால் அவரை மதிப்பற்ற வகையில் சின்னத்தனமாக மருத்துவ அதிகாரி நடத்துவதை பார்வைகள் தெளிவு படுத்துகின்றது. பேரினவாத அட்டகாசங்களுக்கு அஞ்சி, புலம் பெயர்ந்து சென்ற ஒருவர் தாயகத்தின் சூழ்நிலை, தனது உறவுகள், பாசம் என்பவற்றிலிருந்து எவ்வாறு அந்நியாப்பட்டுப் போகிறாரென்பதை படம் பிடித்துக் காட்டும் கதை, கதையோடு கதையாக வெளிநாடுகளுக்குப் புலம் பெயர்ந்து சென்று, கஷ்டமான தொழில்களைச் செய்து தமது குடும்பங்களுக்கு அவர்கள் அனுப்பி வைக்கும் பணத்தை இங்குள்ள குடும்பத்தவர்கள், அந்தஸ்தை உயர்த்திக் கொள்வதற்காக ஆட்பரச் செலவுகளைச் செய்து, உறவுகளில் பாதிப்புக்களை ஏற்படுத்துகிறார்கள் என்பதை பல்லுக் கொழுக்கட்டை சித்தரிக்கிறது.

வசந்தி என்ற 15 வயது மாணவி அவலட்சணமாக ஆசிரியரின் வியத்தகு திறமையைக் கண்டு அவர் மூலமாக தனக்கொரு குழந்தை பிறந்தால், அக்குழந்தை வளர்ந்து பெரிய நிபுணானாவான் எனக் கற்பனையில் ஆசையை வளர்ப்பதையும், ஏற்கனவே திருமணம் முடித்த அவருக்கு 25 வயதுடைய மகன், லண்டனில் விஞ்ஞான நிபுணனாகத் திகழ்ந்து குடிப்பழக்கம் காரணமாக மரணிப்பதையும் அவரின் இரண்டாவது மகன் பித்துக்குளியாக இருப்பதையும் கண்டு, விஞ்ஞான அறிவில் மட்டுமல்லாது நடைமுறை வாழ்க்கையிலும் அறியப்பட வேண்டியவை எத்தனையோ இருக்கின்றன என்பதை வசந்தி உணர்ந்து கொள்வதை வெகுநுட்பமாக கண்டறியாதன வில் சித்தரிக்கப்பெற்றுள்ளது. படிப்பறிவை விட அனுபவ முதிர்ச்சியே முதன்மையானது என்பதை விபரிப்பது சிங்கத்து மருத்துவிச்சி.

தரிசனம், நந்தி அவர்களின் பன்னிருகதைகளைக் கொண்ட நான்காவது சிறுகதைத் தொகுப்பாகும். பாடசாலை ஒன்றில், மண்டபம் ஒன்றினை அமைப்பதில் முழுமூச்சாக உழைத்து அப்பணியை நிறைவேற்றிய ஆசிரியர் ஒருவரின் பெயரை அதற்குச் சூட்டுவதற்கான தீர்மானம் எடுப்பதற்கிடையில், படிப்பித்தலிலோ, மண்டபம் அமைக்கும் பணியிலோ அக்கறை காட்டாதிருந்த ஆனால் மாணவர்களுக்கு மிகவும் பிரியமான ஆசிரியர் ரகுபரன் இராணுவக் குண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீச்சில் இறந்து விட ஆவேசங்கொண்ட மாண வர்கள் அவரின் உடலை ஊர்வலமாகக் கொண்டு வந்து அம்மண்டபத்தில் வைத்து, அதற்கு அவர் நாமத்தைச் சூட்டி விட, கூடி நின்றவர்களும் ஆமோதித்துக்குரல் எழுப்புகிறார்கள் மனித இயல்புகளையும் மாணவர்களின் உணர்வுகளை யும் நாட்டில் நிலவுகின்ற சூழ்நிலையையும் உணர்ச்சிகரமாக சித்தரிக்கிறது. உணர்ச்சிகள் உணர்ச்சிகள் என்னும் சிறுகதை தக்கூசுத் தொழி லாளியின் மகனுக்கு காலம் மாறிவருவதை உணர்ந்த சங்கீத பூஷணம் சர்மா இசைப்பயிற்சி யளிக்க முன்வருவதை காலங்கள், இராகங்கள் சித்திரிக்கின்றது. சமூகத்தில் நிலவும் சீதனம் கொடுக்கும் வழக்கம் முதிர் கன்னிகளை உரு வாக்குவதைப் பற்றிய ஒரு பெண்ணின் மனநி லைப் பார்வையாக கொடுமைக்கு அப்பால் அமைந்துள்ளது. தன்னம்பிக்கையும், சுதந்திரப் போக்கும், சுயமாகச் சிந்தித்து முடிவெடுக்க் கூடிய அறிவாற்றலும் கொண்ட பெண்ணொரு வர் தன் மனத்துக்குப் பிடித்தவனை திருமணம் செய்து கொள்வதை இருட்டிலிருந்து என்னும் கதைசித்தரிக்கிறது.

கண்பார்வையற்ற ஓர் இளைஞனிடம் நிறைந்துள்ளன. பண்புகளையும், உணர்வுகளை யும் சிந்தனைகளையும் சித்தரிக்கும் கதை தரிசனம். மருத்துவ சிகிச்சையினால் மட்டுமே நோயாளியைக் குணப்படுத்திவிட முடியாது. பிறரின் ஆறுதல் வார்த்தைகள், அன்பு மொழி கள், தெம்பூட்டல், நம்பிக்கை முதலியவை மிக அவசியமானவை என்பதை வலியுறுத்துவது மருந்துக்கு அப்பால் இறந்தவரின் சூக்கும உணர்வு வாழ்க்கைப் பிரச்சனைகளையும் மனித உறவுகளையும் பற்றி எண்ணுவதாக சித்தரிக்கப் பட்ட கதை அம்மா அம்மே! யதார்த்தம் கற்பனை என்பவற்றுக்கு அப்பாலும் ஒன்றிருக்கிறது என்ற அறவுத் தெளிவை கதாசிரியர் ஒருவருக்கு உணர்த்தும் சிறுகதை இராசையாவின் தங்க, திருவிழாவுக்கு மனைவியைக் கை கூட்டிச் சென்ற கணவன் சனநெரிசலில் அவள் தவறிப் போய்விட, அவள் இறந்திருப்பாள் என நினைத்து கொண்டு மருத்துவ மனையிலுள்ள பின அறை யைத் தேடிச் சென்ற கணவனின் உணர்வுகளைச் சித்தரிப்பது யானை காலடியில் என்னும் சிறு கதை. வாழ்க்கையின் அனைத்து அம்சங்களை யும் சுவைத்திட வேண்டுமென்ற எண்ணத்தில் வாலிபன் ஒருவன் விபசாரி ஒருத்தியிடம் சென்ற போது அவன் அவனுக்கு நல்லறிவுச் சுடர் ஏற்றி அனுப்புவதை நயமாகச் சித்தரிக்கிறது. உபதேசம் ஈழத்தமிழர்கள் எதிர்நோக்கும் அடை யாளஅட்டை பொலிஸ்ப் பதிவுப் பிரச்சனைகள் அந்தங்கள் மூலம் வெளி உலகத்துக்கு அம்பலப் படுத்தப்பட்டுள்ளன. தமது நாய்க்குட்டி காணாமற் போனதையிட்டு, மிகவும் துக்கத்துடன் அதனைத் தேடி அலைகிறார் ஒருவர். ஆனால் அயலில் உள்ள பையனை சிங்கள இராணுவம் பிடித்துச் சென்றதால், அவனின் தந்தையின் சோகத்தை பற்றி அந்த மனிதர் விசாரிக்கவில்லை. பின்னர் தனது தவறை உணர்ந்து அவர் கழிவிரக்கம் கொள்வதை மனிதநேய உணர்வுடன் மீண்டும் கேள்விகள் உருவாகின்றன சித்திரிக்கின்றது.

இலங்கை அரசாங்கத்தின் சாகித்தியப் பரிசைப் பெற்ற "நந்தி" அவர்களின் முதலாவது நாவலாகிய மலைக்கொத்து மலையகத்தில் நிலவும் தொழிற்சங்கப் போட்டிகளையும், அப் பிரதேச மக்களின் வாழ்க்கை அவலங்களையும் பேச்சு மொழியையும் ஏனைய தமிழ்ப் பிரதேச மக்களுக்குத் தெரிவாகத் தெரியப்படுத்திய ஒரு காதற்கதை பாத்திர வார்ப்புகளும் சூழல் வர்ணிப்பும் வெகு இயல்பாக அமைந்துள்ளன. மலையக மக்கள் மத்தியில் நீண்ட காலமாகச் சேவை புரிந்ததனால் அப்பகுதி மக்களிடமிருந்து பெறப்பட்ட அனுபவங்களையும் அவர்களின் எண்ணங்களையும் ஏகங்களையும் வாசகர் களின் மனச்சாட்சியைத் தொடும் வகையில் எழுதப்பெற்ற நாவல் இது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கச்சியம்மா யாழ் குடாநாட்டின் கிராமப் புறங்களில் தாதியாகப் பணிபுரிந்த மலையகத் துப் பெண் ஒருவரின் அவதானிப்புக்களை சித் தரிப்பது மலையகத்தர் ஒருவரின் பார்வையின் யாழ்ப்பாணத்தின் நிலவும் சாதிப்பிரிவினை களையும் நலிவுற்ற மக்களின் வாழ்க்கைத் துய ரங்களையும் மனித நேரத்துடன் நோக்குகின்ற சமூக சேவையை அடித்தளமாக கொண்ட நாவல் மொழி நயமும் சிலேடையான உத்திகளும் வர்ணிப்புக்களும் இதனை ஒரு கலாவடிவமாகத் திகழக் செய்கின்றன.

யாழ்ப்பாணத்தின் பச்சைவேலி (அச்சுவேலி) கொழும்பு பேராதனை ஆகிய களங்களில் கதா மாந்தர்களை உலவவிட்டு அவர்களின் பலம், பலவீனம் மனஎழுச்சிகள், விகார உணர்வுகள், சூழ்நிலைகளை வெகு சிறப்பாக சித்தரிப்பதாக நம்பிக்கைகள் நாவல் அமைந்துள்ளது.

"புதிய சொல்லாட்சிகள், புதிய உவமைகள், புதுமையான கற்பனைகள், வருணனைகள் என்பன "நந்தி"யின் புத்தாக்கத்திறனுக்கு எடுத்துக் காட்டுக்களாகும். ஒரே தடத்தில் ஒரே மாதிரி யானவையும் பயன் செய்து செய்து சேதாரத்துக் குள்ளானவையுமான அணியங்கால் சொற் றொடர்களையும் சொற்களையும் வருணனைக ளையும் வாசித்து அலுத்து விட்டவர்களுக்கு நந்தியின் உரை நடைப்பாங்கு புத்தெழுச்சியை யும் உற்சாகத்தையும் வழங்கத் தவறாது என்று உறுதியாகச் சொல்வேன்.

"கலை இலக்கியம் சார்ந்த பல்வேறு துறை களிலும் தனது ஆக்கத்திறனைச் செப்பளமாகப் பதித்திருக்கும் ஈழத்தின் மூத்த எழுத்தாளர் பேராசிரியர் நந்தி நாவல்துறையில் தனது திறனை மிக ஆழமாகப் பதித்துள்ளார் என்பத ற்கு மலையக்கொழுந்து (1964) தங்கச்சியம்மா (1977) நம்பிக்கைகள் (1988) ஆகிய அவசர நாவல்கள் சான்று. சமூக வாழ்வியலை அவதான மாகப் பொறுப்போடு நோக்குதல், சமூக முரண் பாடுகளை அறிவு பூர்வமாக அணுகுதல், வகை மாதிரிப் பாத்திரங்களை முரணின்றி வளர்த்தல், சித்தரிப்புக்குரிய சொற்களைத் தேர்ந்தெடுத்தல் என்பன நந்திக்குரிய தனித்துவ முத்திரைகள் சுயமான சிந்தனையோடு கலாருப மாக ஆக்க இலக்கியம் படைப்பவர் நந்தி. "அறுபது வருட அனுபவ வெளிப்பாடுகளாக அவரது புனைகதை கள் அமையும் போது அவை சமூகச் சிக்கலின் பரிமாணத்தை இனங்காட்டுவதுடன், அதற்கான தீர்வினையும் வெகு இலகுவாக சுட்டி விடுகின்ற ஈழத்து நாவல் துறைக்கு நந்தியால் பெருமை" நந்தி அவர்களின் புனை கதைகளைப் பற்றி பிரபல நாவலாசிரியராக விளங்கும் "செங்கை ஆழியான்" இவ்வாறு குறிப்பிட்டுள்ளமை மனங் கொள்ளத்தக்கது.

பேராசிரியர் "நந்தி" அவர்கள் தமிழுலக்கிற்கு அளித்துள்ள இலக்கியப் படைப்புக்கள் மூலம் மேலும் பல்லாண்டுகளுக்கு வாழ்ந்து கொண்டி ருப்பார்.

**நாம் வீணாகக் கழிக்கும் ஒவ்வொரு வினாடியும்**
**நமது வாழ்வில் மீண்டும் நாம் பெற முடியாத பெருஞ் செல்வமாகும்.**

– காரல் மார்க்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்றங்கள் - 2012

தமிழ் மன்றம்

கணித விஞ்ஞான மன்றம்

உயர்தர மாணவர் மன்றம்

கிறிஸ்தவ மன்றம்

இந்துசமய மன்றம்

சமூகவியல் மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குடமைக் கணக்கு

த. கிஷானா
2013 வர்த்தகம்

1890ம் ஆண்டு பங்குடமை சட்டமானது பங்குடமை என்பதனை பின்வருமாறு வரையறுக்கின்றது. "இலாபநோக்குடன் முயற்சி ஒன்றில் ஈடுபடும் நபர்களுக்கிடையிலான உறவு பங்குடமை" எனப்படும்.

பங்குடமை என்பது இரண்டிற்கு மேற்பட்ட நபர்கள் ஒன்று சேர்ந்த பொதுவான வணிகம் ஒன்றில் அல்லுத முயற்சியில் ஈடுபடுகின்ற நபர்களுக்கு இடையிலான உறவு முறை என கூற முடியும் இதனை

**பங்குடமையின் பண்புகள்**

- இலாபநோக்கம் இருத்தல்
- 2–20 வரையயான பங்காளர்கள் காணப்படுதல்
- முயற்சி ஒன்றில் ஈடுபடல்
- பங்காளர்களிடையே உறவு காணப்படுதல்

**பங்குடமை ஒப்பந்தம் / உடன்படிக்கை**

பங்காளிடையே பங்குடமை தொடர்பான பிரச்சனைகள் ஏற்படுவதை தவிர்ப்பதற்கும் அவர்களுக்கிடையில் ஏற்படும் பிணக்குகளை தீர்ப்பதற்கும் உரிய ஏற்பாடுகளை கொண்டதாக பங்காளர்களினால் பொதுவாக உடன்பாட்டுடன் ஏற்படுத்தப்படும் உடன்படிக்கை இதுவாகும்.

**உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்தி கொள்ள கூடிய முறைகள்**

1. எழுத்து மூலம்
2. வாய்மொழி மூலம்
3. நடத்தை மூலம்

**பங்குடமை கணக்கின் மீது செல்வாக்க செலுத்தும் சட்டங்கள்**

1. 1890ம் ஆண்டின் பங்குடமை சட்டம்
   1. 24ம் பிரிவு
   2. 42ம் பிரிவு
   3. 44ம் பிரிவு
2. 2007ம் ஆண்டு 7ம் இலக்க கம்பனிச் சட்டம்
3. கானர் எதிர்மறை வழக்கு தீர்ப்பு

**1890ம் ஆண்டு பங்குடமை சட்டத்தின் 24ம் பிரிவு**

1. எல்லா பங்காளரும் மூலதனத்தை சமமாக பங்களிப்பு செய்தல் வேண்டும்.
2. பங்குடமையால் உழைக்கப்படும் இலாபம் அல்லது நட்டம் சமமாக பகிரப்படல்
3. எல்லா பங்காளரும் முகாமையில் ஈடுபட முடியும் ஆனால் சம்பளம் பெறமுடியாது
4. பங்காளரால் இடப்படும் மூலதனத்திற்கு வட்டி இல்லை
5. பங்காளரால் இடப்படும் மெலதிக மூலதனத்திற்கு 5% வட்டி பெறலாம்
6. அனைத்து பங்காளரின் சம்மதம் இன்றி புதிய பங்காளரை சேர்க்க முடியாது
7. பங்காளர் காசு அல்லது பொருளை பற்றி இருந்தால் அதற்கு வட்டி இல்லை
8. பங்காளர் பங்குடமை செயற்பாடு தொடர்பாக ஏதாவது செலவு செய்தால் அதை மீளப் பெற உரித்துடையவர்
9. பங்காளரிடையே முரண்பாடுகள் ஏற்படின் பெரும்பாலான பங்காளர்களின் விருப்பத்தின் படி தீர்த்துக்கொள்ள முடியும். ஆனால் வியாபார நோக்கங்களில் மாற்றம் செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டின் எல்லா பங்காளர் சம்மதம் பெறப்படவேண்டும்.

**1890ம் ஆண்டு பங்குடமை சட்டத்தின் 42ம் பிரிவு**

பங்குடமை வியாபாரத்தில் பங்காளர் விலகும் போது அல்லது மரணமடையும் போது அவருக்கு கொடுக்க வேண்டிய தொகை பங்காளர் கடன் கணக்கிற்கு மாற்றப்பட்டு 5% வட்டி செலுத்தப்பட வேண்டும்.

**1890ம் ஆண்டு பங்குடமை சட்டத்தின் 44ம் பிரிவு**

பங்குடமை ஆனது கலைக்கப்படும் போது பொறுப்புகள் அனைத்தும் தீர்க்கப்பட்ட பின்னர் தேறிய சொத்துக்கள் பங்காளரிடையே சமமாக பகிரப்படல் வேண்டும்.

**2007ம் ஆண்டு 7ம் இலக்க கம்பனி சட்டம்**

பங்குடமை வணிகம் தொடர்பாக பங்காளரின் உச்ச எண்ணிக்கை 20 என இச்சட்டத்தின் 519வது பிரிவு கூறுகிறது.

**கானர் எதிர்மறை வழக்கு தீர்ப்பு**

இக்காலத்தில் கானர், மறே, வில்கின்ஸ் ஆகிய மூவரும் மூலதன ஏற்ற தாழ்வுடன் ஒப்பந்தம் ஏதுமின்றி பங்குடமை நடாத்தி வந்தனர் இப்பங்குடமை ஆனது நட்டமடைந்து 838ஸ்ரீ (Steling Poun) பகிர்வு நட்டம் ஏற்பட்ட போது வில்கினஸ் தன்னை முறிந்தவரென பிரகடணப் படுத்தினர். இந்நிலையில் அவர்து நட்டப் பங்கினை கானரும் மறேயும் என்ன விகிதத்தில் ஏற்றுக் கொள்வது என்பது தொடர்பில் அவர்களுக்கிடையில் பிணக்கு ஏற்பட அது நீதிமன்ற வழக்காகமாறியது இவ்வழக்கினை விசாரித்த நீதிபதி ஜோன்ஸ் என்பவர் பின்வருமாறு தீர்ப்பளித்தார். "முறிவடைந்த பங்காளர் ஒருவரின் நட்டம் பங்கினை மற்றைய பங்காளர்கள் தாம் இறுதி ஐந்தொகையில் இணங்கி கொண்ட மூலதனத்திற்கு அமைவாக ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

இவ்வழக்கு தீர்ப்பானது சட்டமாக பின்பற்றப் பட்டு வருகின்றது.

**பங்குடமை சட்ட ஏற்பாடுகள் பின்பற்றப்படும் சந்தர்ப்பங்கள்**

1. பங்குடமை ஒப்பந்தம் இல்லாத போது
2. பங்குடமை ஒப்பந்தத்தில் பங்குடமை சட்டத்திற்கு முரணான ஏற்பாடுகள் உள்ள போது அவ் ஏற்பாட்டினை கொண்டு குறித்த விடயத்திற்கு தீர்வு காண முடியாத போது
3. பங்குடமை ஒப்பந்தத்தில் குறித்த ஒரு விடயம் தொடர்பாக குறிப்பிடப்படாத போது

**பங்குட்மையின் கணக்குகள்**

பங்குடமை தனியுரிமையை ஒத்த அமைப்பாக காணப்பட்டாலும் சில கணக்குகள் வேறுபட்ட முறையில் மேற்கொள்ளப்படுகின்றன. அவை

1. பங்காளர் மூலதன கணக்குகள்
2. பங்காளர் நடைமுறை கணக்குகள்
3. பங்காளர் பற்று கணககு
4. பங்காளர் கடன் கணக்கு

**மூலதன கணக்கு**

பங்குடமையில் ஒன்றுக்கு மேற்பட்ட பங்காளர் இருப்பதனால் மூலதன கணக்கு நிரல் வடிவ முறையில் தயார் செய்யப்படும். இக் கணக்கு ஆனது இருவகையில் பங்குடமை நிறுவனங்களால் பேணப்படலாம்.

1. நிலையான மூலதன கணக்கு
2. மிதக்கும் மூலதன கணக்கு

**நிலையான மூலதன கணக்கு**

1. பங்காளர் முதலீடு செய்த தொகை மட்டும் இக் கணக்கில் பதியப்படும்
2. மூலதன தொகைக்கு வட்டி கொடுப்பதாயின் இக் கணக்கில் உள்ள மீதிக்கே வட்டி கணிக் கப்படும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மேலதிக மூலதனம் இடப்பட்டால் இக் கணக்கில் செலவு வைக்கப்படும்
4. பங்காளுக்குரிய வுவறுகொடுப்பனவுகள் இங்க பதியப்படாது

### மிதக்கும் மூலதன கணக்கு

இக்கணக்கில் பங்காளர் ஆரம்பத்தில் இட்ட மூலதனம் அவருடைய மேலதிக மூலதனம், பற்றுக்கள் மற்றும் உரிமையை அதிகரிக்கும் அல்லது குறைக்கும் எல்லா உருப்படிகளும் பதியப்படும்.

இம்மூலதன கணக்கு மீதியானது கூடிக் குறைந்து மாற்றமடைந்து கொண்டு இருக்கும் இதனால் இதை மிதக்கும் மூலதன கணக்கு என அழைப்பர்.

**நிலையான மூலதன கணக்கின் மாதிரி**

| விபரம் | பே.ப | A | B | C | விபரம் | பே.ப | A | B | C |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மூலதனத்தை குறைக்கும் | | | | | காசு | | xxx | xxx | xxx |
| நோக்கு பற்று | | xxx | xxx | xxx | மறுபடி P | | | | |
| நன்மதிப்பு | | | | | மதித்தல் | | | | |
| சீராக்கம் | | xxx | xxx | xxx | இலாபம் | | xxx | xxx | xxx |
| | | | | | நன்மதிப்பு | | | | |
| மீ/செ | | xxx | xxx | xxx | சீராக்கம் | | xxx | xxx | xxx |
| | | xxx | xxx | xxx | | | xxx | xxx | xxx |
| | | | | | மீ/வ | | xxx | xxx | xxx |

**மிதக்கும் மூலதன கணக்கின் மாதிரி**

| விபரம் | பே.ப | A | B | C | விபரம் | பே.ப | A | B | C |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பற்று | | xxx | xxx | xxx | காசு | | xxx | xxx | xxx |
| மீ/செ | | xxx | xxx | xxx | சம்பளம் | | xxx | xxx | xxx |
| | | | | | மூலதன வட்டி | | xxx | xxx | xxx |
| | | | | | இலாபம் | | xxx | xxx | xxx |
| | | xxx | xxx | xxx | | | xxx | xxx | xxx |
| | | | | | மீ/வ | | xxx | xxx | xxx |

### பங்காளர் நடைமுறை கணக்கு

பங்குடமையில் மூலதனமாக ஈடுபடுத்திய தொகை தவிர்ந்த ஏனைய பங்குடமைக்கும் பங்காளருக்கும் இடையிலான நடவடிக்கைகளை பதிவு செய்வதற்காக பராமரிக்கப்படும் கணக்கு பங்காளர் நடைமுறை கணக்கு எனப்படும்.

நிலையான மூலதன கணக்கினை பேணும் பங்குடமைகளே பங்காளர் நடைமுறை கணக்கினை பின்பற்றுகின்றன. எனவே பங்காளர் மூலதன கணக்கின் ஒரு பகுதியாகவே பங்காளர் நடைமுறை கணக்கு பராமரிக்கப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பங்காளர் நடைமுறை கணக்கின் மாதிரி**

| விபரம் | பே.ப | A | B | விபரம் | பே.ப | A | B |
|---|---|---|---|---|---|---|---|
| மீதி | | | xxx | மீதி | | xxx | |
| பற்று | | xxx | xxx | சம்பளம் | | xxx | xxx |
| பற்றுவட்டி | | xxx | xxx | மூலதன வட்டி | | xxx | xxx |
| மீ/செ | | xxx | xxx | பங்காளர் சொத்துக்களின் | | | |
| | | | | வருவாய் | | xxx | xxx |
| | | | | பங்குடமை சார்செலவு | | xxx | xxx |
| | | | | பங்காளர் கடன்வட்டி | | xxx | xxx |
| | | xxx | xxx | | | xxx | xxx |
| | | | | மீ/வ | | xxx | xxx |

**பங்குடமையின் முடிவு கணக்குகள்**

பங்குடமையின் முடிவு கணக்குகள் தனியுரிமை வியாபாரத்தின் முடிவு கணக்குகளை ஒத்ததாகவே தயாரிக்கப்படும். அதாவது வியாபார இலாபநட்ட கணக்கு, ஐந்தொகை பங்குடமையின் முடிவு் கணக்குகளாக தயாரிக்கப்படும் அதேவேளை வியாபார இலாபநட்ட கணக்குடன் இலாபநட்ட பகிர்கணக்கும் இணைந்ததாக தயாரிக்கப்படும்.

தனியுரிமை வியாபார முடிவு கணக்குகளில் இருந்து பங்குடமையின் முடிவு கணக்குகள் பின்வரும் வேறுபாட்டை கொண்டிருக்கும்.

1. இலாபநட்ட கணக்கில்
   அ. பங்காளரால் பங்குடமையில் ஈடுபடுத்தப்படும் அவரது சொத்துக்களுக்கான செலவுகள் (நுப – பங்காளர் கட்டடத்திற்கான வாடகை)
   ஆ. பங்காளர் கடன்வட்டி (நிதி செலவு)
   இ. பங்குடமை சார்பான பங்காளர் செலவுகள்
2. ஐந்தொகையில்
   1. பங்காளர் மூலதன கணக்கு மீதிகள்
   2. பங்காளர் நடைமுறை கணக்கு மீதிகள்
   3. பங்காளர் கடன் கணக்கு மீதிகள்

**இலாபநட்ட பகிர் கணக்கு**

பங்குடமையின் உரிமையாளர்கள் (பங்காளர்கள்) ஒன்றுக்கு மேற்பட்டோராக காணப்படுவதனால் பங்குடமையின் இலாபம் அல்லது நட்டம் ஆனது பங்காளரிடையே பகிர வேண்டியதாய் உள்ளது. இதற்காக இலாபநட்ட கணக்கிற்கு மேலதிகமாக அதனுடன் இணைந்ததாக இலாப நட்ட பகிர் கணக்கு தயாரிக்கப்படுகிறது.

பங்குடமை சட்டத்தின் பிரகாரம் அல்லது ஒப்பந்தத்தின் பிரகாரம் பங்குடமையின் இலாப நட்டங்களை பங்காளரிடையே பகிர்வு செய்வதற்காக தயாரிக்கப்படும் கணக்கு இலாபநட்ட பகிர் கணக்கு எனப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலாபநட்டப் பகிர் கணக்கு

| விபரம் | | தொகை | தொகை | விபரம் | A | B |
|---|---|---|---|---|---|---|
| சம்பளம் | A | xxx | | தேறிய இலாபம் மீ/வ | | xxxx |
| | B | xxx | | ந/மு க/கு வரவு மீதிக்கான | | |
| | C | xxx | xxx | வட்டி | xxx | |
| மூலதனவட்டி | A | xxx | | பற்று வட்டி | xxx | xxx |
| | B | xxx | | | | |
| | C | xxx | xxx | | | |
| நடைமுறை க/கு செலவு | | | | | | |
| மீதிக்காவை வட்டி | A | xx | xx | | | |
| இலாபம் | A | xxx | xxx | | | |
| | B | xxx | xxx | | | |
| | C | xxx | xxx | | | |
| | | | xxx | | | xxx |

## ஐந்தொகையின் மாதிரி அமைப்பு

| விபரம் | | தொகை | தொகை | விபரம் | A | B | C |
|---|---|---|---|---|---|---|---|
| மூலதனம் | A | xxx | | நி/சொத்து | | | |
| | B | xxx | | காணி | xxx | - | xxx |
| | C | xxx | xxx | கட்டிடம் | xxx | (xx) | xxx |
| நடைமுறை க/கு | A | xxx | | இயந்திரம் | xxx | (xx) | xxx |
| | B | xxx | | தளபாடம் | xxx | (xx) | xxx |
| | C | xxx | xxx | | | | xxx |
| ந/டு/அல்லா பொறுப்பு | | | | ந/மு/சொத்து | | | |
| வங்கிக்கடன் | | xxx | | இறுதிஇருப்பு | | xxx | |
| பங்காளர் கடன் | | xxx | xxx | க/ப | xxx | | |
| ந/ பொறுப்பு | | | | ஐயக்கடன் ஏற்பாடு | (xx) | xxx | |
| க/கொ | | xxx | | வருமான நிலுவை | | xxx | |
| செலவின நிலுவை | | xxx | xxx | செலவீனமுற்பணம் | | xxx | |
| | | | | காசு மீதி | | xxx | |
| | | | | வங்கி மீதி | | xxx | |
| | | | xxx | | | | xxx |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணிகச் சூழல்

# Business Environment

W. சகிலா
2013 வர்த்தகம்

வணிகச் சூழல் என்பது வணிக முயற்சியொன்றின் வெற்றிகரமான செயற்பாட்டை நிச்சயிக்கும் காரணிகள் அல்லது வணிகங்களுக்கு சவாலாகவோ அல்லது சந்தர்ப்பமாகவோ மாறக்கூடிய சக்திகளை குறிக்கும்.

அந்தவகையில் வணிகச் சூழல் காரணமாக தற்காலத்தில் உருவாகிய வாணிகப் போக்குகள்.

- தனிநபர்கள் தமது ஆயுட்காலத்தை அதிகரித்து கொள்ள எடுக்கும் அக்கறை காரணமாக சுகாதாரமான உணவுப் பானவகைகளுக்கு அதிகரித்த கேள்வி.
- தனிநபர் வீடுகளில் அதிக நேரம் ஓய்வெடுக்க முடிவதால் TV, CD, DVD கணனி ஆகியவற்றுக்கு அதிகரித்த கேள்வி
- அதிக நேரம் வேலையில் ஈடுபடுவதால் வீட்டில் சமைக்காது வெளியில் இருந்து உணவு பெறுதல் (Take Away Food)
- 99 Lives ஒரு வேளை பல செயலில் ஈடுபடல்
- அற்புத சகாசங்களில் நாட்டம் – மெஜிக் காட்சி Wonder Land சகாச காட்சிகளுக்கான கேள்வி அதிகரிப்பு
- வயது முதிர்ந்தவர்களுக்கு இளமை நாட்டம் அதிகரிப்பதால் உடல் அலங்காரத்திற்கு அதிகரித்த கேள்வி

போன்றவற்றை கூறலாம். அத்தோடு வணிகத்தில் உலக செல்வாக்கை நோக்குவோமாயின்.

- கலப்பு பொருளாதார முறையில் நாட்டம்
- வலயச் சந்தை விரிவடைதல்
- பழைமையான பொருள் மாதிரிகளையும் பழைமையான வாழ்க்கை முறையையும் மீண்டும் விரும்புதல்
- பல்தேசிய கம்பனி முறைக்கு பதில் அங்கீகார கம்பனி முறையின் வளர்ச்சி
- சீனா, கொரியா, மலேசியா, சிங்கப்பூர், ஜப்பான் ஆகிய நாடுகளின் பொருளாதார ஆற்றல் அதிகரிப்பு
- நாடுகள் கூட்டுச் சேரல்
- உலகளாவிய மட்டத்திற்கான வியாபார குறி பிரபல்யம் அடைதல் போன்றவற்றை குறிப்பிட்டு கூறலாம்.

வணிகச் சூழலானது

1. அகச்சூழல் / நுண்பாக்க சூழல்
2. புறச்சூழல் / பேரினச் சூழல் என இரண்டு வகைப்படும்.

அந்தவகையில் அகச்சூழல் காரணிகளையும் புறச்சூழல் காரணிகளையும் பின்வரும் வரைபடம் மூலம் தெளிவுபடுத்தி காட்டலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SWOT **பகுப்பாய்வு**

வணிகச் செயல்திட்ட நோக்கத்தை அடை வதில் செல்வாக்குடைய அனுகூலமான பிரதி கூலமான அகப்புற காரணிகளை இனம் காணும் போது நோக்கம் தெளிவாக இருக்குமானால் அந்த நோக்கத்தை நோக்கி செல்வதற்கு "SwoT" பகுப்பாய்வை பயன்படுத்த முடியும் இங்கு "SwoT" என்பது

| | |
|---|---|
| Strengths<br>பலம் | → நோக்கத்தை அடைவதில் உதவும் அமைப்பின் தன்மைகள் |
| Weaknesses<br>பலவீனம் | → நோக்கத்தை அடைவதில் இடையூரான தன்மை |
| Opportunition<br>வாய்ப்பு | → நோக்கத்தை அடைவதில் உதவும் புறக்காரணிகள் வாய்ப்பு or சந்தர்ப்பம் |
| Threats<br>அச்சுறுத்தல் | → நோக்கத்தை அடைவதில் இடையூறாக அமையும் புறக்காரணிகள் |

"SwoT" பகுப்பாய்வினை மேலே குறிப்பிட்ட 4 பகுதிகளையம் இரு வகைப்படுத்தப்படும்.

| | | |
|---|---|---|
| அகக் காரணிகள் | – | பலமும் பலவீனமும் அமைப்பின் உட்புறம் சார்ந்தவையாகும். |
| புறக்காரணிகள் | – | வாய்ப்பும் அச்சுறுத்தலும் அமைப்பின் புறச்சூழல் சார்ந்தவையாகும் |
| அகக்காரணிகள் | – | உ/தி, நிதி, ஊழியம், சந்தைப்படுத்தல் என்பன பற்றிய ஆற்றல் தொடர்பானவை இதுவாகும். |
| புறக்காரணிகள் | – | பேரினப் பொருளாதாரத்தின் மாற்றங்கள் தொழில்நுட்ப மாற்றங்கள் அரசியல் சட்ட நிலைமாற்றங்கள் சமூக கலாச்சார மாற்றங்கள் போன்றவை இதிலடங்கும். |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய வரலாற்றில் அகம் பற்றிய நோக்கு

செ. இராஜேஸ்வரன்
BA(Hons) Dip.in.Edu
ஆசிரியர்

உலகில் வழங்கும் செம்மொழிகளுள் ஒன்றாக விளங்கும் தமிழ்மொழி பண்டைக்காலந் தொட்டு வளர்ச்சியுற்று வருகின்றது. இவ்வகையில் கி.பி முதல் மூன்று நூற்றாண்டுகளைக் கொண்ட காலப்பகுதி சங்ககாலம் அக்காலத்தில் சேர, சோழ பாண்டியரென்னும் முடியுடை மூவேந்தர் மூவரும் பாரி காரி போன்ற குறுநில மன்னர் பலரும் வேங்கடம், குமரி என்னும் எல்லைகளுக்கு உட்பட்டுக் கிடந்த தமிழ் நாட்டை அறநெறியின்றி வழுவாது ஆண்டு வந்த னர். அக்காலத்தில் எழுந்த இலக்கண நூல்களும் எட்டுத்தொகை பத்துப்பாட்டு எனும் இலக்கிய நூல்களும் குறிப்பிடத்தக்கன. இவை மேற்கணக்கு நூல்கள் என்று கூறப்படும். அவ்வகையில் எட்டுத்தொகை நூல்களாவன நற்றினை, குறுந்தொகை, அகநானூறு, ஐங்குறுநூறு, கலித்தொகை என்பன அகம் கூறுவனவாகவும், புறநானூறு, பதிற்றுப்பத்து, புறத்தினை சார்ந்ததாகவும், பரிபாடல் அகம் புறம் சார்ந்தவையாகவும் எட்டுத்தொகை நூல்கள் அமைகின்றன.

பத்துப்பாட்டு நூல்களாவன. குறிஞ்சிப் பாட்டு, முல்லைப்பாட்டு அகத்தினை சார்பாகவும், பட்டினப்பாலை – அகம் புறம் விரவி நிற்பனவாகவும், திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, பெரும்பானாற்றுப்படை, சிறுபானாற்றுப்படை, கூத்தராற்றுப்படை, மதுரைக் காஞ்சி, புறத்தினை சார்பானதாகவும், நெடுநல் வாடை அகமா புறமா என்ற சர்ச்சைக்குரியனவாகவும் அமைகின்றன. ஆகவே இந்நூல்களுள் 8 நூல்கள் அகத்தினை சார்ந்து நிற்பதைக் காணமுடிகின்றது.

சங்க இலக்கியங்கள் மக்கள் வாழ்க்கை முறையின் அடிப்படையில் அகத்தினை புறத்தினை என்ற பிரதான பொருள் மரபுகளைக் கொண்டிருக்கின்றன.

அகம் எனப்படுவது மனமொத்த தலைவனும் தலைவியும் தம்முள் கூடிய கூட்டத்து துய்ந்த இன்பத்தை இத்தன்மையானது என வெளிப்படுத்தும் உணர்வு அகம் எனப்படும். அதாவது காதலொழுக்கம் அன்பினைந்தினை தூயகாதலொழுக்கமாகும். இவற்றை ஐவகை நிலங்களிற் கூடாக ஒழுக்கங்களை முன்வைத்துள்ளார். புணர்தல் (குறிஞ்சி) இருத்தல் (முல்லை) ஊடல் (மருதம்) இரங்கல் (நெய்தல்) பிரிதல் (பாலை) ஆகியன அன்பின் ஐந்தினையாகும்.

கைக்கிளை பெருந்தினை என்பன தூயகாதலொழுக்கமாகக் கொள்ளப்படுகின்றன. கைக்கிளை ஒரு தலைக்காதலாகும். பெருந்தினை என்பது பொருந்தாகாமம் ஒருவன் ஒருத்தியிடம் மிக்க காமத்தவனாகி அவளை அடையப பெறாது மடலேறுதல் வரைபாய்தல் முறைகள் மூலம் மாய்த்துக் கொள்வதாக குறிக்கும்.

உள்ளுறை உவமம் கையாளப்பட்டுள்ளது உவமைகள் வெளிப்படையாகக் கூறாமல் பாடலினுள் வரும் விபரிப்பு மூலம் சொல்ல விரும்புவதை சூட்சுமமாக உணர்த்தும் முறை உள்ளுறை உவமம் எனப்படும். அதாவது ஒரு உவமைப் பாடல்குள்ளே உள்ளுறைந்து இருத்தல் உள்ளுறை உவமம் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்காட்டாக

**நினையாய் வாழி தோழி நனைகவுள்**

**அண்ணல் யானை அணிமுகம் பாய்ந்த**

**தென்ன ......** எனும் பூதற்தேவனாரின் குறுந் தொகைப் பாடலில் தலைவனது வலிமையை நம்பி அவனோடு உடன்போகலாம் என்ற நம்பிக்கையை தலைவிக்கு ஏற்படுத்த பொருத்த மான உள்ளுறை உவமம் கையாளப்பட்டுள்ளது. எதிர்த்து வந்த புலியையும் கொன்றொழித்த யானைபோல வழியில் ஏற்படும் துன்பங்களை எதிர்கொண்டு நிற்கக் கூடிய ஆற்றல் மிக்க உயர்வரை நாடன் உன்னைக் காப்பாற்றுவான் எனவே பயமின்றி அவனுடன் செல்லலாம் என்ற கூற்று மறைமுகமாக முன்வைக்கப்பட்டுள்ளது. புலி இறந்து கிடந்ததை காற்று வீழ்த்திய கரிய அடியையுடைய வேங்கை மரத்தினது மஞ்சள் நிறப்பூக்களையுடைய வாடிய கிளைக்கு உவமிக் கப்பட்டுள்ளது.

இவை மட்டுமன்றி இறைச்சிப் பொருள் தன்மையும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இது உள்ளுறை உவமம் போலக் கருப்பொருளில் இருந்து உணர்த்தப்படும் எனினும் உள்ளுறை யில் கூறப்பட்ட பொருளும் உயர்த்துணரும் பொருளும் ஒத்துமுடியும். இறைச்சியில் கூறப் பட்ட பொருள் ஒத்து முடிந்து அதனின்று மற்றொரு தொகாப்பொருள் அவாவப்பட்டு நிற்கும் இதற்கு எடுத்துக்காட்டாக அகநானூற்றுப்பாடலில்

**கோழிலை வாழைக் கோள்முதிர் ........**

**என்ற ஈற்றடியில் வேங்கையும் ஒள்ளினர் விரித்தன**

**நெடுவெண் திங்களும் ஊர்கொண்டற்றே**

வேங்கை மரங்களில் பசுமையான பூங் கொத்துக்கள் விரியப் பெற்றன வெண்மையான பூரண சந்திரனை ஊர்கொண்டுள்ளது என்பதே இவ்வடியின் நேரடியான கருத்து. அவற்றின் உள்ளார்ந்த அர்த்தமாக தினை அறுபடைக் காலம் முடிவடைந்தன பகலில் சந்திக்க முடியாது நிலவு பகல் போல் இருப்பதனால் இரவிலும் சந்திக்க முடியாது ஆகவே திருமணம் செய்வது தான் ஒரே ஒரு வழி என கூறப்பட்டது.

இங்கே தூய்மையான ஒழுக்கங்கள் பின் பற்றப்பட்டன

இவை போன்றே அடுத்த காலமாக விளங்கு கின்ற சங்க மருவிய காலத்தில் இரட்டைக் காப்பி யம். இலக்கண நூல், பக்தி இலக்கியங்கள் என்னும் கீழ்கணக்கு இலக்கியம் எனவும் பாகு படுத்தலாம். இவற்றுள் அகம் சார்பான இலக்கி யங்கள் ஐந்தினை ஐந்து, ஐந்தினை எழுவது, திணைமொழி ஐம்பது, திணைமாலை, நூற் றைம்பது, கார் நாற்பது, கைந்நிலை என்பனவற் றைக் குறிப்பிடலாம். இவற்றோடு திருக்குறள், நாலடியார் அறத்தோடு, அகம் பற்றியும் கூறி யிருப்பதும் காப்பியங்களில் சிலப்பதிகாரம் கடலாடுகாதை, கானல்வரி ஆகிய பகுதியில் அகம் பற்றி பேசி நிற்கின்றன.

இவை பிற்பட்ட காலமான பல்லவர் காலத் தில் பக்தி சார்ந்த, பக்தி சாராத இலக்கியங்கள் தோற்றம் பெற்று அகப்பொருள் தன்மையையும் வெளிப்படுத்த தவறவில்லை பக்திசார் இலக்கி யங்களில் நாயன்மார்களில் மணிவாசகர் தான் ஆணாக இருந்தும் தன்னைப் பெண்ணாக பாவனை செய்து இறைவன் மீது கொண்ட காதலை பாடலில் வெளிப்படுத்தியும் ஆண்டாள் திருமாள் மீது காதல் கொண்டு பாடியமையும் இவர்களது பக்தி மரபு கைக்கிளை பெருந்திணை மரபை உள்ளடக்கியுள்ளது.

பக்திசார இலக்கியமான முத்தொள்ளாயிரத் தில் மன்னர் உலா வரும் வேளை தலைவி காதல் வயப்பட்டு பரிதவிக்கும் நிலையும் எடுத்துக்காட் டப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆய்மணிப் பைம்பூண் அலங்குதார்க் கோதையை**

**காணிய சென்று கதவடைத்தேன் – நாணிப்**

என்ற பாடலும்

**காப்படங் கென்றன்னை கடிமனையிற் செறித்து**

**யாப்பிடங் ஓடி அடைத்தபின் – மார்க்கடுங்**

**கோன் நன்னலம் காணா ....**

என்ற பாடலும் காதல் வயப்பட்ட பெண்களின் நிலை எடுத்துக் காட்டுவ துடன் மற்றுமோர் பாடலில்

**புகுவார்க் கிடங்கொடா போதுவார்க் கொல்கா**

**நகுவாரை நாணி மறையா – இருகரையின்**

**ஏமான் பிணை போல நின்றதே கூடலார்**

**கோமான் பின் சென்றவென் னெஞ்சு**

என மகளிர் காதல் கொண்ட இயல்பு வெளிப் படுத்தப்பட்டுள்ளது. இவை நல்லதோர் எடுத்துக் காட்டுக்களாக அமைகின்றன.

நந்திக்கலம் பகத்தில் நந்திவர்மன் மீது காதல் கொண்டு தலைவி பரிதவிக்கும் நிலையும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

**"மண்ணெலாம் உய்ய மழைபோல் வழங்குகரத்**

**தண்ணுலா மாலைத் தமிழ்நந்தி நல்நாட்டில் .."** என தலைவனைப் பிரிந்த பெண்ணின் மனநிலை எடுத்தியம்பப்படுவதும்

மற்றொரு பாட்டில்

**"மங்கயர்கண் புனல்பொழிய மழைபொழியும் காலம்**

**மாரவேள் சிலைகுனிக்க மயில் குனிக்கும் காலம்**

**...........**

**அங்குயிரும் இங்குடலும் ஆன மழைக்காலம்**

**அவரொருவர் நாமெருவர் ஆன கொடுங்காலம்"**

என தன்னந்தனியே தலைவனைப் பிரிந்து பரி தவிக்கும் தலைவியின் நிலை காணப்படுகிறது என பல்லவர் கால பக்திசார இலக்கியத்திலும் அகப்பண்பு நிறைந்திருப்பதைக் காணலாம்.

தொடர்ந்து வந்த காலப்பகுதி சோழர்காலம் இது கி.பி 9–14 வரையான காவிய காலம் காப்பி யங்கள் பல்கிப் பெருகியதும் இக்காலமே ஆகும். உலகியலைச் சிறப்பித்துக் கூறும் வகையில் சமுதாய வாழ்க்கை அமைந்து காணப்பட்டது. இதனால் புலவனின் கற்பனையைத் தூண்டும் வகையில் சூழ்நிலை அமையப்பெற்றன. மன்னன் புலவர்களை நன்கு ஆதரித்தான் இதனால் காப்பியங்கள் பேரிலக்கிய சிற்றிலக்கியங்கள் என வளர்ச்சி கண்டன.

எடுத்துக்காட்டாக நளவெண்பா நள தமயந்தி யின் வரலாற்றை மூன்று காண்டங்களினூடாக வெளிப்படுத்தியுள்ளது. இவற்றுள் அகம்சார் சித்திரிக்கும் பாடல்களில் ஒன்றாக

**இவ்வளவில் சொல்லுங்காள், இவ்வளவர் காணுங்கான்**

**இவ்வளவில் காதல் இயம்புங்கள் இவ்வளவில் மீளுங்கள்**

**என்னுரையா விம்பினான் மும்தம் நின்று**

**ஆளுங்கால் வென்மையரசே**

என காதல் சுவை படைக்கப்பட்டுள்ளது இவற் றோடு

**காதலியை காரிருளிற் கானகத்தே கைவிட்ட**

**பாதகனை பார்க்கப்படா தென்றோ – நாதம்**

**அனிகின்ற அழிவாய் ஆங்கலவனோடி**

**ஒளிகின்ற தென்னொ உரை.....**

என காதலியை தனியே விட்டுவந்த நளனின் காதலன் துன்ப இயல்பை கவிஞர் சொல்லில் அடங்காமல் வெளிப்படுத்தியுள்ளார்.

இவற்றோடு அடுத்த காலப்பகுதியாக விளங் குவது நாயக்கர்காலம் இது கி.பி 14–18ம் நூற் றாண்டு வரையான காலம் வித்துவச் செருக்கு டைய காலமும் இதுவேயாகும். பரணி, உலா, பிரபந்தம், பிள்ளைத்தமிழ் போன்ற பல்வேறு இலக்கியங்கள் தோற்றம் பெற்று விளங்கின. அவற்றுள் அகம் சார்பான பண்பையும் சுட்டிக் காட்டத் தவறவில்லை குற்றாளக் குறவஞ்சியில் குறப் பெண்ணையும் பற்றிப் பாடுவதாகவும் நாட கப் பாங்கில் அதிக பாட்டுடைத் தலைவராகக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு தலைவன் வீதி உலா வருதல் தலைவி விளையாடிக் கொண்டிருத்தல், தலைவன் தலைவி மீது மோகம் கொள்ளல் தோழியை தூதாக அனுப்புதல் என பல்வேறு வடிவங்களில் அமைந்து பாடப்பட்டுள்ளது. உலாப் பிரபந்தத்தில் தலைவன் வீதி உலா வருதல், தலைவி அவன் அழகைப் பார்த்து மயங்குதல், காமமுறல் போன்ற செயற்பாடுகள் காணப்பட்டன. இதற்கு எடுத்துக் காட்டாக மதுரை சொக்கநாதர் உலா குறிப்பிடத்தக்கது.

தமிழிலக்கியம் பல வழிகளில் புத்துயிர் பெற்று வளர்ச்சியுறும் காலமாக 19ம், 20ம், 21ம் நூற்றாண்டு காலம் விளங்குகின்றது. இக்கால இலக்கியங்களின் தொன்மையை அடியொட்டி பண்டைக்கால இலக்கிய வளத்தை கருத்திற் கொண்டு எழுந்திருந்த வேளையிலும்,

19ம் நூல் மக்களின் வாழ்க்கைமுறை முதலியவற்றிலிருந்து பெரிதும் வேறுபட்டுள் ளன 20ம் நூல் நடைபெற்ற இரு உலகப் போர்களையும் விஞ்ஞான வளர்ச்சி கல்வி விருத்தி முதலியவற்றையும் அதற்கு காரணங்களாகக் கூறலாம். பொருளாதார நிலையில் மக்களிடையே ஏற்றத்தாழ்வுகள் சாதி வித்தியாசங்கள் முதலியன வரவர அருகில் கொண்டு போவதையும் முற்பட்ட காலப்பகுதியில் சிறப்பாக இக் காலப் பகுதியிலும் அரசியல் விடயங்களிலும் பிறவற்றிலும் பொதுமக்கள் கூடுதலான செல்வாக்கை பெற்றிருப்பதையும் பொதுவுடமைக் கொள்கைகளும் பிறவும் மக்களின் வாழ்க்கை முறையில் மாற்றங்கள் சிலவற்றை உண்டாக்கி வருவதையும் இன்று நாம் காணலாம். இவ்வாறு மக்களது கொள்கைகளும் வாழ்க்கை முறையும் மாற்றமுற்றுச் செல்வதற்கு இக்காலத்தின் தமிழிலக்கியத்தின் போக்கு வேறுபட்டுச் செல்கின்றன.

நம் முன்னோர் கையாண்ட தாழிசைதுறை, விருத்தம் முதலிய யாப்பு வகைகளை திறமையுடன் கையாளக் கூடிய அறிவும் ஆற்றலும் 18ம் நூல் வாழ்ந்த பாரதிக்கு இருந்த போதும் அவற்றை விட்டு பொதுசனங்கள் கவரக்கூடிய சிந்து தெம்மாங்கு முதலிய புதிய யாப்பு வகைகளைக் கையாண்டார். இவை தமிழுக்கு புதியன வல்ல 15ம் நூல் பள்ளு, குறவஞ்சி நாடகம் முதலிய நாட்டுப்புற மக்களின் வாழ்வியலை கோலங்களை சித்திரிக்கும் வகையில் எழுந்தன. இராமநாடகம், சீறாப்புராணம் மக்கள் உள்ளத்தைக் கவரும் வகையில் படைக்கப்பட்டன. இவைபற்றி பாரதி நன்கு அறிந்திருக்கும் பொது மக்கள் சார்பாக உணர்ச்சியை கிள்ளிவிடும் வகையில் இலக்கியங்களை படைத்துள்ளார்.

இவ்விலக்கியங்களை பின்பற்றியே மக்களது வாழ்க்கைமுறையும் சிறிது சிறிதாக மாற்றம் ஏற்படவும் தவறவில்லை. ஆரம்பகாலத்தில் தலைவன், தலைவி காதல் நிலைக்குள்ளாகி திருமணத்தில் நிறைவுறும் இவை நடைபெறாவிடின் மடல் ஏறல், வரைபாய்தல் போன்ற நிகழ்வு இடம் பெறும். இன்று வாழ்வியலில் அவை பின்பற்றப் படவில்லை அவ்வாறு பின்பற்றப்படின் ஒழுக்க சீர்கேடுகளே நடைபெறுகின்றன. அன்று அகம் என்றால் அன்பு இன்று வன்பு என்ற தன்மையை காணமுடிகிறது. கல்லிடெச்சார மாற்றம், சினிமா, நாடகம் போன்றவை வாழ்வியலை சீர்குலையச் செய்கின்றது. அன்று வாழ்வியலிலும் சரி இலக்கியங்களிலும் சரி தூயகாதல் ஒழுக்கமே பின்பற்றப்பட்டன.

உண்மையில் ஒவ்வொரு காலகட்டத்தின் படிமுறை வளர்ச்சிக்கேற்ப கவிஞர்களால் படைக்கப்பட்ட இலக்கியங்கள் தொகுக்கப்பட்டன. அவ்வகையில் கவிச்சக்கரவர்த்தி கம்பதாசனின் எண்ணம் கற்பனையை புதுமையை நிலைநிறுத்தி காவியத்தில் அகப்பண்பையும் ஊடறுத்து மிளிரச் செய்தான். இதன் பின்னர் வந்த பாரதி மக்களின் உணர்ச்சியை தூண்டும் வகையில் பாடல்களைப் பாடி உயர்வு தாழ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வின்றி அனைவரும் பாராட்டும் வகையில் கவியைப் புனைந்தான்.

இவை போன்று இன்று இலக்கியங்கள் பல்கிப் பெருகாவிட்டாலும் வாழ்வில் அகப் பண்பு தழுவிக் கொண்டே இருக்கின்றன.

**"காதலின் கூத்தையெல்லாம் – உன்றன்**
**கவியில் கண்டேனையா"**

என்ற படிமுறை வளர்ச்சிப் போக்கில் மக்கள் வாழ்வியலை படம் பிடித்துக் காட்டும் கண்ணாடிகளாக ஒவ்வொரு காலகட்ட இலக்கியங்கள் மிளிர்ந்த போதும் அகம் பற்றிய பண்பு ஊடுருவித்தாக்கி கிளைகளாக படர்ந்து செல்கின்றது என்றால் மிகையல்ல.

**உசாத்துணை நூல்கள்**


ஆசிரிய கைந்நூல்
தமிழ் இலக்கிய வரலாறு
நளவெண்பா


# நண்பர்கள்

நட்புக் கொடி உறவுகளே!
நம்பிக்கையின் பாசங்களே!
தொடர் கதையாய் இருக்கட்டும்
தொங்கிவிடா நட்பாக

பிரிந்து செல்லும் நண்பர்களே!
பின்னே திரும்பிப் பாருங்கள்
பிரிவின் வலி தெரியும்
என் இனிய நண்பர்களே!

எனைப் பிரிக்க முடியாத சொந்தங்களே ...
கூடிக் குலாவியிருந்த நாட்களை
மீட்டிப் பாருங்கள் அதன் இனிமையிலே
இன்னும் மேலோங்கும் எம் நட்பு

**ச. கவர்ணா**
தரம் 11A




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணிகத்துறையில் போக்குவரத்து

ச.சாம்ராஜ்
2013 வர்த்தகம்

போக்குவரத்து என்பது குறிப்பிட்ட ஓர் இடத்தில் இருந்து மற்றும் ஓர் இடத்திற்கு பொருட்களினையும் பண்டங்களினையும் இடம் நகர்த்தும் செயற்பாட்டினை குறிக்கும் போக்கு வரத்தின் வளர்ச்சிப் படிமுறைகளினை ஆராயின் இதன் வளர்ச்ச படிமுறையானது புதுமை மிக்க ஒன்றாகும். பொருட்களை சுமந்து செல்லுதல், மிருகங்கள் மது ஏறி சவாரி செய்தல் நீர் நிலை களின் போக்கிற்கு இணங்க அடித்து கொண்டு போகச் செய்தல் என ஆரம்ப கட்டத்தில் அமைந்த போக்குவரத்தானது படிப்படியாக வளர்ச்சி யடைந்து இன்று விண்வெளியில் சுற்றுலா எனும் அளவிற்கு வளர்ச்சி கண்டுள்ளது. இது போக்கு வரத்தின் இறுதிக் கட்டமாகாது. எதிர்காலத்தில் இதற்கப்பாலும் விருத்தியடைந்து செல்லும் என்பதில் ஐயமேதும் இல்லை.

**போக்குவரத்தின் வகைகள்**

போக்குவரத்தானது பிரதானமாக மூன்று வகைப்படுத்தப்படும்.

1. தரைப் போக்குவரத்து
2. நீர் போக்குவரத்து
3. ஆகாய போக்குவரத்து

இவற்றில் தரைப் போக்குவரத்தானது வீர போக்குவரத்து, புகையிரத போக்குவரத்து அல்லது உள்நாட்டு போக்குவரத்து, வெளிநாட்டு போக்குவரத்து எனவும்

நீர் போக்குவரத்தானது உள்நாட்டு நீர்நிலை போக்குவரத்து சர்வதேச நீர்நிலை போக்கு வரத்து எனவும்

ஆகாய போக்குவரத்தானது உள்நாட்டு போக்குவரத்து, வெளிநாட்டு போக்குவரத்து எனவும் வரையறை செய்யப்படுகின்றது. போக்கு வரத்து படிமுறையினை பின்வரும் வரைபடம் மூலம் புலப்படுத்துவோம்.




**தரைப் போக்குவரத்து**

தரைப் போக்குவரத்தானது, வீதிப் போக்கு வரத்து, புகையிரத போக்குவரத்து என இரு வகைப்படும்.

**வீதிப் போக்குவரத்து**

குறித்த ஓர் இடத்தில் இருந்து மற்றும் ஓர் இடத்திற்கு பொருட்களினையும் பயணிகளை யும் அமைக்கப்பட்ட வீதிகளின் ஊடாக போக்கு வரத்து சாதனங்களினைப் பயன்படுத்தி இடம் நகர்த்தும் செயற்பாடே வீதிப் போக்குவரத்து ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதிப் போக்குவரத்தினை மேற்கொள்வதனால் பயணத்தின் இறுதிவரை போக்குவரத்தினை மேற்கொள்ள முடிவதுடன் பயனிகளற்கும் பொருட்களிற்கும் ஏற்ற போக்குவரத்து சாதனத்தினை தெரிவு செய்யக்கூடியதாகவும், குறைந்தளவான செலவுடன் தாமதங்கள் இன்றி பயணம் செய்யக் கூடியதாக இருப்பது தெருப் போக்குவரத்தின் வரப்பிரசாதம் என்றே கூற வேண்டும்.

எவ்வாறாயினும் விபத்துக்கள் அதிகமாக நிகழ்வதும் ஒரே தடவையினில் அதிகளவான பொருட்களினையும் பயனிகளினையும் இடம் நகர்த்த முடியாது வாகனங்களின் எரிபொருள் இறக்குமதி நடவடிக்கைக்காக அதிகளவான அன்னிய செலாவணி வெளியேறுதல் வாகனப் புகையினால் சூழல் மாசடைதல் என்பன தெருப் போக்குவரத்தில் சுட்டிக் காட்ட வேண்டிய தீமைகளாக உள்ளன.

உங்களிற்கு தெரியுமா? இலங்கையில் அண்மைக்காலங்களில் நெஞ்சாலைகள், புதிய வீதிகள், மேம்பாலங்கள் என்பன அமைக்கப்படுதலும் புதிய குறியீடுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளமையும் அதிகளவான போக்குவரத்து பொலிசார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டமையும், புதிய சொகுசு வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளமையும் புதியவாகன இலக்கத் தகடுகள் அறிமுகப்படுத்தப்பட்டமையும் இலங்கை மத்திய போக்குவரத்து சபை மக்கள் மயமாக்கப்பட்டமையும் வீதிப் போக்குவரத்தினை மேம்படுத்துவதற்காக அரசு மேற்கொண்டுள்ள பிரயத்தனங்கள் ஆகும்.

**புகையிரத போக்குவரத்து**

புகையிரத போக்குவரத்து என்பது தரைமேல் விசேடமாக அமைக்கப்பட்ட இரண்டு தண்டவாளங்களின் மேல் புகையிரத சாதனங்களினைப் பயன்படுத்தி பொருட்களினையும் பயனிகளினையும் இடம் நகர்த்து செயற்பாட்டினையே குறிக்கின்றது.

இலங்கையின் புகையிரத போக்குவரத்தானது 1928ம் ஆண்டு முதல் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. புகையிரத சேவையினை இலங்கை புகையிரத நிலையங்கள் (SR) (SriLanka Railway) வழங்கி வருகின்றது.

இலங்கையில் ஆரம்ப காலகட்டத்தில் அளப்பரிய சேவை ஆற்றி வந்த புகையிரத சேவையானது தற்போது முழுப் பயணிகளில் 8% அளவும் முப் பண்டப் போக்குவரத்தால் 5% மான அளவு மாத்திரமே பங்களிப்பு செய்து வருகின்றது.

புகையிரத போக்குவரத்தின் வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக அமைவது தரைப் போக்குவரத்தின் போட்டியாகும். மற்றுமொரு காரணமாக அமைவது 30 வருடங்களாக நடைபெற்று வந்த உள்நாட்டு யுத்தமாகும். புகையிரத போக்குவரத்து பாதையின் அடிப்படையில் பார்க்கையில் புகையிரத சேவைக்கு 1445Km பாதை வலையமைப்பு மட்டுமே உள்ளது. அதிலும் புகையிரதப் போக்குவரத்து நிகழ்வது 1200Km தூரம் மட்டுமேயாகும். முன்குறிப்பிடப்பட்ட உள்நாட்டு யுத்தம் காரணமாக 245Km அளவான தூரம் பயணம் நிறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் புகையிரத சேவையை வளர்ச்சிப்படி நோக்கி கொண்டு வர வேண்டுமாயின் புதிய புகையிரதப் பாதைகளினை அமைத்தல் புகையிரத பாதையினை அகலமாக்கல் நவீனரக புகையிரத இன்ஜின்களை இறக்குமதி செய்தல் மீண்டும் வடக்கு கிழக்கு புகையிரத சேவையினை ஆரம்பித்தல் போன்ற நடவடிக்கைகளினை மேற்கொண்டால் மாத்திரமே இலங்கையில் புகையிரத சேவை மீட்சி பெறும் என்பது திண்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நீர் போக்குவரத்து**

நீர் போக்குவரத்து என்பது குறித்த ஓர் இடத்தில் இருந்து மற்றும் ஓர் இடத்திற்கு அல்லது குறித்த ஒரு துறைமுகத்தில் இருந்து இன்னும் ஓர் துறைமுகத்திற்கு பொருட்களையும் பயணிகளையும் நீர் நிலைகளின் ஊடாக அல்லது சமுத்திரங்களின் ஊடாக இடம் நகர்த்தும் செயற்பாட்டினையே குறக்கின்றது.

**நீர் போக்குவரத்தின் அனுகூலங்களாவன**

1. அதிகளவான பொருட்களையும் பயணிகளையும் கொண்டு செல்ல முடியும்.
2. குறைந்த செலவில் பயணங்களை மேற்கொள்ள கூடியதாக இருத்தல்
3. பாதை அமைத்தல், பராமரிப்பு செலவு இல்லை
4. பாரமான பொருட்களையும் கொண்டு செல்ல கூடியதாக இருத்தல்
5. பாரமான பொருட்களையும் கொண்டு செல்ல கூடியதாக இருத்தல்
6. பல்வேறு வகையான பொருட்களை கொண்டு செல்வதற்கு உதவியாக இருத்தல்

**நீர் போக்குவரத்தின் பிரதி கூலங்களாவன**

1. ஒப்பீட்டு ரீதியில் வேகம் குறைவானது
2. நினைத்த இடத்தில் இருந்து பிரயாணங்களை மேற்கொள்ள முடியாது
3. விபத்திற்குள்ளாகும் பட்சத்தில் சேதம் அதிகமானது
4. சீரற்ற காலநிலை காணப்படும் இடத்து பயணத்தினை மேற்கொள்ள முடியாது
5. பராமரிப்பு செலவு அல்லது திருத்தச் செலவு அதிகமானது

**ஆகாய போக்குவரத்து**

வான் ஊர்திகளை பயன்படுத்தி குறித்த ஓர் இடத்தில் இருந்து மற்றுமோர் இடத்திற்கு பொருட்களினையும் பண்டங்களினையும் இடம் நகர்த்துகின்ற செயற்பாட்டையே குறிக்கின்றது. வான் போக்குவரத்தானது உள்நாட்டு வான் போக்குவரத்து சர்வதேச வான் போக்குவரத்து என இருவகைப்படும்.

வான் போக்குவரத்தின் அனுகூலங்களாக மிக வேகமாக பிரயாணங்களை மேற்கொள்ள கூடியதாக இருத்தல்.

- ஆகாய மார்க்க நிர்மான செலவுகள் காணப்படுவது இல்லை.

1. அவசர சேவை / பழுதடைய கூடிய பொருட்கள் கொண்டு செல்ல கூடியதாக இருத்தல்
2. சர்வதேச நாடுகளுடன் தொடர்பு கொள்ள கூடியதாக இருத்தல்

போன்றவற்றனை குறிப்பிடலாம் வான் போக்குவரத்தின் பிரதிகூலங்களாவன

1. அதிக பாரமான பொருட்களை கொண்டு செல்ல முடியாது
2. விமானங்களை கொள்வனவு செய்வதற்கும் ஒரு பாதைகள் அமைப்பதற்கும் அதிகளவான செலவு ஏற்படுதல்
3. ஒப்பீடு ரீதியில் கட்டணம் உயர்வாக காணப்படல்.
4. இறுதி ஒப்படைப்பு தன்மை அற்றது

போன்றவற்றினை குறிப்பிட முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணிகத் தரவுகளைப் பகுப்பாய்வு செய்தல்

தி. பிரசாந்
2013 வர்த்தகம்

புள்ளிவிபரத் தரவுகளை சேகரித்து, ஒழுங்கு படுத்திய பின் அதனை பகுப்பாய்விற்கு உட்படுத்தல் வேண்டும். வணிகத்தரவுகளை பகுப்பாய்வு செய்யும் நடவடிக்கையானது

1. மைநாட்டம்
2. பிரிகை / விலகல்
3. ஓராயம்
4. குடிலம்

போன்றவற்றால் பகுப்பாய்வு செய்யப் படுகின்றது.

**மையநாட்டம்**

சகல பெறுமானங்களையும் குறிக்கும் எண் பரம்பல் ஒன்றின் மையத்தை வகைக்குறிக்கும் ஒரு தனிப்பெறுமானம் மைநாட்டம் எனப்படும். இவ் மையநாட்ட அளவீடுகள் பின்வரும் மூன்று வகைப்படும்.

1. இடை (Mean)
2. இடையம் (Median)
3. ஆகாரம் (Mode) போன்றவையாகும்.

**பிரிகை / விலகல்**

மையநாட்ட அளவைகள் தவிர்ந்த தரப்பட்ட பரம்பல் ஒன்றின் சரியானதும், முழுமையானது மான விளக்கத்தைப் பெறுவதற்கு பயன்படுத்தப் படுவது பிரிகை / விலகல் எனப்படும். இவை பின்வருமாறு வகைப்படுத்தப்படும்.

1. வீச்சு Range
2. காலணைவிலகல் Qualite Deviation
3. இடைவிலகல் Mean Deviation
4. நியமவிலகல் Standard Deviation

**ஓராயம்**

மீடிறன் பரம்பல் ஒன்று அதன் இடையி லிருந்து சமமாக இரு பக்கங்களும் பிரிந்து செல்லுமாயின் அது சமச்சீர் பரம்பல் எனப்படும். பரம்பல் ஒன்று இவ் சமச்சீர் தன்மையிலிருந்து எவ்வளவு தூரம் விலகிச் செல்கின்றது என்பதை விளக்குவதே ஓராயம் ஆகும். இவை

1. வலது பக்க ஓராய்வு / நேர் ஓராயம்
2. இடதுபக்க ஓராய்வு / எதிர் ஓராயம்
3. சமச்சீரான ஓராயம்

என மூன்று வகையாகப் பிரிபடும்

**குடிலம்**

சமச்சீரான பரம்பல் ஒன்றின் தட்டைத் தன் மையை புள்ளி விபரரீதியாக வெளிப்படுத்துவ தற்கு பயன்படுத்தப்படுவது குடிலம் ஆகும். இவை

1. உயிர்குடிலம்
2. தாழ்குடிலம்
3. சமகுடிலம்

என மூன்று வகைப்படும்.

**மைநாட்டம், பிரிகை, ஓராயம், குடிலம் என்பவற்றைக் கணித்தல்**

மையநாட்டம், பிரிகை, ஓராயம், குடிலம் என்பவற்றை கீழ்வரும் உதாரணம் மூலம் கணிப்பீட்டுக் கொள்வோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| X | CI | F | D | U | FU | U2 | FU2 | CF |
|---|---|---|---|---|---|---|---|---|
| 15 | 10-20 | 05 | -30 | -3 | -15 | 09 | 45 | 05 |
| 25 | 20-30 | 10 | -20 | -2 | -20 | 04 | 40 | 15 |
| 35 | 30-40 | 20 | -10 | -1 | -20 | 01 | 20 | 35 |
| 45 | 40-50 | 30 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 55 | 50-60 | 20 | 10 | 1 | 20 | 01 | 20 | 85 |
| 65 | 60-70 | 10 | 20 | 2 | 20 | 04 | 40 | 95 |
| 75 | 70-80 | 05 | 30 | 3 | 15 | 09 | 45 | 100 |
| | | | | | 0 | | 210 | |

**மையநாட்ட அளவீடுகள்**

இடை $x = A + \frac{\varepsilon fu}{\varepsilon f} x\ c$

$= 45 + \frac{0}{100} x\ 10$

$= 45$

ஆகார வகுப்பு $= 40\text{-}50$

ஆகாரம் $= L_1 + \frac{\Delta_1}{\Delta_1 + \Delta_2} x\ c$

Mode

$= 40 + \frac{10}{10+10} x\ 10$

$= 40 + \frac{10}{20} x\ 10$

$= 40+5$

$= 45$

இடையவகுப்பு $= \frac{n}{2}$

$= \frac{100}{2}$

= 50வது வகுப்பு

$= 45\text{-}50$

இடையம் $= L_1 + \left[\frac{\frac{n}{2} - cf}{Fm}\right] x\ c$

$= 40 + \left[\frac{\frac{100}{2} - 35}{30}\right] x\ 10$

$= 40 + \frac{15}{30} x\ 10$

$= 40+5$

$= 45$

பிரிகை

நியமவிலகல் ρ $= \sqrt{\frac{\varepsilon fu^2}{\varepsilon f} - \left[\frac{\varepsilon fu}{\varepsilon f}\right]^2} x\ c$

S.D

$= \sqrt{\frac{210^2}{100} - \frac{0^2}{100^2}}\ x\ 10$

$= \sqrt{441 - 0}\ \ x\ 10$

$= 21 x 10$

$= 210$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலணை விலகல்

முதலாம் காலணை நிலை $= \frac{n}{4}$

$= \frac{100}{4}$

= 25வது வகுப்பு

$= 30\text{-}40$

$\theta_1 = L_1 + \left[\frac{\frac{n}{4} - cf}{F\theta_1}\right] x\ c$

$= 30 + \left[\frac{\frac{100}{4} - 15}{20}\right] x\ 10$

$= 30 + \frac{100}{20}$

$= 30 + 5$

$= 35$

மூன்றாம் காலணை நிலை $= \frac{3n}{4}$

$= \frac{3 x 100}{4}$

= 75வது வகுப்பு

$= 50\text{-}60$

$\theta_3 = L_1 + \left[\frac{\frac{3n}{4} - cf}{F\theta_3}\right] x\ c$

$= 50 + \left[\frac{75\text{-}65}{20}\right] x\ 10$

$= 50 + \frac{100}{20}$

$= 50 + 5$

$= 55$

காலணை விலகல் $= \frac{\theta_3 - \theta_1}{2}$

Q.D

$= \frac{55-35}{2}$

$= \frac{20}{2}$

$= 10$

50வது சதமணைநிலை $= 50x \frac{n}{100}$

$= 50x \frac{100}{100}$

= 50வது வகுப்பு

$= 40\text{-}50$

50வது சதமனை

P50 $= L_1 + \left[\frac{\frac{50n}{100} - cf}{F_{p50}}\right] x\ c$

$= 40 + \frac{[50\text{-}35]}{30} x\ 10$

$= 40+5$

$= 45$

90வது சதமணைநிலை $= 90x \frac{n}{100}$

$= 90x \frac{100}{100}$

= 90வது வகுப்பு

$= 60\text{-}70$

90வது சதமனை

P90 $= L_1 + \left[\frac{\frac{90n}{100} - cf}{F_{p90}}\right] x\ c$

$= 60 + \frac{[90\text{-}85]}{10} x\ 10$

$= 60+5$

$= 65$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓராயம்

$$SKB = \frac{\theta_3+\theta_1+2\theta_2}{\theta_3-\theta_1}$$

$$= \frac{55+35-(2x45)}{55-35}$$

$$= \frac{90-90}{90}$$

$$= 0$$

குடிலம்

$$K = \frac{Q.D}{P_{90}-P_{10}}$$

$$= \frac{10}{65-45}$$

$$= \frac{10}{20}$$

$$= 0.5$$

மேற்காட்டப்பட்ட கணிப்பீடுகளின் அடிப்படையிலேயே புள்ளிவிபரவியலானது வணிகத்தரவுகளை பகுப்பாய்வு செய்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிகிரியா ஓவியங்களும் சுவர்க் கவிகளும்

ச.பிரியா
2013 கலை

சிகிரியா குன்றில் காணப்படும் பளிங்குச் சுவர்களில் பல சுவர்களில், பல சுவர் கவிகள் பொறிக்கப்பட்டுள்ளன பல வருடங்களுக்கு முன்பு இந்த ஓவியங்களை பார்க்கச் சென்றவர்கள் பாறைகளில் அழியாத வண்ணம் கவிகளை பொறித்துள்ளன இவர்கள் இந்த ஓவியங்கள் தமக்கு ஏற்படுத்திய மனப்பதிவினை கவிதைகளிலே காட்ட முற்பட்டிருக்கின்றார்கள். இங்கு ஏராளமான சுவர்களில் கவிதைகள் எழுதப்பட்டுள்ளன இதில் ஒரு கலைஞன் தனது கவிதையில் அசோகபூவை ஏந்தி உள்ள பெண்கள் பற்றி குறிப்பிடுகின்றார். மற்றும் ஒரு கலைஞன் சிகிரியாப் பெண்களை பற்றி "வாஷியை கண்ட அன்னம் போல...." எனும் வரியில் நன்கு மலர்ந்த தாமரைகளை கண்ட வண்டு போல அவன் சொல்லிய செய்தியை நன்கு கேட்டேன் போதலித்த என் நெஞ்சு ஆறுதல் அடைந்தது" என்று வடித்துள்ளார்.

சில கவிகள் சிகிரியா பெண்களை பல்வேறு மலர்களுக்கு ஒப்பிட்டு கூறுகின்றனர் குறிப்பாக தங்க நிறப் பெண்களை மாலையில் பூக்கும் மஞ்சள் நிஷப் பீர்க்கு பூவுக்கும் இருள் நிறப் பெண்களை நீல கரும் பூவுக்கும் ஒப்பிட்டுள்ளனர் இதில் சில கவிவரிகளை பார்ப்போமானால்

**காதலர் பிரிந்து அவர் துன்புற்று**
**துயரும் நன் மலர் நிலாம்பல்**
**நீள்விழி மங்கையரை தீயல்**
**மலை சாரலில் வந்து கண்டேன்**

என்று வடித்துள்ளனர்.

சில கவிகள் அவர்களுடைய ஆடை ஆபரணங்களை வர்ணிப்பதாக அமைந்துள்ளது இதில் உ-ம் ஆக ஒரு கவியை பார்ப்போம்.

**மலைச் சாரலில் மாணவிதியால்**
**என் மனதில் அலை சினமுட்ட**
**வலம் வந்தேன் அவள் கையில்**
**விலை முத்து பல கோர்த்த**
**வில்லாரம் தொங்க சிலை**
**ஒத்த விழிகாட்டி எனை**
**ஜெத்தாள் என செய்வேன்**

இவ்வாறு பல கவிதைகள் சிகிரியாப் பெண்களின் சிறப்பினை மென்மேலும் உயர்த்திக் காட்டுவதாக அமைகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் விரும்பும் கவிஞர் பாரதிதாசன்

ஞா. பகீர்தா
2014 கலை

உலகச் செம்மொழிகளில் உயர்தனிச் சிறப்புடையது நம் தமிழ்மொழி அமிழ்தனைய தமிழ் மொழியில் காலத்தால் அழியாத கவிதைமழை பொழிந்த கவிஞர் பலர் உளர். அவர்களுள் புதுவை தந்த புரட்சிக்குயில் பாவேந்தர் பாரதிதாசனும் ஒருவர். தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என்று முழக்கமிட்ட புரட்சிக் கவிஞர் அவர் அவரே நான் விரும்பும் நற்றமிழ்க் கவிஞராவார்.

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாட்டைப் பெருமைப் படுத்திய பாரதியின் எண்ணங்களைத் தம் இதயத்தில் ஏற்றியவர். அதன் பேறாகத் தம் இயற் பெயரான கனகசபை சுப்புரத்தினம் என்பதை விடுத்துப் பாரதிதாசனாக மாறியவர் பாரதி மீது கொண்ட பாசமே அவர் பாரதிதாசன் எனப் பெயர் சூட்டிக்கொள்ளக் காரணமாகும்.

பாரதிதாசன் தமிழே வடிவானவர். தமிழின் உயர்வுக்குப் பாடியவர் துறை தோறும் தமிழ் வளம்பெற, நலம்பெற வழி காட்டியவர். தமிழை உயிராய், உணர்வாய், உழைப்பின் விளை வாய்க் கண்டுணர்ந்து கவிதை பாடியவர். பாரதியின் தமிழிலும் எளிய தமிழைக் கவிதைக்குப் பயன்படுத்தியதன் மூலம் சாதாரண மக்களும் கவிதையின் சுவையறிய வழி செய்தவர் மக்கள் தமிழில் மாண்புறு கவிதைகள் பாடியவர்.

தமிழ்ச் சொல்லின் உயர்வினை ஆட்சியில் கொணர்ந்தார். தமிழ் வழிபாடு செய்தார். வழிபடத் தமிழ் அடியார் குழுவினையும் உருவாக்கினார். வாழையடி வாழையெனத் தமிழ்க் கவிஞர் அணி இன்று பெருகுதென்றால் அப்பெருமை பாவேந்தர் பாரதிதாசனாருக்கே உரியதாகும்.

பாவேந்தரின் சொல்லும் சொல்லாட்சியும் நடையும் உத்திகளும் உவமைகளும் உருவகங்களும் அவருக்குப் பின் தோன்றிய கவிஞர்கள் அனைவரையும் பாதித்துள்ளன என்றால் அது மிகையல்ல. பாவேந்தரின் கவிதைப் பயணம் நெடிது, உயரியது. அவருடைய தமிழ்ப் பணிக்கு ஈடில்லை. பாரதிதாசன் தமிழுக்குப் புதிய வழி காட்டினார். ஒளி கூட்டினார். அவர் காட்டிய வழியில் புத்தொனியும் புத்துணர்வும் பெற்றுப் புதியன படைத்து வளர்கிறது தமிழுலகம். பாரதி நாட்டு விடுதலைக்கு உரமூட்டினார். பாரதிதாசனோ சமூகவிடுதலை, பொருளாதார விடுதலை முதலியவற்றுக்கு அழுத்தம் கொடுத்துப் பாடினார்.

அவர் படைத்த கவிதைகள் அழியா அழகுடையன. அழகின் சிரிப்பு, குடும்ப விளக்கு, பாண்டியன் பரிசு, சேரதாண்டவம், இளைஞர் இலக்கியம், பசிராந்தையார், தேனருவி, எதிர்பாராத முத்தம், குறிஞ்சித்திரட்டு, பாரதிதாசன் கவிதைகள் ஆதியாம் நூல்கள் அவர்தம் புகழ் பரப்பும் படைப்புக்கள் பாவேந்தர் படைப்புக்கள் அனைத்தையும் நாட்டுமை ஆக்கியுள்ளது. தமிழக அரசு இதன் மூலம் பட்டிதொட்டி எங்கும் பாவேந்தரின் கவிதைகள் பரவி வருகிறது. பதிப்பகங்கள் பல அவரது படைப்புக்களைப் போட்டி போட்டுக் கொண்டு வெளியிட்டு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரைப்படங்களிலும் அவரது பாடல்கள் பல இடம்பெற்றுள்ளன. கவிதை உலகில் மட்டுமன்றித் திரையுலகிலும் அவர் பெயர் பொறித்துள்ளார். பாவேந்தர் தமிழ் வளர்ச்சியே கருத்தாகக் கொண்டவர். தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு நாம் செய்ய வேண்டிய பணிகளைக் குறிப்பிடும் போது தமிழில் நூல்கள் பல எழுதப்பட வேண்டும். எளிய நடையில் அவை அமைதல் வேண்டும். புதிய சிந்தனைகள் தமிழில் உருவாக வேண்டும். புதிய தமிழ்ச் சொற்களை உருவாக்கவும் முன்வர வேண்டும் என்கிறார். இவையே கவிஞரின் இலட்சிய வேட்கையாகவும் மிளிர்கின்றது.

**"எளியநடையில் தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும்**
**இலக்கண நூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்**
**வெளியுலகில் சிந்தனையில் புதிது புதிதாக**
**விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெல்லாங் கண்டு**
**தெளிவுறுத்தும் படங்களொடு சுவடியெல்லாம் செய்து**
**செந்தமிழைச் செந்தமிழாய்ச் செய்வதும் வேண்டும்**
**எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லையென்றால்**
**இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்"**

என்னும் கவிதை நமது கடமையினை நன்கு வலியுறுத்துகிறது. ஒரு தமிழனுக்கு படிப்பில்லாமல் போகுமானால் அதற்காக அனைத்துத் தமிழர்களும் வெட்கித் தலைகுனிய வேண்டும் என தமக்கு இடித்துரைக்கும் கவிஞரின் கூற்று சிந்தனைக்குரியது மேலும் தமிழ் வளர்ச்சிக்கான செயல்திட்டத்தின் இறுதியில் அனைத்துத் தமிழர்களும் கல்வியறிவு படைத்தவர்களாகத் திகழ வேண்டும்என விரும்புவதையும்காணமுடிகின்றது.

பத்திரிகையின் சிறப்பினை எடுத்துக்கூற வந்த கவிஞர் அவற்றின் கடமையினையும் நன்கு உணர்த்துவதைப் பின்வரும் கவிதையிற் காணலாம்.

**"அறிஞர் தம் இதயஓடை**
**ஆழநீர் தன்னை மொண்டு**
**செறிதரும் மக்கள் எண்ணம்**
**செழித்திட ஊற்றி ஊற்றக்**
**குறுகிய செயல்கள் தீர்த்துக்**
**குவலயம் ஓங்கச் செய்வாய்**
**நறுமண இதழ்ப் பெண்ணே உன்**
**நலம் காணார் ஞாலம் காணார்"**

பத்திரிகையை ஒரு பெண்ணுக்கு உவமித்துச் சொல்கின்ற கவிஞரின் கவித்திறன் போற்றுதற்குரியது.

சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபாடு கொண்ட பாவேந்தர் பாடிய உணர்ச்சிகரமான பாடல்கள் படிப்போர் உள்ளங்களை உணர்ச்சி வசப்படுத்தும் சக்தி படைத்தன.

**"புதியதோர் உலகு செய்வோம், கெட்ட**
**போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்"**

**"கொலை வாளினை எடடா மிகு**
**கொடியோர் செயல் அறவே ..."**

**"தென்திசையைப் பார்க்கின்றேன் என் சொல்வேன்**
**என்தன் சிந்தையெல்லாம் தோள்களெல்லாம் பூரிக்கு தடடா**
**அன்றந்த இலங்கைதனை ஆண்ட மறத்தமிழன்**
**ஐயிரண்டு திசைமுகத்தும் தன் புகழை வைத்தோன்.."**

போன்ற பாடல்கள் தமிழ் உணர்வையும், தன் மானத்தையும் நம் இதயங்களில் என்றும் எழுப்பும் சக்தி மிக்கனவாகத் திகழ்கின்றன. இத்தகைய பாடல்களாலேயே பாவேந்தரை நான் பெரிதும் விரும்புகின்றேன். சுருங்கக் கூறின் கவிஞரின் படைப்புக்கள் யாவும் தமிழுணர்வு, தமிழின உணர்வு, சமூக விடுதலை, மூடப்பழக்க வழக்கங்களைச் சாடும் தீவிரம் ஆகியனவற்றைப் பிரதிபலிப்பனவாகவே விளங்குகின்றன.

கவிஞரின் படைப்பாற்றலை, படைப்புக்கூறுகளை, படைப்பு நுட்பங்களை நாம் பலமுறை படித்துணர்ந்திட வேண்டும். பாவேந்தரின் கவிதைகள் தமிழர்தம் இதயங்கள் எங்கும் அவர்தம் இல்லங்கள் எங்கும் இடம் பெற வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆதி மனதன் தமிழன்தான்
அவன் மொழிந்ததும் செந்தமிழ்த்தேன்
மூதறிஞர் ஒழுக்க நெறிகள்
முதலிற் கண்டதும் தமிழகம்தான்
காதல் வாழ்வும் புகழ் வாழ்வும்
காட்டியதும் தமிழ் நான்மறைதான்
ஓதும் அந்தத் தமிழ் நான்மறை
உலகம் போற்றும் முத்தமிழ்தான்"

என்று முழங்கிய பாவேந்தரின் பெயர் நற்றமிழ் உள்ளவரை நானிலமெங்கும் நன்று நிலைக்கும் என்பது திண்ணம். கவிஞரின் வழி நின்று கன்னித்தமிழ் வளர தமிழினம் தலைநிமிர உழைத்திடல் தமது தலையாய கடனாகும்.

பாவேந்தர் நாமம் வாழ்க! தமிழ் வாழ்க!!

# அதிசயமான உண்மைகள்

ச. விபுசாரணி
தரம் 5A

- காகம் ஒரு மணித்தியாலத்திற்கு 45 மைல்கள் வேகத்தில் பறக்கும்
- ஒரு சாதாரண பசு அதன் வாழ்நாளில் 2 லட்சம் குவளை பால் கொடுக்கின்றது
- டொல் ஃபின்கள் ஒரு கண்ணை மட்டும் மூடிக் கொண்டு தூங்கும்
- ஜெலி மீனில் 95 சதவீதம் நீர்தான் உள்ளது.
- மனிதனுக்கு அடுத்தபடியாக சிந்திக்கும் திறன் உள்ள பிராணி சிம்பன்சி குரங்கு தான்
- மரங்கொத்தியால் நொடி ஒன்றிற்கு 20 தடவைகள் மரத்தை கொத்த முடியும்
- ஓர் ஒட்டகத்தை விடவும் அதிக நாட்களுக்கு நீரின்றி எலியால் வாழ முடியும்
- பெண்குயின்களில் பெண் இனம் முட்டை இடும் பணியைச் செய்கிறது. ஆண் இனம் தான் அடைகாத்து குஞ்சு பொரிக்கின்றது.
- உலகிலேயே மிகச்சிறிய பாலூட்டி தாய்லாந்தில் காணப்படும் பம்பல் பீ (Bumblebee bat) என்ற வௌவால் இனமாகும்.
- நீலத் திமிங்கலம் எழுப்புகின்ற ஒரு வித விசில் ஒலி விலங்குகளை எழுப்பும் ஒலிகளிலெயே மிகவும் பலமானதாகும் அதன் அளவு 188 டெசிஃபல்கள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்ந்து நில்லுங்கள்

செல்வி ந. கவிஅரசி
ஆரம்பக்கல்வி ஆசிரியர்

வாழ்க்கை என்ற கடிகாரத்திற்கு ஒருமுறை தான் சாவி கொடுக்கப்படுகிறது. அந்த கடிகாரத் தின் முட்கள் விரைவாக நின்று விடுமோ? அல்லது நீண்டகாலம் கழித்து நின்று விடுமோ? என்பதை யாரும் கூற முடியாது. இப்போது இருக்கும் காலம் உங்களுக்குச் சொந்தமானது. எனவே நீங்கள் மனஉறுதியோடு வாழ்க்கை நடத்துங்கள். அன்பு செலுத்துங்கள், உழைத்துக் கொண்டிருங்கள்.

"உங்கள் எண்ணங்களிலும் செயற்பாடுகளி லும் உயர்ந்து நில்லுங்கள்"

எப்போதும் உங்கள் ஆளுமையை உயர்த்திக் கொள்ளுங்கள்.

உடலளவிலும், மனிதளவிலும், ஆன்மீக அளவிலும் உயர்ந்து நில்லுங்கள்.

உடலால் நிமிர்ந்து நிற்கக் கற்றுக் கொண்டு விட்டால் தன்னம்பிக்கை ஏற்படும். உடலால் நிமிர்ந்து நிற்கும் போது ஆளுமையின் கவர்ச்சி கூடுதலாகிறது.

மனிதளவில் உயர்ந்து நிற்கக் கற்றுக் கொள்ள வேண்டும் எப்போது முதல் தரமாக இருங்கள். எப்போதும் முதல் தரமாகச் சிந்தியுங் கள். இரண்டாம் தர எண்ணங்களால் உங்கள் மூளையை குழப்பிக் கொள்ளாதீர்கள். "ஒருவன் எதை ஆழமாகச் சிந்திக்கின்றானோ அதுவே யாகிறான்" உங்களுடைய அழுத்தமான எண் ணங்களின் அளவிற்கே நீங்கள் பெரிதாகவோ, சிறப்பாகவோ வெற்றி பெறலாம்.

"நீங்கள் கேட்பதை விட வாழ்க்கை உங்களு க்கு அதிகமாக எதையும் தரப்போவதில்லை" எனவே நிகழ்காலத்தில் சிக்கி நின்று விடா தீர்கள். உங்கள் எதிர்காலத்தைப் பற்றி பெரி தாகச் சிந்தியுங்கள், கற்றுக் கொண்டதை ஆக்க பூர்வமாகச் சிந்தியுங்கள்.

**ஆன்மீக வழியில் உயர்ந்து நில்லுங்கள்**

ஒழுக்கத்தால், ஆன்மீக அளவில் உயரம் இல்லாத எவரும் மற்றவர்களின் மதிப்பீட்டில், ஏன்? தங்களுடைய மனச்சாட்சிப் படியே உயர் ந்து நிற்க முடியாது. ஆன்மீக வழியில் உயர் ந்து நிற்கும் போது அது உங்களை உயர்த்துவ தோடு அமைதியான உறுதியினை உங்களுக்கு அழிக்கி றது. வாழ்க்கையின் ஏற்றத் தாழ்வுகள் உங்களைப் பாதிக்காத நிலையினைப் பெற்று விடுவீர்கள். எனவே வாழ்க்கைப் பயணத்தை வெற்றிகரமா கவும், துணிச்சலுடன் மேற்கொள்வதற்கும் உங் கள் எண்ணங்களிலும் செயல்களிலும் உயர்ந்து நில்லுங்கள்.

எதையும் தாங்குகின்ற வலிமை எமக்கு அளிக்கப்பட்டி ருக்கிறது. இழப்புக்கள் ஏற்படும் போது முதலில், இழப்பை ஒப்புக் கொள்ளுங் கள். பின் ஏற்றுக் கொள்ளுங்கள். அதை அனுசரி த்து போங்கள், அப்போது தான் இழப்பிலிருந்து மீண்டு வரலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**“விதி ஒரு கதவை மூடுகின்ற போது, நம்பிக்கை மற்றொரு கதவை திறந்து வைக்கிறது என்பது வாழ்க்கையின் நியதி”**

திறந்துள்ள நம்பிக்கை கதவிற்குப் பின்னால் எது அழைக்கிறதோ அந்தச் செயலில் உங்களை முழுமையாக ஈடுபடுத்துங்கள்.

“உங்களுக்கு எதிரி இருக்கிறானா? அவனைப் பார்த்துச் சிரியுங்கள். அவனைச் செயல் இழக்கச் செய்வதற்கு இதைவிட பெரிய ஆயுதம் வேறு எதுவுமில்லை”

“நீங்கள் எப்படிப் பேசுகறீர்கள்? என்ன சொல்லுகிறீர்கள்? யாருக்குச் அதைச் சொல்லு கிறீர்கள்? எப்போது? என்பதெல்லாம் உங்கள் வெற்றித் தருணங்களை தீர்மானிக்கின்ற விடயங்கள் ஆகும்.

“நம்மால் மாற்ற முடியாததையும், புரிந்து கொள்ள முடியாததையும் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்” அப்படிச் செய்வதன் மூலம் எல்லா கஷ்டங்களையும் தாங்கி முன்னேற முடியும். எனவே தவிர்க்க முடியாததை ஏற்றுக் கொண்டு முன்னேறி உயர்ந்து நில்லுங்கள்.

# சிந்தனைத் துளிகள்

1. சிந்திக்காமல் கற்பது வீணான முயற்சி
2. நல்லது ஒன்றே அறிவு தீயது ஒன்றே அறிவின்மை
3. அடக்கம் தான் வெற்றிக்கு சாட்சி
4. இளமையில் கற்கிறோம் முதுமையில் புரிந்து கொள்கிறோம்
5. விழுவது வெட்கமல்ல விழுந்து கிடப்பது தான் வெட்கம்
6. அன்புக்கும் அறிவுக்கும் எல்லையே இல்லை
7. நண்பனே அடிக்கடி பரிசீலிக்கப்படுவான்
8. இன்பங்களை மாற்று ஆனால் நண்பர்களை மாற்றாதே
9. எந்த மொழியையும் வெறுப்பதன் மூலம் தாய்மொழிக்கு நன்மை செய்துவிட முடியாது
10. படிப்பதற்கு நேரம் எடுத்துக்கொள். நேரத்தின் அவசியம் புரியும்
11. பணம் வைத்திருந்தால் பயம் இல்லாதிருத்தல் கடினம்
12. சுடர் விளக்கானாலும் தூண்டு கோல் வேண்டும்
13. ஒருவனது அறிவை அறிய அவனது பேச்சே அளவுகோல்
14. முயற்சி இல்லாதவன் முன்னேற முடியாது
15. ஒரு கெட்ட நண்பன் நூறு எதிரிகளுக்கு சமன்

ம. ஜெசீதா
தரம் 11A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் கற்றலின் தூண்டியாகும்

திருமதி. கு. ஜெயலலிதா
ஆரம்பக்கல்வி ஆசிரியர்

**"தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்கு கற்றனைத்தூறும் அறிவு"** என்ற வள்ளுவர் வாக்குக்கேற்ப அறிவானது கற்றிடக் கற்றிட மேன்மேலும் ஊற்றெடுக்கும். கல்வியை இடை விடாது கற்றல் வேண்டும்.

எனவே கல்வியை விருப்புடனும் ஆர்வத்துட னும் கற்பதற்கு தூண்டும் செயற்பாடுகள் பல உள்ளன. ஒவ்வொருவருடைய ஆற்றலின் தன் மைகள் வேறுபட்டன. எனவே இவற்றை அவர வருக்கு ஏற்றனவாக மாற்றிக் கொள்ளும் யுத்தி களை ஏற்படுத்த வேண்டும். கற்பதற்கான தூண்டு கையில் "இணைபாடவிதானச் செயற்பாடுகள் மிகவும் இன்றியமையாததாகும்".

இவற்றுள் விளையாட்டு, அழகியற் செயற் பாடுகளான ஆடல், பாடல், நாடகம், சித்திரம், மொழி சார்ந்த செயற்பாடுகளில் (பேச்சு, கட்டுரை, கவிதை போன்றவை) மாணவர்கள் பங்குபற்று வதற்கான மனப்பாங்கையும், விருப்பத்தையும் ஏற்படுத்துவது ஆசான்களின் கடமையாகும். இத்தகைய செயற்பாடுகளுக்கு மாணவரை வலுக் கட்டாயமாக ஈடுபடுத்துவது என்பது இயலாத காரியம்.

எனவே "இச்செயற்பாடுகள் எங்கள் உயர்வு க்கு ஊன்றுகோலாகும்; தனியே புத்தகப் பூச்சி யாக இருப்பதாலும் பரீட்சைத் தாள்களில் திற மையைக் காட்டுவதாலும் மட்டும் உயர்வடைய முடியாது.

ஒரு மாணவன் எவ்வளவிற்கு ஏனைய நிகழ்வுகளிலும் பங்கு கொள்கிறானோ அவ் வளவிற்கு பாடசாலையிலும் சமூகத்திலும் பெயர் விளங்க வாய்ப்புண்டு. அவனுக்கோர் கணிப்பும் உண்டு. அவற்றினூடாக பல அனுபவங்களைப் பெற்றுக் கொள்ள வாய்ப்புண்டு. அனுபவமானது ஆக்கத்திற்கு வழிவகுக்கும் மேலும் அறிய வேண்டும் என்ற ஆற்றலைத் தூண்டும் அதனால் கற்றலையும் தூண்டும்.

**ஆற்றுப்படுத்தலும் மகிழ்வூட்டும் செயற்பாடும்**

தற்போதய நிலையில் எம் மாணவர்கள் பலதரப்பட்ட பாதிப்புகளுக்கும் பயத்திற்கும் உள் ளாக்கப்பட்ட பலவற்றை இழந்த நிலையில் அதிக மான மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளில் பின்தங்கியுள்ளனர். இவர்களை ஆற்றுப்படுத்தி மகிழ்வூட்டி கற்றலை ஊக்குவிப்பதற்கு இணை பாடவிதானச் செயற்பாடுகள் உறுதுணையாக வுள்ளன. இச்செயற்பாட்டிற்காக மாணவர்களைத் தெரிவு செய்து பாடசாலை மட்டங்களிலும் கோட் டம், வலயம், மாகாணம் என்ற மட்டங்களிற்கும் மாணவர்கள் செல்கிறார்கள்.

எனினும் இச்செயற்பாடுகளில் பங்கு பற்றும் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டவர்களே தொடர்ந்து வருகிறார்கள். இவற்றுள் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தலாமா என்ற நோக்குடன் இக்கருத்தை முன் வைக்கிறேன்.

நாம் போட்டிகளுக்காக தெரிவு செய்யப்படும் மாணவர்கள் கற்றலில் பின் தங்கியவர்களாக இருப்பது மேலானது அதற்காக கற்றலில் பின் தங்கியுள்ளவர்களை பங்குபற்றச் செய்வது கடினம். எனினும் மிகவும் அர்ப்பணிப்புடன் அவர் களை பங்குபற்றத் தூண்டுவதற்கான அறிவுரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை வழங்கி, பெற்றோருக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தி போட்டி மனப்பாங்கை வளர்த்து இயன்றவரை பரிசுகளையும், பாராட்டையும் வழங்கி வர எத்தனித்தல் நன்று. அவ்வாறு சிறிய சிறிய போட்டிகளைப் பாடசாலை மட்டத்தில் வைத்து பாராட்டுக்களை வழங்கி வருவதால் அவர்களை கற்றலுக்கு தூண்டலாம் என்பது எனது அனுபவ மாகும்.

மிகவும் பின்னடைவான மாணவர்கள் இணைபாட விதானச் செயற்பாடுகளில் பங்கு கொண்டு செயற்பட்டு பரிசில்கள் பாராட்டுக்களைப் பெற்றுக் கொண்டு வரும் பொழுது கற்றலில் ஆர்வம் காட்ட முற்படுவார்கள். அவ்வாறு முன் னேறிய மாணவர்கள் பலர் இன்று சமூகத்தில் நற்பணிகளைச் செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

எனவே பெற்றோரால் கவனிப்பின்றி கற்ற லில் பின்னடைவாக இருக்கும் மாணவர்களை ஊக்குவிப்பது தலையாய கடமையாகும். இவர் களை எந்த வகையிலும் ஒதுக்காது குழுவாகச் செயற்படும் ஆற்றல்களில் ஈடுபடுத்த வேண்டும். அத்துடன் அவர்களுக்கு ஊக்கத்தையும் விருப் பையும் ஏற்படுத்துவதோடு பெற்றோர்க்கும் ஆர்வத்தை ஏற்படுத்தல் வேண்டும்.

**"ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனை**
**சான்றோனெனக் கேட்ட தாய்"**

தன் பிள்ளை ஒரு செயற்பாட்டில் ஈடுபட்டு வெற்றியையும் பாராட்டையும் பெறும் பொழுது பெற்றவர்கள் பெருமைப்படுவார்கள்.

"எனது பிள்ளை இதைச் செய்வாரா? இது இவர் செய்யமாட்டார், செய்யத் தெரியாது உது உவனுக்குச் சரிவராது" என்பதெல்லாம் பெற்ற வர்களது ஐயப்பாடு. இவற்றை இல்லாது செய்தல் வேண்டும் பெற்றவர்களுக்கு ஆசை வரும்படி மாணவர்களை செயற்படுத்த வேண்டிய பொறுப்பு ஆசிரியர்களுக்கு உண்டு. ஆனால் அவற்றை நெறிப்படுத்தி செய்வது கடினம் எனினும் விடா முயற்சியும், துணிவும், ஆற்றலும் மாணவர்களை செயற்படுத்த துணைபுரிகின்றன. எவ்வாறாயி னும் போட்டியில் பங்கு கொள்ளட்டும் வெற்றி, தோல்வி சகஜம் பிள்ளைக்கு ஆசை வரட்டும் என்ற நோக்கோடு மாணவனின் ஆற்றலை வெளிப்படுத்த எத்தனிப்போம்.

எனவே எவற்றிலும் பங்கு பற்றாது கற்றலில் பின்னடைவைக் காட்டும் மாணவர்களை பாட சாலை மட்டத்திலாவது மேடையில் சிறிய சிறிய செயற்பாட்டிற்காவது விடுவதால் பயம், கூச்சம் என்பவற்றை விட்டு தன்னால் இயலுமான காரி யத்தை செய்யத் தூண்டுவதனால் கற்றலில் விருப்பை ஏற்படுத்தலாம்.

"இவர் இது செய்யமாட்டார், இவரது பெற் றோர் ஊக்கமில்லை, ஒன்றும் வாங்கித் தரவும் முன்வரமாட்டார்கள்" எனக் குடும்ப்ப பின்னணி யைப் பார்த்து மாணவரை ஒதுக்கி விடாது ஒதுக்கியிருக்கும் மாணவரை இணைபாடவி தானச்செயற்பாடுகளுக்கு உட்படுத்த ஊக்கமளி த்து "நீதான் நல்லாய்ச் செய்கிறாய் கெட்டிக் காரன் கெட்டிக்காரி என்ற மனப்பாங்கை ஏற் படுத்தி பங்கு கொள்ளத் தூண்டுவதனூடாகவும் பெற்றோரையும் ஈடுபடுத்தி உங்கட பிள்ளை நல்லாய்ச் செய்வார். வீட்டிலையும் நல்லாய் பழக்கி விடுங்கோ உங்கடை பிள்ளை பரிசு வாங்கினால் உங்களுக்குத்தான் பெருமை என்ற ஆசையை வளர்த்தல் கற்றலுக்கான தூண்டுத லாகும்.

தெரிவு செய்யப்படும் போட்டிகள், எல்லா மாணவரும் பங்கு கொண்டு வெற்றியடைபவளாக அமைதலும் அவற்றிற்கு ஊக்குவிப்பதற்கான பரிசில்களை வழங்கலும் சான்றிதழ்களை வழங் கலும் பாடசாலையின் கடமையாகும். இணை பாடவிதானமும் மாணவரை உயர்வடையச்செய்யும் அந்த அனுபவங்கள் கற்றலைத் தூண்டும் காரணியு மாகும் என்பது இணைபாட விதானச் செயற்பாட் டின் விளைவு கற்றலில் வெற்றியைத் தரும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைபோட்டி நிறுவனத்தின் குறுங்காலச் சமனிலை

சி. பானுஷான்
2013 வர்த்தகம்

நிறைபோட்டி நிறுவனம் ஒன்று உச்ச இலாபம் பெறுகின்ற நிலையினை, நட்டத்தினை இழிவு படுத்துகின்ற நிலையினையே அதன் சமனிலை எனலாம். இச் சமனிலையை இரு வகைப்படுத்தி நோக்க முடியும்.

1. குறுங்காலச் சமனிலை
2. நீண்டகாலச் சமனிலை போன்றவையாகும்.

குறுங்காலத்தில் நிறுவனம் ஒன்று 3 வகையான சமனிலைகளை அடையாலம் என சுட்டிக் காட்டப்படுகின்றது. அவை பின்வருமாறு

1. சாதாரண இலாபம்
2. அசாதாரண இலாபம்
3. நட்டம் போன்றவையாகும்.

இங்கு சாதாரண இலாபம் என்பது பொருளியல் கோட்பாட்டின் அடிப்படையில் மொத்த வருமானமும், மொத்தச் செலவும் (TR, TC) சமனாகக் காணப்படும் நிலை அல்லது சராசரி வருமானமும், சராசரிச் செலவும் (AR, AC) சமனாகக் காணப்படும் நிலை சாதாரண இலாபம் எனப்படும்.

இங்கு மொத்தச் செலவு என்பதற்குள் வாடகை, கூலி, வட்டி, இலாபம் என்பன அடங்குகின்றன. அதாவது முயற்சிக்குரிய சாதாரண இலாபம் மொத்தச் செலவினுள் உள்ளடங்கும். இங்கு சாதாரண இலாபம் என்பது ஒரு நிறுவனம் தொடர்ந்து இயங்குவதற்குத் தேவையான ஆகக் குறைந்த வருமானத்தைப் பெறும் நிலையினைக் குறிக்கும் ல்லது நிறுவனம் தற்போது பயன்படுத்துகின்ற வளங்களை தொடர்ந்தும் பயன்படுத்துவதற்குத் தேவையான வருமானத்தைப் பெறும் நிலையினைக் குறிக்கும்.

நிறைபோட்டி நிறுவனம் ஒன்று குறுங் காலத்தில் பெறுகின்ற சாதாரண இலாபத்தினை பின்வரும் வரைபடம் மூலம் காட்டலாம்.




மேற்காட்டப்பட்ட வரைபடத்தின் படி எல்லை வருமானக் கோட்டினை (MR) எல்லைச் செலவுக் கோடானது (MC) கீழிருந்து மேல் நோக்கி வெட்டிச் செல்லும் போது நிறுவனம் சமனிலை அடைகின்றது. இந்நிலையில் O-Q என்ற அளவினை நிறுவனம் உற்பத்தி செய்கின்றது. இங்கு ஓர் அலகிற்கான சராசரி வருமானம் P-Q ஆகும். எனவே இந்நிறுவனத்தின் மொத்த வருமானம் O-P, E-Q ஆகும். அதேவேளை ஓர் அலகிற்கான சராசரி செலவு O-P ஆகும். எனவே நிறுவனத்தின் மொத்தச் செலவு OPEQ ஆகும்.

இங்கு நிறுவனத்தின் மொத்த வருமானமும், மொத்தச் செலவும் சமனாகக் காணப்படுவதால் இது சாதாரண இலாபம் எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நிறுவனத்தின் அசாதாரண இலாபம் என்றால் என்ன என நோக்குவோமாயின் நிறுவனமொன்றின் மொத்த வருமானத்தை விட மொத்தச் செலவு சிறிதாகக் காணப்படுவதே யாகும். (TR>TC) அல்லது சராசரி வருமானத்தை விட சராசரிச் செலவு குறைவாகக் காணப்படும் ஒரு நிலையினைக் குறிக்கும் (AR>AC)

அதாவது நிறைபோட்டி நிறுவனம் தொடர்ச்சியாக இயங்குவதற்குத் தேவையான முயற்சியாண்மைக்குரிய இலாபத்தினை விட அதிக இலாபத்தினை உழைத்துக் கொள்ளும் நிலையே அசாதாரண இலாபம் எனப்படும். இதனைப் பின்வரும் வரைபடம் மூலம் காட்டலாம்.




மேற்காட்டப்பட்ட வரைபடத்தில் எல்லை வருமானக் கோட்டினை (MR) எல்லைச் செலவு கோடு கீழிருந்து மேல்நோக்கி வெட்டிச் செல்லும் போது E என்ற புள்ளியில் நிறுவனம் சமனிலை அடைகிறது. இந்நிலையில் O-Q என்ற அளவினை நிறுவனம் உற்பத்தி செய்கின்றது. எனவே ஒரு அலகிற்கான சராசரி வருமானம் OP ஆகும். மொத்த வருமானம் OPEQ ஆகும். அதேவேளை ஒரு அலகிற்கான சராசரிச் செலவு $OP_1$ ஆகும். நிறுவனத்தின் மொத்தச் செலவு $OP_1$, AQ ஆகும்.

எனவே நிறுவனமானது $PEAP_1$ அளவு அசாதாரண இலாபத்தை உழைத்துக் கொள்கின்றது எனலாம்.

தொடர்ந்து, நிறுவனம் நட்டம் அடைதல் என்றால் என்ன என நோக்குவோமாயின் ஒரு நிறுவனத்தின் மொத்த வருமானத்தை விட மொத்தச் செலவு கூடுதலாகக் காணப்படும் நிலை (TR<TC) அல்லது சராசரி வருமானத்தை விட சராசரிச் செலவு அதிகமாகக் காணப்படும் நிலை (AR<AC) நிறுவனம் நட்டமடைதல் எனப்படும்.

அதாவது நிறுவனம் தொடர்ந்து இயங்குவதற்குத் தேவையான முயற்சியாண்மைக்குரிய குறைந்த பட்ச இலாபத்தினைக் கூட பெறமுடியாமல் இருப்பதனையே குறிக்கின்றது. நிறைபோட்டி நிறுவனம் ஒன்று நட்டம் அடைகின்ற நிலையினை பின்வருமாறு வரைபடம் மூலம் காட்டலாம்.




மேற்க்காட்டப்பட்ட வரைபடத்தில் E என்ற புள்ளியில் நிறுவனம் சமனிலை அடைகின்றது. இந்நிலையில் O-Q என்ற அளவினை நிறுவனம் வெளியீடு செய்யும் போது நிறுவனத்தின் சராசரி வருமானம் OP ஆகும். எனவே மொத்த வருமானம் OPEQ ஆகும். அதேவேளை நிறுவனத்தின் சராசரிச் செலவு $OP_1$ ஆகும். மொத்தச் செலவு $OP_1AQ$ ஆகும். எனவே இங்கு மொத்த வருமானத்தை விட மொத்தச் செலவு அதிகமாகக் காணப்படுவதால் நிறுவனமானது $P_1AEP$ அளவு நட்டம் அடைகின்றது. இதுவே நிறைபோட்டி நிறுவனத்தில் நிறுவனமானது நட்டம் அடைதல் எனப்படுகின்றது.

இவ்வாறுதான் நிறைபோட்டி நிறுவனத்தில் ஒரு நிறுவனமானது குறுங்காலத்தில் சாதாரண இலாபம், அசாதாரண இலாபம், நட்டம் போன்ற சமனிலைகளை அடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றாடல் தொடர்பாக மதங்கள் வெளிப்படுத்தும் போதனைகள்

யோ. நிலோஜினி
தரம் 9A

மனித வரலாற்றின் ஆரம்பகாலம் முதல் மனிதன் தனது தேவையை பூர்த்தி செய்தல் தொடர்பாக சூழலைப் பயன்படுத்தி வந்தமை பரம இரகசியமன்று. எனினும் அவன் சூழலை பயன்படுத்திய முறை காலத்துக்குக் காலம் வேறுபட்டது. சூழலை மூன்று முறைகளாக பயன் படுத்தினான் அவையாவன சூழலை உள்ள வாறே பயன்படுத்தல், சூழலுடன் இணைந்து செயற்படல், சூழலை மாற்றியமைத்துப் பயன் படுத்தல் என்பனவாகும். பொருளாதாரம், சமூகம், அரசியல், கலாசாரம் ஆகிய பல்வேறு நடவடிக் கைகளுக்காகவும் சூழலை பயன்படுத்தினர் என இதன் மூலம் தெளிவாகிறது. ஒழுக்கநெறி என்பது சில சமூகங்களுக்கும் கலாச்சாரங் களுக்குமுரிய அங்கத்தவர்களினால் பின்பற்றப் படும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்ட திட்டங்கள் சம்பிரதாயங்கள் என்பன ஒழுக்கநெறி என அழைக்கப்படும். அத்தோடு சூழல் ஒழுக்கநெறி என்பது நிலம், நீர், வாயு, உயிர்க்கோளம் முதலானவற்றை சிறந்த முறையில் முகாமைப் படுத்தி நிலைத்திருக்கச் செய்யும் பழக்க வழக்கங்களாகும். எகிப்திய மக்களால் இயற் கைப் பொருட்கள் கடவுளாக வணங்கப்பட்டது. அவ்வகையான கடவுளாக ஆடென சூரியக் கடவுள், சென் சுறாவளிக்கடவுள், ஓரிசிஸ் மரங் களுக்கு அதிபதியான கடவுள் வரதோர் ஆகாயத் தேவதை என்பனவாகும்.

அக்கால மனிதன் சூழல் பற்றிய அறிவையும் விளக்கத்தையும் சமய வழிபாடுகள், நம்பிக்கை கள் மூலம் பெற்றுக் கொண்டான். மனிதனின் பௌதிக தேவைகள் அனைத்தையும் இயற்கை வழங்குகிறது. இயற்கையுடன் தொடர்புடைய பொருட்கள் படைக்கப்பட்டவையல்ல என்பதை ஏற்றுக் கொள்ளும் சமயமான பௌத்தத்தில் போதிக்கப்படும் விடயங்களாக இவ் விடயம் கருதப்படுகிறது. "தேன் பூவிற்கு பாதிப்பின்றி தேனை எடுப்பது போல தானியங்களைச் சேகரிக்கும் மனிதனுடைய செல்வம் அதிகரிக் கும்" என்றும் "மரநிழலில் நிம்மதியாக நித்திரை செய்த ஒருவன் நித்திரை விட்டெழுந்து அதன் கிளையினை வெட்டி எறிவானாயின் அவன் செய்ந்நன்றி இல்லாதவன்" என புத்த தர்மம்

இயற்கையைப் பற்றி போதிக்கிறது. இதன் மூலம் இயற்கைக்கும் பௌத்தத்திற்கும் உள்ள தொடர்பு தெளிவாகிறது.

பூவுலகில் உள்ள அனைத்தும் இறைவனுடை யதே உயிருள்ள உயிரற்ற அனைத்திலும் இறை வனுடைய சக்தி வியாபித்துள்ளது. இதனால் ஒருவர் தனக்கு தேவையானதை எடுத்துக் கொண்டு மிகுதியை இறைவனுக்கு விட்டுவிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என இந்துசமயம் கூறுகிறது. இந்து சமய கொள்கையின் படி மரங்களினால் நிறை வேற்றப்படும் கருணை நிறைந்த செயற்பாடுக ளாக மரங்கள் மனிதனுக்கு நிழலைத் தருகி றது. வீட்டுக்கு எரிபொருள் தருகிறது பறவைகளுக்கு வீடாகிறது. மரப்பட்டைகள், இலைகள், வேர்கள் முதலானவை மருந்துப் பொருட்கள் ஆகின்றன. இவ்வகையான இயற்கையை நாம் அழிகலாமா சிந்தித்துப் பாருங்கள். சூழலை வாழ்த்தும் முகமாக கிறிஸ்தவ சமயம் வெளிப்படுத்தும் போதனை என்னவெனப் பார்ப்போம். "நிலம் உள்ளவரை விதைத்தலும் அறுவடையும் குளிரும் வெப்பமும் கோடையும் மாரியும் இரவும் பகலும் தொடர்ந்து நிலவும் என கிறிஸ்தவ சமயம் கூறுகிறது. சுற்றாடல் சமநிலை சீர்குலை வதால் ஏற்படும் விளைவுகள் வளப்பாறைகள் அழிதல், வளிமண்டலம் வெப்பமடைதல் பனி மலைகள் உருகுதல், சூறாவளி உருவாகுதல், ஓசோன் படை தேய்வுறல், வளி மாசடைதல், நீர் பற்றாக் குறை, மண்சரிவு ஏற்படல் என்பனவாகும்.

செவ்வாந்தியரின் தலைவனை சியட்டல் சூழல் ஒழுக்கம் பற்றி கூறிய கூற்று மனிதனுக கும் சூழலுக்கும் உள்ள பிரிக்க முடியாத தொடர்பினை எடுத்துக் காட்டுகிறது. அவர் கூறிய கருத்து என்னவெனின் "இந்த பூமியில் காணப் படுகின்ற ஒவ்வொரு அங்குல நிலமும் அதன் பகுதியும் எங்கள் மக்களுக்கு அர்ப்பணிக்கப்படு கிறது. சூரிய ஒளியால் சக்தி பெறும் தேவதாரு மரங்கள் வெள்ளை மணலால் சூழப்பட்ட கடற் கரை திறந்தவெளிகள், நுண்ணுயிர்கள் அனைத் தும் எமது சொந்தமாகும். மரங்களால் இருந்து சொட்டும் ஒவ்வொரு நீர்துளியும் செவ்வந்தி யரின் நினைவுத்தடங்களை மனக்கண்முன் கொண்டு வருகிறது.

இந்த நிலம் எங்களின் வழிபாட்டுக்குரியது ஆறுகளும் பளிங்கு வடிவில் பாய்ந்து செல்லும் நீரும் சாதாரண நீரல்ல எங்கள் மூதாதையரின் இரத்தமாகும் நீர் ஒழும்பும் ஓசை எமது மூதாதை யரின் பேச்சொலியாகும். வாசனையுள்ள மலர் கள் எமது சகோதரர்கள், மான், குதிரை, கழுகு என்பனவும் எமது சகோதரர் வனவிலங்குகள் இல்லாத உலகம் எது வனவிலங்குகள் இல்லை யெனின் மனிதன் தனிமையில் இறந்துவிட நேரிடும் வன விலங்குகளுக்கு நிகழ்வது யாது? அது மனிதனக்கும் விரைவில் நிகழும்" அனைத் தும் ஒன்றோடொன்று பானைக்கப்பட்ட உள்ளன என செவ்வந்தியரின் தலைவர் கூறுகிறார்.

இந்தியாவில் பிரசித்தி பெற்ற தத்துவ ஞானி யான மகாத்மாகாந்தி அவர்களின் கூற்றின் படி அனைவரின் தேவைகளை பூர்த்தி செய்யும் தன்மை இயற்கைக்கு இருக்கிறது. காந்தியின் அஹிம்சை வெளிப்பாட்டுத் தத்துவமும் இதுவே ஆகும். நாம் இனியாவது மரங்களை வெட்டாது இயற்கையை அழிக்காது வாழ்வோம்.

***ஒழுக்கம் உள்ளவனாகவும் நல்லவனாகவும் உள்ளவன் வேறெதைப் பற்றியும் கவலையோ, அச்சமோ கொள்ளத் தேவையில்லை***

- ஜேம்ஸ் ஆலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டிய சாஸ்திரம் கூறும் நாயகன் நாயகி பேதங்கள்

ரா. திநேஸ்
2013 கலை

நாடகத்தில் வருகின்ற கதாநாயகன் கதாநாயகி பற்றிய இலக்கணங்களை நாட்டிய சாஸ்திரமானது மிகவும் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. ரூபகங்களை வகைப்படுத்துகின்ற போது இந்த நாயகன் நாயகி இலக்கணங்களை வைத்து வகைப்படுத்தியுள்ளது. முதலில் நாயிஹா / நடிகா இலக்கணங்களை நோக்குவோமாயின் நடிகா மூன்று வகையாக பிரிக்கப்படுவள்.

1. ஸ்வீயா

இவள் பத்தினிப் பெண்ணாவாள் தனக்கு தாலி கட்டிய புருஷனையே தனது ஆத்ம நாயகனாக ஏற்று ஆனந்தமடைபவள்

இவள் மூன்று வகையாக பிரிக்கப்படுவாள்

- முத்தா – இவள் சிருங்கார ரஷத்தில் விருப்பமற்றவள்.
- மத்யா – கணவனுடன் இணங்கியும் இணங்காமலும் இருப்பவள்
- பரகல்யா – கணவனுடன் செம்மையாக சிருங்கார ரஷத்தை அனுபவிப்பவள்

2. பரகீயா

இவள் தனக்கு தாலி கட்டிய புருஷன் இருக்க அந்நிய புருஷனுடன் சிருங்கார ரஷத்தை அனுபவிப்பவள் இந்த வகைப் பெண்ணை 2 வகையாக பிரிப்பர்

- கந்யகா – தந்தை தாயுடன் இருக்கும் போது பிறருடன் சிருங்காரத்தை அனுபவிப்பார்
- பரோடா – மணம் முடித்தவுடன் பிறருடன் பழகுதல்

3. சாமந்யா – சாமந்யா என்பவள் திரவியம், பொன், பொருட்களுக்காக பல புருஷர்களுடன் சிருங்கார ரஷத்தினை அனுபவிப்பவள். பிரஷணம் எனும் ரூபக வகையில் இந்த வகையான தலைவி காணப்படுகின்றாள்.

### நாயகனுடைய இலக்கணங்கள்

நாட்டிய சாஸ்திரத்தில் நாயகர்களை பொதுவாக 04 வகையில் பார்க்கலாம்

### தீரோ தாத்த

இவன் சிறந்த நல்லியல்புகள் கொண்ட நாயகன் ஆவான் கடவுள் தன்மையானவன். அற்புதமான குண அதிசயங்களைக் கொண்டவர். பெரும்பாலும் நாடக என்ற ரூபக வகையில் இவர் காணப்படுகின்றார். இராமனை உதாரணமாக குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தீர லலித**

இவர் மெல்லியல்புகள் வாய்ந்தவர். ஆடல் பாடலில் ஈடுபடுபவன் காதலுக்காக எதையும் செய்யத் துணிந்தவன். ரூபக என்ற வகையில் பிரஹஷனம் வகையில் வருகின்ற தலைமைப் பாத்திரம் இவ்வகையான பண்புகளைக் கொண்டது.

**தீர சாந்த**

பொறுமை அடக்கம் முதலிய பண்புகளைக் கொண்டவன். இப்பாத்திரங்கள் பெரும்பாலும் விஜயபோக ரூபக வகையில் இடம்பெறும்

**தீரோ தத**

இவன் பொறாமை வெகுளி போன்ற குணங்களைக் கொண்டவன் துரியோதனன் போன்ற பாத்திரங்கள் இந்த வகை நாயகரைச் சாரும்.

இந்த பாத்திரங்களோடு வீதுசனன் என்கின்ற பாத்திரம் அரங்கிலே முக்கியம் பெறுவர். இவரை கோமாளி என்றும் அழைப்பர்.

இவன் பெரும்பாலும் கதாநாயகனுடைய நண்பனாக காணப்படுவான். இவன் கதைவளர்ச்சிக்கு உதவுவான் இந்த விதூசனன் போன்று நாயகிக்கும் துணைப்பாத்திரங்கள் உண்டு. இவளை தாசி அல்லது சகி என அழைப்பார்கள்.

இவ்வாறு நாடகத்தில் நாட்டிய சாஸ்திரம் நாயகன் நாயகினுடைய இலக்கணங்களை எடுத்துக் காட்டுகிறது.

## உறவுகளே!

**தொப்புள்கொடி உறவுகளே!**
**தொடரும் எம் பாசங்கள்**
**தொடர் கதையாக இருக்கட்டும் ...**
**பிரிந்து செல்லும் சோதரர்களே!**
**பின்னே திரும்பிப் பாருங்கள்**
**பாசத்தின் வழி புரியும் ....**
**என் இனிய உடன் பிறப்புக்களே!**
**எளிதில் பிரிக்க முடியாத சொந்தங்களே....**
**கூடிக் குலாவியிருந்த நாட்களை**
**மீட்டிப்பாருங்கள்!**
**இன்னும் சகோதர பாசம் மேலோங்கும் ...**

ம. பவிசிகா
தரம் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மை விருட்ச முறை
# Truth Tree Decomposition

திரு. இ. ரமேஸ்குமார்
B.A. Dip in Counselling
ஆசிரியர்

## 1. அறிமுகம்

அளவையியலின் பாடப்பரப்பில் அண்மைக்காலத்தில் சேர்க்கப்பட்ட பகுதிகளில் ஒன்றாக உண்மை விருட்சமுறை அமைகின்றது. மாணவர்கள் இது தொடர்பான அறிவையும் பயிற்சியையும் பெற்றுக் கொள்வது அவசியமானதாகும். இந்தவகையில் அளவையியலில் வாதங்களின் வாய்ப்பினை தீர்மானிப்பதுக்கு உண்மை விருட்சமுறையை எவ்வாறு பயன்படுத்துவது என்பது தொடர்பான அறிவையும் பயிற்சியையும் பெற்றுக் கொடுப்பதே இந்த கட்டுரையின் நோக்கமாகும்.

உண்மை விருட்ச முறையானது எடுப்பளவை (Propositional Logic) இணைப்பாக்கிகளின் முடிவொற்றினைப் பெற்றுக் கொள்ளும் முறை எனலாம். இது உண்மை அட்டவணை முறையைப் போன்றதாகும். உண்மை அட்டவணையை அடிப்படையாகக் கொண்டதாகும். வாத அமைப்புக்களை வரிசைப்படுத்தல் மற்றும் கிளைப்படுத்துதல் செய்வது ஊடாக வாதங்களை வாய்ப்புப் பார்க்கும் ஒரு முறையாக இது அமைகின்றது. இம்முறையை பயன்படுத்தி விரைவாகவும் இலகுவாகவும் வாதங்களின் வாய்ப்பினை தீர்மானிக்கலாம்.

உண்மை விருட்சமானது வாதங்கள் வாய்ப்பானதா, வாய்ப்பற்றதா என்பதை தீர்மானிப்பதற்கு எடுப்பு இணைப்புக்களினதும், மறுப்புக்களினதும் பிளவுகளைப் பயன்படுத்துகின்றது. இம்முறையில் தரப்படுகின்ற எடுகூற்றுக்கள் மற்றும் முடிவு கூற்றின் மறுப்பும் வரிசைப்படுத்தப்படும். இங்கு எடுகூற்றுக்கள் உண்மையாகும் போது முடிவுக் கூற்றானது பொய்யாகும் என காட்ட முயற்சிக்கப்படு கின்றது.

உண்மை விருட்சமுறையை பயன்படுத்தும் போது முதலில் எடுகூற்றுக்களை வரிசையில் எழுதி பின்பு எமக்கு தரப்பட்ட முடிவுக் கூற்றின் மறுப்பைக் கொண்டு அதாவது அந்த மறுப்பைத் தான் ஒன்றில் வரிசையாக்கல் அல்லது கிளையாக்கல் வேண்டும். இதனை செய்வதற்கு முடிவு கூற்றின் மறுப்பு எந்த விதிக்குள் அமைகின்றது என அவதானித்தல் வேண்டும். அதாவது வரிசையாக்கல் விதியா அல்லது கிளையாக்கல் விதியா என அவதானித்து செய்கை மேற்கொள்ளப்பட்டு வாதத்தின் முடிவு துணியப்படுகின்றது.

வாதமொன்றின் முடிவு மாறிகள் உடன்பாடும் மறுப்புமாக அமைந்தால் செய்கை மூடப்பட்டு (x) வாதம் வாய்ப்பாகக் கொள்ளப்படும். மாறாக செய்கை பூரணப்படுத்த முடியாமல் அது திறந்ததாக இருந்தால் வாதம் வாய்ப்பற்றதாகக் கொள்ளப்படும். வாதமொன்றின் வாய்ப்பினை துணியும் போது x அடையாளம் காணப்படின் அக் கிளையானது மூடப்பட்டதாகும். வாதம் ஒன்றின் கிளைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்தும் மூடப்பட்டதாக (x) அமையுமாயின் அவ்வாதம் வாய்ப்பானதாகும். மாறாக வாதமொன்றின் ஒரு கிளையேனும் மூடப்படாது காணப்படின் அவ்வாதம் வாய்ப்பற்றதாகும்.

**2. உண்மை விருட்ச விதிகள்** (Truth tree Decomposition Rules)

வாதங்கள் குறியீடாக்கம் செய்யப்பட்டு உண்மை விருட்ச விதிகளின் அடிப்படையில் வாதங்களின் வாய்ப்பின் தன்மை துணியப்படுகின்றது. இவ்வாறு வாய்ப்புத் துணிய பின்வரும் இரண்டு முக்கிய விதிகள் பயன்படுத்தப்படுகின்றன.

1. வரிசையாக்கல் விதி / வரிசைப்படுத்தல் விதி
2. கிளையாக்கல் விதி

**வரிசையாக்கல் விதிகள் / வரிசைப்படுத்தல் விதிகள்**

(Strcking Rules)

இதற்குள் பின்வரும் நான்கு விதிகள் உள்ளடக்கப்படுகின்றன.

i. $\frac{NNP}{P}$

ii. $\frac{P \wedge Q}{P}$
Q

iii. N(P→Q)
P
NQ

iv. N(P∨Q)
NP
NQ

**கிளையாக்கல் விதிகள்** (Branching Rules)

இதற்குள் பின்வரும் ஐந்து விதிகள் உள்ளக்கப்படுகின்றன.

i. 


ii. 


iii.


iv. 


v. 



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**குறிப்பு :** உண்மை விருட்ச விதிகளைப் பயன்படுத்தும் போது முதலில் வரிசையாக்கல் விதிகளைப் பயன்படுத்திய பின்னரே கிளையாக்கல் விதிகளைப் பயன்படுத்தல் பொருத்தமானது.

### 3. உண்மை அட்டவணையும் உண்மை விருட்சமுறை விதிகளும்

உண்மை விருட்சமுறையில் உண்மை அட்டவணை முறையின் படி ஏதாவது ஒரு மாறிலிக்குப் பல்வேறு பெறுமானங்கள் உள்ள சந்தர்ப்பங்களிலேயே கிளையாக்கல் விதியைப் பாவிக்கலாம். $(P \rightarrow Q)$ எனும் குறியீட்டு வாக்கியத்தில் உண்மையெனக் காட்டக் கூடிய சந்தர்ப்பங்கள் மூன்றாகும். இச் சந்தர்ப்பத்தில் கிளையாக்கல் விதியினையே பாவிக்க வேண்டும். ஆனால் $N(P \rightarrow Q)$ என்பது $(P \rightarrow Q)$ என்பதன் பொய்யெனக் காட்டக்கூடிய சந்தர்ப்பத்தையே காட்டுகின்றது. இதனால் $(P \rightarrow Q)$ ஒருமுறை மாத்திரமே பொய்யெனக் காட்டக்கூடியது. எனவே இங்கு வரிசையாக்கல் விதியினைப் பயன்படுத்த வேண்டும். இவ்வாறே $\vee$, $\wedge$, $\leftrightarrow$ ஆகிய ஒவ்வொரு மாறியினதும் உண்மைப் பெறுமானங்களின் போதும் பொருத்தமான விதிகளைப் பயன்படுத்த வேண்டும். இதனைப் பின்வருமாறு நோக்கலாம்.

i.

| (P | → | Q) |
|---|---|---|
| T | (T) | T |
| T | F | F |
| F | (T) | T |
| F | (T) | F |

(T F F வரிசை) → கிளையாக்கல்

$N(P \rightarrow Q)$
P
NQ

ii.

| (P | ∧ | Q) |
|---|---|---|
| T | T | T |
| T | F | F |
| F | F | T |
| F | F | F |

(T T T வரிசை) → வரிசையாக்கல்

$(P \wedge Q)$
P
Q

iii.

| N | (P | ∨ | Q) |
|---|---|---|---|
| F | T | T | T |
| F | T | T | F |
| F | F | T | T |
| T | F | F | F |

(F F F வரிசை) → வரிசையாக்கல்

$N(P \vee Q)$
NP
NQ

iv.

| (P | → | Q) |
|---|---|---|
| T | T | T |
| T | F | F |
| F | T | T |
| F | T | F |

(F T T, F T F வரிசைகள்) → கிளையாக்கல்

$(P \rightarrow Q)$
NP      Q



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

v.

| N | (P | ∧ | Q) |
|---|---|---|---|
| F | T | T | T |
| T | T | F | F |
| T | F | F | T |
| T | F | F | F |

→ கிளையாக்கல்




vi.

| (P | ∨ | Q) |
|---|---|---|
| T | T | T |
| T | T | F |
| F | T | T |
| F | F | F |

→ கிளையாக்கல்




vii.

| (P | ↔ | Q) |
|---|---|---|
| T | T | T |
| T | F | F |
| F | F | T |
| F | T | F |

→ கிளையாக்கல்




**4. உண்மை விருட்ச முறையின் பிரயோக முறை**

- நற்சூத்திரமாக உள்ளதா என அவதானித்தல்
- சாதாரண குறியீட்டு வாக்கியமாக மாற்றுதல்
- குறியீட்டு வாக்கியங்களில் உள்ள ஒவ்வொரு எடுகூற்றுக்களையும் வரிசையாக எழுதுதல்
- முடிவு கூற்றின் மறுப்பை எழுதுதல்
- எடுகூற்று ஒவ்வொன்றுக்கும் உண்மை விருட்ச விதிகளைப் பாவித்தல்
- இலக்கமிடல் ✓1 ✓2 ✓3 (பாவித்த ஒழுங்கில்)
- சகல மாறிகளினதும் உடன்பாடு மறுப்பு ஆகிய இரண்டையும் காட்டல்
- வாய்ப்பு என காட்டப்பட்ட ஒவ்வொரு மாறிகளினதும் அருகில் X என அடையாளிமிடல் (இவ்வாறு x என அடையாளமிடல் செய்கையை மேலும் தொடர முடியாமையை காட்டும்)
- ஏதாவது ஒரு மாறியின் விதிப்பும், மறுப்பும் காட்டப்பட முடியாவிடின் அது வாய்ப்பற்ற வாதமாகும்.
- வாய்ப்பான வாதங்கள் எப்போதும் மூடியதாக அமையும். அதாவது முழுவதும் மூடப்பட்டிருப்பதே வாய்ப்பாகும்.
- வாய்ப்பற்ற வாதங்கள் திறந்ததாக அமையும் அதாவது ஒரு கிளையாவது மூடப்படாமல் காணப்படின் அது வாய்ப்பற்ற வாதமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உண்மை விருட்ச முறையினை இலகுவாக மாணவர்கள் மேற்கொள்வதுக்கு பின்வரும் குறியீட்டு அமைப்புக்களையும் ஞாபகப்படுத்தி வைத்திருத்தல் பயன்தரும்.**

1. நிபந்தனை வாக்கியம் உண்மை எனின்

$(\Phi \rightarrow \Psi)$




பொய் எனின்

$N(\Phi \rightarrow \Psi)$

$\Phi$

$N\Psi$

2. இணைப்பு வாக்கியம் உண்மை எனின்

$(\Phi \wedge \Psi)$

$\Phi$

$\Psi$

பொய் எனின்

$N(\Phi \wedge \Psi)$




3. உறழ்வு வாக்கியம் – உண்மை எனின்

$(\Phi \vee \Psi)$




பொய் எனின்

$N(\Phi \vee \Psi)$

$N\Phi$

$N\Psi$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. இரட்டை நிபந்தனை வாக்கியம் உண்மை எனின்

(Φ→Ψ)




பொய் எனின்

N(Φ↔Ψ)




**குறியீடுகளும் அதன் பெயர்களும்**

| | | |
|---|---|---|
| Φ | – | Phi |
| Ψ | – | Psi |
| θ | – | theta |
| *a* | – | alpha |
| β | – | beta |
| ϑ | – | gamma |
| δ | – | delta |

**5. பயிற்சிகள்**

(உ–ம்) I

(P→Q) .Q ∴P

1. (P→Q) எடுகூற்று 1
2. Q எடுகூற்று 2
3. NP (முடிவில் மறுப்பு)




(இது வாய்ப்பற்றவாதமாகும் – P, NP, Q, NQ என்பன காட்டப்படவில்லை)

(உ–ம்) II

(P→Q). P∴Q

1. (P→Q) எடுகூற்று 1
2. P எடுகூற்று 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. NQ (முடிவில் மறுப்பு)




(இது வாய்ப்பான வடிவமாகும். P, NP Q, NQ என்பன காட்டப்படுகின்றன)

(உ–ம்) III

(P→R) . (Q →R) ∴ (P→R)

1. (P→R)
2. (Q→R)
3. N(P→R) ✓1

P




* வாய்ப்பான வாதம்

(உ–ம்) IV

(P→Q). [(Q→(R∧S)] ∴ (P↔Q)

1. (P→Q) ✓2
2. Q →(R∧S)
3. N(P↔Q) ✓1




* வாய்ப்பான வாதம்

(உ–ம்) V

P → (NQ→R). (P→NQ) ∴ (P→R)

1. P → (NQ→R) ✓3
2. (P→NQ) ✓2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. N(P→R) ✓1

P




* வாய்ப்பான வாதம்

(உ–ம்) VI

(P→Q). (Q∧R). P∴(Q∨R)

1. (P→Q) ✓2
2. (Q∧R)
3. P
4. N(Q∨R) ✓1




* வாய்ப்பான வாதம்

மேற்காட்டப்பட்ட வகையில் அளவையியல் மாணவர்களுக்கு உண்மைவிருட்சமுறை தொடர்பாக அடிப்படை அறிவும் பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது. மாணவர்கள் இப்பகுதியில் மேலும் பயிற்சிகளை மேற்கொள்வது ஊடாக இலகுவாகவும் விரைவாகவும் வாதங்களின் வாய்ப்பினை துணிந்து பரீட்சைகளில் கூடிய புள்ளிகளை பெறமுடியும்.

***மிகப்பெரிய சந்தர்ப்பம் வாழ்க்கையில் ஒரே ஒரு முறைதான் கிடைக்கும். அதைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டு வெற்றிகாண முயல வேண்டும்.***

–மெகல்லன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பிள்ளையின் வளர்ச்சியில் பெற்றோரின் பங்கு"

திருமதி. விஜயராணி சிவகுமார்
ஆரம்பக்கல்வி ஆசிரியர்

பிள்ளையின் கல்வி வளர்ச்சியிலும் சரி, ஒழுக்க வளர்ச்சியிலும் சரி பெற்றோரின் பங்கே மகத்தானது. கருவறையிலேயே கல்விக்கு வித்திடும் தன்மை அண்மைக் காலமாக உற்று நோக்கப்படுகின்றது. ஆழ ஆய்வு செய்தவர்கள் கல்விக்கு கருவறையிலேயே வித்திடப்படுகிறது என்கிறார்கள். பிள்ளை கருவறையிலே உற்பத்தி யாகும் போதே தன் எதிர்கால சிந்தனை ஊற்று விதைப்பாக அங்கு உருவெடுக்கிறது. தூய தந்தை யர்கள் வாழும் சூழல் அவர்களது சிந்தனை அவர்கள் என்ன நினைத்துப் பெற்றெடுத்தார் களோ அவை யாவும் கருவறையிலேயே விதைக்கப்படுகின்றது. ஆதலால் தான் அக்காலம் பொற்காலமாகப் போற்றப்பட வேண்டும் என பெரியோர் கூறுகின்றனர்.

குழந்தை பிறந்ததில் இருந்தே ஐம்புலன்களி னூடாக கற்று அறிவைப் பெறுகின்றது. இந்த இயற்கைத் தன்மைக்கு ஊக்குவிப்பும் வழிகாட்ட லும் பெற்றோரிலேயே தங்கியுள்ளது. பிள்ளை யானது

- காலையில் எழும் போது
- உணவு உண்ணும் போது
- உறவினர் விருந்தினர் வரும் போது
- வெளியில் விளையாடும் போது
- ஓய்வாக இருக்கும் போது
- நித்திரைக்குச் செல்லும் போது

எனப் பல நிலைகள் ஊக்குவிக்கப்பட வேண்டும். இவ் ஊக்குவிப்புக்களின் மூலம் குழந்தையிடம் நற்பழக்க வழக்கங்களை விருத்தி செய்ய முடியும். எனவே பிள்ளை வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிப்பவர்கள் பெற்றோர்களே. இவர்களி னூடாகவே பிள்ளைகளிடம்

- சிந்தனை விருத்தி
- அறிவு விருத்தி
- மனஎழுச்சி விருத்தி
- அழகியல் விருத்தி
- சமூக விருத்தி
- நெறி முறையான வாழ்வு

வளர்க்கப்படுகின்றது.

இவற்றினைப் பிள்ளைகளிடம் வளர்க்க வேண்டியதும் பெற்றோரின் தலையாய கடமை ஆகும்.

உடலிலயல் தொடர்பு, அவர்களது பார்வைத் தொடர்பு அதுவும் பெற்றோரின் உயர்ந்த செயற் பாடுகளிலேயே தங்கியுள்ளது. அம்மா சமைக் கும் போது கதை கூறுவது, வீட்டிற்கு வரும் விருந்தினர்களுடன் உரையாடுவது, வீட்டில் உள்ளவர்களுடன் பழகும் விதம், வீட்டிற்கு வெளியே செல்வது போன்றவை பல வேளைக ளில் பிள் ளைகளால் உற்று நோக்கப்படுகின்றது. பெற் றோர்கள் தாங்களே தங்கள் குழந்தை களின் முதல் ஆசிரியர்கள் என்பதை நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும்.

பிள்ளையின் வளர்ச்சி மிக மிக முக்கிய மானது. இப்பிள்ளை வளர்ச்சியை நிர்ணயிக்கும் காரணிகள் ஆவன.

- போசாக்கான உணவு
- குடும்ப பொருளாதார நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை
- ஓய்வும் நித்திரையும்

இவற்றுடன் பிள்ளைக்கு அளிக்கப்படும் பாதுகாப்பு, அன்பு, முதிர்வு ஆகியனவும் அதன் வளர்ச்சிக்கு வித்திடும் பிள்ளையின் மன எழுச்சிக்கு சமநிலை காணப்பட வேண்டும். அது மகிழ்ச்சியாக உலா வர வேண்டும். குழந்தைகளின் பராமரிப்பு முறைகள் மிக மிக அவசியம். திட்டமிட்டு, அதன் தேவைகள் முன்னுரிமைப்படுத்தப்பட்டு, அதனை ஊக்குவித்து தன்னைக் கணிப்பதாக மனோநிலையை உருவாக்கி சந்தோசமாக வழி நடாத்தப்பட வேண்டும்.

வீட்டில் நடைபெறும் செயற்பாடுகள் அனைத்திலும், சமூக நிகழ்வுகளுக்கும் குழந்தையை அழைத்துச் சென்று முக்கியத்துவம் அளிக்க வேண்டும். தனக்கு வீட்டில் முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது என்ற உணர்வு அக் குழந்தைகளின் உள்ளத்திலே பொங்கி எழ வேண்டும். அவரை ஒரு பெரு மனிதனாகப் போற்றிக் கௌரவிக்க வேண்டும்.

குழந்தைகளின் சிந்தனைக்கு நாம் ஊக்கம் கொடுக்க வேண்டும். சிந்தனை உணர்வு சுடர்விட வேண்டும். பிரதானமாக கடவுள் பற்றிய நம்பிக்கை சிந்தனைக்கு இடமளிக்க வேண்டும். இளம் வயதிலேயே ஔவையாரின் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், திருக்குறள், தேவாரம், பொன்மொழிகள் போன்றவற்றை மனனம் செய்ய வழிகாட்ட வேண்டும் மனித விழுமியம் விதைக்கப்படலாம். குழந்தையின் சிந்தனை ஊற்றுப் பெற வேண்டும். தெய்வீகம் ஒளி விட வேண்டும். தாய் தந்தையரை தெய்வமாக வணங்குதல், ஆசிரியர் தெய்வம், அவரது அடி தொழுதல், நற்தொண்டுகள் புரிதல் என்ற சிந்தனைகள் இளம் வயதிலேயே வளர்க்கப்பட வேண்டும்.

குழந்தையின் உடற்சுகம் பேணல், நாள்தோறும் தான் செய்யும் கருமங்களில் நல்ல பழக்க வழக்கங்களை வீட்டில் காட்ட வேண்டும். காலையிலும், மாலையிலும் முகம் கழுவுதல், குழித்தல், மலம் கழித்த பின் சவர்க்காரமிட்டுக் கை கழுவுதல், குப்பைகளைக் குப்பைத் தொட்டியில் போடுதல், நல்ல சுத்தமான ஆடை களை அணிதல், அழுக்கான ஆடைகளைக் களைதல், தலைக்கு எண்ணை தேய்த்துச் சீவுதல், நகம் வெட்டுதல், விபூதி பூசுதல், பூக்கொய்தல். இறைவனுக்குச் சாத்துதல் ஆகியன இளம் வயதிலேயே பழக்கப்பட வேண்டும்.



எங்கள் பண்பாடுகள் சிறுவயதிலேயே வெளிக்கொணரப்பட வேண்டும். ஒருவர் மீது ஒருவர் அன்பு வைத்தல், சொல்லும் வார்த்தைகளை இனிதாக அமைத்தல், ஒருவரைக் கண்டால் இனிமையாக, அன்பாகக் குழைந்து பேசி இன்முகம் காட்டி வரவேற்று அழைத்துச் செல்லும் தன்மை அவர்களுக்கு காட்டப்படுவது மட்டுமன்றி அவர்களையும் அச்செயலில் ஈடுபடுத்தப்பட வேண்டும்.

அன்பாக தாய், தந்தை, பிள்ளை உணர்வு பரிணமிக்க வேண்டும். இவ் உறவு இருபக்க தொடர்பாக அமைய வேண்டும். குழந்தை மீது கடிந்து விழவோ முதுகில் படார் என அடித்தோ அதன் பிஞ்சு உள்ளத்தை கசக்கி மணக்கக் கூடாது. குழந்தை உள்ளம் தெய்வ உள்ளம்.

கற்றல் அனுபவங்களை அவர்களிடத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டறிய வேண்டும். அதன் அனுபவங்களுக்கு ஏற்ப, இணங்க அவர்களைக் கற்க வைக்க வேண்டும். ஓடி விளையாடு பாப்பா கூடி விளை யாடு பாப்பா, நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா என்பவற்றைக் கற்பதில் சுறுசுறுப்பான செயற் பாட்டுக் கற்கைக்கு இடம் காட்ட வேண்டும். பிள் ளையை ஏற்க வைக்க வேண்டும். அதனை மதிக்க வேண்டும். அதனைக் கணிக்க வேண்டும். பாராட்ட வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக அன்பு காட்ட வேண்டும். கட்டி அணைக்க வேண் டும்.

இத்தகைய பல பொறுப்புக்களை ஆற்ற வேண்டிய பெற்றோர்கள் எவ்வாறு வாழவேண் டும்? பிள்ளைகளின் முன் தகாத வார்த்தைகளைப் பேசுதல், சண்டை போடுதல், வீட்டில் உள்ள பொருட்களை ஆவேசமாகத் தூக்கி எறிந்து உடைத்தல், இச் செயற்பாடுகளின் மூலம் பிஞ்சு உள்ளங்களில் விரக்தி, வேதனை, பயஉணர்வு, வெறுப்பு போன்ற உணர்வுகள் அடி மனதில் ஆழமாக பதிவதுடன் பிள்ளையின் நடத்தையி லும் எதிரான மாற்றங்களை உண்டு பண்ணும்.

அது மட்டுமல்ல வழிகாட்டிகளாக வாழ வேண்டிய பெற்றோர்களே வழி தவறிப் போனால் வழிப்படுத்துவது எப்படி? எனவே பெற்றோர்கள் ஒவ்வொருவரும் ஒழுக்க சீலர்க ளாக வாழ வேண்டும். இவ் ஒழுக்கக் கேட்டினா லேயே எந்தப் பாவமும் செய்யாத பச்சிளம் சிசுக் கள் கழிவறைகளிலும், குப்பைத் தொட்டிகளி லும், புதை குழிகளிலும் வீசப்படும் அவல நிலை உருவாகியுள்ளது. இந்தநிலை ஒழிய வேண்டும். எமது சமூகம் நல்ஒழுக்கம் உள்ள சீரிய ஒரு சமூகமாக மலர வேண்டும். இது ஒவ்வொரு தனி மனிதனது செயற்பாட்டிலுமே தங்கியுள்ளது.

ஈவு, இரக்கம், கருணை, அன்பு, ஜீவகாருண் யம், நீதி, நேர்மை, நியாயம், தயவு, தாட்சண்யம் இவற்றையெல்லாம் இப்போது எங்கே காண முடிகிறது? அகராதிகளிலும், நூல்களிலும் தான் இவற்றினைக் கண்களால் பார்க்க முடிகிறது. பகுத்தறிவுடைய மனிதர்களிடம் இத்தகைய உயர்ந்த பண்புகள் குறைவடைந்து போவதனா லேயே நாட்டிலே களவு, கொலை, பாலியல் துஷ் பிரயோகம், கடத்தல்கள், சித்திரவதை போன்ற வன்செயல்கள் பெருகியுள்ளன. மாக்களாக (மிருகங்களாக) மாறும் மனிதர்கள் மனிதர்க ளாக மாற வேண்டும். அப்போது தான் நாட்டிலே உள்ள அனைவரும் மகிழ்ச்சியாக நின்மதியாக வாழமுடியும்.

இன்றைய சமூகச் சீரழிவுகள் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும். இல்லையேல் ஒரு தசாப்த காலத்தில் என்ன நிலை உருவாகும் என ஒருவராலும் கூற முடியாத கீழ்த்தரமான மோச மான நிலை உருவாகும். பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளுக்கு தனியாக தொலைபேசி களை பாவிக்க விட வேண்டாம். தொலைக்காட் சிப் பெட்டிகளை தனி அறையில் வைக்காமல் உங்கள் கண் பார்வைக்கு எட்டிய பொது அறை யில் வைக்கவும். பிள்ளைகளின் நாளாந்த நட வடிக்கைகளில் கண்ணும் கருத்துமாக விழிப் பாக இருக்க வேண்டியது ஒவ்வொரு பெற்றோரி னது பொறுப்பு என்பதை எவரும் மறந்த விடக் கூடாது.

பிள்ளைகள் தனியார் கல்வி நிலையங் களுக்கே அல்லது வேறு இடங்களுக்கோ சென்றால் திரும்பி வரும் நேரத்தை அறிந்து கொள்ள வேண்டும். தாமதம் ஆனால் வாசலில் சென்று காத்திருக்க வேண்டும். இவ்வாறு பெற்ற தாய் செய்யும் போது பிள்ளை நேரத்தை வீண் பொழுது போக்காது விரைவாக வீட்டிற்கு வந்து சேருவாள். தன்னிலே மிகவும் பாசமாகவும், தன் னைப் பாதுகாப்பதிலும் அம்மாவின் அக்கறை பிள்ளையை வழி தவறிச் செல்லாது நேரான சீரான பாதைக்கு வழிப்படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை சென்று வீடு திரும்பும் பிள்ளையை தாய் அன்புடன் வரவேற்று உபசரிக்க வேண்டும். கற்றலில் செயற்பாடுகளை தட்டிக் கொடுத்து ஊக்குவிக்க வேண்டும். பத்து நிமிடங்கள் ஏனும் பிள்ளையுடன் பாடசாலையில் நடந்தவை பற்றி உரையாட வேண்டும். ஆசிரியரால் வழங்கப்பட்ட வீட்டு வேலைகளை செய்வதற்கு பிள்ளைகளுக்கு வழிப்படுத்த வேண்டும். ஆரம்பக் கல்வியே ஒரு அத்திவாரம் போன்றது. எனவே பிள்ளை எழுத்துப் பொறி முறையுடன் எழுதுவதற்கு பயிற்சி அளிக்க வேண்டும். பிள்ளையினை ஆரம்பத்தில் இருந்தே தினமும் கற்றல் செயற்பாடுகளில் கவனிக்க வேண்டும்.

வேலைக்கு செல்லும் பெற்றோர்களும் சரி வீட்டிலிருக்கும் பெற்றோரும் சரி தனது பிள்ளைகளின் அருகில் இருந்து கவனிக்க நேரம் இல்லை என்று தான் கூறுவார்கள். பாடசாலைகளுக்கும், தனியார் கல்வி நிலையங்களுக்கும் அனுப்பி வைத்தால் நமது கடமை முடிந்தது எனக் கருதுவார்கள். ஆனால் பிள்ளையின் கற்றலுக்கு அருகில் இருந்து கவனிக்க வேண்டியது பெற்றோர்கள், பரீட்சைக் காலங்களில் விளையாட வேண்டாம், படம் பார்க்கக் கூடாது. உறவினர் வீடுகளுக்குச் செல்லக் கூடாது, கோவில்கள் களியாட்ட நிகழ்வுகளில் கலந்து கொள்ள முடியாது. என்ன அனியாயமான செயல்கள் இவற்றிற்கு எல்லாம் தடைபோட்டால் தான் பிள்ளையால் படிக்க முடியுமா? பிள்ளையின் மனநிலை நன்றாக இருந்தால் மட்டுமே அவனால் படிக்க முடியும் என்பதனை விளங்கிக் கொள்ள வேண்டும். பிள்ளை எவ்வளவு நேரம் படிக்கிறான் என்பது முக்கியமல்ல. எந்தளவிற்கு விளங்கிப் படிக்கிறான் என்பதே முக்கியமானது உங்கள் பிள்ளைகள் பரீட்சைக்குப் படிக்கிறார்களா? பெற்றோர்களே நீங்களும் அவர்களுடன் விழித்து இருங்கள். அவர்களின் எதிர்கால நல்வாழ்விற்காக காத்திருங்கள். உங்கள் பிள்ளைகளுக்கு நிச்சயம் ஒளி மயமான எதிர்காலம் உண்டு என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

பிள்ளைகள் பற்றிய எதிர்கால இலட்சியங்களை சிறு வயதிலேயே அவர்களின் அடிமனதில் பதியச் செய்வது பெற்றோரின் கடமை ஆகும். ஒழுக்கமும் கல்வியும் ஒருவனுக்கு இரு கண்கள் போன்றவை என்பதனை ஊட்டி வளர்க்க வேண்டும். தனது எதிர்கால நல்வாழ்வில் தன் பெற்றோர் எந்தளவிற்கு அக்கறையுடன் உள்ளார்கள் என்பதனை அறிந்த ஒரு பிள்ளை வழி தவறிச் செல்லாது சீரான பாதையில் செல்லும்.

பிள்ளையை இன்னொரு பிள்ளையுடன் ஒப்பிட்டுக் கதைப்பது, உயர்வாகக் கதைக்கப் படும் பிள்ளையை மற்றைய பிள்ளை வெறுப்பதற்கு நாமே வித்திடும் ஒரு செயற்பாடாகும். பாராட்டப்படும் பிள்ளையை பழி வாங்க வேண்டும் என மற்றைய பிள்ளையின் மனம் எண்ணிய படியே இருக்கும். இச்செயற்பாட்டினால் பிழையான நடவடிக்கையில் பிள்ளை செல்வதற்கு ஒரு வாய்ப்பாக அமையும்.

ஒரு பிள்ளை ஒழுக்கம் தவறிய செயற்பாட்டில் தெரிந்தோ, தெரியாமலோ ஈடுபட்டால் அதனைக் கண்டித்து திருத்த வேண்டியது பெற்றோர்களின் கடமை ஆகும். ஊர் உலகத்தில் நடக்காததையா என் பிள்ளை செய்தான் என அவனைத் தட்டிக் கொடுத்தால் நாமே எம் பிள்ளைகளின் எதிர்காலத்தை பாழடித்த பாதகர்கள் ஆவோம் என்பதை ஒவ்வொரு பெற்றோரும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

பெற்றோர்கள் பிள்ளைகள் குடும்பத்தில் அன்னியோன்னியத்துடன் பழக வேண்டும். மனம் விட்டுப் பேச வேண்டும் வாரத்தில் ஒரு நாளாவது குடும்பமாகச் சென்று வர வேண்டும். குடும்பத்தில் நெருக்கமான அன்பு பிணைப்புக் குறைவடைந்து வருவதே இன்றைய சமூகச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரழிவுகளுக்கு ஒரு காரணமாக அமைகிறது, என்பதனை யாரும் மறுக்க முடியாது.

"மானம் இழந்து வாழ்வதை விட மரணம் மேலானது" என்பதனை பிள்ளைகளிடம் சிறு வயதிலேயே ஊட்டி வளர்க்க வேண்டும். நல்ல பண்புகளை கற்றுக் கொண்ட பிள்ளைகளே எதிர்காலத்தில் நல்ல உயர்வான வாழ்வு வாழ் கின்றனர் என்பதனை வரலாற்று கதைகள் மூலம் தெளிய வைக்க வேண்டும்.

இவ்வாறாக குழந்தைகளிடம் தெய்வ பக்தி யும், நல் ஒழுக்கப் பண்புகளும் ஊட்டி வளர்க்கப் படும் போது நாட்டிலே அமைதியும் சமாதான மும் நிலைத்திருக்கும் சமூகத்திலே பழி பாவங் களுக்கு இடமிருக்காது. பஞ்சம், பட்டினி பறந் தோடி விடும். புதியதோர் நற்சமூகம் மலரும் அச் சமூகத்தில் உள்ளவர்களிடம் சுயநல மிருக்காது பொது நலம் நிறைந்திருக்கும். போலி முகங் களுடன் பொய்யான வாழ்க்கை வாழும் பகட் டான வாழ்வு ஒழிக்கப்பட்டு நல்லதோர் சமு தாயம் மலர்ந்திடும். எமது பாரம்பரியங்கள் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். இழந்த எமது கல்வியை ஈடுசெய்ய வேண்டும். கல்வியில் எமது மாவட்டம் கடைசி நிலைக்கு தள்ளப்பட்டு விட்டது. தோல்வியே வெற்றியின் முதற்படியாக கொண்டு முன்னேற வேண்டும். ஒவ்வொரு பெற் றோரும் தன் பிள்ளையின் கல்வியிலும் ஒழுக் கத்திலும் விழிப்பாக இருந்தால் அதுவே எம் வெற்றிக்கு முதற்படியாக அமையும்.

# My Favourite Game

My Favourite game is cricket. Cricket is a very interesting game cricket was founded and intorduced to the whole world by england. It is played with a bat and a ball.

There are fourteen cauntries in the international cricket council.

Our country took the world cup once in 1996. Arjun Ranatunge headed in Srilankan team. I love my game very much.

S.Pranavan
Grade 7C



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாப்பாப்பாட்டும் பள்ளிப்படிப்பும்

தே. பொன்னுத்துரை
M.A, Dip.in.Edu
ஆசிரியர்

**"பாட்டுக்கொரு புலவன் பாரதியடா – அவன் பாட்டைப் பண்ணோடு ஒருவன் பாடினான் – அடா கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனே...."** என்று கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை பாரதியாரைப் போற்றும் முகமனுடன் நாமும் பாரதியாரை நோக்கின் இவர் ஒரு மகாகவி என்று கூறினாற் போதாது மகா சிந்தனையாளன். இவரது கவிதைகள் ஒவ்வொன்றிலும் இவரது ஆழ அகன்ற விரிந்த பார்வையானது காலத்தை வென்று இன்றும் பொருந்தும் வகையில் அமைந்து காணப்படுகின்றது.

ஓடிவிளையாடும் பள்ளிச் சிறுவனும் பாடி விளையாடும் "ஓடி விளையாடு பாப்பா" என்ற பாடல் இன்றைய மாணவர்க்கு எவ்வளவு தேவை அதில் உள்ள ஒவ்வொரு கருத்தும் இன்றைய கல்விக் கொள்கைகளில் எவ்வாறு நடம் புரிகின்றது என்பதை சற்று நோக்குவோம்.

பாரதியார் பாப்பாப்பாட்டை "பாப்பா" என விளித்து 64 வரிகளில் ஆயுள்வரைக்கும் ஒரு மனிதன் வாழும் முறைமையை எளிய தமிழில் அனைவரும் விளங்கிக் கொள்ளும் வகையில் கவிநயத்துடன் ஞாபகத்தில் நிறுத்திக் கொள்ளும் வகையில் எளிய தமிழில் இலகுநடையில் அனை வரும் விரும்பும் மெட்டில் கவிபுனைந்துள்ளார்.

முதலில் பாரதியார் குழந்தைகளை வரிக்கு வரி ஆண், பெண் வேறுபாடின்றி செல்லமாக பாப்பா என 36 முறை விளித்து விளிப்படையச் செய்துள்ளார். இது கவிதை உத்தி மட்டுமல்ல உளவியல் ரீதியான ஒரு உத்தியுமாகும். நாம் ஒருவரை பெயரையோ, உறவுமுறையையோ விளித்து அக்கருத்துக்களைக் கூறும் போது செவிசாய்ப்பது அதிகம்.

ஒரு மனிதன் நல்லவனாக வல்லவனாக வாழ்வதற்கு உடல் உறுதி இன்றியமையாதது சிறு வரது உடலை உறுதியடையச் செய்வது உடற்பயிற்சியும் விளையாட்டும் ஆகும். அதனை ஓடி விளையாடு பாப்பா, கூடி விளையாடு பாப்பா என்ற வரிகள் ஊடாக விளக்கியுள்ளார். இன்றும் பாடசாலைகளில் காலையில் உடற்பயிற்சியுடனேயே பாடசாலைகள் ஆரம்பிக்கப்படுகின்றன. மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் விளையாட்டுப் போட்டி முக்கிய இடம் பெறுகின்றது.

அடுத்து மனித வாழ்விற்கு இன்றியமையாத அடிப்படைப் பண்பு இனியவை கூறல் ஆகும். இதனை இளமையிலேயே "ஒரு குழந்தையை வையாதே பாப்பா" என்று கூறுவதன் மூலம் அனைவருடனும் அன்புடன் இனிமையாக பேச வேண்டும் என்பதையும் ஒருவரையும் ஒதுக்கி வைத்தல் கூடாது என்ற சிந்தனையை வளர்த்துள்ளார்.

வாழ்க்கையில் ஒருவன் முன்னேற புறக் காரணிகள் எது இல்லாவிடினும் அகக்காரணியான "சுறுசுறுப்பு" மட்டும் இருந்தாலே அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னிறைவாக வாழ்ந்து வாழ்வில் வெற்றியும் அடைய முடியும். அந்த வகையில்

**"ஓய்ந்திருக்கலாகாது பாப்பா"**

**"சின்னஞ்சிறு குருவி போலே நீ**
**திரிந்து பறந்து வா பாப்பா"**

"சோம்பல் மிகக்கெடுதி பாப்பா" என்ற வரிகள் ஊடாக எந்த நேரமும் இயங்கிக் கொண்டிருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளார். இவ்வாறு ஒரு தனிமனிதனின் உடல் உள்ளம் எவ்வாறு இருத்தல் வேண்டும் என்பதை எளிமையும் இனிமையும் கலந்து கூறியுள்ளார். அடுத்ததாக "சூழல்" பற்றிய எண்ணக்கருவுக்குச் செல்கின்றார். சூழலில் காணப்படும் குருவி, கோழி, காக்கா போன்ற பறவைகளையும் பசு, நாய், குதிரை, மாடு, ஆடு போன்ற விலங்குகளையும் அவற்றின் குணப் பண்புகளையும் அவைக்கும் நமக்கும் இடையேயான தொடர்புகளைக் கூறுவதனூடாக பிள்ளைகளிடையே பிற உயிர்கள் மீது இரக்கம் காட்டவேண்டும் என்ற மனித நேயப் பண்பையும் சூழல் தொடர்பான நல்ல எண்ணக் கருவினை ஏற்படுத்தினார். இந்த அடிப்படையிலேயே இன்றைய பாடநூல்கள் இன்று தனிமனிதன், வீடு, சூழல், நாடு உலகம் என்ற அடிப்படையில் வைப்புச் செய்யப்பட்டுள்ளன. இவற்றுக்கு அடுத்தபடியாகவே குழந்தைக்கு தேவையான கல்வி அறிவு பற்றிக் கூறியுள்ளார். அதுவும் அதிகாலையில் கல்வி கற்பதனை அறிவுறுத்திக் கூறியுள்ளார். அதுமட்டுமல்ல அடுத்து மனதிற்கு இன்பமூட்டும் இசை, அதன்பின் விளையாட்டு அவசியம் என்பதை நான்கே வரிகளில் நறுக்காக கூறிச் சென்றார். அதையறியாத பெற்றோரும் மற்றோரும் பிள்ளைகளை காலையிலிருந்து மாலைவரை கல்வி நிலையங்களையும், கற்பிக்கும் நபர்களையும் நாடி ஓட ஓட விரட்டுகின்றனர்.

உளவியலாளரின் உளவியற் சிந்தனைகள், அறிவியலாளரின் அறிவியல் சிந்தனைகள் தத்துவவியலாளரின் தத்துவங்கள், உள்நாட்டு, வெளிநாட்டு கற்றல் கற்பித்தல் முறையியல்கள் என்பவற்றை உள்ளடக்கி குழுத்தெரிந்து கலைத் திட்டம், பாடத்திட்டம் என வடிவமைப்பவர்கள் மத்தியில் தனியொரு மனிதனாக ஒரு குழந்தையின் அறிவை எவ்வாறு விருத்தி செய்ய வேண்டும் என்ற சிந்தனையை எவ்வளவு அழகாக 6 பந்திகளில் 24 வரிகளில் 19ஆம் நூற்றாண்டிலேயே கூறியுள்ளார் என்பது விந்தையானது.

இவற்றையே இன்றைய நமது கலைத்திட்டத்தில் கூறப்பட்ட தேர்ச்சிகளில்

1. தொடர்பாடல் தேர்ச்சி
2. சூழல் தொடர்பான தேர்ச்சி
3. ஓய்வும் விளையாட்டும் தேர்ச்சி
4. கற்றலுக்காக கற்றல் தேர்ச்சி போன்றவற்றில் கூறியுள்ளார்.

அடுத்து நாம் மேற்கொண்டு ஏனைய பாடல் வரிகளை நோக்குவோமாயின் விழுமியக் கருத்துக்களையும் சமய நம்பிக்கையையும் இணைத்தே கூறிச் சென்றுள்ளார். அதனிலும் சமய காழ்ப்பு இல்லாத பொதுவான இறை சிந்தனை கூறிச் சென்றுள்ளமை சிறப்பிற்குரிய விடயமாகும்.

**"தெய்வம் நமக்குத்துணை பாப்பா – ஒரு**
**தீங்கு வர மாட்டாது பாப்பா"**
**"அன்பு மிகுந்த தெய்வம் உண்டு துன்பம்**
**அத்தனையும் போக்கிவிடும் பாப்பா"**

"தெய்வம் உண்மை என்று தானறிதல் வேண்டும்" என்ற அடிகளில் நமக்குமேலே ஒருவன் உள்ளான் அவன் நமக்கு அருள் புரிபவான் என்ற தெய்வ நம்பக்கையை ஊட்டுவதோடு இறை அச்சத்தையும் உண்டு பண்ணுகின்றது.

மேலும் பொய் சொல்லுதல், புறஞ் சொல்லுதல், தாய் சொல்லைத் தட்டுதல் ஆகாது என்ற விழுமியக் கருத்துக்களையும் கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிமனிதன் ஒவ்வொருவரும் சமநிலை ஆளுமை உடையவராக இருத்தல் வேண்டும் இல்லாவிடின் சமூகத்தின் சவால்களுக்கு முகம் கொடுத்து அவன் இவ்வுலகில் சஞ்சரிக்க முடியாது. இவற்றை வலியுறுத்தும் கருத்துக்களாக.

அநீதியைக் கண்டு துளவக் கூடாது, அவற்றை எதிர்த்து போராட வேண்டும், துன்பத்தைக் கண்டு சகிக்க வேண்டும் போன்ற கருத்துக்களைக் கூறியுள்ளார். மேலும் தாய், தாய்நாடு, தாய்மொழி இவற்றை மதிக்க வேண்டும் போற்றித்துதிக்க வேண்டும் எனக்கூறி தேசப் பற்றையும் ஊட்டியுள்ளார்.

வேற்றுமையில் ஒற்றுமை காட்டி சாதி குலம் இவற்றில் உயர்வு தாழ்வு பார்த்தல் பாவமான செயல் என்று கூறியுள்ளார். நீதி உயர்ந்த மதி கல்வி நிறைய உடையவர் கள் மேலோர் ஆவார் எனக் கூறி பிறப்பினால் யாரும் உயர்ந்தவர்கள் அல்லர் அவரவர் வாழும் முறை மையினாலேயே உயர்ந்த வர் எனக் கூறியுள்ளார்.

இறுதியாக உறுதியாக அன்பும் தெய்வ நம்பிக்கையும் வைராக்கியமும் (உறுதியான உள்ளம்) உள்ளவனாக வாழ் தலே வாழும் முறைமை என மனிதவாழ்வின் சிறுபிராயம் முதல் இறுதி வரை வாழ வேண்டிய வரன் முறையை பாப்பாபாட்டில் பாடி முடித்து விட்டார். மேற்கூறப்பட்ட கருத்துக்களை உள்ள டக்கியதாகவே

1. சமயமும் ஒழுகலாறும்
2. ஆளுமைவிருத்தி தொடர்பான தேர்ச்சிகள் அமைந்துள்ளன.

பாரதியார் பாப்பாட்டில் கூறப்படாத தேர்ச்சியான "வேலை உலகுக்கு தயார் செய்தல்" தொடர்பான தேர்ச்சி பற்றி நோக்குவோமாயின் அவர் இதுபற்றி கூறாவிட்டாலும் செய்யும் தொழிலை முயற்சியுடனும் சோம்பலின்றியும் மனஉறுதியுடனும் ஈடுபட்டால் எது எவ்வளவு சிறிய தொழிலாக இருந்தாலும் அதன்மூலம் பெரும் சிறப்பை அடைய முடியும்.

இவ்வாறு பாரதியாரின் பாப்பாப்பாட்டை நோக்கின் அவர் அந்த ஒரேயொரு பாடலிலேயே பாடக்கலைத்திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய பாட, இணைப்பாடவிதான செயற்பாடுகளையும் தேர்ச்சிகளையும் உள்ளடக்கியதான அனைத்து விடயங்களையும் அன்றே எடுத்துச் சொல்லியுள்ளார்.

சிந்திக்காதவன் முட்டாள்;
சிந்திக்கத்துணியாதவன் கோழை;
சிந்திக்க மறுப்பவன் பிடிவாதக்காரன்.

– டிரம்மண்ட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைத்திருநாளே வருக

கி. டனிஸ்
தரம் 5A

தமிழரின் திருநாள்
உழவரின் பெருநாள்
இன்பம் பொங்கும்
தைத் திருநாளே

சங்கடங்கள் பறந்து
தர்மங்கள் செய்து
தமிழ் மணம் கமழும்
திருமகள் போல
புதிதாய் பிறப்பெடுத்த
நாளே - தைத்திருநாள்

சூரிய பகவானைத் துதித்து
அனைவரும் கூடி
உணவுண்டு மகிழ
பிறந்த நாளே
தைத்திருநாள்

இன்பக் காற்று வீசி
இனிமையுடன்
நாம் வாழ
தைத்திருநாளே
வருக.... வருக....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்றங்கள் - 2012

வணிக மன்றம்

உளநல மன்றம்

ஆரம்ப பிரிவு மன்றம்

அழகியல் மன்றம்

மாணவத் தலைவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேடல்

தி.நிரோஜினி
2013 (12) கலை

சுடுகாட்டில் சுபீட்சம்
தேடும் மனிதனே!
உன் சிந்தனையை
சுருக்கங்கள் சுகம்
விசாரிக்கும் முன்
முட்டி மோதியவாறு
உன் இலட்சியத்தைத் தேடு!

காலம் கீறிடும் கவலைக்
கோடுகளின் கடிவாளம்
தன்னை ஆழப்புதைத்த - உன்
ஜீவனுக்குள் அலசி ஆராய்ந்து பார்
உனக்குள் நீ ஒவ்வொரு நாளும்
புதுப்பிக்கப்படுவதை யுணர்வாய்!

உள்ளுக்குள் இருந்து விடியலை
விலக்கும் கரிய படலங்கள்



எல்லாம் வெறும் கண்ணாம் பூச்சிகளே!
இருளிலும் நீ இங்கிதங்களை
மட்டுமே தேடு!

உயிரோட்டமுள்ள ஓவியங்களாய்
ஆத்ம நதிகளின் சங்கமத்தில்
அமைதி மட்டும் சந்தோஷிக்கட்டும்
சிந்தனைகள் எல்லாம் சிகரங்களை
நோக்கி சிறகடிக்கட்டும் வானிலே
உன் முகத்தில் முதுமைக் கோடுகள்
முஹாரி பாடும் முன், மானிடனே
இருளை விலக்கி - உன்
முகவரியைத் தேடு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலமானிய முறைமை

திரு. க. ஜெயக்குமார்
B.A.(Hons) Dip.in Edu
ஆசிரியர்

இடைக்கால ஐரோப்பாவில் நிலவிய சமூக, பொருளாதார, அரசியல் நிலைமைகளுக்கும், உறவுத் தொடர்புகளுக்கும் சேர்த்து வழங்கப் பட்ட பெயரே "மானிய முறைமை"யாகும் அந்த வகையில் மேற்கைரோப்பாவில் கரோலிங்கலியப் பேரரசின் வளர்ச்சியுடன் உருவாகிய ஒரு சமூக பொருளாதார அமைப்பு இதுவாகும். இச் சமுதாயம் சிறப்பாக அடிமைமுறைச் சமுதாயத்தின் பின்னரும் முதலாளித்துவ சமுதாயத்தின் முன்னரும் இடம்பெற்ற ஒரு சமுதாயத்தினையே குறிப்பிடுகின்றது. இந்த நிலமானிய முறைமை யானது கி.பி 9ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்று, 10ஆம் 11ஆம், 12ஆம் நூற்றாண்டுகளில் சிறப்பாக வளர்ச்சியடைந்து பின்னர் 13ஆம் நூற்றாண்டில் முடியரசுகளின் எழுச்சியோடு சீர் குலைந்தது. எனினும் தற்காலம் வரை இந்த அமைப்பின் சில அம்சங்கள் சமுதாயத்தில் தொடர்ந்தும் பேணப்பட்டு வருவதைக் காண முடிகிறது.

**மானியமுறைமையின் அடிப்படை இயல்புகள்**

புவியியல் ரீதியாக நோக்குமிடத்து நில மானிய முறைமையானது கரோலிங்கியப் பேரரசு செழிப்புற்றிருந்த இடத்திலே, அதாவது பிரான்ஸ், ஜேர்மனி, தென்இத்தாலி, சிசிலி போன்ற நாடுகளிலும் சிலுவைப்போர் வீரர்களால் சிரியாவிலும் பரப்பப்பட்டது. அரசியல் ரீதியாக நோக்குமிடத்து அரசொன்றின் அதிகாரங்களை நிலப்பிரபுக்களுக்குப் பிரித்து வழங்கும் தன்மையையும் சமூக ரீதியில் நோக்குமிடத்து குடிமக்கள் நிலப்பரப்புக்களில் தங்கியிருக்கும் தன்மையினையும் காணலாம். அதாவது இராணுவ சேவைக்காகவும், பிற சேவைகளுக்காகவும் நிலச் சொத்தக்களை வழங்குவதற்காகச் செயற்பட்ட ஒரு நிறுவன அமைப்பே மானிய முறை அமைப்பெனக் கூறலாம். சமுதாயத்தில் குருமார்கள், பிரபுக்கள், போர்வீரர்கள், தமியர்கள், நிந்தகம், கோவிற்பற்றுக்கள் போன்ற பிரிவுகளைக் கொண்டதும் அப்பிரிவுகளுக்கிடையே அன்னியோன்னியத் தொடர்புகள் உடையதும் தனியான இலட்சணங்கள் பலவற்றைக் கொண்டதுமான ஐரோப்பாவின் சிறப்பு மிக்க அமைப்பே நிலமானிய முறைமையாகும்.

சமுதாயம் எனும் போது பெருமளவில் தனித்தியங்கும் அல்லது பொருளாதாரத்தில் தன்னிறைவுடைய ஒரு மக்கட் கூட்டத்தினர் ஒரு குறிப்பிட்ட அமைப்பிற்குட்பட்டவராய், தமக்கெனப் பண்பாட்டையும் குறிப்பிட்ட பிரதேசத்தினையம் உடையவர்களாக இருக்கும் போதுதான் தனிச் சமுதாயமாகி விடுகின்றனர். அச்சமுதாயம் பல பிரிவினரிடையே ஏற்படுகின்ற பொருளாதாரத் தொடர்புகளின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது. மக்கள் தமக்கு ஏற்படும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஒன்று கூடிக் கூட்டு முயற்சியில் ஈடுபடும் போது ஏற்படும் தொடர்புகளே இச்சமுதாயத்தின் அடிப்படையாக அமைகிறது.

"Feudalism" என்று ஆங்கிலத்தில் வழங்கப்படும் நிலமானிய முறைமையானது "Feudam" என்ற இலத்தீன் மொழியிலிருந்து பெறப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகும். இம்மொழியில் அங்கீகரிக்கப்பட்ட நிலச் சொந்தரக்காரனிடமிருந்து இராணுவ சேவைக் காகப் பெறப்பட்ட நிலத்தை வைத்திருக்கும் குடி மகனை இப்பதம் குறித்தது. இந்நிலமாகிய அமைப்பின் அடிப்படை அம்சங்களாக நிலப் பிரபுக்களுக்கும், விவசாயக் குடிமக்களுக்கு மிடையே ஏற்பட்ட சில பரஸ்பர உறவுகள் இச் சமுதாயத்திற்கே உரித்தான சிறப்பம்சமாகும். மற்றும் மன்னனுடைய அல்லது மத்திய அரசினுடைய நேரடி நிர்வாகத்திற்குப் பதிலாக அந்தந்தப் பிரதேச நிலப்பிரபுவின் வழக்கிலிரு ந்து தனிநபர் நிர்வாக முறை காணப்பட்டது. அதாவது பொதுமக்கள் மன்னனால் நேரடியாக ஆளப்படாது அந்தந்தப் பிரதேசத்தில் ஆதிக்கம் செலுத்திய நிலப்பிரபுவினால் ஆளப்பட்டமை நிலமானிய முறைமையில் அடிப்படை அம்சங் களில் ஒன்றாகும். குறிப்பிட்ட சில சேவைகளுக் காக அச் சேவைகள் வழங்கப்படும் காலம்வரை குறிப்பாக இராணுவ சேவைக்காக நிலங்கள் மானியமாக வழங்கும் முறையும் இவ்வமைப் பில் நிலப்பிரபுக்கள் தமக்கெனப் பிரத்தியேகப் படைகளை வைத்திருந்த தன்மையும் காணப் பட்டது. எனவே விவசாயக் குடிமக்கள் மீது பிரபுக்களின் ஆதிக்கம் மேலோங்கிக் காணப் பட்டது.

**மானியமுறைமை தோன்றுவதற்கு வழிவகுத்த காரணிகள்**

வலிமைமிக்க உரோமப் பேரரசு வீழ்ச்சி யடைந்த பின்னர் அந்த இடத்தை நிரப்புவதற்குத் தகுதியுள்ள அரசோ, அல்லது ஒழுங்கு முறையோ காணப்படவில்லை. ஆனால் அப்பேரரசு இருந்த விடத்தில் வலிமைமிக்க பேரரசொன்றை ஏற் படுத்துவதற்கு பல முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. குறிப்பாக மெரோவிங்கிய, கரோலிங்கி யப் பேரரசர்கள் சிலர் ஐரோப்பாவை ஒன் றிணைக்க முயன்று அதில் சிறிதளவு வெற்றியுங் கண்டனர். அந்தவகையில் குளோவிஸ், சார்ளி மேன் போன்ற மன்னர்கள் குறிப்பிடத்தக்கவர் கள். ஆனால் சார்ளிமேனனி மரணத்தின் பின்னர் கரோலிங்கியப் பேரரசு பல்வேறு காரணங்க ளால் வீழ்ச்சியுறவே ஐரோப்பாவில் ஓர் உறுதி யற்ற அரசியல் நிலைமை காணப்பட்டது. இக் காலகட்டத்தில் இரண்டாவது தடவையாக மேற்கைரோப்பாவில் நோர்மன் (Norman) ஹங்கேரியன் (Hungerian) போன்ற ஜேர்மனிய இனக்குழுக்களின் படையெடுப்பு ஏற்பட்டது. இத் தாக்குதல்களால் ஐரோப்பாவில் நிலைபெற்றிரு ந்த அரசியல் ஒழுங்கும் அமைதியும் தளர்வ டைந்தது.

சமுதாயத்திலே வலுவுள்ளளோர் வலுவற் றோரைத் துன்புறுத்தினர். அவர்களின் நிலங்கள் பறிக்கப்பட்டதோடு அடிமைகளாக்கப்பட்டனர். எனவே நாட்டில் அரசியற் குழப்பங்கள் மலிந்து காணப்பட்டன. இந்நிலையில் நாட்டுத் தலை வர்கள் கொடுக்கத் தவறிய பாதுகாப்பு மற்றும் ஏனைய ஆட்சிப் பொறுப்புக்களை மக்கன் நிலப் பிரபுக்கள், மேற்றிராணியர்கள், கோமகனார் கள், கோட்டத் தலைவர்கள் போன்றோரிடமிரு ந்து பெறமுயன்றனர். மக்கள் தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்வதற்குச் செய்த முயற்சியின் பயனாய் ஏற்பட்ட வழக்கங்களும் வாடிக்கைக ளுமே நிலமானியக் கொள்கைகளை உருவாக் கின. வலிமையற்றவன் தனது உடமைகளை ஒரு நிலப்பிரபுவிடம் ஒப்படைத்துவிட்டு அவருடைய பாதுகாப்பைப் பெற்று அவருக்குக் கீழாள் ஆகி விடுகின்றான். அதாவது 9ஆம் 10ஆம் நூற் றாண்டுகளில் ஐரோப்பாவில் நிலவிய குழப்ப நிலை வலுவற்ற மக்களை இவ்வாறு செய்யும்படி வற்புறுத்தின. இந்தச் சூழ்நிலையில் சமுதாயம் சிதைவுறாமற் காத்து அதில் ஒன்றுபட்ட தொடர்பு களை ஏற்படுத்திய பெருமை நிலமானிய அமைப்பையே சாரும். நிலவுரிமை அடிப்படை யில் ஏற்பட்ட இம்முறைமையே புகழ்பெற்ற கிரேக்க உரோமானிய அரசுகளின் காலத்திற்கும் தற் காலத்திற்குமிடையே பாலமாக அமைந்துள்ள தைக் காணமுடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருண்ட காலத்திற் தோன்றிய நிலமானியச் சமுதாயமானது இடைக் காலத்தில் மேற்கை ரோப்பாவெங்கும் செழித்தோங்கியிருந்தது. எல்லா நாடுகளிலும் இம்முறை காணப்பட்டா லுங் கூட அவை ஒரு கட்டுக்கோப்பானதாக அமையவில்லை. நாட்டுக்கு நாடு, மானிய தாருக்கு மானியதார், பண்ணைக்குப் பண்ணை இந்த அமைப்பின் நுண்ணிய விபரங்கள் வேறு பட்டன. ஆட்சி குலைந்து, அரசியற் குழப்பங்கள் நிறைந்த சூழ்நிலையில் நிலமானியக் கொள்கை உருவாகியதல் இவ்வம்சமானது ஒரே சீராக இருக்கவில்லை. அவ்வம்சம் நிலவுகின்ற நாட்டு நிலைக்கேற்ப மானியதாரும் கீழாட்களும் பேரம் பேசி ஒப்பந்தம் செய்து கொண்டனர். பல் வேறு ஒப்பந்த மாறுதல்களாலும் புறநடைகளாலும் ஒவ் வொரு பொதுவிதிக்கும் விலக்குகளும் காணப் பட்டன.

பிராங்கிய மானிய முறையானது கி.பி 1066 இல் நோர்மன் (Norman) இனக்குழுக்கள் பிரான் ஸைக் கைப்பற்றியதன் விளைவாகப் பிரான்ஸி லிருந்து இங்கிலாந்திற்குப் பரவியது. அங்கே மிகவும் வளர்ச்சியடைந்து ஸ்கொட்லாந்து, வேல்ஸ், அயர்லாந்துப் பிரதேசங்களுக்கும் பரவியது. பிரெஞ்சுப் படையெடுப்புக்களாலும் தீரச்செயல் புரிபவர்களாலும் மானிய நிறுவன அமைப்பு முறை ஸ்பெயின், இத்தாலி, சிசிலி போன்ற நாடுகளுக்குப் பரவியது. பின்னர் சிலு வைப்போர் வீரர்களால் சிரியாவிலும் பரப்பப் பட்டது. ஜேர்மனிய மானிய முறைமை மிகவும் வளர்ச்சியடைந்து வலிமை பெற்று ஸ்கண்டி நேவியாவிலும், பரிசுத்த உரோமப் பேரரசின் பரிசுத்த உரோமப் பேரரசு Holy Roman Empire கிழக்கெல்லைப் புறங்களிலும் பரவியது. இந்த அமைப்பானது பிரான்ஸில் புரட்சிக்காலம் வரை யிலும், ஜேர்மனியில் 19ஆம் நூற்றாண்டின் இறுதி வரையிலும் நீடித்தது. இவ்வாறாக ஐரோப்பிய நிலமானிய முறைமை 1000 ஆண்டுகளுக்கு மேலாக ஐரோப்பிய சமூகத்தின் சிறப்புக் கூறாய் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

**மானியமுறையின் சிறப்பியல்கள்**

கட்டுப்பாடற்ற நிலவுரிமை மன்னர் ஒருவரு க்கே இருந்தது. "நிலத்தை மன்னன் ஆண்டவனிட மிருந்து பெற்றதாகக்" கருதும் வழக்கம் நிலவிய துடன் தனது தேவைக்கு எஞ்சிய நிலத்தை நில மானிய முறையில் பிரபுக்களுக்குப் பகிர்ந்தளித் தார். பிரபுக்கள் நிலத்தைப் பயன்படுத்தினாலும் கூட நிலம் அவர்களுடையதன்று. நிலத்தைப் பெற்ற பிரபுக்கள் அதன் பெரும்பகுதியை மெல் மானியதாருக்கு வழங்கினர். இவர்களிடம் நிலத் தைப் பெற்றோர் கீழாட்களாவர். இவர்கள் மேலும் தமது நிலங்களை உட்குடிமக்களுக்கு வழங்கி னர். இவ்வாறாக சமூகத்தின் அனைத்துப் பிரிவி னரும் நிலத்தினால் ஒருவரோடொருவர் இணைக்கப்பட்டிருந்தனர். சமுதாயத்தின் அடிமட் டத்திலிருந்து நிலத்தில் உழைத்தோர் அடிமை ஊழியர்கள் எனப்பட்டனர். இவர்கள் நிலத்தை விட்டு விலக முடியாது நிலம் கைமாறும் பட்சத் தில் அவர்களும் நிலத்துடன் மாறவேண்டியிருந் தது. நிலத்துடன் இணைக்கப்பட்டிருந்த அடிமை கள் பிரபுவிற்குச் செய்ய வேண்டிய பணிகள் வரையறுக்கப்படவில்லை. அவர்கள் அடிமை வாழ்விலிருந்து விடுபடுவதற்கு மதகுருவாதல், ஆண்டைக்குப் பொருள் கொடுத்துப் பண்ணை அடிமையிலிருந்து விலகுதலாகிய இரு வழிகள் இருந்தன.

மானிய முறைமையில் விவசாயமே முக்கிய மான தொழிலாகக் காணப்பட்டது. அந்தந்தப் பிர தேசத்திற்குத் தேவையான உணவை அவர்களே உற்பத்தி செய்தனர். சுயதேவையைப் பூர்த்தி செய்யும் கிராமங்களே இவ்வமைப்பில் முக்கி யத்துவம் பெற்றன. இச் சமுதாயத்தில் வர்த்தகம், கைத்தொழில் போன்ற துறைகள் வளர்ச்சியடை வதற்கான வாய்ப்புக்கள் ஏற்படவில்லை. எனவே நிலச் சொத்துக்களே இவ்வமைப்பில் முக்கிய இடம் பெற்றன. சமூகத்தில் ஒருவரின் அந்தஸ்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலத்சொத்தை அடிப்படையாகக் கொண்டே தீர்மானிக்கப்பட்டது. குடியானவன் பிரபுவின் நிலத்தைப் பயன்படுத்திப் பயிர் செய்த, உற்பத்தியில் ஒரு பகுதியை அவருக்குக் கொடுக்கும் வழக்கம் நிலவியது. மற்றும் நிலப்பிரபுவிற்குக் குடியானவர் இராணுவ சேவையும் செய்ய வேண்டியிருந்தமையால் ஒரே நேரத்தில் விவசாயியாகவும் போர் வீரனாகவும் பயிற்சி பெற வேண்டிய நிலையில் இருந்தமையைக் காணமுடிகிறது.

நிலவுரிமை முறையை அடிப்படையாகக் கொண்ட ஒன்றித்த ஒப்பந்தங்களால் சீரமைக்கப்பட்ட சமுதாயமாக நிலமானியச் சமுதாயம் காணப்படுகிறது. அந்தவகையில் ஒரு பெரிய நிலப்பிரபுவின் கீழாட்களாகவே ஒவ்வொரு மானியதாரும் விளங்கினர். மானியதார்களும், கீழாட்களும் பிரபுவிற்கு மண்டியிட்டு அவரிடம் தன்னை ஒப்படைத்துக் கொண்டதோடு, என்றுமே அவருக்கு விசுவாசமாக இருப்பதாகவும் வாக்குறுதியளித்தனர். அவர்களின் ஊழியத்தை ஏற்ற பெரிய நிலப்பிரவு ஒரு சின்னத்தை அவர்களுக்கு அளித்து அவர்களைத் தனது மானியதார்களாக்கினார். அவர்களுக்குள் ஆண்டை கீழாள் என்ற உறவு ஏற்பட்டது. எனவே தாம் பெற்ற நிலத்திற்காக கீழாட்கள் போர்ப்பணி செய்ய வேண்டும். பதிலாக நிலப்பிரவு கீழாட்களுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டும். இவ்வாறாக மன்னன் முதல் சாதாரண குடிமக்கள் வரை அனைவரும் ஒப்பந்தங்களினாற் பிணைக்கப்பட்டிருந்தனர். ஒரு மனிதனுக்கு நிலத்துடன் இருந்த தொடர்பு தான் அவனது சமூக கலாச்சார அரசியற் தொடர்புகளை நிர்ணயித்தது. அரசியற் குழப்பங்களால் உந்தப்பட்ட இத்தகைய ஒப்பந்தங்கள் நிலமானிய முறைமையை உருவாக்கியது என்று கூறின் மிகையாகாது.

இவ்வாறு தோற்றம் பெற்ற நிலமானிய முறைமையானது நாளடைவில் ஓர் அரசியல் முறைமையாகவும் மாறியது. நிலப்பிரபுக்கள் தமக்குக் கீழிருந்தோர் மீது நிலம் சம்பந்தமான அதிகாரங்களையும் அரசியலதிகாரங்களையும் செலுத்தலாயினர். இத்தகைய வழக்கம் வேரூன்றவே மன்னனுக்கும் மக்களுக்குமிடையிலான நேரடித் தொடர்பு இல்லாமற் போயிற்று. மன்னன் மக்களால் அறியப்பட்ட ஒருவராகவே விளங்கினரேயன்றி, பிரபுக்களின் குறைபாடுகளை மன்னனிடம் முறையிடுமளவிற்கு மக்கள் வல்லமை பெற்றிருக்கவில்லை என்றே கூறலாம்.

நிலமானியச் சமுதாயத்தின் முக்கியமான கீழாட்கள் போர்வீரர்களேயாவர். இரும்புக் கவசமணிந்த குதிரை வீரர்கள் (Knights) சில ஆண்டு காலப் பயிற்சியின் பின்னர் சமயப் சடங்குகளுடன் வீரர்களாவார்கள். இவர்கள் திருச்சபைக்கும், எளியோருக்கும், பெண்களுக்கும் உதவும் பெருந்தன்மையும் ஆண்மையும் பெற்றிருந்ததோடு, நிலமானியச் சமுதாயத்தின் பிரதான கூறாய் இடைக்காலத்தில் உருவாகியிருந்தனர். அக்காலத்தில் ஏற்பட்ட போர்கள் கொடுமையிலும், கொள்ளையிலும் முடியாதவாறு அவற்றின் பண்பை உயர்த்த முயன்றோர் இவ்வீரக் குழாத்தினரே. துணிவு, நாட்டுப்பட்டு, வாய்மை, கொடைப் பண்பு, பற்றுறுதி போன்ற இன்னோரன்ன நற்பண்புகளுக்குச் சான்றாய் இவ்வீரச் சமுதாயம் விளங்கியது. இவர்கள் மனித வாழ்க்கை முறைகளை உயர்த்துவதற்கு முயன்றதோடு, சமுதாயத்தில் பெண்களின் நிலைமை மதிப்பிற்குரிய தாக்குவதற்கும் பெரும் பணியாற்றினார். இவ்வீரர்களின் குறிக்கோள் மிகவும் உயர்வாக இருந்தமையால் நடைமுறைக்குப் பெரிதும் பொருந்துவதாக அமைந்திருக்கவில்லை எனலாம். எடுத்துக்காட்டாக கறுப்பங்கி இளவரசரும், வீரக் குழாத்தினரில் தலைசிறந்தவருமான ஆங்கில நாட்டைச் சேர்ந்த எட்வேட் (Edword) என்பவர் பெருந்தொகையான கொலைகளைச் செய்துமே நாட்டின் அமைதியை ஏற்படுத்த முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10ஆம் நூற்றாண்டிலிருந்த 13ஆம் நூற்றாண்டு வரை நன்கு வளர்ந்து உச்சநிலையை எய்தியிருந்த நிலமானிய அமைப்பானது ஆட்சிமுறை, நீதிவழங்கல், சட்டமியற்றல், படைச் செயற்குழு அதிகாரங்கள் போன்ற எல்லாவற்றுக்குமே அடிப்படையாகி விட்டது. சமுதாயத்தில் சட்டமும், அறிவும் புறக்கணிக்கப்பட்டு வழக்கமும், சம்பிரதாயமும் மேலோங்கிச் சமுதாயத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தன. இறைமையோடு இணைந்துள்ள இக்கால உரிமைகள் பலவற்றையும் இடைக்கால நிலவுடைமை வழங்கியது. மானிய நிலத்தில் வாழ்ந்த மக்களைக் கட்டுப்படுத்துவதில் மானியதாருக்கு உரிமை இல்லையெனில் இடைக்காலத்தில் மானிய அமைப்பே இருந்திருக்க முடியாதெனலாம்.

நிலமானிய முறையானது சமுதாய வளர்ச்சியில் இயற்கையாக ஏற்பட்ட ஒரு படியெனக் கொள்ள முடியும். அந்தவகையில் அச்சமும் ஒழுங்கீனமும் நிலவிய வேளையில், அரசர்களால் அமைதியை நிலைநாட்ட முடியாதிருந்த காலத்தில், பேரரசை பிடித்த தலைவர்கள் மக்களை அடிமைப்படுத்திக் கொடுங்கோன்மையை நிறுவிய நேரத்தில், மற்றும் பண்பாடற்ற மிலேச்சர்களின் படையெடுப்புக்களினால் அரசுகள் பலவீனமுற்றிருந்த காலத்தில் இந்த அமைப்புத் தோன்றியது. இந்த இக்கட்டான காலப்பகுதியில் ஒருவருக்கொருவர் காப்புறுதி தரும் மிகப் பெரிய சமூக சாதனமாக நிலமானிய முறைமையே விளங்கியது. மற்றும் மிலேச்சப் படையெடுப்புக்களால் ஏற்பட்ட தொல்லைகளை ஓரளவு குறைத்து, போர்க் காலத்தில் மக்களுக்குப் பாதுகாப்பளித்து அமைதியை நிலைநாட்டும் சாதனமாகவும் அரசர்களின் அவாவினையும் கொடுங்கோலர்களின் நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்திய அமைப்பாகவும் விளங்கியது. மற்றும் ஒப்பந்த அடிப்படையில் வளர்த்தெடுக்கப்பட்ட கொள்கையாதலால் ஒவ்வொருவருடைய கடமைகளும், உரிமைகளும் தெளிவாக்கப்பட்டு அடிமைத்தனம் ஏற்படாதவாறு தடுக்கப்பட்டது. ஐரோப்பாவில் எஞ்சியிருந்த அடிமைச் சின்னங்கள் ஒழிக்கப்பட்டு மனிதனின் மேன்மையும், சிறப்பும் வற்புறுத்தப்பட்டன. மற்றும் தற்காலத்தில் முக்கியத்துவம் பெறும் எண்ணங்களாகிய தனிமனித உரிமைக்கும் பிரதிநிதித்துவ ஆட்சி முறைக்கும் நிலமானிய அமைப்பே வழிகாட்டியாய் அமைந்ததென்றால் அக்கூற்றுப் பிழையாகாது.

ஐரோப்பிய மானிய முறைமை அமைப்பிலே திருச்சபையானது முக்கிய பங்கு வகித்தது. அந்த வகையில் பக்தி மிக்க பிரபுக்கள் தாம் மறுபிறப்பில் நன்மையடையும் பொருட்டு திருச்சபைக்கு நிலங்களைத் தானமாக வழங்கி வந்தனர். இத்தகைய திருச்சபை நிலங்கள் குருமார்களாலும், திருச்சபை ஊழியர்களாலும் பராமரிக்கப்பட்டன. இச் செல்வத்தை அனுபவித்த ஊழியர்கள், திருச்சபை மீதும், பாப்பாண்டவர் மீதும் வைத்திருந்த நம்பிக்கையை இழந்தனர். கூடியளவு வசதிகளை இவர்கள் அனுபவித்தமையால் திருச்சபையின் ஒழுங்கு முறைகளுக்கு மாறாக உலகியலில் கூடியளவு ஈடுபாடு கொண்டவர்களாக மாறத் தொடங்கினர். எனவே இத்தகைய நிலங்களைப் பராமரித்து வந்த திருச்சபை அதிகாரிகளுக்கும் திருச்சபைக்குமிடையே அடிக்கடி தகராறுகள் ஏற்பட்டன. திருச்சபை பெருமளவு நிலங்களைப் பெற்றமையால் மிகுந்த வலிமை பெற்று மன்னனுடனேயே மோதுகின்ற அளவிற்கு செல்வாக்குப் பெற்றிருந்தது. காலப்போக்கில் திருச்சபையும் மானிய நிறுவனமாக மாற்றமடைந்தமையால் மானிய முறை அமைப்பிலே பாப்பாண்டவருக்கும் மன்னனுக்குமிடையே அடிக்கடி தகராறுகள் ஏற்பட்டன. திருச்சபை பெருமளவு நிலங்களைப் பெற்றமையால் மிகுந்த வலிமை பெற்று மன்னனுடனேயே மோதுகின்ற அளவிற்கு செல்வாக்குப் பெற்றிருந்தது. காலப்போக்கில் திருச்சபையும் மானிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனமாக மாற்றமடைந்தமையால் மானிய முறை அமைப்பிலே பாப்பாண்டவருக்கும் மன்னனுக்குமிடையே அடிக்கடி முரண்பாடுகள் நடைபெற்றமையைக் காணலாம்.

அரசனின் அதிகாரங்கள் ஒரு வரம்பிற்குட் பட்டதாக இருக்கச் செய்த பெருமை நிலமானியப் பிரபுக்களையே சாரும். அந்தவகையில் ஆங்கில மன்னன் ஜோன் (John) என்பவனிடமிருந்து மகாபட்டயம் (Magna Carta) வாயிலாக நிலப்பிரபுக்கள் தமது உரிமையை நிலைநாட்டிக் கொண்டமையைக் குறிப்பிடலாம். மற்றும் இவ்வமைப்பு மன்னனுக்கு ஆலோசனை வழங்கவும் பிரபுக்கள் அரண்மனைக்குச் சென்று வந்த வழக்கமே நாளடைவில் பிரதிநிதிகள் அடங்கிய பாராளுமன்றம் தோன்றக் காரணமாகியது. முதலில் மன்னனின் ஆணைப்படி கூடிவந்த நிலமானிய மன்றம் (Feudal Assesmbly) இடைக்கால நகரங்களின் எழுச்சிக்குப் பின்னர் பாராளுமன்றமாக மாறி அரசாங்கத்திற்கு இன்றியமையாத அமைப்பாக மாற்றம் பெற்றமையும் குறிப்பிடத்தக்க சிறப்பியல்பாகும்.

மானியமுறைமை அமைப்பிலே செல்வம் தரும் முக்கியமான மூலமாக நிலமே விளங்கியது. எனவே பொருளியற் பலத்தை அதிகரிப்பதற்கு பெருமளவு நிலம் தேவைப்பட்டது. மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே பிரபுக்களுக்கு மன்னனால் நிலம் வழங்கப்பட்டமையால் விளை நிலங்களைப் பெருக்குவதற்கு போர் மூலம் கைப்பற்றல், திருமண உறவு மூலம் பெறலாகிய இரு மார்க்கங்கள் இருந்தன. விவாக உறவு பொறுத்து நிலப்பிரபு ஏற்கனவே மணம் புரிந்த சந்தர்ப்பங்களில் போர் மூலம் விளை நிலங்கள் பெறப்படுவதே சாத்தியமாக இருந்தது. எனவே இக்காலத்தில் அடிக்கடி போர்கள் நடைபெற்றன. பலத்தின் அடிப்படையில் கூடுதலான நிலத்தைப் பெற்ற பிரபு பிரான்ஸில் முடியாட்சி முறையை ஏற்படுத்தினாரெனக் கூறப்படுவதிலிருந்து நிலப்பிரபுகள் அக்காலத்தில் பெற்றிருந்த பலத்தினையும், முக்கியத்தினையும் அறிந்து கொள்ள முடிகிறது.

இடைக்காலத்தின் தேவையை நிறைவேற்றுவதற்குத் தோன்றி வளர்ந்த நிலமானிய அமைப்பு இல்லையெனில் ஐரோப்பா மீட்சியே இல்லாத அழிவினை எதிர்நோக்கியிருக்குமெனக் கருதப்படுகின்றது. குறிப்பாக 12ஆம், 13ஆம் நூற்றாண்டுகளில் பிரபுக்களின் ஆட்சித் திறமையால் சமுதாயம் முன்னேறியது. இச்சமுதாயத்தில் வாழ்ந்த வீரர்கள், துறவிகள் முதலியோரால் நாகரிகம் வளர்க்கப்பட்டது.

**வீழ்ச்சிக்கான காரணங்கள்**

இவ்வாறாக இடைக்காலம் முழுவதும் செல்வாக்குப் பெற்று ஐரோப்பிய சமூகத்தின் சிறப்புக் கூறாய் விளங்கிய நிலமானிய முறைமையானது பல்வேறுபட்ட காரணங்களால் தேய்வு நிலையடைந்து வீழ்ச்சியடைந்ததைக் காணலாம். அந்தவகையில் தேசிய அரசுகளின் எழுச்சி வர்த்தகவிருத்தி, புதிய நகரங்களின் தோற்றமும் அபிவிருத்தியும், போக்குவரத்துத் துறையில் ஏற்பட்ட விருத்தி, கலை, இலக்கிய விஞ்ஞானத் துறை வளர்ச்சி, சிலுவைப்போர்கள், வெடிமருத்துக் கண்டு பிடிப்பும், ஆயுத உற்பத்தியும், கொள்ளை நோய், பங்சம் போன்ற பல்வேறு காரணங்களால் கி.பி 13ஆம் நூற்றாண்டின் இறுதியில் தனது முக்கியத்துவத்தை இழந்த போதிலும் நிலமானிய முறைமையின் பல்வேறு பட்ட அம்சங்கள் இற்றைவரை செல்வாக்குச் செலுத்துவதைக் காணலாம்.

மானிய முறைமையின் வீழ்ச்சிக்கான காரணங்களில் தேசிய அரசுகளின் எழுச்சி மிக முக்கியமானதாகும். அதாவது கி.பி 11ஆம் நூற்றாண்டு முதல் 13ஆம் நூற்றாண்டு வரை நடைபெற்ற சிலுவைப் போர்களில் நிரப்பிரபுகள் ஈடுபட்டமையால் அவர்களின் படைப்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைவடைந்தமை தேசிய அரசுகளின் தோற்றத் திற்கு வழி வகுத்தது. அந்தவகையில் இங்கிலாந்து, பிரான்ஸ், ஸ்பெயின் போன்ற நாடுகளில் தேசிய முடியரசுகள் எழுச்சி பெற்று வலிமை மிக்க முடி மன்னர்களின் கைக்கு ஆட்சியுரிமை மாறியது. எனவே நிலமானிய முறைமைக்கு என்றுமே எதிரான முடியாட்சி முறை வலுப் பெற்றபோது இம் முறைமை சிதைவடைந்தது. மத்திய மயமான நிர்வாகம் வலுப்படுத்தப்பட்டு நிலப்பிரபுகளின் அதிகாரம் அடக்கப்பட்டது. 13ஆம் நூற்றாண்டிலேற்பட்ட வர்த்தகப் புத்துயிர்ப்புக் காரணமாக நகரங்கள் அபிவிருத்தியடைந்ததோடு புதிய நகரங்களும் பல தோற்றம் பெற்றன.

வெடிமருந்து கண்டுபிடிப்புக்களும், ஆயுத உற்பத்தியும் ஐரோப்பாவில் ஏற்படவே நவீன ஆயுதம் தாங்கிய தேசியப் படையினருக்கு முன்னே நிலப்பிரபுகளின் கவசமும், கோட்டையும் பயனற்றுப்போயின. இதனால் அரசர்களின் கை மேலோங்க நிலப்பிரபுக்கள் ஆதிக்கமிழந்தனர். மக்கள் உரிமைப் பத்திரங்கள் வாயிலாகவும், பல்வந்தமாகவும் நிலமானிய முறைமையிலிருந்து விடுபட முனைந்தமையும் இச்சமுதாய அமைப்பிற்கு உலைவைத்தது. மற்றும் அடிமை ஊழியர்களின் தொகை குறைவடைந்தமையால் மானியக் கட்டுப்பாடற்ற சுதந்திர ஊழியர்களைக் கொண்டே பிரபுக்கள் தமது நிலச் சாகுபடிகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. எனவே இத்தகைய காரணிகளும் நிலமானிய முறைமை சிறிது சிறிதாகத் தனது வலிமையை இழந்து வீழ்ச்சியடைய வழிவகுத்தது.

நகரங்களில் வாழ்ந்த மக்கள் நிலத்தை நம்பி வாழ வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. நகரங்களில் வர்த்தகம் முக்கிய விடயம் பெற்றமையால் நிலம் அதுவரை பெற்றிருந்த முக்கியத்துவத்தினைப் பணம் பெற்றுக் கொண்டது. மக்கள் பணங்கொடுத்து மானிய அடிமை முறையிலிருந்து விடுதலை பெற முடிந்ததோடு மன்னனுக்கும், பிரபுக்களுக்குமிடையிலான போர்களில், இப்புதிய வர்த்தக வகுப்பினர் மன்னன் பக்கஞ் சார்ந்து மன்னனுக்குப் பணவுதவிகளை வழங்குதன் மூலம் சமூக அந்தஸ்தைப் பெற்றுக் கொண்டதோடு போரில் மன்னன் வெற்றி பெறப் பக்கபலமாய் நின்றமையால் நிலமானிய முறைமை வீழ்ச்சியுற்றது.

14ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் தோன்றிய வர்த்தக கைத்தொழில் விருத்திகள் பெருமளவு மக்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கின. மற்றும் காட்டு நிலங்கள் அழிக்கப்பட்டு புதிய விளைநிலங்கள் பெறப்பட்டமையால் மக்கள் சுதந்திரமாக வாழ வழியேற்றப்பட்டது. மற்றும் சுதந்திர முடியரசுகளின் எழுச்சியுடன் நிலையான இராணுவம் உருவாக்கப்பட்டமையால் மானிய முறையிலமைந்த துணைப்படை படுதோல்வியுற்றது. எங்கெல்லாம் தேசியப்படை – மானியத்துணைப்படையை எதிர்த்துப் போராடினவோ அங்கெல்லாம் அவை எளிதில் வெற்றி பெற முடிந்தது. குறிப்பாக பிரான்ஸோடு நிகழ்ந்த நூற்றாண்டுப் போரில் பிரித்தானியர் வெற்றி பெற்றமைக்கு இதுவே காரணமாகும். மற்றும் புதிய போர் முறைகளின் அறிமுகம், பீரங்கிகள் போன்றனவும் மானிய முறைமையின் வீழ்ச்சிக்கு வழி வகுத்தது. ஆட்பல எண்ணிக்கையை விட ஆயுதபல மேலாதிக்கமானது நிலமானிய முறைமையின் வீழ்ச்சிக்கும் பிரபுக்களின் அதிகார ஒழிப்புக்கும் வலிமைமிக்க முடியரசர்களின் எழுச்சிக்கும் வித்திட்டது. சிலுவைப் போரினால் பெருமளவ மானியப்படைவீரர்கள் இறந்தமையும் மானியமுறையின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது.

தொகுத்து நோக்குமிடத்து இடைக்கால ஐரோப்பாவின் சிறப்புக் கூறாய் அக்கால அரசியல், சமூக, பொருளாதாரத் துறைகளில் முக்கியத்துவம் வாய்ந்த அமைப்பாக விளங்கிய நில


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிய முறைமையானது 13ஆம் நூற்றாண்டின் பின்னர் ஏற்பட்ட பல்வேறுபட்ட காரணங்களால் தளர்ச்சி நிலையடைந்து படிப்படியாக வீழ்ச்சியைத் தழுவிக் கொண்டாலும், இம்முறையானது தன்னகத்தே பல சிறப்பியல்புகளைக் கொண்டு விளங்குவதுடன் இற்றைவரை ஐரோப்பிய சமுதாய அமைப்பு மற்றும் அடிப்படை எண்ணங்களைப் பொறுத்தவரை நிலமானிய அமைப்பினையே பின்பற்றி வளர்ந்துள்ளது என்று கூறின் மிகையாகாது.


**உசாத்துணை நூல்கள்**

1. ச.சத்தியசீலன் – நாகரிகங்களுக்கோர் அறிமுகம், யாழ்ப்பாணம். 1994
2. T.V.சொக்கப்பா – ஐரோப்பிய வரலாறு, சென்னை, 1969
3. goorge Holmes - History of Medievel Europe New York - 1998
4. எஸ்.குருபரன் தினக்குரல் வாரமலர் (21.08.1998) “மத்திய கால ஐரோப்பா”
5. வாழ்வியற் களஞ்சியம் தொகுதி – 6, நிலப்பண்ணை முறை


## சிந்தனைத் துளிகள்

உண்மையை விலைகொடுத்து வாங்குங்கள்
ஆனால் விற்று விடாதீர்கள்

படித்துக் கெட்ட ஆணில்லை
பணிவால் கெட்ட பெண்ணில்லை

சுயநலம் என்பது குடிசை
பொதுநலம் என்பது அரண்மனை

வெற்றி என்பது பெற்றுக் கொள்வதற்கு
தோல்வி என்பது கற்றுக் கொள்வதற்கு

நினைத்தது கிடைக்கவில்லை என்று வருத்தப்படாதே
கிடைத்ததை நினைத்து பெருமைப்படு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதைக்கப்பட்ட கலசம்

அ. அஜந்தா
2014 வர்த்தகம்

வயிற்றுள்
கை துளைத்து
பிடுங்கி வீசப்பட்ட
கவசம்!

கீற்றிட்டு
பரப்பப்பட்ட
குருதி வயல்
வரம்பின்றி
அதைச்சுற்றி

எண்ணி
கணிக்க முடியாத
உயிர் அணுக்கள்
அசமந்தமாய் ....

முனைக்கரு கசிந்து
விதை காவப்பட்ட
நாற்று மேடை
சேற்றுச் சுற்றில்!

பிரளய இருண்மை
புரண்டு புரண்டு
இரட்டிப்பு
அரக்கத்தனத்துடன்! ....

உண்மை
நேர்மை
நேசம்
இவையுணர்த்திய
துடிதுடிப்பு
நேனல் ...

நீண்ட தொரு
இழப்பின் பின்
தாய்மைச் சான்றிதழ்
இழந்தவள்
அப்புறத்தில் ....

வெற்றித்தனம்
அண்டம் புரட்டி
அதன் மேல்
அவன்!

விசிறப்பட்டு
சிதைக்கப்பட்ட
அக் கவசம்
மென்மையாய்
அவள் கண்ணீரால்
கசக்கப்படுகிறது .....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்புப் பெயரால் குறிக்கப்படும் சான்றோர்கள்

இ. அபிரா
தரம் 8C

| சிறப்புப் பெயர் | இயற்பெயர் |
|---|---|
| கவிக்கோ | அப்துல் ரகுமான் |
| கவியரசு | வைரமுத்து / கண்ணதாசன் |
| மூதறிஞர் | இராஜாஜி |
| படிக்காத மேதை, கர்மவீரர் | காமராசர் |
| தமிழ் மாணவர் | போப்பையர் |
| சந்தக் கவி | அருணகிரிநாதர் |
| வள்ளலார் | இராமலிங்க அடிகளார் |
| காந்தியக் கவிஞர் | வெ. இராமலிங்கப்பிள்ளை |
| தமிழ்த் தென்றல் | திரு. வி. கல்யாணசுந்தரனார் |
| பன்மொழி வித்தகர் | தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் |
| மொழி ஞாயிறு | தேவநேயப் பாவாணர் |
| தத்துவக் கவிஞர் | திருமூலர் |
| பதிப்புச் செம்மல் | ஆறுமுகநாவலர் |
| குறிஞ்சிக்கவி | கபிலர் |
| இலக்கியச் சிங்கம் | நக்கீரன் |
| அருந்தமிழ்ச்செல்வி | ஔவையார் |
| கவி ராட்சதர் | ஒட்டகக்கூத்தர் |
| விடுதலைக்கவி | பாரதியார் |
| தமிழ்வியாசர் | நம்பியாண்டார்நம்பி |
| இன்தமிழ் ஏகநாதர் | திருஞானசம்பந்தர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளிக்காலம்

ச.சுவர்ணா
தரம் 11A

வெள்ளைக் கொக்குகளாய்
    வெண்நிற ஆடையணிந்து
வேற்றுமதம் பாராது
    வீறுநடை போடும் என்இனிய பாசங்களே!

வாழ்க்கை எனும் பயணத்திலே
    வடிவமைந்த பயமம்மா - எம்
மனதில் அழியாது இடம்பிடித்த - எம்
    அழகிய கல்லூரிப் பயணமம்மா

ஆனந்தமாய் "அ"விலிருந்து "ஃ" வரைக்கும்
    சுற்றித் திரியும் பள்ளியினை
அன்றெனும் ஒருநாளும் மறந்துவிட முடியாது
    அதனை அனுதினமும் எண்ணிட ஆனந்தம் பலகோடி

அன்பின் ஆலயமாம் எம் இராமநாதபுரம் ம.வி
    அதை எம் ஆத்மா உள்ளவரை மறந்துவிடமுடியுமா
பாசத்துடன் எமை அணைக்கும் ஆசான்களை
    பலவிதமாய் பாடினும் அது ஈடாகுமோ

ஆயிரம் கோடி நட்பிருந்தாலும்
    அவை எம் கல்லூரி நட்பாகுமா - அது
அதன் ஆனந்தத்தை தான் தந்திடுமா? - இல்லை
    அவை எல்லாம் நம் கல்லூரி வாழ்க்கையிலே

நாளை மலரும் பூக்களிடம் கேளுங்கள்
    அவையும் நம் கல்லூரி வாழ்க்கையின்
அர்த்தத்தை அச்சிலிட்ட ஆணிபோல்
    அழகாக விளக்கிடும்

கார் முகில் சூழ்ந்த வானத்தில்
    தோன்றும் வானவில்லும் ஏழு
வண்ண விழா பூண்ட - வானத்தில்
    தோன்றும் விண்மீனும் ஏழு
வாயடைக்கும் வாழ்வின் - உலக
    அதிசயங்களும் ஏழு
வன்னியிலே வாழ்ந்து காட்டும்
    எம் நண்பர்களும் ஏழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிமலை

சுயந்தன்
2013 கலை

புவியின் கோளவகத்தினுள் உள்ள பாறைக் குழம்பு (Magma) புவியோட்டின் பலவீனப் பிளவின் ஊடாக வெளியே வேகமாகப் பாயும் போது அவற்றை எரிமலை என்பர். புவியின் மேற்பரப்பு காலப்போக்கில் சிதைந்து கொண்டு போவதனால் புவியோடு பலவீனமடைகிறது. புவியோட்டின் கீழுள்ள உருகிய பாறைக்குழம்பு வெப்பநிலை அமுக்கம் என்பன காரணமாக அங்குமிங்கும் அசையத் தொடங்குகின்றது. அவ்வாறு அசையும் பாறைக்குழம்பு புவியோட்டின் பலவீனமான பகுதியைத் தகர்த்துக் கொண்டு வெளியே பாயும் போது பெரும் சத்தத்துடன் எரிமலைக் குழம்பு, சாம்ப் பாறைப் பொருட்கள், வாயுக்கள் என்பவ்றை வெளியே கக்குகின்றது. எரிமலை நிகழும் பகுதிகள் கூம்பு வடிவக் குன்றுகளாக மாறிவிடுகின்றன. கக்குகை இக்குன்றுகளின் உச்சிகளிலோ பக்கங்களிலோ நிகழலாம். சமுத்திரத்தை அடுத்த பகுதிகளில் புவியோட்டின் தடிப்பு குறைவாக இருப்பதால் அப்பகுதிகளல் எரிமலைகள் அதிகம் செயற்படு கின்றன.




எரிலைத் தோற்றத்திற்குத் தகட்டோடுகளின் செயற்பாட்டடிப்படையில் இன்று விளக்கந்தர முடியும் புவிக் கவசத் தகடுகள் ஒன்றிலிருந் தொன்று விலகும் போது ஏற்படும் பிளவூடாக மேல்மான்ரில் படையல் உருவாகும் பாறைக் குழம்பை வெளியே கக்குகின்றது சமுத்திர மத்திய மலைத்தொடர்களில் காணப்படுகின்ற எரிமலைகளின் செயற்பாடு இவ்வாறானதாகும். ஐஸ்லாந்து எரிமலையான ஹெக்லா தக்க உதாரணமாகும்.



கவசத் தகடுகளின் விலகள் விளைவு

சமுத்திர மத்திய மலைத்தொடர்களின் அடி வாரங்களில் சுழியோடிகளல் மேற்கொள்ள்பட்ட ஆய்வுகள் சமுத்திர நிலத்தில் எரிமலைக் குழம்பு பாய்ந்து படிந்திருப்பதை அறியத்தந்துள்ளன. கவசத்தகடு ஒன்று தான் நிலை காண்டு இருக்கும் இடத்தில் இருந்து எதிர் எதிர் திசைகளில் நகரும் போது விலகல் செயற்பா இடம்பெறுகின்றது இச்செயற்பாடு நிகழும் போது ஏற்படும் பிளவின் ஊாக மக்ா பாறைக்குழம்பு வெளியேறுகின்ற போது எரிமலை வெடிப்பு ஏற்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கவசத்தகடுகள் மோதி அமிழும் போது தோன்றும் எரிமலை

சமுத்திர ஓடும் கண்ட ஓடும் ஒன்றை யொன்று நோக்கி ஒருக்கும் போது அடர்த்தி குறைந்த சமுத்திர ஓடு கீழ்நோக்கி அமிழும் அவ்வாறு அமிழும் போது இடையோட்டிவேற் படுகின்ற வெப்பவாக்கவுந்தல் பாறைக் குழப்பை மேலோக்கிச் செலுத்துகின்றது. இதனால் கரை யோரங்களில் எரிமலை கக்குகை செய்கின்றன.

எரிமலைச் செயற்பாடு முக்கியமாக இரு வகைகளில் நிகழ்கின்றது (அ) எரிமலைக் குழம்பு (லாவா) மத்திய எரிமலை வாயொன்றி னூடாக வேகமாகக்கக்கப்படுதல் ஒரு செயற் பாடாகும். அதனால் உருவாகும் எரிமலை கூம்பு வடிவ மலையாகக் காட்சி தரும் (ஆ) சிலவேளை களில் எரிமலைக் குழம்பு வெடிப்புக்கள் ஊடாக மெதுவாக வெளியே கசிந்து பரவும் அதனால் பெரும் எரிமலை மேட்டு நிலங்கள் உருவாகி யுள்ளன. இவ்விரு செயற்பாடுகளினாலும் எரி மலை வாயொன்றினூடாகக் கக்குகை நிகழ்த்தும் எரிமலைகள் மிக வேகமாகக் கூம்பு வடிவைப் பெற்று வளரக்கூடியவை. 1943இல் மெக்சிக் கோவில் கக்குகை நிகழ்த்திய பரிகுற்றின் எரி மலை ஒருசில மாதங்களில் 300m உயரமும், நேபாளத்திற்கு அருகில் கக்குகை நிகழ்த்திய மொன்ரே நியுவோ எரிமலைக் குழம்பு கசிவால் தோன்றிய மேட்டு நிலங்களாக இந்திய தக்கணம், தென்னாபிரிக்க டிறாகன்ஸ் பேக்மலை, ஐக்கிய அமெரிக்க கொலம்பியா சினேக் மேட்டுநிலம் முதலியன விளங்குகின்றன.

**எரிமலையின் செயற்பாட்டால் வெளியேற்றப்படும் பொருட்கள்**

**அ. வாயுப்பொருட்கள் :** கந்தகம், ஐதரசன், காபனீரொட்சைட் என்பனவும் வேறு பல்வகை வாயுக்களும் எரிமலைகள் கக்கும் போது வெளியேறுகின்றன. அத்துடன் நீராவியும் தூசுக்களும் ஏராளமாக வெளியில் கக்கப் படுகின்றன வெளியேறுகின்ற நீராவி பின்னர் ஓடுங்கிப் பெரும் மழையாகப் பொழியும்.

**ஆ. திண்மப் பொருட்கள் :** எரிமலைக் குழம்புப் பாறை, நூரைகல், தணல், சாம்பல், பாறைத் துண்டுகள் என்பன வெளியே கக்கப்படு கின்றன.

**இ. திரவப் பொருட்கள் :** எரிமலை கக்குகின்ற மிக முக்கியமான பொருள் திரவப் பொரு ளான எரிமலைக் குழம்பாகும். மேற்பரப்பை யடையும் உருகிய பாறைக் குழம்பே எரிம லைக் குழம்பாகும்.

**விளைவுகள்**

எரிமலைகளின் விளைவுகள் எப்போதும் பாரதூராமானவையாக இருந்திருக்கின்றன. கி.பி 79ல் விசூவியஸ் எரிமலைக் கக்குகையால் பொம்மை நகர் சாம்பலொலும் மண்ணாலும் கூடப்பட்டது. மேற்கு இந்தியத் தீவுகளில் பீலி மலைகக்குகை நிகழ்த்திய போது (1902) சென்பியரி நகரும் 30.000 மக்களும் முற்றாக அழிந்தனர் கிழக்கிந்திய தீவுகளில் உள்ள காறக் கற்றோவா எரிமலை வெடித்த போது (1883) 36.000 மக்கள் அழிந்தனர். அதன் கக்குகைச் சத்தம் 500km சுற்றாடலில் கேட்டது 35 மீற்றர் களுக்கு மேலாக அலைகள் ஏழுந்தன. இத்த கைய எரிமலைகள் பொதுவாகப் புவியோட்டின் பலவீனமான பகுதிகளை எடுத்துக் காணப்படு கின்றன. குத்தான கண்ட மேடைச் சாய்வுகள் இத்தகையன அதனால் தான் கடற்கரையோரங் களை அரித்து எரிமலைகள் அமைந்திருப்பதைக் காணலாம். தகட்டோட்டு விளிம்புகள் இவை யாகும். உலகின் ஏறத்தாழ 500 எரிமலைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றன. இவற்றில் 400 வரையில் பசுபிக் சமுத்திரத்தில் அமைந்துள்ளன. 80 எரிமலைகள் வரையில் அந்திலாந்திக் சமுத்திரப் பாகங்களில் அமைந்துள்ளன. பசுபிக் சமுத்திரத்தில் ஒரு மோதிர வளைவாக எரிமலைப் பரம்பல் அமைந்துள்ளது. புவி நடுக்க வலயங்களே எரிமலைகள்

இது காணப்படும் பிரதான பிரதேசங்களாக அமைந்துள்ன. காரக்கற்றோவா, பியூஜியாமா, மவுனோலோவா, கொற்றோபக்சி, பீலி, ஹெக்லா, விசூவியல், எட்னா என்பன மிக முக்கியமான எரிமலைகளாக விளங்குகின்றன.

இன்று உலகில் காணப்படுகின்ற எரிமலைகளை மூன்று பெரும் பிரிவுகளாகப் பாகுபடுத்தலாம். அவையாவன

அ. உயிர்ப் பெரிமலை

ஆ. உறங்கும் எரிமலை

இ. அவிந்த எரிமலை

இன்றும் வெடித்துக் கக்கிக் கொண்டிருக்கின்ற எரிமலைகளை உயிர்ப் பெரிமலைகள் என்பர். இன்று உலகில் 500க்கு றேப்பட் உயிர்ப் பெரிமலைகள் இருக்கின்றன. இன்று கக்குதலின்றி இருக்கின்ற எரிமலைகள் உறங்கும் எரிமலைகள் என்பர். இன்ற அவை உறங்கியிருந்தாலும் இருந்து விட்டு எரிமலைக் குழம்பைக் கக்கவிட்டு மீண்டும் அடங்கிவிடுவன என்னும் இவை உறங்கும் நிலையில் இருக்கும் போதே ஆவியைக் கிளம்பிக் கொண்டிருப்பன வெகு காலத்திற்கு முன்னர் கக்குகைகளை நிகழ்த்தி இப்போது வெகுகாலமாகத் தொழிற்பாது இருக்கிற எரிமலைகளை அவிந்த எரிமலைகள் என்பர். பிரித்தானியத் தீவுகளில் இவ்வகை எரிமலைகளைக் காணலாம்.

இயற்கை அனர்த்தங்களில் எரிமலைகள் இன்று முதன்மை பெறுகின்றன. எரிமலைத் தொழிற்பாடு புவி நடுக்கத்திற்கும் சுனாமி போன்ற கற்கொந்தளிப்புக்களுக்கும் காரணமாகின்றன.

**புவி நடுக்கங்கள்**

இயற்கை காரணங்களால் புவியோட்டின் ஒரு பகுதி சடுதியாக அதிர்ந்தால் அதனைப் புவி நடுக்கம் (பூகம்பம்) (Earthquake) என்பர். புவியோட்டின் கீழ்ப்பகுதிகளில் ஏற்படும் அகவிசைத் தாக்கங்களினால் தோன்றும் அலைகள் புவியோட்டின் ஒரு பகுதியை நடுக்கத்திற்குள்ளாக்குகின்றன. ஒவ்வொரு இரண்டரை மணி நேரத்திற்கும் பூமியில் எங்கோ ஓரிடத்தில் புவிநடுக்கம் நிகழ்கின்றது அவை அழிவுகளை ஏற்படுத்துவதில்லை ஆனால் சில வேளைகளில் மிக்க விசையோடு தொழிற்படும் புவிநடுக்கங்கள் பேரழிவுகளை ஏற்படுத்தி விடுகின்றன.

கடுமையான புவிநடுக்கம் ஒன்றிலிருந்து வெளிப்படும் சக்தி (Energy) உலகில் முதன்முதல் டித்த அனுகுண்டின் சக்தியைப் போல் பத்து மடங்கு சக்தி கொண்டதாகும்.

**விளைவுகள்**

உலகில் ஒவ்வொரு வருடமும் 4ம் நடுத்தர விசையோடான புவிநடுக்கங்கள் ஏற்படுகின்றன. இரு வருங்களுக்கு ஒருமுறை ஒரு சக்தி வாய்ந்த விசை கூடிய புவிநடுக்கம் ஏற்படுகின்றது. ஒவ்வொரு வருடமும் 40 தொட்டு 50 ஆயிரம் சிறிய புவிநடுக்கங்கள் ஏற்பட்ட வண்ணமேயுள்ளன. புவிநடுக்கத்தால் ஏற்படுகின்ற பாறைகளின் அசைவுகள் நதிகளைத் திசைமாற்றி விடுகின்றன. நிலச்சரிவுகள் ஏற்பட்டு பல்லாயிரக்கணக்கான மக்களைக் காவு கொள்கின்றன. குடிசைகள், வீடுகள், பெருங்கட்டிடங்கள், பாலங்கள் எனக் கட்டமைப்புகள் தகர்ந்து சரிந்து, அழிந்து போகின்றன. இவற்றோடு சமுத்திர அடித்தளத்தில் ஏற்படும் புவிநடுக்கம் பாரிய பேயலைகளைத் தோற்றுவித்துக் கரையோரங்களை தளர்த்தித் துடைத்து விடுகிறது புவிநடுக்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரடியாக மக்களைக் கொல்வதில்லை கட்ட மைப்புகள் தகர்வதனாலும் பேரலைகளினாலும் அவற்றுள் சிக்கி மனிதர்கள் மரணத்தைத் தழுவிக் கொள்கின்றனர் சடுதியாக வெளிப்படும் புவிநடுக்கத்தின் சக்தி இவற்றினை நிறைவேற்றி விட்டே ஓய்வு பெறுகிறது.

1906ஆம் ஆண்டு ஏப்பிரல் 18ஆம் திகதி காலை 5.12 மணிக்கு கலிபோர்னியாவை ஒரு கரூரமான புவிநடுக்கம் தாக்கியது. கலிபோர்னி யாவின் வடகரையோர நிலம் 450மஅ தூரத்தி ற்கு பிளந்து கொண்டது. குத்தாக 4.5மீற்றர் உயரத்திற்குப் பாறைப்படை குத்தாக உயர்ந்து கொண்டது இந்தப் புவிநடுக்கம் சான் அன்றோஸ் குறைத்தளத்திற்கு அருகே சான் பிரான்சிஸ் கோவில் உருவாயிருந்தது. கட்டிடங்கள் நிலை குலைந்து சரிந்தன மூன்று நாட்கள் எரிவாயு தீப்பற்றித் தொடர்ந்து எரிந்தது 3000 மக்கள் மரணித்தனர் 400 மில்லியன் டொலர்கள் சேதம் ஏற்பட்டது.

ஆறாம் நூற்றாண்டில் மத்திய தரைக் கடலில் ஏற்பட்ட புவி நடுக்கத்தால் 3 இலட்சம் மக்கள் பலியாகினார். 1908ஆம் ஆண்டு இத்தாலியின் ஏற்பட்ட நிலநடுக்கம் 28 வினாடிகள் நிலைத்தது ஆனால் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மக்க ளைப் பலிஎடுத்தது சீனாவில் 1920இல் நிகழ்ந்த புவிநடுக்கத்தால் 2 இலட்சம் மக்களும் 1917இல் நிகழ்ந்த புவிநடுக்கத்தால் 1 இலட்சம் மக்களும் கொல்லப்பட்டனர். 1923இல் டோக்கியோவில் நிகழ்ந்த புவிநடுக்கத்தில் 2½ லட்சம் மக்கள் அழிந்துபோயினர். சான் பிரான்சிஸ் கோவில் அடிக்கடி புவிநடுக்கம் ஏற்படுகின்றது. 1964மார்ச் 27ஆந் திகதி மாலை 5.15 மணிக்கு தென் அலாஸ்காவில் ஏற்பட்ட புவிநடுக்கம் 3 நிமிடங் கள் நிலைத்தது பதினைந்து பேர் மாண்டனர். 10 இலட்சம் சதுர Km பரப்பில் நில அதிர்ச்சி உணரப் பட்டது. 1989ஆம் ஆண்டு ஒக்டோபர் 17ஆந் திகதி சான் பிரான்சிஸ்கோ குடாவில் புவி நடுக்கம் ஏற்பட்டது. 67பேர் மரணமடைந்தனர் மேம்பாலங்கள் கட்டிடங்கள் சரிந்தன. 1993 செப்டெம்பர் 30 ஆந் திகதி இந்தியாவில் மகா ரஷ்டிர மாநிலத்தல் ஏற்பட்ட புவிநடுக்கத்தால் 35ஆயிரம் மக்கள் உயிரிழந்து போனினர். 1993 டிசம்ரில் தென்னிலங்கையிலும் சிறியளவு ஒரு புவி நடுக்கம் ஏற்பட்டது. புவிநடுக்கத்தால் நிலம்பிளவுற்றுப் போகும் கட்டிங்கள் வீதிகள் பாலங்கள் என்பன தகர்ந்து சரிந்து விடுகின்றன.

2005ஆம் ஆண்டு ஒக்டோபர் ாதம் பாகிஸ் தானின் வடபகுதியையும், வட இந்திய மாநிலங் களையும் பெரியதொரு புவிநடுக்கம் தாக்கியது. இது 7.9 ரிச்டர் அளில் ஏற்பட்டது. ஏறத்தாழ 5 ஆயிரம் மக்களும் 120க்கு மேற்பட்ட சிசுக்களும் அழிந்து போயினர்.

**புவிநடுக்கங்கள் எவ்வாறு ஏற்படுகின்றன?**
**இரண்டு விதங்களில் உருவாகின்றன.**

**1. இயற்கை காரணிகள்**

i. புவிப்பௌதிகவியற் காரணிகள்
ii. இடவிளக்கவியற் காரணிகள்
iii. வானிலையிற் காரணிகள
iv. எரிமலையியற் செயற்பாடு

**2. மனிதக் காரணிகள்**

புவிநடுக்கங்கள் தோன்றுவதற்குாய பிரதான காரணி புவிவசத்தகடுகள நகர்வு என இன்று பெரும்பாலும் முடிவாகின்றது. புவி கவசத் தகடுகள் நகர்வதனால் புவிநடுக்கங்கள் தோன்று கின்றன புவிக்கவசத்தகடுகள் குறித்து ஏற்கனவே அறிந்துள்ளோம் புவியோட்டின் கீழ்ப்பகுதிகளில் ஏற்படும் அகவிசைகள் தோற்றுவிக்கும் தாக்கத் தால் கவச தகடுகள் ஒன்றிலிருந்து ஒன்று விலகி யும், ஒருங்கியும், அமிழ்ந்தும் செயற்படுகின்றன. தகட்டோடுகளின் இந்த அசைவு புவிநடுக்கத்தை தோற்றுகின்றது.

1993ஆண்டு மகாரஷ்டிர மாநிலத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ந்த புவி நடுக்கத்திற்கு இந்தியக் கவசத்தகடு, ஐரே – ஆசிய கவசத்தகட்டினை நோக்கி நகர்ந் தமை காரணமென அறியப்பட்டுள்ளது. இந்த நகர்வு இன்னும் cm அளவில் தொடர்வதாகப் புவிச்சரிதவியலறிஞர்கள் கருதுகின்றனர். இதனால் நர்மதைப் பள்ளத்தாக்கு கோதவரி நதியின் தலைப்பளத்தாக்கு மேற்குக் கரையோர மலையன் வபாக கொய்னர் பகுதி என்ற எல்லை யுள் நிலத்தின் அடிப்பாகம் பிளவுற்றுள்ளதென வும் கண்டறந்துள்ளனர்.

புவிக்கவசத்தகடுகள் பற்றிய விளக்கமானது புவி நடுக்கங்களன் பரம்பலையும் தோற்றத்தை யும் நன்கு விளக்குகின்றது. குறைத் தளங்களூ டாக பாறைகள் அசையும் போது புவி நடுக்கம் ஏற்படுகின்றது. புவிநடுக்கம் ஒரு ஒடுங்கிய புவயியல் வலயங்களில் ஏற்படுகின்றது இந்த ஒடுங்கிய புவியியல் வலயங்கள் கவசத்தகட் டோடுகளின் விளிம்புகளாக இருப்பதைக் காண லாம். பசுபிக் சமுத்திரத்தில் புவிநடுக்கம் ஏற் படும் பகுதி ஒரு வட்ட வலயமாக இருக்கின்றது. இதனை Circum Pacific Bet என்றும் Ring of Fire என்றும் அழைப்பர். பூமியிலுருவாகின்ற புவி நடுக்கங்களில் அதிகமானவற்றின் உற்பத்திப் பிரதேசமாக இந்த பசுபிக் வட்ட வலயம் விளங்கு கின்றது. உற்பத்திப் பிரதேசமாக இந்த பசுபிக் வட்ட வலயம் விளங்குகின்றது. அடுத்த முக்கிய பகுதி மத்திய தரைக்கடல் – இமயமலை வலய மாகும். அடிவாரமூடாக கிழக்கந்தியத்தீவின் (சமாத்திரா – ஜால மேற்கோரமாகப் பசுபிக் வலயத்தினைச் சென்றடைகின்றது. இவற்றினை விட சமுத்திர மத்திய மலைத் தொடர்களை யடுத்து சக்தி குறைந்த புவிநடுக்கங்கள் ஏற்படு கின்றன.

பசுபிக் மோதிர வலயத்தில் புவிநடுக்கங்கள் எரிமலைகள், சமுத்திர அகழிகள் என்பன ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்பட்டுள்ளன இவ் விடங்களில் கண்டத்தகட்டுடன் சமுத்திரத்தகடு ஒடுங்கி கீழ் அமழும் போது சமுத்திர அகழி ஏற்படுகின்றது. அந்த அகழியிலிருந்து 300 தொட்டு 600 பாகை வரையிலான கோணச் சாய்வல் புவிநடுக்கங்கள் உருவாகும் மையங் கள் உள்ளன. புவியினுள் 670km ஆழம் வரை இந்த புவிநடுக்க மையங்கள் உள்ளன இவ்வாறு புவிநடுக்கங்கள் மையம் கொண்ட பகுதி "பெனிஓஃப் வலயம்" (Beni of Zone) என்பர் (பெனி ஓஃப் என்பவரால் கண்டறியப்பட்டது)

சமுத்திரக் கவசத்தகடு ஒன்றும் கண்டக் கவசத்தகடு ஒன்றும் ஒன்றுடன் ஒன்று ஒருங்கி மோதுவதாகக் கொள்வோம் சமுத்திரத்தகடு அடர்த்தி கூடியதாகையால் அடர்த்தி குறைந்த கண்டத் தகட்டின் கீழ் அமிழ்கிறது. அமிழும் கவசத்தகடு உயர் வெப்பநலையைக் கொண்ட மான்ரில் படையில் மோதிக் கரைந்து போகுமி யல்பினது மோதிக் கரைகின்ற ஆழம் 300km 350-400km அல்லது 450-670km இருக்கலாம். ஏதோ ஒரு மட்டத்தில் மோதும் போது ஏற்படும் உதறல், புவி நடுக்கமாகப் பரிணமிக்கின்றது. உதறலால் ஏற்படும் அபரிதமான விசை சக்தி பெரும் அனர்த்தங்களைப் புரிந்து விடுகின்றது.

புவிநடுக்கம் தோன்றுவதற்கு எரிமலைகளின் செயற்பாடுகளும் காரணமாகவுள்ளன எரிமலை கள் கக்குகை நிகழ்த்தும் போது புவிநடுக்கம் அயற் பகுதிகளில் தோன்றுகின்றது. எனனும் எரி மலைகளின் கக்குகைகளின் போது தோன்றும் புவிநடுக்கம் தீவிரமானதன்று புவியனுள் 240km ஆழத்திற்கும் கீழ்நில அதிர்ச்சிகள் அவதானக்கப் பட்டுள்ளன. இவற்றைப் பாதாளத்திற்குரிய நிலநடுக்கம் (Plutonic Earth Quake) என்பர். இதற்கான காரணம் இன்னமும் தெளிவாக விளக்கப்படவில்லை.

சிறியளவிலான புவிநடுக்கத்தினைத் தோற்று விக்கும் இடவிளக்கவியற் காரணிகளில் நிலச் சரிவுகள் மண்சரிவுகள் பனிக்கட்டித் திணிகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரிய சரிவுகள், பாறைச் சரிவுகள் என்பன புவி நடுக்கத்தைத் தோற்றுவிக்கின்றன. அத்தோடு பருக்கு அவைகளன் தாக்குதல், பெரும் நீர்த் தேக்கங்கள் நகர்வதால் ஏற்படும் வெள்ளப்பெரு க்கு என்பனவும் சிறியளவிலான புவிநடுக்கங்கள் ஏற்பக் காரணமாகின்றன.

**2. மனிதக் காரணிகள்**

புவிநடுக்கத்தைத் தோற்றுவிப்பதில் மனித னது நடத்தைகளும் துணை செய்கின்றன. கட்டி டங்களின் உடைவும் நகர்ப்பும் புவிநடுக்கத்தால் மனிதனுக்கு ஏற்படும் பெரும் இடராகும். புவி நடுக்கங்கள் மையம் கொள்கின்ற பகுதிகளுக்கு அண்மையில் பாரய கட்டிடங்களை மனிதன மைத்துக் கொள்கின்றான். அவனது அறிவின்மை அசட்டையீனம் புவிநடுக்க அலைகளின் தாக்கங் களுக்குச் சமாளிக்கக் கூடிய வடிவமைப்பின்மை ஆகிய அனைத்தும் உயிரழிவுக்குக் காரண மாகின்றன. புவிநடுக்கத்தின் நகர்ப்புறங்களில் ஏற்படும் தீபாவல் இன்னோர் பேரழிவுக் கருவி யாகும். நவீன உலகில் பயன்படுத்தப்படும் எரி பொருட்களும், வாயுக்களும் மின்சாரமும் நகர்ப் புறங்களல் வலைப்பின்னலாகக் குழாய்கள், கம்பிகள் மூலம் தரைக்கீழாயும் தரைமேலாயும் வழங்கப்பட்டு வருகின்றன. புவிநடுக்கத்தால் இவை சிதையும் போது இலகுவில் தீப்பிடித்துக் கொள்கின்றன. 1906இல் சான் பிரான்சிஸ் கோவில் ஏற்பட்ட புவிநடுக்கத்தால் அதக உயிர் அழிவு தீயினால் ஏற்படுத்தப்பட்டதென்பதை மறக்க முடியாது.

மனிதனால் செயற்கையாக ஏற்படுத்தப்படும் புவி நடுக்கங்களுமுள்ளன முக்கியமாக மூன்று மனித நடத்தைகளைக் குறிப்பிடலாம் அவை

1. நதிகளை மறித்து உருவாக்கும் பாரிய நீர்த் தேக்கங்கள்
2. பூமியைத் துளைத்து ஏற்படுத்தும் ஆழமான கிணறுகள்
3. நிலத்தடியில் அனுகுண்டுகளை வெடிக்கச் செய்து நடாத்தும் அனுப்பரிசோதனைகள்

கடந்த ஆண்டு இலங்கையன் மலைநாட்டில் உணரப்பட்ட புவி நடுக்கத்தற்கு ஒரு காரணமாக மகாவலி கங்கையில் அமைக்கப்பட்ட ஒன்பது பாரிய நீர்த்தேக்கங்கள் உருவாக்கிய புவி யோட்டு சமநிலைத்துவக் குலைவு கருதப்பட்டது. மகாராஷ்டிர புவிநடுக்கத்தற்கு நர்மதா நதியில் அமைக்கப்பட்ட இராட்சத நீர்த்தேக்கம் ஒரு காரணமாகக் கூறப்பட்டது. பெற்றோலியக் கிணறுகள் 10-12km வரை நிலத்தைத் துளை விட்டு ஆராய்ந்து பெறப்படுகின்றன சமுத்திரங் களில் துளையிட்டு ஆராய்ந்து பெறப்படுகின்றன. சமுத்திரங்களல் துளையிடப்படும் இவ்வாறான துளைகள், திடீரென சமுத்திரத் தகட்டினை உடை வுற வைத்து அபாதமான சக்தியை வெளிப் படுத்தும் போது புவிநடுக்கம் தூண்டப்படுகிறது வல்லரசுகள் நிலத்திற்கு அடியில் மிக இரகசிய மாக அணுக்குண்டுகளை வெடிக்க வைக்கன்றன. ஈரானில் அடிக்கடி தோன்றிய புவநடுக்கங் களுக்கு சோவியத் ரூசயா நிலத்தடியல் வெடித்த அணுக்குண்டுகளே காரணமென சில உலக நாடுகள் குற்றம் சர்டின.

புவி நடுக்கத்தினால் ஏற்படும் அலைகள் புவி நடுக்கப்பதி கருவிகளினால் பதிவு செய்யப்பட் டுள்ளன. அவ்வாறு தோன்றும் புவிநடுக்க அலை களை P–அலை (தலலை) S – அலை (துணை அலை) L – அலை (மேற்பரப்பு அலை) என மூன்றாக வகுப்பர். P அலைகள் செக்கனற்கு 8km வேகம் கொண்டவை இந்த அலையன் பாதை யில் குறுக்கீடும் ஒவ்வொரு துகளும் அலை பாயும் திசையில் முன்னும் பின்னும் சுருங்கி விரியும் இவை திடப்பொருட்கள், திரவப் பொருட்கள், அனைத்தையும் தங்குதடையின்றி ஊடுருவிச் செல்வன S – அலைகள் அதிர்வு அலைகளாகும். இவற்றன் வேகம் 4.5km செக் கன் ஆகும். இவை செல்லும் போது இவற்றின் பாதையிலிருக்கும் ஒவ்வொரு துகளும் செங்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத்தாக உயர்ந்து தாழும் இவை திடப் பொருட் களை மட்டுமே ஊடுருவிச் செல்வன இந்த S – அலைகளே புவநடுக்க அழிவுகளைத் தோற்று விப்பன L – அலைகள் வேகம் குறைந்தவை.

புவிநடுக்கம் தோன்றுமிடம் குவிமையம் எனப்படும் குவிமையத்திலிருந்து P அலைகளும் S அலைகளும் வெளிப்படுகின்றன. குவி மையத் திற்கு எதிரே அமைந்தது மேன்மையமாகும். மான்ரில் படையில் ஓரிடத்தில் (குவிமையம்) புவி நடுக்கம் உருவாகின்றது. அங்கிருந்து அதிர்வு அலைகள் புறப்பட்டு மேன்மையத்தி னைக் கடந்து புவியோட்டினைத் தாக்குகின்றன. அதனால் சேதாரங்கள் புவியின் மேற்பரப்பில் ஏற்படுகின்றன.

- புவியோட்டின் கீழ் மான்ரில் படையினுள் (700m ஆழம்) புவிநடுக்கம் (குவிமையம்) ஏற்படுகிறது.
- புவிநடுக்கம் தோன்றுமிடத்திற்கு மேலுள்ள புவியோட்டின் மையம் மேன்மையம் ஆகும்.
- புவிநடுக்க அலைகள் உருவாகின்றன அவை 9 றிச்டர் அளவில் தோன்றில் பரவுகின்றன. போகப்போக அவற்றின் வேகம் 8, 7, 6 ஆகக் குறைகின்றது ஆனால் 6 றிச்டர் அளவுக்கு மேலாயின் கட்டமைப்புக்கள் உடைந்து போகும்.
- புவிநடுக்கத்தால் நகரத்திலுள்ள கட்டிடங்கள் உடைந்து விழும் உயிர்ச் சேதமும் பொருட் சேதமும் ஏற்படும் கிராமமும் பாதிப்புறும்.
- அனை உடைந்து போகும் நீர்த்தேக்கம் உடைந்து வெள்ளமாகப் பாய்ந்து வீதிப் பாலத்தையும் துறைமுகத்தையும் பாதிப்புக் குள்ளாக்கும்.

புவிநடுக்கத்தின் தீவிரத்தைக் கணக்கீட்டு மெர்காலி ரோஸி போன்ற அறிஞர்கள் கணக்கி டும் அளவுகளைத் தந்துள்ளனர் புவிநடுக்கத் தைப் புவிநடுக்கக் கருவிகள் (Seismograph) பதிவு செய்தளிக்கின்றன.

புவிநடுக்க அலைகளின் தீவிரத்திற்கு ஏற்ப புவியின் மேற்பரப்பில் பல மாற்றங்கள் ஏற்படு கின்றன. நிலம் பிளவுறுதல், கடலலைகள் கொந் தளித்துக் கரையோரங்களைத் தாக்குதல், கட்டி டங்கள் அழிதல், மக்கள் பலியாதல் என்பன நிகழ்கின்றன.

**புவிநடுக்க விசையளவு**

புவிநடுக்க அலைகள் அளவிடுவதற்குப் புவி நடுக்கவியல் மானி (Seismometer) என்றொரு கருவி பயன்படுத்தப்பட்டு வருகின்றது. புவி நடுக்கம் ஏற்பட்டு நிலமதிரும் போது இந்தக் கருவி சூழலும் காகிதச் சுருளில் அலைகளைப் பதிவு செய்யும் அது புவிநடுக்கவியலை ஆராய் உதவும், புவி நடுக்க விபரமாகின்றது. புவி நடுக்கம் ஒன்றிக் சக்தியை அல்லது அளவினை இரு வழிகளல் அளவிடுவர். ஒன்று புவி நடுக் கத்திலிருந்து வெளிவரும் சக்தியினுள்ளார்ந்த அளவு (Magnitude) இரண்டு புவிநடுக்கத்தின் செறிவு (Intersity) புவிநடுக்கச் சக்தியின் உள் ளார்ந்த அளவு றிச்டர் அளவில் (Richter Scale) அளவிடப்படுகிறது. றிச்டர் என்ற புவி நடுக்கவிய லறிஞர் இந்த அளவீட்டினைக் கணித்தமையால் அவர் பெயரால் வழங்கப்பட்டு வருகின்றது. 0 இலிருந்து 10 வரையான ஒரு மடக்கை வாய்ப் பாட்டினடியாக றிச்டர் அளவு நிர்ணயிக்கப்பட் டுள்ளது. ஓரிடத்தில் உருவாகிய புவிநடுக்கத்தின் சக்தியினுள்ளார்ந்த அளவு 8.0 ஆயின் அது 7.0 றிச்டர் அளவுள்ள புவி நடுக்கத்திலும் பார்க்க 10 மடங்கு அதிக சக்தி 1 விசை கொண்டது என அர்த்தப்படும் 6.0 றிச்டர் அளவுள்ள புவி நடுக்கத் திலும் பார்க்க 100 மடங்கு அதி சக்தி கொண்ட தென அர்த்தப்படும் 8.0 றிச்டர் அளவிலான ஒரு புவி நடுக்கத்திலிருந்து வெளிப்பட்ட சக்தியானது 7.0 றிச்டர் அளவுடைய புவிநடுக்கம் வெளியிட்ட சக்தியிலும் பார்க்க 31 மடங்கு அதிகமானதெனக் கணித்துள்ளனர். இதுவரை பூமியில் 25 டிசம்பர் 2004 ஆம் திகதி வரை 8.9 றிச்டர் அளவுக்குக் கூடுதலாகப் புவிநடுக்கம் பதிவாகயது கிடை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாது இங்கு ஏற்பட்ட சுமாத்திராப் புவிநடுக்கம் 9.0 றிச்டர் அளவினதாகி கின்னஸ் சாதனை யைப் பதிவு செய்துள்ளது. 1960இல் சிலியில் ஏற்பட்ட புவிநடுக்கம் 8.5 றிச்டர் அளவினதாயும் 1964இல் அலாஸ்காவிலேற்பட்ட புவிநடுக்கம் 8.6 றச்டர் அளவினதாயும பதிவாகயுள்ளன. இந்த அளவினைச் சிலர் 9.5 றிச்டர் எனவும் பொய்ப்படக் கணித்துள்ளனராம்.

**புவிநடுக்கத்தை முன் கூட்டியே அறியலமா?**

புவிநடுக்கத்தினை முன்கூட்டியே அறிந்து எதிர்வு கூறல், ஆரம்ப நிலையிலே இன்றுமுள் ளது. இன்றும் பாரம்பரிய வாழ்க்கை முறையைக் கைக்கொண்டு ஒழுகும் மக்களிடையே மரபு வழிவந்த அல்லது விஞ்ஞான பூர்வமாக நிரூபிக்க முடியாத நம்பிக்கைகள் சிலவுள்ளன.

விலங்குகளின் விசித்திரமான நடத்தைகள் புவிநடுக்கம் ஏற்படப் போவதை எச்சரிப்பதாகச் சீனர் நம்பினர். குதிரைகள் அமைதி இழந்து தவிப்பதும், புற்றுக்களிலிருந்து பாம்புகள் திரளாக வெளியே வருவதும், எறும்புகள் சாரா சாரியாக உயரங்களை நோக்கி நகர்வதும் புவி நடுக்கம் ஏற்படுவதற்கான முன்னறிவித்தல்கள் என நம்பினர் எனினும் புவிநடுக்கம் ஏற்படப் போவதை முன்கூட்டியே அறிவதற்குச் சில நம்பகமான வழிவகைககளுள்ளன அவை

1. புவிநடுக்கப் பதிகருவிகளில் புவிநடுக்கம் ஏற்படும் போதே அலைகளன் வரையம் பதி வாகின்றது ஆனால் தரையின் பாறைகளில் ஏற்படுகின்ற திடீர் வெடிப்புக்கள் புவிநடுக்கம் ஏற்படப்போவதை முன்னறவிக்கின்றன. பாறைகள் உடைவுறுகின்ற ஒலி எழும் வெறுந்தரையில் படுத்து உறங்குபவன் கூட அந்தச் சத்தத்தைக் கேட்க முடியும்.
2. கிணறுகளில் நீர் மட்டம் தாழ்ந்தோ, உயர் ந்தோ மாற்றம் அடையும் பாறைப்படையில் ஏற்படுகின்ற உடைவுகாரணமாக நீர்மட்டம் கீழிறங்கவும், அவ்வுடைவுகளினூடாகப் பெருகி வரும் நீர், மட்டத்தை உயர்த்தவும் செய்யும்.
3. பாறை உடைவு காரணமாக புவியினுள்ளி லிருந்து அனல் மிகுராடன் வாயுக்கள் (Radio active radengas) வெளிவரும் யுரேனியமும் ஏனைய மூலங்களும் இரசாயன மாற்றமுறு வதால் உருவாகுவது ராடன் வாயுக்களாகும்.
4. அமெரிக்க யலோஸ்ரோன் பூங்காவில் தானாகவே நீரை வெளித்தள்ளும் ஒல்ட் பெயித் (Old paith) நீருற்றின் இயக்கத்தி லிருந்து அறிய முடிகிறது. நீரைத் தள்ளும் வேகத்திலும் இருந்து புவிநடுக்கம் ஏற்பட விருப்பதைக் கணிக்கின்றன.
5. சில பிரதேசங்களில் மேற்பரப்புத் தரையில் தோன்றும் பொருமலும் சிறிதளவு கட்புல னாக மேலுயர்வும் புவிநடுக்கம் ஏற்படுமென் பதை விஞ்ஞானிகளுக்குப் புலனாக்குகின் றன.
6. சீனர்கள் புவிநடுக்க மேற்படவிருப்பதை மிரு கங்களின் நடத்தைகளிலிருந்து கணிக்கின் றனர் ஏற்கனவே கூறியவாறு குதிரைகளின் அமைதியன்மை புற்றுக்களிலிருந்து பாம்புகள் வெளயேறல் என்பன புவிநடுக்க மேற்படப் போவதைக் கட்டியம் கூறுவதாகக் கொள்வர்.

யப்பானிய, ருசியப் பவிச் சரிதவியலறி ஞர்கள் ஏற்படவிருக்கும் புவி நடுக்கத்தை முன் கூட்டியே கணிப்பதில் வல்லுநர் 1975இல் 7.3 றிச்டர் சக்தியுடன் வடகீழ் சீனாவில் ஏற்பட விருந்த புவிநடுக்கத்தை 5மணி நேரத்திற்கு முன்பே கணிப்பிடப்பட்டறிவித்ததனால் இலட்சக் கணக்கான மக்கள் கணிப்படப்பட்டறிவித்தத னால் இலட்சணக்கான மக்கள் கட்டிடங்களை விட்டு வெளியேறியதால் தப்பினர். ஹெய்சிங் நகரத்தின் அரைப்பங்கு கட்டிடங்கள் நிர்முல மாயின. சில கிராமங்கள் முற்றாக அழிந்து போயின ஆனால் சில நூறு மக்கள் இப்புவிநடுக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தால் மரணத்தைத் தழுவினர். ஆனால் 1979இல் சீனா தாங்ஷான் பகுதியல் 7.6 றிச்டர் அளவில் ஏற்படவிருந்த புவிநடுக்கத்தை முன் கூட்டியே கணக்க முடியாது போனதால் 5 இலட்சம் மக்கள் அதற்குப் பலியாகினர்.

புவிநடுக்கமேற்படும் போது பாறைகள் முன்பின்னாக இடம்மாறுவதால் அவை ஒன்றோ டொன்று உராய்ந்து ஓசையை ஏழுப்புகின்றன. நிலம் மேல் நோக்கியும் கீழ் நோக்கயும் உந்தப் படுவதால் நிலத்தில் வெடிப்புகளும் பிளவுகளும் பொருமல்களும் ஏற்படுகின்றன.

---

# எறிகணை

ம.பவுசிகா
தரம் 11

*என் செல்வக் குழந்தையே*
*உன் காலடி ஓசைகள்*
*எங்கே?*
*என்னை மலடிப்பட்டத்தின்*
*உச்சஸ்தாயியில்*
*இருந்து*
*மீட்டவள் நீயல்லவா!*
*உன் அம்மா உதிர்ந்த*
*அழகிய பூக்கள்*
*எங்கும் நான்*
*காணவில்லையே!*
*என் தாய்மையை*
*உறுதிப்படுத்தி*
*ஊரார் வாயை*
*அன்று மூடினாயே*

*அதிசய திருமண பந்தத்தின்*
*ஆதாரமாய் இருந்தவளே*
*உன் அப்பனையும்*
*அம்மாவையும் அணைத்தன*
*எறிகணைகள்*
*இப்போ பழையபடி*
*ஆரம்பித்து விட்டன.*
*ஊர்வாய்கள்*
*என்னை மறுபடி தாயாக்க*
*எப்படி உன்னால் முடியும்*
*இந்தப் பத்தினியின்*
*திண்ணையில் இன்னும்*
*எத்தனை எத்தனை*
*எறிகணைகளோ!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுருக்கக் குறியீடுகளும் அவற்றின் விரிவும்

ப.துஷாளினி
தரம் 11

| | | |
|---|---|---|
| UNO | - | United National Organization<br>ஐக்கிய நாடுகள் தாபனம் |
| NASA | - | National Aeronautics and Space Administration<br>தேசிய விண்கல விண்வெளித்துறை நிறுவனம் |
| UNEF | - | United National Emergency Force<br>ஐக்கிய நாடுகள் அவசர காலப்படை |
| IBRD | - | International Bank for Reconstruction and Development (World Bank)<br>புனரமைப்புக்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச வங்கி (உலக வங்கி) |
| USA | - | United States of America<br>அமெரிக்க ஐக்கிய அரசு |
| ADB | - | Asian Development Bank<br>ஆசிய அபிவிருத்தி வங்கி |
| AM | - | Ante meridiem<br>முற்பகல் |
| BA | - | Bachelor of Arts<br>கலைமானி |
| EG | - | Exampli Gratia<br>உதாரணமாக |
| FAO | - | Food and Agricultural Organization<br>(UN) உணவு விவசாய நிறுவனம் |
| Mrs | - | Mistress<br>திருமதி |
| Mr | - | Mister<br>திரு |
| NB | - | Note Bene (mark.well)<br>குறிப்பு |
| GA | - | Government Agent<br>உதவி அரசாங்க அதிபர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்று சம்பவங்களும் அவை நடைபெற்ற ஆண்டுகளும்

வி.சிந்துஜா
தரம் 11B

| | | |
|---|---|---|
| 1. | பிரித்தானியரால் இலங்கையில் மதுவரிச்சட்டம் கொண்டு வரப்பட்ட ஆண்டு | கி.பி 1912 |
| 2. | இலங்கையில் நடைபெற்ற பஞ்மகா விவாதங்களில் சிறந்த விவாதமான பாணந்துறை விவாதம் இடம்பெற்ற ஆண்டு | கி.பி 1873 |
| 3. | இந்தியா எப்போது பிரித்தானியாவின் முடியின் கீழ் வந்தது? | 1858 |
| 4. | இந்தியா சுதந்திரம் அடைந்த ஆண்டு | 1947 |
| 5. | இலங்கை சுதந்திரம் அடைந்த ஆண்டு | 1948 |
| 6. | கொன்ஸ்தாந்திநோபிள் முஸ்லீம்களால் கைப்பற்றப்பட்ட ஆண்டு | 1453 |
| 7. | யாழ்ப்பாண பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு | கி.பி 1974 |
| 8. | இலங்கை மக்கள் வங்கி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு | கி.பி 1961 |
| 9. | இலங்கையில் வானொலி சேவை அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு | கி.பி 1925 |
| 10. | பிரான்சிய புரட்சி நடைபெற்ற ஆண்டு | கி.பி 1789 |
| 11. | இரட்டை ஆட்சி நடைபெற்ற ஆண்டு | கி.பி 1798-1802 |
| 12. | ஒல்லாந்த பிரான்ஸ் கைபற்றிய ஆண்டு | கி.பி 1794 |
| 13. | சிங்கள, முஸ்லீம் இனகலவரம் நடைபெற்ற ஆண்டு | கி.பி 1915 |
| 14. | பிரித்தானியரால் சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்ட ஆண்டு | கி.பி 1928 |
| 15. | டொனமூர் யாப்பு இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட ஆண்டு | கி.பி 1927 |
| 16. | இலவச கல்விச்சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு | கி.பி 1945 |
| 17. | கொழும்பு மாநகரசபை உருவாக்கப்பட்ட ஆண்டு | கி.பி 1765 |
| 18. | இலங்கையில் நகரசபை உருவாக்கப்பட்ட ஆண்டு | கி.பி 1897 |
| 19. | இலங்கையில் கோப்பி பயிர்செய்கை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு | கி.பி 1822 |
| 20. | இலங்கையில் தேயிலை பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு | கி.பி 1873 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழமொழிகள்
# Preoverbs

T. Thankulali
Grade 11A

| | |
|---|---|
| 1. Tho the good the world appears good | நல்லவனுக்கு உலகமெல்லாம் நல்லதே |
| 2. While in Rome, do as Romans do | ஊருடன் ஒத்து வாழ் |
| 3. As you sow, so shall you reap | உப்புத்தின்றவன் நீர் குடிப்பான் |
| 4. A thing is valued where it belongs | மதிப்புள்ள இடத்தில் தான் பொருளுக்கு மதிப்பு |
| 5. Am empty vessel makes much noise | நிறைகுடம் எப்போதும் தளும்பாது |
| 6. Health is wealth | நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் |
| 7. No pain no gain | உழைப்பின்றி விதியமில்லை |
| 8. Time once lost cannot be regained | நழுவிப்போன காலம் திரும்பாது |
| 9. Society moulds man | சமூகமே மனிதனை உருவாக்கும் |
| 10. Union is sed strength | ஒன்று பட்டால் உண்டு வாழ்வு |
| 11. Fools praise fools | கமதையின் குரலை கழுதை தான் மெச்சும் |
| 12. Manh heads many minds | தலைக்கொரு பேச்சு |
| 13. Barking dogs seldam bite | குரைக்கும் நாய் கடிக்காது |
| 14. It is no use building casties in the air | மனக்கோட்டை கட்டாதே |
| 15. Penny wise pound foolish | இஞ்சி லாபம் மஞ்சளில் போகும் |
| 16. Give loan enemy own | கடன் கொடுக்க பகைமையை வாங்கு |
| 17. Birds of a feather flock together | இனம் இனத்தைச் சேரும் |
| 18. Where there is a will there is away | மனமிருந்தால் வழியும் உண்டு |
| 19. A bad carpenter quarrels with his tooks | ஆடத் தெரியாதவளுக்கு கூடம் கோலையம் |
| 20. Silence is half consent | மௌனம் பாதி சம்மதம் |
| 21. An empty vessel makes much noise | வெற்றுப் பாணை சத்தம் செய்யும் |
| 22. A man is a slave to his stamach | மனிதன் தான் வயிற்றுக்கு அடிமை |
| 23. The more haste the worse speed | அவசரம் காரியத்தைக் கெடுக்கும் |
| 24. A burnt child dreads the fire bitten twice shy | சூடுபட்ட குழந்தை நெருப்பைக் கண்டாளே மிரளும் |
| 25. A honey tongue a heart of gall | படிப்பது ராமாயணம் இடிப்பது சிவன்கோயில் |
| 26. A little knowledge is a dangerous thing | அரைகுறை வைத்தியன் கொலைகாரன் |
| 27. Al's well that ends well | முடிவு நல்லதானால் எல்லாம் நல்லதே |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. Style makes the man — ஆள் பாதி, ஆடை பாதி
29. One lie leads to another — பொய்க்கு எல்லை இல்லை
30. One nail drives another — முள் முள்ளை எடுக்கும்
31. Truth lies at the bottom of well — முத்து ஆழ்கடலில் இருக்கும்
32. There is a time for everything — எதற்கும் ஒரு காலம் உண்டு
33. It takes all sorts to make the world — உலகத்தார் பலவிதம்
34. It takes two to make a quarrel — இருகை சேர்ந்தால் தான் சத்தம் வரும்
35. A riend in need is a friend indeed — ஆபத்தில் உதவுபவன் தான் உண்மை நண்பன்

# அழகிய வாழ்க்கை

பூ.சியானி
2013 கலை

ஆண்டவன் அளித்த அழகிய வாழ்வு
ஆனந்தத்தின் அடித்தளமே
வாழும் மனிதர் யாவருமே
வாழ்வில் அறிவால் உயர்ந்திடவே

கல்வி என்னும் அரும்பொருளை
தேடித் தேடிக் கற்றனரே
உயர்ந்தவர் தாழ்ந்தவர் வேண்டாமே
உலகில் யாவரும் சமமாவோம்

பூமி என்னும் பூவுலகில்
பூத்த அரிய செல்வங்களே
நேசம் என்னும் பாசத்தை
வாழும் உயிர்களில் காட்டிடுவீர்

சின்னஞ்சிறிய பூக்களே சிறகடிக்கும் சிட்டுக்களே
அன்பினைக்காட்டி அரவணைப்போம்
உண்மையைப்பேசி உழைத்திடுவோம்
உலகிலே யாவரும் உயர்ந்திடுவோம்

வாழ்வோம் வளர்வோம் வாழ்த்துவோம்
வாழ்வில் இன்பம் காண்போம்
இன்பம் வரும் துன்பம் வரும்
எதிர்த்து நீயும் வாழ்வாயே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறநாட்டுப் பழமொழிகள்

ச.ரிஷாந்தன்
தரம் 7C

**அரபுநாட்டுப் பழமொழி**

1. நல்லவர்களோடு சேர்ந்தால் நாய்க்கும் பகுத்தறிவு உண்டாகும்.
2. தூங்கின்றவனை எழுப்புவதற்காக பொழுது இருமுறை விடிவதில்லை
3. அறிஞர்கள் கூட்டம் ஓர் உயிருள்ள வாசிகசாலை

**சீனப்பழமொழி**

1. ஒருவனடைய முகத்தக்கு நேராகச் சொல்வது அவதூறல்ல
2. மலிவான பொருட்கள் நல்லவையல்ல நல்ல பொருட்கள் மலிவானவையல்ல

**அமெரிக்கப் பழமொழிகள்**

1. பேசுகின்றவன் விதைக்கின்றான் கேட்பவன் அறுவடை செய்கின்றான்
2. பேசிய வார்த்தையானது கேட்பவனுக்குச் சொந்தமாகிவிடும்
3. நம்பிக்கை எதையும் துணிந்து செய்கிறது
4. அன்பு எதையும் பொறுத்துக் கொள்கிறது

**அதிசய உண்மைகள்**

1. உலகிலே மிகவும் நீளமான சுரங்கப்பாதை ஜப்பானில் உள்ளது.
2. உலகிலேயே மிக உயரமான விமான நிலையம் லே ஆகும்.
3. திமிங்கலத்தின் வாயில் சுவை நரம்புகள் இல்லை.
4. மனித மூளைதான் ஆயுட்காலத்தில் பத்துக்கோடி செய்திகளை சேமித்து வைக்கும்.
5. உலகின் மிகப் பெரிய கோயில் ஆங்கர்வாட் ஆகும்.
6. உலகின் முதல் அணுகுண்டு சோதனை நடந்த இடம் அலாகா கொரடா ஆகும்
7. உலகின் மிகப் பெரிய பிரமிட் அமைந்துள்ள இடம் மெக்சிக்கோ ஆகும்.
8. முதன்முதலில் காகிதத்தை உருவாக்கியவர் சீனாவைச் சேர்ந்த சாய்லூன் என்ற அறிஞராவார்.
9. உலக வானிலை ஆராய்ச்சி மையம் அமைந்துள்ள இடம்
10. உலகின் பழமையான விளையாட்டு டோலோ ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறுவனமும் தொடர்பாடல் முறையும்

ம.விதுரா
2013 கலை

தொடர்பாடல் ஆச்சரியத்தில் ஆழ்த்தும் துறையாகும். எமது வாழ்க்கையின் பல்வேறு துறைகள் தொடர்பாடலுடன் தொடர்புபடுகிறது. எமது காட்சி, உடலசைவு, சொற்பிரயோகம், பார்வை என்பன ஏதோ ஒரு வகையில் ஏனையவர்களுடன் தொடர்பாடுகின்றன. நாம் எப்போதும் தொடர்படுவதில் ஈடுபடுகின்றோம். எமக்கு அவசியமான பெரும்பாலானவற்றை தொடர்பாடலின் மூலம் பெற்றுக் கொள்ளுகின்றோம். பகிடி, வீண்வம்பு, தகவல், கருத்து, திட்டம், உணர்ச்சி, கனவு போன்றவற்றில் நாம் தொடர்புபடுகிறோம்.

தனியார் தொடர்பு பற்றியே மேலே குறிப்பிட்டோம். வணிகக் கருமங்களுக்கான தொடர்பாடல் மிகப் பரந்ததாகும். தகவல் தொழில்நுட்ப விருத்தியுடன் தொடர்பாடல் மிக விரைவான வளர்ச்சியடைந்துள்ளது. இன்று அது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் என அழைக்கப்படுகிறது. கணினி, இன்ரநெற், செயற்கைக்கோள் தொழில்நுட்பம், தொலைபேசி வலையமைப்பு என்பன ஒன்று சேர்வதால் தொடர்பாடலின் விரைவானது ஆச்சரியப்படத்தக்க முறையில் விருத்தியடைந்துள்ளது. பல்வேறு விதமான தொடர்பாடல் முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. இன்று உலகில் எந்தவொரு இடத்திலும் நடப்பனவற்றையும் அதே நேரத்தில் அறிந்து கொள்ளும் வாய்ப்பை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் ஏற்படுத்தியுள்ளது. போட்டிச் சந்தையில் வணிகங்களின் வெற்றிகரமான செயல்பாட்டுக்கு தொடர்பாடல் அத்தியாவசிய சேவையாகியுள்ளது. வணிகர்கள், முகாமையாளர்களின் பெருமளவான நேரம் தொடர்பாடலுடன் செலவிடப்படுகிறது. வணிகங்களின் வெற்றி தோல்வி தொடர்பாடலினால் நேரடியாக நிச்சயிக்கப்படுகிறது. தொடர்புகளின்றிச் செயலாற்றுதல் இருட்டில் நடப்பது போலாகும் எனக் குறிப்பிடுதல் தொடர்பாடலின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகிறது.

தொடர்பாடல் தொடர்பான வரைவிலக்கணம் மிகப்பரந்த எல்லைகளைக் கொண்டது. மனிதர்கள் மட்டுமல்ல உயிரினங்களாலும் தொடர்பாட முடியும். பொதுவாக தொடர்பாடல் எனும் பதம்

"ஒரு தரப்பினர் மற்றொரு தரப்பினருக்குத் தகவல் அனுப்புதல், அவர்களிடமிருந்து தகவல் பெறுதல், தெரிவு செய்தல், பகிர்தல்" எனப் பொருள்படும்.

தொடர்பாடல் வெவ்வேறு முறைகளில் இடம் பெற முடியம் அதாவது உடலசைவு, வாய்மொழி, எழுத்து, இலத்திரனியல், ஒலி, சைகையும் குறியீடும் போன்றவை அவையாகும். தொடர்பாடலை தனிப்பட்டவர்களும் வணிகர்களும் பயன்படுத்துவார்கள். பொதுவாகப் பயன்படுத்தப்படும் தொடர்பாடல் பொதுசனத் தொடர்பாடல் எனக் கூறப்படும். பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி என்பவை பொதுசன தொடர்பாடல் ஊடகங்களாகும். குறித்த தரப்பினர்களுக்கிடையில் இடம்பெறும் தொடர்பாடலின் போது கட்டாயமாக பொதுமொழி பயன்படுத்ததல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். அவ்வாறில்லாத போது தொடர்பாடலைப் புரிந்துகொள்ள முடியாது. அதேபோல தொடர்பாடலின் போது பின்னூட்டம் முக்கியமானதாகும்.

பொதுவாகத் தொடர்பாடலைப் பின்வரும் கோணங்களில் விளக்க முடியும்.

1. உள்ளடக்கம் அல்லது செய்தி
2. அனுப்புபவர் அல்லது ஆரம்பிப்பவர்
3. முறை
4. வழி அல்லது ஊடகம்
5. பெறுபவர்
6. நோக்கம்

இதன்படி எந்த ஒரு தொடர்பாடலிலும் அடிப்படையான 6 அம்சங்களைக் காணமுடியும். அந்தவகையில்

1. அனுப்புபவர் அல்லது ஆரம்பிப்பவர்
2. செய்தி
3. செய்தி பெறுபவர்
4. சந்தர்ப்பம் அல்லது ஊடகம்
5. நோக்கம்
6. பின்னூட்டம்

போன்றவற்றை குறிப்பிடலாம்.

ஒரு வணிக நிறுவனத்தின் தொடர்பாடல் கருமங்களைப் பிரதானமாக இருவகைப்படுத்த முடியும்.

1. அகத் தெடர்பாடல்
2. புறத் தொடர்பாடல்

அகபுறத் தொடர்பாடல்களில் பயன்படுத்தக்கூடிய தொடர்பாடல் முறைகளைப் பின்வருமாறு கூறமுடியும்.

1. வாய்மொழி
2. எழுத்து
3. இலத்திரனியல்

வணிக நிறுவனத்தின் உள்ளே காணப்படும் பல்வேறு தரப்பினருடன் தகவல்களை பரிமாற்றி கொள்வதற்காக வெவ்வேறு முறைகளை பயன்படுத்தலாம். உதாரணமாக கூட்டம், அறிவித்தல் பலகை, இன்ரகொம், சுற்றறிக்கை, கடிதம், ஈமெயில், நடமாடும் தொலைபேசியும் வேறு முறைகளும் போன்றவற்றை குறிப்பிட லாம்.

வணிக நிறுவத்திற்கு வெளியேயுள்ள வேறு தரப்பினர்களுடன் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளுதல் புறத்தொடர்பாடல் எனப்படும். இதற்குக் கடிதம், தொலைபேசி, செலியூலர், டெலெக்ஸ், பக்ஸ், கூரியர்சேவை, பத்திரிகை, சஞ்சிகை, வானொலி, ரூபவாகினி, போஸ்டர், பனர், ஈமெயில், இன்ரநெற் என்பனவும் வேறு முறைகளும் பயன்படுத்தப்படலாம்.

வணிக நிறுவனத்தின் தொடர்பாடல் வெவ்வேறு மூலங்கள் ஊடாக இடம்பெறும். அதற்கான வழிகள் பின்வருமாறு

1. வாய்மொழி
2. வாய்மொழியல்லாத
3. ஒழுங்கமைக்கப்பட்ட
4. ஒழுங்கமைக்கப்படாத
5. அகத்தொடர்பாடல்
6. புறத்தொடர்பாடல்
7. இலத்திரனியல்

போன்றவற்றை குறிப்பிடலாம். இவற்றில் இலத்திரனியல் தொடர்பாடல் முறை ஆனது தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப வளர்ச்சியுடன் தொடர்பாடலில் பல முறைகள் சேர்ந்துள்ளன. அதாவது நடமாடும் தொலைபேசி, ஒலி அஞ்சல், இன்ரநெற், பேஜர், பக்ஸ்பொறி, செய்மதி முறை, இலத்திரனியல் அறிவிப்பு பலகை, இலத்திரனியல் தரவு பரிமாற்றம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

நவீன வணிக சூழலுக்குள் பல தொடர்பாடல் அம்சங்கள் ஒருங்கிணைந்து செயற்படுகின்றன. தொழில்நுட்ப முன்னேற்றத்தினால் அவை விரைவான விருத்தி கண்டுள்ளன. தகவல் தொழில்நுட்பம் வணிக கருமங்களை இணைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணியாகியுள்ளது. சிறப்பான தொடர்பாடல் சேவை பின்வரும் காரணிகளை பொறுத்தமை கிறது. அதாவது தகவலை அண்மிக்கும் ஆற்றல், இலகுவாகப் பயன்படுத்த முடிதல், பயன்படுத்து பவரின் திறன், தனி நபர்களுக்கிடையிலா இடை தொடர்பு, நிறுவனங்களுக்கிடையிலான தொடர் புச் செயற்பாடு, இரகசியத்தன்மையும் பாதுகாப் புப் போன்றவற்றை பொறுத்தமையும்.

சிறப்பான தொடர்பாடல் முறையில் பின்வ ரும் அம்சங்கள் காணப்பட வேண்டும். அதாவது திருத்தமான தன்மை, சுருக்கமான தன்மை, முழுமையான தன்மை, தெளிவான தன்மை, ஒழுக்கமான தன்மை, திட்டமான தன்மை, அக் கறை, குறைவான கிரயம், விரைவு போன்ற வற்றை கொண்டமையும் நிறுவனங்களின் தொடர்பாடல் முறை சிறப்பானதாக அமையும்.

மேலும் நிறுவனங்களுக்கு தொடர்பாடலின் முக்கியத்துவங்களாக தொழில் கொள்வோருக் கும், தொழிலுக்கிடையிலான தொடர்பு கொள்வ தற்கும், நிறுவனங்களுக்கு தேவையான பொருட்கள் பெற்றுக் கொள்வதற்கும், நிறுவன கொடுக்கல் வாங்கல்களை சீராக மேற்கொள்வ தற்கும் நிறுவன விளம்பரங்களால் விற்பனை விநியோக நடவடிக்கையை மேற்கொள்வதற் கும், சந்தை நடவடிக்கைகளை விரிவாக்கம் செய்வதற்கும் தொடர்பாடல் முக்கியமானதாக அமைகிறது.

மேலும் இத்தொடர்பாடல் முறையானது நிறு வனங்களுக்கு மட்டுமன்றி இன்றைய காலகட் டத்தில் மக்களின் அனைத்து செயற்பாடுகளுக் கும் முக்கியமானதொன்றாக மாறிவருகிறது.

இன்று ஒரு கோபத்தை மறந்து சமரசம் செய்து கொள்ளுங்கள். அல்லது மறக்கப்பட்ட ஒரு நண்பரைத் தேடிக் கண்டுபிடியுங்கள். அல்லது ஏதேனும் ஓர் அரிய பொருளை பகிர்ந்து கொள்ளுங்கள். அல்லது ஒரு வாக்குறுதியை நிறைவேற்றுங்கள். அல்லது ஒரு தவறுக்காக மன்னிப்புக் கோருங்கள். அல்லது ஒரு குழந்தையின் உள்ளத்திற்குக் களிப்பூட்டுக்கள்.

ஒரு நல்ல சொற்பொழிவின் லட்சணம் அதற்கு நல்ல தொடக்கம் இருக்க வேண்டும்; நல்ல முடிவு இருக்க வேண்டும். ஆனால் இரண்டையும் விட முக்கியம், இரண்டிற்குமிடையே உள்ள தூரம் மிகக் குறைவாக இருக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கத்து நங்கை

திருமதி. இ. திருநாவுக்கரசு
B.A Dip in Ed
பிரதி அதிபர்

சங்ககாலத்திலெழுந்த எட்டுத்தொகை நூல்களில் ஒன்று குறுந்தொகை. இது அன்பின் ஐந்திணையாய பாடல்களால் நிறைந்து விளங்குகிறது. இந்நூலின் கண் ஒரு பாடல். அப்பாடலில்

**"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித்தகை சான்ற**
**சொற்காத்துச் சோர்விலாள் பெண்"**

ஒருத்தியின் செயல் எடுத்தியம்பும் தன்மை உள்ளுந்தோறும் உவகையளிக்க வல்லது.

செம்புலப் பெயல் நீர்போல் அன்புடை நெஞ்சங்கள் இரண்டறக் கலந்த போது பெற்றோர் பிரிக்க முயல்கின்றனர். பெற்றோருக்குத் தெரியாது தலைவி தலைவனுடன் சென்று விடுகிறாள். அன்பால் நெஞ்சங் கலந்தவர் இல்லறம் நடாத்தினர்.

தலைவி செல்வர் வீட்டுச் செல்லப் பெண். செல்ல மகளின் பிரிவை ஆற்றொணாத தாயானவள் செவிலித்தாயை அனுப்புகிறாள் மறைந்திருந்து மகளைக் கவனித்து வரும்படி அவ்வாறே செவிலித்தாயும் செய்கிறாள். அப்போது ...

சமைத்தறியாத செல்வமகளெனினும் தன் அன்புக் கரங்களால் சமைத்துத் தன் கணவருக்கு அளிக்க வேண்டும் என்பது அவள் ஆவல். ஆகையால் அவளே தயிர்க்குழம்பைச் சமைத்தாள். தயிரைப் பிசைந்த அவளின் காந்தள் பூப் போன்ற விரல்கள் தயிரினும் மென்மையாக இருந்தது. ஆவலில் கை அலம்ப மறந்தாள். அவ்வப்போது தன் பட்டாடையைத் தூக்கிச் சொருகும் போது ஆடை கசங்கியது. அடுப்பை அன்று வரை அறியாதவள் குழம்பைத் தாழிக்கக் குழம்பினாள். அவளுடைய மையுண்ட கண்களைப் புகை சூழ்ந்து கொண்டது. கண்ணீர்த்துளிகளைக் கைம்மாறாகப் பெற்றது. கரும்புகை அவள் முகத்தை மாசுபடுத்தியது. அவளுடைய குறிக்கோள் கணவனுக்குத் தான் அட்டிய உணவை எட்டி நின்று காணவேண்டுமென்பதே. கணவன் புளிப்புடைய தயிரமுதைக் களிப்புடன் உண்டான். "இனிது" என்று பாராட்டுரை ஒன்று வழங்கினான். கணவனின் பாராட்டுரையில் அவள் தன்னை மறந்து மகிழ்ந்தாள். இந்த உயரிய கருத்தமைந்த பண்பை நற்றாய்க்குச் செவிலித் தாய் கூறுவதாகப் புலவர் பின்வருமாறு சித்திரிக்கின்றார்.

**"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்**
**கழிவுறு கலங்கம் கழாது உடீஇக்**
**குவளையுண்கண் குய்ப்புகை கமழத்**
**தான் றுழந்தட்ட தீம்புளிப்பாகர்**
**இனிதெனக் கணவனுண்டலின்**
**நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே"**

வேலைவிட்டு வரும் போது "சாப்பாடு தீர்ந்து விட்டது" என்னும் போதும் மனம் சோராது பத்துக்கடைகள் ஏறி இறங்கி வாங்கிவரும் பார்சலைத், தொலைக்காட்சி பார்த்த களைப்பிலும் தலைவலியிலும் அவதிப்படும்.அன்பு மனைவியிடம் கொடுத்து விட்டு நன்றாக இருக்கிறதென்ற வார்த்தையை எதிர்பார்த்து நிற்கும் நவீனத்து நம்பிகளுக்கு இந்நிகழ்வு புதுமையாயிருக்காதா என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வியலுக்கு வழிகாட்டும் இலக்கியங்கள்

திருமதி. பராசக்தி
சத்தியநாதன்
ஆசிரியர் (ஆரம்பக்கல்வி)

ஒரு மொழியின் செம்மையையும் அதன் பழமையையும் பறைசாற்றி நிற்பன இலக்கியங் களாகும். அந்தவகையில் செம்மொழியாம் தமிழ் மொழியில் வாழ்க்கைக்கு வழிகாட்டும் பல்வேறு இலக்கியங்கள் தோன்றி வளர்ந்து வந்துள்ளன. இலக்கியம் என்பது காலத்தைக் காட்டும் கண் ணாடி ஆகும். கடந்த காலத்தைப் படம்பிடித்துக் காட்டுவன. இவை சமுதாயத்தின் பிரதிபலிப்புக்க ளாகும். சமூகத்தில் நிலவி வரும் மக்களின் வாழ்வியல் அம்சங்களான பண்பாட்டு விழுமிய கருத்துக்களை உள்ளடக்கி எழுந்தவையே இலக்கியங்களாகும். காலத்துக்குக் காலம் சமுதாய போக்குகளைப் படம் பிடித்துக் காட்டும் வகையில் இவை வளர்ந்து வந்துள்ள மையை வரலாற்று ரீதியாக அறியலாம். இலக்கியங்கள் வாழ்நெறியைப் புகுத்துவனவாகும். ஒவ்வொரு இலக்கியமும் சுவையூட்டுவனவும் இரசனை மிக்கவையும் ஆக விளங்குகின்றன.

இலக்கியங்களில் பொதிந்துள்ள கருத்துக் கள் ஒவ்வொன்றும் வாழ்வைச் செம்மைப்படுத்து வனவே. இலக்கியம் என்பது இலட்சியம் என்பதன் பிறப்பாகும். சமூகத்தின் இலக்கைக் காட்டுவது இலக்கியம் ஆகும். தரமான இலக்கியம் எனப் போற்றப்படுபவை எல்லாம் மக்கள் வாழ்க்கைக் குத் துணை புரிவனவாக அமைகின்றன. இலக்கி யங்களைப் படிப்பதால் எந்தப் பயனும் இல்லை, இது வெறும் பொழுது போக்கிற்காக மட்டும் படிக்கப்படுபவை என்று எண்ணுவாரும் உளர். இலக்கியங்கள் எதற்காக எழுந்தன, எவற்றைக் கூறுகின்றன? எதற்காகக் கூறப்படுகின்றன எனச் சிந்திப்போமானல் இவ்வாறான எண்ணத் திற்கோ பேச்சிற்கோ இடமில்லை.

சங்க இலக்கியங்களிலே சிறந்து விளங்கும் புறநானூறு எனும் இலக்கியத்தில் அரசியல் முறைகள், மக்களுக்கு வழிகாட்டும் அறிவுரைகள் பலவற்றைக் காணக்கூடியதாக உள்ளது. மனித சமுதாயம் ஒன்று பட்டு வாழ வேண்டும் எனும் கருத்துக்களைக் காணலாம். அவ்வாறே ஒளவை யாரும் தமது நீதிப்பாடல்களில் நல்ல சமூகவாழ் வுக்குத் தேவையான கருத்துக்களை பொதிந்து வைத்துள்ளார். இவை வாழ்வியலுக்கு வழி காட்டுவனவாகும்.

இன, மத, மொழி வேறுபாடின்றிப் பலராலும் போற்றப்படும் சிறப்பு வாய்ந்த இலக்கியமாகத் திகழ்வது திருக்குறள் இதில் கூறப்படும் அனைத் துக் கருத்துக்களும் மக்கள் வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்தவை, வழிகாட்டுபவை என்பதை மறக்க முடியாது எனவே தான் "உலகப் பொதுமறை" எனப் போற்றப்படுகிறது. ஆழமான கருத்துக்களை கூறுவதால் தான்

**"கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகுத்தி**
**குறுகத் தறிந்த குறள்"** என ஒளவையாரால் புகழப்பட்டது.

வையத்துள் வாழ்வாங்கு வாழ வேண்டிய முறைகள் யாவும் வள்ளுவரால் உரைக்கப்பட் டுள்ளது. இல்லறவியலிலே அறவழியில் வாழும் விதம் பற்றியும் புத்திரப் பேற்றின் மகிமையை யும் தந்தை மகனுக்கும், மகன் தந்தைக்கும் ஆற்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய கடமைகள் பற்றியும், நன்றியுணர்வின் மேன்மையும், அடக்கத்தின் அவசியம் அன்பின் முக்கியத்துவம், விருந்தோம்பும் பண்பும், ஒழுக்கத்தைக் காத்தலும் என இன்னோரன்ன விடயங்களைத் துல்லியமாக எடுத்துக் காட்டுகிறார் வள்ளுவர் இவை அனைத்தும் சமுதாய வாழ்விற்கு வழிகாட்டுபவையாக அமைகின்றன.

அதேபோல் கம்பராமாயணத்தில் அறம் வெல்லும் அதர்மம் தோற்கும் எனும் கருத்து கூறப்படுகிறது. சமுதாய வாழ்வில் பின்பற்றப்பட வேண்டிய சகல நற் பண்புகளும் கதைவடிவில் கூறப்பட்டுள்ளன. தந்தை சொல் மீறாத இராமரும், அண்ணனைத் தெய்வமாக போற்றும் இலக்குவனும், சொல்லொணாத் துன்பங்கள் நேர்ந்த போதும் கற்புநிலை தவறாத சீதையும், சிவனிடத்தில் அதீத பக்தி கொண்டு வரம் பெறும் இராவணனும், நட்புக்கு இலக்கணமாக விளங்கும் குகனும் என இங்கு இடம்பெறும் பாத்திரங்கள் எல்லாம் இப்படித்தான் வாழ வேண்டும் என வாழ்ந்து காட்டிய உத்தமர்களாக சித்தரிக்கப்படுகின்றனர். இவர்கள் வாழ்க்கைக்குச் சிறந்த வழிகாட்டிகளாவர் இவ்வாறு பலவிதமான உண்மைகளை விளக்கும் விதமான இன்ப ரசத்துடன் கம்பன் காவியம் படைத்துள்ளான்.

சிலப்பதிகாரத்தில் பொதிந்துள்ள கொள்கைகளும் சமூகத்தோடு இணைந்தவையே. இந்நூலின் நோக்கம் சமூகத்தில் தீயவைகளை களைந்து நல்லவற்றை நிலை நாட்டுவதாகும்.

**"அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்"**
**"உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவார்"**
**"ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்"**

இவ்வாறான பல உன்னத கருத்துக்களை மக்களுக்கு எடுத்தியம்புகிறது சிலப்பதிகாரம். அரசியலில் தவறு செய்யின் ஆட்சியாளர் தப்ப முடியாது எனவும் புகழ்பெற்ற பத்தினியை உலகம் போற்றும் எனவும் பழவினையில் இருந்து யாரும் மீளமுடியாது எனவும் மிக அழகாக கதைவடிவில் கூறப்பட்ட கருத்துக்கு வாழ்வியலுக்கு வழிகாட்டி நிற்கின்றன.

மணிமேகலையை நோக்கின் இது சிலப்பதிகாரத்தோடு தொடர்புபட்டதாக உள்ளது இங்கு ஆதிமுதல் அந்தம் வரை புத்த தர்மத்தைப் போதிப்பதாகவும் உலக மக்களின் பட்டினித்துன்பத்தைப் போக்கும் வகையிலும் அமைந்துள்ளது. அனைவரும் வயிரார உண்டு மகிழ்ந்திருத்தல் வேண்டும் என்பது மணிமேகலை தனது அக்ஷய பாத்திரத்தின் மூலம் உணவளித்து தருமம் செய்தல் விளக்கப்படுகிறது.

**"மண்திணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"**

என புறநானூறில் கூறப்பட்ட அடிகளை மணிமேகலை ஆசிரியர் அப்படியே எடுத்துக் காட்டுகிறார். இது சமுதாய வாழ்வுக்கு வழிவகுப்பதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

வாழ்வுக்கு வழிகாட்டும் இலக்கிய வரிசையிலே பக்திப் பாடல்களும் பெரும்பங்கு வகிக்கின்றன. பக்தி மார்க்கத்தை பரப்பும் நோக்கோடு எழுந்த தோத்திரப் பாடல்களும் சமூக வாழ்க்கைக்கு வித்திட்டு நிற்பவையே இறைவனை உள்ளன்போடு போற்றிப் பாடுதல் மூலம் இன்பம் அடைதல் பற்றி வலியுறுத்திக் கூறுவன பக்திப் பாசுரங்களாகும். நாயன்மார்களும் ஆள்வார்களும் பாடல்களில் கடவுளைத் தம் தாயாக, தந்தையாக, தோழனாக, காதலன், காதலியாக, குருவாக எனப் பலவாறாகப் பாவனை செய்து வழிபட்டு முத்தி பெற்றமையை அறியக்கூடியதாக உள்ளது. இதற்கு தோத்திரப் பாடல்கள் ஆதாரங்களாகும். இவை நாம் விரும்பிய வடிவில் இறைவனைச் சுதந்திரமாக வழிபட்டு வாழவும் சமயம் சார்ந்த ஒழுக்க விழுமியங்களைப் பின்பற்றி வாழக் கூடிய வகையிலும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் ஏராளம் இலக்கியங்களை எடுத்துக் காட்டாக அடுக்கிக் கொண்டே போகலாம். எது எப்படியோ இலக்கியங்கள் எல்லாமே ஏதோ ஒருவகையில் வாழ்வியலுக்கு வழிவகுக்கும் கருத்துக்களை தம்மகத்தே கொண்டு வழிகாட்டு பவையாகவே அமைந்துள்ளன என்பது தெளிவான ஒன்றாகும். இலக்கியங்களை வெறுமனெ பொழுது போக்கிற்காகவோ பரீட்சைக்காகவோ படிப்பதோடு நின்று விடாது அவை கூறும் அரிய பெரிய கருத்துக்களையும் வாழ்வியல் அம்சங் களையும் உள்வாங்கி அவற்றுடன் இணைந்து வாழ்வோமாக.

# தம்பி ...... நீயும் நெறிப்படுத்த!

அறிவியல் தந்த அருங்கொடையாய்
அனைவர் கையிலும் செல்பேசி!
அவசர உலகம் ஆகையினால்
அவசியம் ஆனது செல்பேசி!

அடுத்தவர்க்கு இடராய் இல்லாது ~ வரும்
அழைப்புக்கள் தனையும் ஏற்றிடுவாய்!
அவசியம் அற்ற அழைப்புகளை
பயணத்தின் போது தவிர்த்திடுவாய்!

உரக்கப்பேசி உடன் இருப்போர்
வெறுப்பை தேடிக் கொள்ளாதே!
உணவு வேளையில் பேசுவதை ~ உன்
உயர்ந்த விருப்பமாய் செய்யாதே!

அறிவியல் தந்த கொடைகளை ~ தம்பி
அறிவு பூர்வமாய் பயன்படுத்து!
அறிவார்ந்த செயலால் இந்நிலத்தை
இனிய தம்பி நீயும் நெறிப்படுத்து!

**கெ.நிவேதிகா**
தரம் 5A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணினி வைரஸ்

ம.ஜெசீதா
தரம் 11A

Virus - Very Iportant Resource under siege

கணனிக்கு பாதிப்பை ஏற்படுத்தும் நோக்குடன் ஒரு தனி நபரினால் / ஒரு நிறுவனத்தினால் உருவாக்கப்படும் மென்பொருட்கள் Computer Virus என அழைக்கப்படுகின்றன.

**கணனி வைரசின் தாக்கங்கள்**

1. கணனியிலுள்ள தரவுகளை மாற்றக்கூடியன
2. சில வைரசுகள் கணனியை முற்றாக செயலிழக்கச் செய்யும்
3. சில கணனி வைரசுக்கள் கணனியிலுள்ள File Program களை அழித்து விடக் கூடியன

குறிப்பு : முதலாவது கணனி வைரஸ் பாகிஸ்தானைச் சேர்ந்த இரட்டைகளால் 1986இல் உருவாக்கப்பட்டது. இது Brain என அழைக்கப்பட்டது.

**கணனி வைரஸ் எழுதப்படுவதற்கான காரணங்கள்**

1. குறும்பு
2. மென்பொருட்கள் பிரதி செய்யப்படுவதை தடுத்தல்
3. பழிவாங்கும் நோக்கம்
4. மென்பொருளை உருவாக்கும் நிறுவனங்களுக்கிடையிலான போட்டி

**கணனி வைரஸ் பரப்பப்படும் வழிகள்**

Floppy Disk
Flash Memory
Tape Backups
Internet, Network
Software

**கணனி ஒன்றில் வைரஸ் பாதிப்பிற்கான அறிகுறிகள்**

- Program செயற்படுவதற்கான அதிகநேரம் எடுத்தல்
- எங்கிருந்த பெறப்பட்டன என அறியாத சில புதிய இனங்காணப்படாத Files கணனியில் காணப்படுதல்
- கணனி Keyboard இலிருந்து புதிய சத்தங்கள் தோன்றுதல்
- Program களின் Size மாறுபடுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கணனி வைரசின் வகைகள்**

Boot Virus

File Virus

Macro Virus

**வைரஸ் தாக்கத்தில் இருந்த கணனியை எவ்வாறு பாதுகாக்கலாம்**

- Antivirus ஐ பயன்படுத்தல்

  Eg: AVG

  Dr.Solaman

  Mcafee
- சோதனை செய்யப்படாத வெளியில் இருந்து பெறப்பட்ட Floopy Disk Flash Memory களை Virus Scan செய்த பின் பயன்படுத்தல்
- Fire wall களைப் பயன்படுத்தல்
- காலத்துக்குக் காலம் Antivirus I Updata செய்தல்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Environmental Pollution

*J. Thanusiya*
Year 11

Pollution is the greatest threat for health and sanitation in the modern world today. There is great concern about pollution of the atmosphere, Land and and water now.

Rapid industrialization of nations pollute the air and water. City air is full of carbon dioxide and carbon monoxide flyash particles of rubber. From tyres and factory smoke. Factory waste such as sulphur dioxide, chlorine and dirt fill the air near the factories and are some times blown faraway into the village air too.

People breath this polluted air and the chemicals and dust can cause great health problem to them. The ozone layer in the sky protects us from the danger ous. Ultra violet sunrays. This layer is destroyed by some chemical especially hydrofloro carbon.

Factory wastes full of dyes, paints acids and other chemical are passed into the rivers. Lakes the and sea. They reduce the oxygen contact in the water and the water lives are either affected or killed. Incities the lake water is used for drinking and bathing after chlorination but too much of chemicals in the water can cause many diseases some thing must be done to get rid of the factory waste waters.

The most dangerous pollution is caused as a result of nuclear explosions under water and under the earthas a part of the nuclear programmes of the developed countries. The radiation from these test cause many dangerous diseases.

Scientific and systematic arrangement must be made to control the pollution of air land and water in the interest of all the people in the world. Now there is great awareness among the nations about the hazards of environmental pollution.

Regular conventions at international level are held to find ways and mean of solving this world burning problem. It is a welcome move that environment laws are made to minimise the pollution level of the air land and water.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்டர்நெற் ஓர் அறிமுகம்

சி.தனுசிகா
2013 வர்த்தகம்

உலகில் மிக விசாலமான கணனி வலையமைப்பு இன்ரநெற் ஆகும். இது 1969ல் ஐக்கிய அமெரிக்க குடியரசின் பாதுகாப்புத் திணைக்களத்தால் ஆரம்பிக்கப்பட்டது. இன்ரநெற் தன்னிச்சையான கூட்டுறவு அமைப்பாகும். இது எவருக்கும் உரிமையானது எனக் கூறமுடியாது. இன்ரநெற் என்பது வணிக ரீதியில் பொது உடமையாகக் காணப்படும் சர்வதேச வலையமைப்பாகும்.

இன்ரநெற்றுக்குள் பிரவேசிப்பதற்கான பல முறைகள் உள்ளன. ஒரு மாணவன் பாடசாலைக்கான பிரதேச வலையமைப்பில் பிரவேசிக்க முடியும். அத்தகைய பிரதேச கணனி வலையமைப்பு இல்லையானால் தொலைபேசி மூலமோ அல்லது கம்பி TV (Cable TV) அல்லது STELLITE LINK அல்லது WIRELESS HOT SPOT மூலமாக இன்ரநெற்றுக்குள் பிரவேசிக்க முடியம் பெரும்பாலும் Modem பயன்படுத்தி தொலைபேசி ஊடாக இன்ரநெற்றுக்குள் பிரவேசிப்பதைக் காண முடியும். இதற்கு இன்ரநெற் சேவை வழங்கும் ஓர் நிறுவனத்தின் உதவி அவசியம். இது வேகம், செலவு குறைந்த முறையாகும். தற்போது Wireless Hot Spot மூலமாக இன்ரநெற்றுக்குள் பிரவேசிப்பதற்கான வசதி வழங்கும் நிறுவனங்கள் அதிகரித்து வருவதைக் காணமுடிகிறது. இவை Wifi எனும் பெயரால் சுருக்கமாக குறிப்பிடப்படுகிறது.

இன்ரநெற்றில் அதிகமாகப் பயன்படுத்தப்படும் பகுதி World Wide Web (www) ஆகும். இது உலகம் முழுமையாகப் பரந்த வெப் தளமாகும். 1960ம் ஆண்டில் WWW அபிவிருத்தி செய்யப்பட்டது. இதனூடாக பெருமளவான தகவல்களை ஆராய முடியும். இத்தகவல்கள் வெப் பக்கங்களில் (Web Pages) களஞ்சியப்படுத்தப்படும் அமைப்புக்கள், முகமையாளர்கள், தனியாட்கள் போன்றோர் விசேட அக்கறை செலுத்தும் இன்ரநெற் ஆற்றல் ww web என கருதப்படுகிறது.

தகவல்களை களஞ்சியப்படுத்துதலும் காட்சிப்படுத்தலும் www தொழில்நுட்பப் பக்கங்களில் நிகழ்கிறது. வலையமைப்புடன் தொடர்புடைய எந்தவொரு கணனி மூலமாகவும் அப்பக்கங்களை வாசிக்க முடியும். அமைப்புக்களால் அல்லது தனிநபர்களால் ஆக்கப்பட்ட வெப் பக்கங்களை இனங்காண்பது வெப்தளம் ஆகும். எல்லா வெப் பக்கங்களும் (Website) உயர் பல்லூடக (Multimedia) பக்கங்களும் வெப் தளத்தில் உள்ளடங்கியிருக்கும். வெப் பக்கங்களை வாசிப்பதற்கு வெப் பரோசர் மென்பாகம் அவசியமாகும். Microsofts Internet Explorer அல்லது Netscape Navigator போன்ற மென்பாகங்கள் இதற்கு உதாரணங்களாகும்.

வெப் தளத்தில் பிரவேசித்த போது முதலில் Homepage தெரியும். வெப் தளத்தில் உள்ள எல்லாப் பக்கங்களையும் அறிந்து கொள்ளக் கூடிய விலாசம் அதில் இருக்கும். இது Uniform Resource Lacator எனப்படும்.

உதாரணமாக www.yahoo.com எனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலாசத்தை குறிப்பிட முடியும். இவ்விலாசம் http என்பதில் இருந்தே ஆரம்பிக்கும் http எனும் சுருக்கத்தின் பொருள் Hypertext Transfer Protocol என்பதாகும். விலாசத்தில் உள்ள (yahoo.com என்பது).com என்பதால் குறிப்பிடப் படுவது Commercial Enterprises என்பதாகும். இவ்வாறான சில சுருக்கங்கள் வருமாறு

| | |
|---|---|
| Education Institutions | .edu |
| Government | .gov |
| International Sources | .int |
| The military | .mil |
| Non-Probit Organization | .org |
| Net work Resource | .net |

மேல் குறிப்பிட்ட பெயருக்கு மேலதிகமாக pro-big-infor-coop போன்ற பெயர்களும் அறி முகம் செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு நாட்டை யும் அடிப்படையாகக் கொண்ட வெப்தளங்களை இனங்காண்பதற்கு இரு இலக்கங்கள் பயன் படுத்தப்படுகின்றன. உதாரணமாக

| | | |
|---|---|---|
| இலங்கை lk | USA | US |
| ஐக்கியஇராச்சியம் Uk | யப்பான் | Jp |
| கனடா Ca | | |

நாடுகளை அடிப்படையாகக் கொண்ட வணிக முறையிலான நிறுவனங்கள் Co. எனவும் கல்வி நிறுவனங்கள் ac. எனவும் விலாசத்தில் குறிப் பிடப்படும். உலகின் பல நாடுகளை அடிப்படை யாகக் கொண்டு செயற்படும் www.amazon பின்வருமாறு விலாசங்களில் குறிப்பிடப்படும்.

| | |
|---|---|
| ஐக்கியஇராச்சியம் | www.amazon.co.uk |
| USA | www.amazon.co.us |
| Canada | www.amazon.co.ua |
| India | www.amazon.co.in |

அடிப்படையான வெப்மொழி HTML ஆகும். கணிதத் திரையில் தோன்றும் தகவல்கள் HTML மூலமாக வெளிப்படுத்தப்படுபவையாகும்.

நம்பகரமான தகவலை பெற்றுக் கொள்ள சிறந்த நம்பிக்கையான மூலத்தை தெரிவு செய்தல் வேண்டும். அத்தகைய சிறந்த மூலங் களின் நூலகமே இன்ரநெற் இவ் வெப்பின் விலாசம் www.ipl.org ஆகும். பிரயோசமான தகவல்களால் நிரப்பப்பட்டிருக்கும் வெள்தளமே பொதுசன நூலகமாகும். இன்ரநெற்றை பயன் படுத்துவோருக்கு முக்கியமான உபகரணம் தேடல் இயந்திரமாகும்.

கல்வி நிறுவனங்கள், ஆராய்ச்சி நிறுவனங் களும் தனிப்பட்ட செயல்திட்டங்களுக்கான தகவல்களை ஆராயக் கூடிய தேடல் இயந்திரங் கள் பல விருத்தி செய்யப்பட்டுள்ளன. அத்துடன் பெருந்தொகையான Web Directories களும் உள்ளன. பிரதான வகை தேடல் இயந்திரங்க ளாக All the web, Alta vista, Google, Yahoo, Ask Jeeves, Lycos, Msn, Teoma மேற்குறிப்பிட்டவை சில பயன்படுகின்றன. அத்துடன் About, Beaucoup, Internet Public Library, Open Directory போன்ற Web Directories களும் பயன் படுகின்றன.

இன்ரநெற் ஊடாக வணிகங்கள் பல்வேறு வகைப்பட்ட சேவைகளைப் பெற்றுக் கொள்கின் றன அவையாவன

- E-mail இலத்திரனியல் அஞ்சல்
- Discussion Mailing Lists பல இலத்திரனியல் விளம்பரங்களுக்கு ஒரே தடவையில் செய்தியை அனுப்ப முடிதல்
- Newsgroup தகவல் தொகுதி அல்லது செய்தித் தொகுதி பலவற்றை ஒரே தடவை யில் அனுப்பும் வசதி
- Instant Messaging and - chat இலத்திரனியல் உரையாடல், உடனடிச் செய்தி அனுப்பும் வசதி
- Tel Net இன்ரநெற்றை பயன்படுத்தி தொடர் பாடும் செயல்ஒழுங்கு
- Ntranets இன்ராநெற் வசதி
- Extranets எக்ரா நெற் வசதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான பல வசதிகளை பெறக்கூடிய வகையில் இன்ரநெற் அமைந்துள்ளது. இது வணிகக் கருமங்களில் மிகவும் விரைவாக ஊருடுவி உள்ளது. அத்துடன் வணிக நிறுவனங்களின் அகக் கருமங்களை நடத்த அவசிய மாகிறது. மொத்தத்தில் வர்த்தக விரிவாக்கத்திற்கும் உலக பொருளாதார விருத்திக்கும் Internet உதவி வருகிறது.

**உசாத்துணை நூல்**

வணிகக்கல்வி – பேராசிரியர் ஜெகத் பண்டார

---

# உள்ளங்கையில் உலகம்

காலம் மாறிய கடுகதி வேகத்தில்
கலி கூப்பிடுதூரம் - நாளொரு நாடு
நடுக் கடலில் அணு பிளக்கும்

ஓர் பொழுதில் உள்ளங்கையில்
“மவுஸ்” அழுத்தி ஒரு “க்ளிக்”
செய்தே
உலகத்தைப் பிளக்கும் வரை

நி
மி
ர்
ந்
து

நி
ல்
அப்புறம்
வானம்
மட்டும் தான் உனக்கு

நிமிர்ந்து நில் - வானம்
உனக்குத் தான்
சுழலுகின்ற உலகம் - உன் கைகளில்

காதலும் கத்தரிக்காயும்
கடைந்தெடுத்த பூசணிக்காயும்
காகிதத்தில் கவிதைகள்

நீண்ட இரவும் தெருநாயின் ஓலமும்
நிகமும் சதையும்
நிதமும் கவலைகள்

பரமார்த்தகுருவின் சீடர்கள்
காவி உடை தரித்து
பார் ஆளுகின்றார்கள்

முகத்துக்குப் புகழ்மாலை கழுத்துக்கு
பூமாலை புறமுதுகுக்கு விஷமிட்ட
கத்தி என மனிதர்கள் விலங்கு
மீனாகப் பழகிக் கொண்டார்கள்

த.கேஜினி
2014 வர்த்தகப்பிரிவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்துவெளி நாகரீகம்

ஜெ.யதுர்ஷிகன்
2014 கலை

வரலாற்றுச் சக்கரம் சுழல்கையில் நாகரிகம் விட்டுச் செல்லும் சுவடுகளே கலைப்படைப்புக் கள். சிந்துவெளியில் ஐயாயிரம் வருடங்களுக்கு முன் படைக்கப்பட்ட முகமறியாக் கலைஞர்களின் படைப்புக்கள் அந்நாகரிகத்தின் சிறப்பை இன் றைக்கும் எமக்குப் பறைசாற்றுகின்றன. சிந்து வெளிக்கு முந்தியொரு நாகரிகம் இன்னமும் இந்தியாவெங்கனும் அறியப்படவில்லைதான். எத்தனையோ நாகரிகங்கள் எச்சங்கள் இன்மை யால் கால ஓட்டத்தில் தூரச்சென்று தொலைந்து போய்விட்டன. சிந்துவெளி நாகரிகமோ தன் னைத் தொலைத்து விடவில்லை கால ஓட்டத்தில் அசைந்து விடாமல் கம்பீரமாய் கையசைத்து நிற்கின்றது.

பண்டைய இந்தியாவில் வடக்கிலிருந்து தெற்காக ஓடி அரபிக் கடலில் கலக்கும் சிந்து நதியின் கரையை அண்டிய பகுதிகளே சிந்து வெளி நாகரிகத்தின் பிறப்பிடம். பண்டைய இந்தியா அரவணைத்த பகுதிகள் சுதந்திர இந் தியா, பாகிஸ்தானைப் பிரசவித்ததுடன் சுருங் கிப் போய்விட்டது. சிந்துவெளியோ பாகிஸ் தானினுள் சென்று விட்டது. இன்றோ மொஹஞ்ச தாரோ பாகிஸ்தானின் சிந்து மாகாணத்திலும், ஹரப்பா மேற்குப் பஞ்சாப் மாகாணத்திலும் அமைந்துள்ளன. இவ்விரண்டுக்குமிடையே எழுபது வரையான குடியிருப்பு மையங்கள் இன்று மணல் மேடுகளாய், தொல்லியல் ஆராச்சி க்கான அடித்தளங்களாய் அமைந்துள்ளன. மொஹஞ்சதாரோ, ஹரப்பாவிற்கு இடையே யான தூரம் 300 மைல்கள் (480Km) ஆகும். இரண்டிற்குமிடையே லொகூஞ்சதாரோ, தஹஞ்சதாரோ, அலிமுராத், பாண்டிவாதி, அம்ரி, கோட்ஹா நிஹாங்கன், சக்பூர்பானிசி யால் போன்ற இடங்களிலுள்ள எச்சங்கள் தாங்கிய மண்மேடுகள் அகல்வாராய்ச்சியின் போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அடிமை இந்தியாவில் ஆங்கிலேயர் ஆரம் பித்த ரயில்பாதை அமைக்கும் முயற்சியானது அழிந்த மண்மேடுகளாக நாகரிகத்தை நாமெல் லாம் அறிய ஒரு சந்தர்ப்பத்தை அளித்தது. வேத காலத்திலிருந்துதான் இந்தியாவின் வரலாறு ஆரம்பமாகின்றது என்றவர்களுக்கு ஓர் அடியாக அமைந்தது. ஜோன் பிரவுண்டன், வில்லியம் பிர வுண்டன் ஆகிய பொறியியலாளர் சகோதரர்கள் ரயில் பாதையமைக்கக் கற்கள் தேடிய போது கற்களுடன் காளை உருவம் கொண்ட முத்திரை யையும் கண்டனர். 1856இல் தளபதி அலெக் சாண்டர் கன்னிங்காம் இம்முத்திரையையும், அதிலுள்ள எழுத்துக்களையும் பார்த்து ஆச்சரிய மடைந்தார். விளைவு அவர் 1872இல் இந்திய தொல்பொருள் ஆராய்ச்சித்துறை தலைவராக வந்தபின் தனது கண்டுபிடிப்பை மற்றையோர் அறிய எழுத்திலே வடித்தார். ஆனால் அன்று இவரின் கருத்துக்கள் பெருமளவில் யார் காதி லும் ஏறவில்லை. 1921இல் சேர் ஜோன் மார்ஷல் தொல்பொருள் துறைப் பணிப்பாளர் நாயகமாக வந்தவுடன் சிந்துவெளி ஆய்வைத் தொடங்கி வைத்தார். சேர் ஜோன் மார்ஷல் மேற்பார்வை யில் R.D பானர்ஜி 1922-1931 வரை மொஹஞ்ச தாரோ மண்மேட்டை அகழ்ந்து அந்நகரத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிக்கொணர்ந்தார். சேர் யோடிமர் உசீஷர் என்பவர் 1945-1948 வரை பணிப்பாளராகப் பணியாற்றிய போது தயாராம் சஹானி என்பவர் ஹரப்பாவை வெளிக் கொணர்ந்தார்.

மொஹஞ்சதாரோ போலன்றி ஹரப்பாவிலுள்ள கட்டிடங்கள் கற்கள் தோண்டியமையால் சிதைந்து காணப்படுகின்றது. இந்நாகரிகங்களின் காலமாக கி.மு 3250-2750 வரையான காலப்பகுதி குறிப்பிடப்படுகின்றன. எனினும் இந்நாகரிகத்தின் கால நிர்யணத்தில் அறிஞர்களிடையே சிறிது கருத்து வேறுபாடு காணப்படுகின்றது குறிப்பிடத்தக்கது. பண்டைய நாகரிகத்தின் பெருமையை, சிறப்பை எடுத்தியம்புபவை கட்டிடங்களே. இதனால் தான் அறிஞர்கள் கட்டிடங்களே நாகரிகத்தில் கருப்பை என்கின்றனர். சிந்து வெளியின் கட்டிட அமைப்பானது அம்மக்களின் திட்டமிடுந்திறன், கட்டிடக்கலை வல்லமை போன்றவற்றை எமக்கு உணர்த்தி நிற்கின்றது. எகிப்தியக் கட்டிடங்களில் காணப் படும் ஆடம்பரமோ, அன்றி சுமேரியக் கட்டிடங்களில் காணப்படும் அலங்காரமோ சிந்துவெளிக் கட்டிடங்களில் காணப்படாவிடினும் இவை பயன்பாட்டு நோக்கமும், தேவையும் கருதியதாக அமைந்துள்ளமை குறிப்படத்தக்க அம்சமாகும்.

பாத்திரங்கள், கத்தி, வாள், ஈட்டி, அம்பு போன்ற போர்க் கருவிகள் செம்பு, வெண்கலம் கொண்டு செய்யப்பட்டுள்ளன. எனவே இங்கு வாழ்ந்த மக்கள் உலோகங்களை உருக்குதல், வார்த்தல் போன்ற செயல்களிலும் வல்லவர்களாக இருந்துள்ளார்கள் எனக் கருதக் கூடியதாக உள்ளது. பருத்தி ஆடைகளைச் சாயமூட்டி அணிந்துள்ளனர். எனவே இங்கு நூல் நூற்றல், ஆடை நெய்தல் போன்ற செயற்பாடுகளும் நடைபெற்றுள்ளன எனக் கருதிக் கொள்ள முடிகின்றது. தங்க மணிகள், இரத்தினக் கற்கள் கோர்த்த மாலைகள், ஒட்டியாணம், வளையல்கள், கொண்டையூசிகள் போன்றவை இங்கு வாழ்ந்த மக்களின் அழகுணர்ச்சியை புலப்படுத்தி நிற்கின்றன. இங்கு கண்டெடுக்கப்பட்ட கலை ஆக்கங்களான சிற்பங்கள், முத்திரைகள் போன்றன கலைத்திறனை ஆற்றலை எமக்கு எடுத்தியம்பி நிற்கின்றன. இச்சிலைகளினூடாக ஆக்கத்திறன், திறமை, அழகியல் சிறப்பு ஆகியன சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இயற்கைத் தன்மையிலும் கற்பனைத் தன்மையிலும் நிர்மாணத் திறன் சிறப்பாகப் பூரணப்படுத்தப்பட்டு சிலைகளின் மூலம் சிறப்பாக வெளிக்காட்டப்பட்டுள்ளது. ஊடகத்தைக் கையாண்டுள்ள சிறப்பும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது.



சிந்துவெளி நாகரிகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மொஹஞ்சதாரோ, ஹரப்பா பற்றியும் சற்று விரிவாகப் பார்ப்போம்.

சிந்து மொழியில் மொஹஞ்சதாரோ என்பதன் பொருள் இறந்தவர் மேடு. பாகிஸ் தானின் சிந்து மாகாணத்தில் சிந்து நதிக்கு மேற்குப் புறமாக காணப்படுகிறது. இந்நகரம் எகிப்திய, சுபேரிய நாகரிகங்களுடன் ஒப்பிடக் கூடியவாறு இன்றைய தொழில்நுட்ப விருத்தி பெற்ற கட்டிடங்களுக்குச் சமனாக அமைந்த கட்டிக்கலை மொஹஞ்சதாரோவின் சிறப்பம்சமாகும். புதையுண்ட நகரமானது வரிசையாகக் கட்டப்பட்டுள்ள வீடுகள், பெரிய மாளிகைகள், மண்டபங்கள், நீராடும் குளம், நேரான வீதிகள், சாக்கடைகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இங்குள்ள வீதிகள் யாவும் கற்களிட்டு அமுத்தமாக அமைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பட்டுள்ளதும் இந்துநாகரிகத்தின் ஒரு சிறம் பம்சமெனலாம். குளியலறை, நீச்சற்குளம் போன்றவை பூச்சுவேலை கொண்டவையாக அமைந்துள்ளன. சுண்ணாம்பு, மணல், ஜிப்சம் போன்றவற்றைக் கொண்ட கலவை பூச்சு வேலைக்குப் பாவிக்கப்பட்டுள்ளது.

கட்டிடங்களில் அழகைவிடப் பயன்பாட்டு நோக்கமே முதலிடம் பெறுகின்றுது. கட்டிடங் களின் புறச்சுவர் சுட்ட செங்கற்களால் ஆனது. சுவர் களிமண் சாந்தால் மிகவும் அழுத்தமாகப் பூசப்பட்டுள்ளது. அதிக உயரமான சுவர்கள் காணப்படுகின்றமையே மாடிவீடுகள் அமைந் திருந்தமையை உறுதிப்படுத்துவதாக உள்ளது. பெரிய கட்டிடங்கள் நாற்சார வீடுகளைப் போல் நடுவிலே முற்றத்தைக் கொண்டுள்ளன. முற்றத்தைச் சுற்றி அறைகள் அமைந்துள்ளன. ஒவ்வொரு அறைக்கும் காற்றோட்ட வெளிச்ச வசதிகள் உள்ளன. பெரிய வீடுகளின் அடியில் தானியக் களஞ்சியங்கள் இருந்துள்ளன. சில வீடுகளில் கால்நடைகள் கட்டுவதற்கும் தனியான இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. தனியான சமயலறை யும், சமயலறையில் மொசப்பத்தேமிய அடுப்புக் களை ஒத்தவையான அடுப்புக்களும் காணப்படு கின்றன. ஒவ்வொரு வீட்டிலும் கிணறு குளிய லறைக்கு அருகில் தரை மட்டத்தில் அமைந்துள் ளது. சுற்றிவர சாய்ந்த மேடை, பாதுகாப்புச் சுவர்கள் காணப்படுகின்றன.

இங்கு காணப்படும் குளங்களில் சுவர், பாது காப்பு மதில்களும் அதிலே நடைபாதையையும், குளத்து நீரை வெளியேற்றும் வழியொன்றும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவை யாவும் செங்கற்களால் அமைக்கப்பட்டு வழு வழுப்பான பூச்சுப் பூசப்பட்டுள்ளது. இங்கு பூசப் பட்டிருந்த வழுவழுப்பான பொருள் இந்தியா வில் எங்கும் காணப்படவில்லை. எனவே வேறு நாட்டிலிருந்தே இதனைக் கொண்டு வந்திருக்க வேண்டும் எனக் கருதப்படுகின்றது.

1920இல் ரயில்பாதை அமைக்கும் போது ஹரப்பா நகரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கற்கள் தோண்டியெடுக்கப்பட்டதால் நகரத்தின் கட்டிடங்கள் பெரும்பாலும் சிதைந்து விட்டன. இந்நகரம் மொஹஞ்சதாரோவை விடச் சிறியது. 21/2 மைல் சுற்றளவு கொண்டது. ஆனால் காலத்தால் சிறிது முற்பட்டது. எட்டுத்தடவை இந் நகரம் புதுப்பிக்கப்பட்டதென M.Sவாட் என்பவர் கூறியுள்ளார். சுவர்களின் உட்புறம் சுடாத செங் கற்களாலும், வெளிப்புறம் சுட்ட செங்கற்களா லும் ஆனாவை. சுவர், தரை, கழிவு நீர் வடிகால் கள் என்பன மிக அமுத்தமாக சீமெந்தால் ஆன தரைபோல் செதுக்கப்பட்டுள்ளன. வீடுகள், படிக் கட்டுக்கள், வீதிகள், வடிகால்கள் மொஹஞ்சதா ரோவை ஒத்தவை. இங்கு பொதுக் கட்டிடங்கள், குடியிருப்புக் கட்டிடங்கள் என இரண்டு வகை யான கட்டிடங்கள் உள்ளன. குடியிருப்புக்கள் மாடிகளையும், தனியறைகளையும், முற்றங்க ளையும் கொண்டவை. பொதுக் கட்டிடங்களில் செங்கற்களால் ஆன வட்ட வடிவ மேடைகள் உள்ளன. இங்கு காணப்படும் ஒரு களஞ்சிய மானது நான்கு அறைகளையும் தரைக்கு மரப் பலகை போடப்பட்டுள்ளது.

மொஹஞ்சதாரோ, ஹரப்பா நகரங்களுக்கி டையே காணப்படும் ஏனைய எச்சங்கள் தாங்கிய மண்மேடுகளில் கண்டு பிடிக்கப்பட்ட பொருட்கள், கலைப்படைப்புகள், கட்டிடங்கள் போன்றவை யாவுமே இவ்விரண்டு நகரங்களில் கண்டுபிடிக்கப்பட்ட பொருட்களைப் பெரிதும் ஒத்தவை எனவே இவையும் சமகாலத்தையுடை யவையும், ஒரே நாகரிகத்தைச் சேர்ந்தவையு மாக இருக்கலா மெனக் கருத முடியும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகமயமாக்கல்

சி.சுபாங்கி
2012 கலை

குறிப்புக்கள்

1. முன்னுரை
2. உலகமயமாக்கல் என்றால் என்ன?
3. உலக மயமாக்கலும் நவீன தொழினுட்பமும்
4. உலக மயமாக்கலை ஊக்குவிக்கும் சக்திகள்
5. உலக மயமாக்கலால் ஏற்படும் விளைவுகள்
6. முடிவுரை

உலக மயமாக்கல் என்பது உலக நாடுகளையும் அவற்றில் வாழும் மக்களையும் ஒருங்கிணைக்கும் ஒரு செயன்முறையாகும். அது பொருளாதார, தொழில்நுட்ப, கலாசார மற்றும் அரசியல் பிணைப்புக்களுக்கூடாக உலக மக்களை மிக அருகில் எடுத்து வருவதுடன் அவர்கள் ஒருவரில் ஒருவர் தங்கியிருக்கும் நிலையையும் அதிகரிக்கச் செய்கின்றது. மிக முக்கியமானதாக இருந்து வரும் பொருளாதார கண்ணோட்டத்தில் நோக்கும் பொழுது உலக மயமாக்கல் என்பது அனைத்து நாடுகளினதும் வளர்ந்து வரும் பொருளாதார ஒருங்கிணைப்பாகவும், தேசிய சந்தைகள் ஓர் உலகலாவிய சந்தையில் ஒருங்கிணையும் ஒரு செயன்முறையாகவும் உள்ளது. தேசிய சந்தைகள் பொருட்கள் மற்றும் சேவைகள் என்பவற்றிலான அதிகரித்த அளவிலான எல்லை தாண்டிய வர்த்தகத்திலும் சர்வதேச மூலதனம் பணம் என்பவற்றின் அசைவுகளுக்கூடாகவும் தொழில்நுட்பப் பரிமாற்றத்துக்கூடாகவும் இது இடம்பெற்று வருகின்றது. புதிய சந்தை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்காகவும் செலவு அனகூலம் மற்றும் உயர் இலாபம் என்பவற்றைக் கருத்தில் கொண்டு பொருளாதார நடவடிக்கைகள் தேசிய எல்லைகளைத் தாண்டி வியாபித்து செல்லும் பொழுது பண்ட உற்பத்தி வர்த்தகம் முதலீடு என்பன சர்வதேச மயமாக்கப்படுகின்றது. அரசியல் அடிப்படையில் நோக்கும் பொழுது உலகமயமாக்கல் என்பது ஜனநாயகம், மனித உரிமைகள் அடிப்படைச் சுதந்திரங்கள், பால், சமத்துவம், ஒளிவு மறைவற்ற ஆட்சி மற்றும் அரசு சாரா அமைப்புக்கள் என்பவற்றின் பெருக்கங்கள் என்ற வகையிலேயே கருதப்பட்டு வருகின்றது. இது தவிர உலகமயமாக்கல் செயன்முறை ஒரு சமூகவியல் ரீதியான பரிமாணத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது. அதாவது உலக மொழியாக ஆங்கிலத்தை ஏற்றுக் கொள்வதும் பொப் இசை, ஹொலிவூட் படங்கள், நீலநிறக் காற்சட்டைகள், திடீர் உணவகங்கள் மற்றும் நவீன வாழ்க்கை மோஸ்தர்கள் என்பவற்றின் பரவலாகவும் அது நோக்கப்படுகிறது. பொதுவாகக் கூறுவதனால் உலகமயமாக்கல் சக்திகள் கைத்தொழில் நாடுகளிலிருந்தே தோன்றி வருகின்றன. வளர்முக நாடுகளை தம்மால் வடிவமைக்கப்படும் உலகளாவிய அமைப்புக்கள் உள்வாங்கிக் கொள்வதே இச்சக்திகளின் நோக்கமாகும். இது அநேகமாக மேலைய நாடுகளின் மூலதனம் தொழில்நுட்பம், கலாசாரம், எண்ணப் போக்குகள் மற்றும் வாழ்க்கைப் பாணிகள் என்பவற்றை வளர்முக நாடுகளின் பொருளாதார, கலாசார, அரசியல் மற்றும் சித்தாந்த கொள்கைகளை ஒரு முகப்படுத்தும் (அல்லது மேலைத் தேசமாக்கும்) ஒரு செயன்முறையாகவே தென்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபுறத்தில் உலக மயமாக்கல் என்பத தொழில் நுட்பத்திற்கு ஏற்பட்டு வரும் முன்னேற் றத்தின் காரணமாக காலம், இடம் மற்றும் தேசிய எல்லைகள் என்பவற்றை சுருக்கியும் இல்லாமல் செய்து வருகின்றது. இணையம், இடம் பெயர், தொலைபேசி, தொலைநகர், பொறி முதலிய புதிய தகவல் தொடர்பு தொழில்நுட்பங்கள் மலி வானவையாகவும் உயர் வேகத்தின் கொண் டவையாகவும் பரந்த ஆட்புலத்தை உள்ளடக்கக் கூடியவையாகவும் உருவாகி வருகின்றன. அவை நிதிச் சந்தைகளின் ஒருங்கிணைப்பினை யும் பல தேசிய நிறுவனங்களின் பரவலையும் மக்களிடையே தகவல் மற்றும் கருத்துக்கள் என்பவற்றின் பரிமாற்றத்தினையும் வியப்பூட் டும் அளவுக்கு துரிதப்பட்டுள்ளன.

நாங்கள் இன்று வாழ்ந்து வரும் உலகம் பயங்கரமான போர்கள், வன்செயல்கள் மற்றும் குற்றச் செயல்கள் என்பற்றினாலும் பெருகி வரும் அரசியல் கொந்தளிப்புக்களினாலும் சிதைந்து சின்னாபின்னமாக்கப்பட்டுக் காணப் படுகிறது. 21ஆம் நூற்றாண்டின் முதலாவது தசாப்பதத்தில் சமாதானம், செல்வச் செழிப்பு மற்றும் சுகவாழ்வு என்பவற்றுக்கான எதிர் பார்ப்புக்களை குழப்பங்கள் மலிந்த அரசியல் பொருளாதாரம் சமூக ஒழுங்கு களங்கப்படுத் திக் கொண்டிருக்கிறது. இந்தப் பின்புலத்தில் மேலைய அதிகார வர்க்கம் அதன் மும்மூர்த்திக ளான சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் உலகமயமாக்கல் என்று அழைக்கப்படும் சிக்கலான சர்ச்சைக்குரிய செயன்மறையை முன்னெடுத்துச் செல்கின்றது. மேலைய உலகின் ஊடாக வலையமைப்புக்களும் கைத்தொழில் உலகின் குறுகிய அக்கறைக் குழுக்களும் எமது உலகம் இன்று எதிர்நோக்கியுள்ள அனைத்துவித மான பிரச்சனைகளுக்கும் துர்ப்பாக்கியங் களுக்குமான சர்வரோக நிவாரணியாக உலக மயமாக்கலைச் சிபார் செய்து வருவதுடன் அதற் கூடாக சகல மக்களுக்கும் புதிய வாய்ப்புக்களும் புதிய தெரிவுக்களும் கிடைக்க முடியும் என வாக்குறுதி தருகின்றது. ஆனால் மூன்றாவது மண்டல நாடுகளின் பல கோடிக்கணக்கான மக்கள் வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் மற்றும் போஷாக்கின்மை என்பவற்றின் பிடியில் சிக்கித் திணறி வருவதனை அவர்கள் எளிதில் மறந்து விடுகின்றனர்.

உலக மயமாக்கல் செயன்முறையைத் தெளி வாகப் புரிந்து கொள்வதற்கும் அதனைச் சரியான வரலாற்றுப் பின்புலத்தில் வைத்து நோக்குவதற்கும் இதன் வேர்களை நாங்கள் கண்டறிவது அவசியமாகும். நாடுகளுக்கிடையி லான பொருளாதார ஒருங்கிணைப்புச் செயன் முறை 19ம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் உருவாக்கியதுடன் 1870-1913 காலப் பிரிவின் போது உலகப் பொருளாதாரத்தில் முன்னெப் பொழுதும் இருந்திராத அளவிலான பெருமாற் றங்கள் நிகழ்ந்தன. இக்காலப் பிரிவின் போது பல நாடுகள் உலகமயமாக்கலின் அடிப்படைக் குணாம்சமான உணர் அளவிலான திறந்த தன்மையைக் காட்டின. பொருட்கள், மூலதனம் என்பவற்றின் அசைவு தொடர்பாக நிலவி வந்த பெருந்தொகையான கட்டுப்பாடுகள் நீக்கப் பட்டதுடன் பொருளாதார நடவடிக்கையிலான அரசாங்கத்தின் தலையீடு குறைந்த பட்சமட்டத் தில் வைக்கப்பட்டிருந்தது. உலகமயமாக்கல் நிகழ்வுப் போக்கின் இந்த முதலாவது கட்டம் முழுவதிலும் உலக விவகாரங்களில் பிரிட்டன் தனது மேலாதிக்கத்தை செலுத்தி வந்தது. முதலா வது உலக மகாயுத்தத்தின் ஆரம்பம் இந்தக் கட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்தது. இதற்கு சுமார் 6 தாசப்த காலத்தின் பின்னர் தீவிரமான மாற்றங்களை எதிர்கொண்டிருந்த ஓர் உலகச் சூழ்நிலையில் ஐக்கிய அமெரிக்கா சர்வ வல்லமை பொருந்திய வல்லரசாக எழுச்சி அடைந்ததுடன் இணைந்த விதத்தில் 1970களின் தொடக்கத்தில் உலக மயமாக்கலின் இரண்டா வது கட்டம் ஆரம்பமாகியது. இந்த இரு கட்டாங்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிலும் நிலவி வந்த குறிப்பிடதக்க ஓர் அம்சம் சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளத்தக்க ஒரு தேசிய நாணயத்தைக் கொண்ட பொருளாதார வல்லரசொன்று உலகமயமாக்கலுக்கு அவசிய மாக இருந்தமையாகும்.

20ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியின் போது அரசு முதன்மையான ஒரு பாங்கினை வகித்து வந்த அபிவிருத்தி மாதிரி ஒன்றை வளர்முக நாடுகள் பின்பற்றி வந்தன. இந்நாடு களின் இறக்குமதி பிரதியீட்டு உத்தி குழந்தைப் பருவத்திலிருந்து வந்த அவற்றின் உள்ளூர் கைத்தொழில்கள் செழித்து வளருவதற்கு உசித மான ஒரு சூழ்நிலையையும் பாதுகாக்கப்பட்ட சந்தையையும் வழங்கியது. இச் கொள்கை உத்திகள் 1950 களிலும் 1960 களிலும் தீவிர முனைப்புடன் முன்னெடுத்துச் செல்லப்பட்டன. எனினும் இந்த உள்முக வழிப்பட்ட கொள்கை களின் விளைவாக செயன்திறன் வீழ்ச்சியும் வெளியீட்டு இழப்புக்களும் ஏற்படலாயின.

உலக வங்கி சர்வதேச நாணய நிதிய அனு சரணையுடனான அமைப்ப ரீதியான சீராக்கல் நிகழ்ச்சித் திட்டங்கள் 1980களிலும் 1990 களிலும் உலகமயமாக்கல் செயன்முறையை மேலும் தீவிரப்படுத்தின. பல்தேசியம் கம்பெனி களும் இதில் ஒரு முக்கியமான பங்கினை வகித்தன. கேள்வியில் ஏற்பட்ட வீழ்ச்சி தமது சொந்த நாடுகளில் இடம்பெற்று வந்த செலவு அதிகரிப்புக்கள் என்பவற்றின் காரணமாக இக்கம் பெனிகள் தமது உற்பத்தி வசதிகளை வளர்முக நாடுகளுக்கு எடுத்துச் சென்றன. 1990 களின் பிற்பகுதியின் போது பெருந்தொகை யான வளர்முக நாடுகள் பல்தேசியக் கம்பனி களின் மூலதனத்துக்கென தமது பொருளா தாரங்களைத் திறந்து விட்டன பிறிதொரு முனையில் முன்னெப் பொழுதும் இருந்திராத விதத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பத் தாக்கங்கள் போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் என்பவற் றின் செலவுகளில் ஏற்பட்ட கனிசமான வீழ்ச்சி களுடன் இணைந்த விதத்தில் உலகமயமாக்கல் செயன்முறையே மேலும் தீவிரப்படுத்தின.

இன்றைய நிலையில் முழு உலகமும் ஒரு பூகோள கிராமமாக சுருங்கி வரும் ஒரு பின் புலத்தில் உலகலாவிய ரீதியில் பொருளாதாரங் கள் ஒன்றில் ஒன்று தங்கியிருக்கும் நிலை வரவர அதிகரித்துக் கொண்டு வருகின்றது. இந்தச் செயன்முறையில் 5 பிரதான கூறுகளை அவதானிக்க முடிகிறது. சர்வதேச நிதிச் சந்தை களில் ஏற்பட்டு வரும் துரித வளர்ச்சி, குறிப்பாக பல்தெசிய கம்பனிகளிடையே வர்த்தகத்தில் ஏற்பட்டு வரும் வளர்ச்சி, வெளிநாட்டு நேரடி முதலீடுகளில் காணப்படும் பெரும்பாச்சல், உலக லாவிய சந்தைகளின் எழுச்சி, உலகமயமாக்கப் பட்டுள்ள போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் வசதிகளின் பெருக்கத்துக்கு ஊடாக தொழில் நுட்பங்களும் கருத்துக்களும் பரவலாக வியாபித்துச் செல்லல், இந்த சூழ்நிலையில் பேரளவிலான அரசியல் மற்றும் பொருளாதார சக்தியை தம்வசம் கொண்டிருக்கும் வல்லரசுகள் உருவாகியுள்ளன. 1990களின் போது உலகலா விய ரீதியில் ஏற்பட்ட பெருமாற்றங்கள் உலகப் பொருளாதாரம் படிப்படியாக ஒருங்கிணைவ தற்கான ஒரு சூழ்நிலையைத் தோற்றுவித்தன. 1990களின் நடுப்பகுதியின் போது வளர்முக நாடுகள் அனைத்துமே உலக வர்த்தக நிறுவனத் தின் உறுப்புரிமையைப் பெற்றுக் கொண்டதுடன் வர்த்தக தாராளமயமாக்கலுக்கான கட்டுப்பாடு களை ஏற்றுக் கொண்டன.

எவ்வாறு இருப்பினும் உலக மயமாக்கலின் அனுகூலங்கள் நாடுகளுக்கிடையில் சமமான முறையில் பகிரப்பட்டிருக்கவில்லை என்பதனை ஐ.நா அபிவிருத்தி திட்டத்தின் மானிட அபிவிரு த்தி அறிக்கை போன்ற பல ஆவணங்கள் தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டி உள்ளன. உலகமய மாக்கலின் விரிவாக்கத்துடன் இணைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதத்தில் சமூக, அரசியல் கொந்தளிப்புக்கள் தோன்ற முடியும் என்பதனை அண்மையில் சீட்டில் நகரத்திலும் பல மூன்றாவது உலக நாடுகளிலும் இடம்பெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் எடுத்துக் காட்டுகின்றன. உலகவங்கி / சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வர்த்தக நிறுவனம் போன்ற சர்வதேச அமைப்புக்கள உலக மயமாக்கலை ஆதரித்து பேசி வந்த போதிலும் வறிய உலகம் எதிர்கொண்டிருக்கும் வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் போஷாக்கின்மை மற்றும் தொழில்நுட்ப பின்னடைவு போன்ற முக்கியமான பல பிரச்சினைகள் இன்னமும் தீர்க்கப்படாமலே இருந்து வருகின்றது. கல்வி, தொழில்நுட்பம், ஆராய்ச்சி, பயிற்சி நிதி, வங்கித் தொழில், காப்புறுதி மற்றும் போக்குவரத்து போன்ற வளங்கள் அனைத்தும் வளர்ச்சி அடைந்துள்ள கைத்தொழில் நாடுகளிடையே ஒன்று திரண்டுள்ளன. இந்தநிலையில் வளர்முக உலகம் எதிர்காலத்தில் மாற்றம் மற்றும் செல்வச் செழிப்பு என்பனவற்றைச் சாதித்துக் கொள்ளக் கூடிய வாய்ப்புக்கள் அரிதாகவே தென்படுகின்றன. உலகமயமாக்கலை முனைப்புடன் ஆதரித்துப் பேசி வருபவர்கள் வறிய நாடுகள் தொடர்பாக அவர்கள் முன் வைத்து வரும் அபிலாஷையுடன் கூடிய இலக்குகள் சாதித்துக் கொள்ளப்படுவதனை உறுதி செய்தாலே ஒழிய இன்றைய இருண்ட யதார்த்த நிலைமைகள் இன்னும் பல வருடங்களுக்கு அவ்வாறே தொடர்ந்து நீடித்து வரக் கூடும்.

## சிந்தித்துப்பேச சிலவரிகள்

| | | |
|---|---|---|
| சிந்தித்து பேச வேண்டும் | - | சிலவரிகளை மட்டும் |
| தெளிவாகப் பேசவேண்டும் | - | சில சந்தர்ப்பங்களில் |
| அடக்கமாக பேச வேண்டும் | - | அன்பாக பேச வேண்டும் |
| சமயம் அறிந்து பேசவேண்டும் | - | சந்த அமைதியுடன் |
| இனிமையாகப் பேச வேண்டும் | - | பேசாதிருக்கவும் பழக வேண்டும் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழுக்கள் - 2012

ஒழுக்காற்றுக் குழு

சாரணர் அணி

வலைப்பந்தாட்ட அணி

உடற்பயிற்சி அணி

கரப்பந்தாட்ட அணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவு

பா.சத்தியவாணி
2014 கலை

காலைப்பொழுது அழகாக புலர்ந்தது. கிழக்கே தோன்றிய தம் காதலனை கண்டதும் மலர்கள் பெண்ணுக்கே உரிய நாணம் மறந்து இதழ்களை விரித்து வணங்கியது. இளந்தென்றல் ஜன்னல் வழியே உள்நுழைந்து சானக்யாவின் மேனியை மெல்ல வருடி செல்ல, அவள் படம் முன் நின்று அவர்களை வணங்கி விட்டு தேன் ததும்பும் வார்த்தையால் அண்ணா என அழைத்த வண்ணம் அண்ணனின் அருகே அமர்ந்த அவளை நாகவனும் வாரி அணைத்துக் கொண் டான். சிற்றன்னை அவளை அழைத்து அடுக்கடுக் காக வேலைகளை அடுக்கிய வண்ணம் சென்றாள். ஒருவாறு அவனது பிடியில் இருந்து தப்பித்து வந்து பாடசாலைக்கு புறப்பட்டாள். தங்கையின் இலட்சியகனவை நிறைவேற்றுவதற்கு துடிக்கும் அண்ணன் மிக அன்புடனும், பாதுகாப்புடனும் பாடசாலை ஏற்றி சென்றான்.

தங்கைபடும் துன்பங்களை கண்டு சிறுவய தான அவன் செய்வதறியாது கண்ணீரை கால் வாய் நீர் போல் கடத்தினான். அவர்களது கல்விச் செலவுகளை போதுமானளவு சிற்றன்னை செய் யாமையால் தமது இலட்சியங்கள் உடைக்கப்பட் டால் தமது நிலை என்ன ஆகுமோ என எண்ணி கணகலங்கியவன் பாடசாலை படலையையும் தாண்டி மெய்மறந்தவனாய் வண்டியை உழக்கி னான். அண்ணா என்ற அந்த அன்பான இனிய குரலை கேட்டு சுயநினைவுக்கு வந்தவனாய் பாட சாலைக்குள் சென்றான். துன்பத்தில் ஆழ்ந்திரு ந்த அவனுக்கு நொடிப்பொழுதில் பாடசாலை மணி ஒலித்தது போல் இருந்தது. தங்கையின் கண்கள் கலங்கி சிவந்து இருப்பதை கண்டு அவன் ஒரு கணம் துடித்துப் போய்விட்டான். என்னம்மா நடந்தது என மெல்ல அணைத்து அன்பாக வினாவினான். வீரிட்டு விக்கலெடுத்து விம்மி அழுதவள் பயிற்சி புத்தகம் வாங்க வில்லை என்று ஆசிரியை அடித்தார் என்று ஒருவாறு சொல்லி முடித்தாள்.

தாய் தந்தை இருவரையும் தங்கையின் முகத்தில் பார்க்கும் அவன் ஒருகணம் ஆடிப் போய் விட்டான். தங்கைக்கும் ஆறுதல் கூறமுடி யாமல் அவதியுற்றவன் ஒருவாறு தங்கையை அழைத்து சென்று ஆறுதல் கூறி பாடம் சொல்லிக் கொடுத்துவிட்டு அவளை பார்த்து தங்கை எப்பவும் கண்கலங்கக் கூடாது, அண்ணா உயிருடன் இருக்கும் வரை என்று கூறியவன் என்ன நினைத்து சொன்னானோ தெரியாது. தங்கையை தன் மடியில் தூங்க வைத்து அவளின் தூக்கம் நிறைந்த அந்த பிஞ்சு முகத்தை ஆழ்ந்து நோக்கிய அவனது கண்ணில் இருந்து அருவியாக நீர் பாய்ந்தது. தங்கையை தனியே விட்டு விட்டு எங்கேயாவது சென்றால் சிற்றன் னையின் கொடுமையை கேட்க யாரும் இல்லை என்று தான் அநாதையாகிவிட்டதாய் எண்ணி விடுவாள். சிற்றன்னையும் அவளை உயிரோடு கொன்றுவிடுவாள் என்றெல்லாம் எண்ணிய வன், திடீர் என்ற தங்கையை நன்றாக படிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்து அவளை ஒரு ஆசிரியர் நிலைக்க கொண்டுவர வரவேண்டும். அவள் நிம்மதியாக பாடசாலை செல்ல வேண்டும். சந்தோசமாக இருக்க வேண்டுமானால் தான் படிப்பை நிறுத்தி வேலைக்கு செல்ல வேண்டும் என்று எண்ணிய வன் எங்கே போவது என்று அறியாமல் அவதி யுற்றான்.

காலையில் தூக்கம் கலைந்து எழுந்த தங்கையை வாரி அணைத்து சானக்யா அண்ணா வேலைக்கு போகப் போறன் என்று சொன்னதும் கண்களில் நீர் பெருக விழிகளை அசைத்து புருவங்களை மேல் உயர்த்தி பரிதாபமாக அண் ணனை நோக்கியவளின் மனநிலையை புரிந்த ராகவன் சாண நீ எப்பவும் சந்தோசமாக இருக்க வேண்டும் என்று கூறியவனை இடைமறித்து நீட்டாத குரலில் அண்ணா நீங்க என்னவிட்டுப் போனா எப்பிடி என்னால சந்தோசமா இருக்க முடியும்? என்ற தங்கையின் கேள்வி நெஞ்சை உருக்கவே அவனது கலங்கிய முகத்து நினைவு டனும் சிறு முத்தத்துடனும் பதில் பேச இயலாதவ னாய் அவளிடமிருந்து விடைபெற்றுச் சென்றான்.

அண்ணன் பிரிந்து செல்வதை தாங்க முடி யாத சானக்யா கண்ணீர் சிந்த அண்ணன் செல்லும் வழியை கண்ணிமைக்காமல் பார்த்து நின்றாள். பாடசாலை சென்று வந்தவள் அண்ண னின் வருகையை எதிர்பார்த்து மாலைப்பொழு தில் ஏக்கத்துடன் காத்திருந்தாள். அவள் சற்றும் எண்ணாமல் வானத்து நிலாவை கருமுகில் கூட்டம் சூழ்ந்து கொண்டது. என்றும் இல்லாமல் பறவைகள் அங்கும் இங்கும் கத்தித்திரிந்தன. இந்த திடீர்மாற்றம் தனது வாழ்க்கையில் சூழ்ந்து கொள்ளும் என்று அவள் சிறிதும் எதிர்பார்க்க வில்லை அன்று விடை பெற்றுச் சென்ற அண் ணன் வருவாரா? இருக்கிறாரா? இல்லையா? என்று தெரியாமல் அழுது புரண்டாள். அண்ணன் இருக்கும் வரை அடங்கி இருந்த சிற்றன்னை யின் கொடுமைகளையும் அண்ணனின் பிரிவை யும் தாங்கமுடியாமல் தவித்தாள். பலதடவை இறக்க முயன்றும் அண்ணனின் நினைவுகளை கொல்ல முடியாமல் துடித்தாள்.

பத்திரிகை வானொலி என பலவாறாக தேடிய அவளுக்கு எந்த பதிலும் கிடைக்க வில்லை. கலக்கத்தில் இருக்கும் அவளை "அவன் தான் செத்துப் போனான் நீ ஏன் இஞ்ச இருந்து அழுது வடிக்கிற எங்கையாவது போவன் எனக்கு துன்பம் தராமல் என்ற வார்த்தை வெந்த புண்ணில் சூடான வேல் பாய்வது போல் இருந்தது. ஒருவாறு பல நாட்கள் மின்னிமறைய, உயர்தரப் பரீட்சை நாட்கள் நெருங்கின. அண்ண னின் கனவை நனவாக்க தூக்கம் தொலைந்து குப்பி விளக்கில் படித்தாள். இவ்வாறு பரீட்சை முடிந்து பெறுபேறுகள் வெளியாகின. பெறுபேறு பார்க்க சென்றவளை சிற்றன்னை "நீ எல்லாம் எங்க பாஸ் பண்ணப் போற" என்ற வார்த்தை சுள் என்ற உச்சிக்கு ஏறியது. தன்னையே மெழு காய் உருக்கியவள் யார் கதையும் கேளாமல் ஓடிச் சென்றார். சென்றவள் தன்னை மறந்து கண் கலங்கி நின்றாள். ஆசிரியர்கள் சந்தோசமாக இருக்கும் அந்த நேரம் அவள் மட்டும் இடி விழுந்தவள் போல் அமர்ந்திருந்தாள். காரணம் அண்ணன் சந்தோசப்படும் இடத்திற்கு அவர் இல்லையே என்று.

பல்கலைக்கழகம் செல்ல வசதி இல்லையே என்று எண்ணியவளை பாடசாலை சமூகம் கற் பித்தது. பெற்றோரின் கனவையும். அண்ணா வின் கனவையும் நனவாக்கி விட்டேன் எனும் போது சந்தோசமும், அண்ணன் உயிரோடு இல்லையே எனும் கவலையடனும் ஒரு பட்ட தாரி ஆசிரியராக வெற்றி மிடுக்குடன் சொந்த மண்ணில் காலடி எடுத்து வைத்தாள். அண் ணனுக்குரிய இறுதிக் கிரிகைகளை சிற்றன்னை செய்து முடித்திருந்தாள். அண்ணனின் பழைய நினைவுகள் கண்ணெதிரே நிலை குற்றி நின்றது. அவனது குறும்புகள், அன்பு, பாசம், அவனது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகிய முகம், அவன் அடிக்கடி உரைக்கும் வார்த்தைகள், இவ்வாறு நீண்ட திரையை புரட்டிக் கொண்டு இருந்த சானக்யாவின் காதிலில் ஏதோ ஒன்று சட்டென்று நுழைந்தது.

ராகவன் என்பவர் தனது தங்கை சானக் யாவை தேடி வந்து அக்கிராம எல்லையில் வழி தெரியாமல் நிற்பதாக யாரோ சொன்னர் உடனே எழுந்து யாருக்கும் சொல்லாமல் சந்தோசத்தில் ஓடிச் சென்றாள். அந்த மயான இருளில் அங்கு யாருமே இல்லை. நரிகள் ஊளையிடும் சத்தமும், சுடலை குருவியின் ஓசையும் தான் கேட்டது. தன்னந்தனியே அண்ணனை பார்க்கும் ஆசை யில் வந்தவளுக்கு அச்சம் அடிமனம் முதல் உச்சம் தலை வரை பீதியை எழுப்பியது. அப்போது தான் அவள் எனது சிற்றன்னைதான் பொய்யாக சொன்னாளோ! என்று எண்ணி கலங்கினாள். பூச்சியும் அசையாத அந்த அர்த்த இராத்திரியில் இவள் மட்டும் அங்கே செய்வதறி யாது ஆடாமல் அசையாமல் சிலையாய் நின்றாள்.

அந்த மயான பொழுதில் சானக்யாவின் தோள் மீது யாரோ பற்றிப் பிடித்தார். யாரோ! என அறியாது, கத்தவும் முடியாமல் திடுக்கிட்டு நின்றாள். அப்போது அவள் திருடனாக இருக்க லாம் என பலவாறு எண்ணியவாறு மெல்ல திரும்பினாள். அவள் கண்களை அவள் நம்ப வில்லை சிற்றன்னை கிரியை செய்த அண்ணன் அவள் முன்னே அண்ணா! என அலறியவாறு கட்டித் தழுவியவள், திடுக்கிட்டு முளித்து எழுந் தாள். தனது அன்னையின் அருகில் கிடப்பதை எண்ணி பயம் தெளிந்தாள்.

**நல்ல மனிதனுடைய வாழ்க்கையில் சிறந்த பகுதி எது வென்றால் அவ்வப்போது அவன் அன்புடன் சிறுசிறு செயல்க ளைச் செய்வது தான் அவை அற்பமானவைகளையும் குறிப்பிட முடியாதவைகளாயும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டாதவைகளாகவும் இருக்கும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "முயற்சித்தால் முன்னேறலாம்"

திருமதி. கா. நளாயினி
ஆரம்பக்கல்வி ஆசிரியர்

முயற்சி செய்தால் நிச்சயம் வெற்றி கிடைக்கும் என்பது எல்லோரும் அறிந்த உண்மை. நாம் முதலாவது ஓர் குறிக்கோளைக் கொண்டிருக்க வேண்டும். "குறிக்கோள் இல்லாத வாழ்க்கை ஆழ்கடலில் துடுப்பில்லாத படகு போன்றது" என்பர் புவியிலே சஞ்சரிக்கும் ஒவ்வொரு ஜீவராசியும் ஏதோ ஒரு குறிக்கோளை அல்லது இலட்சியத்தை நோக்காகக் கொண்டு தனது வாழ்க்கையை மகிழ்ச்சியாக வடிவமைத்துக் கொள்கின்றன இந்நிலையில் தனது நோக்கத்தை அடைய எத்தனிக்கும் வேளை பல சவால்களையும் எதிர்கொள்ள வேண்டி ஏற்படும் அத்தோடு பல பிரச்சினைகளும் வந்து நம்மைச் சுற்றிக் கொண்டிருக்கும். இத்தகைய ஓயாத சுமைகளையும், தடைகளையும் பிரச்சினைகளையும் சவால்களையும் வெற்றுப் படிகளின் படிக்கற்கள் எனக் கருதி சவால்களையும் சாதனைகளாக மாற்ற வழி செய்ய வேண்டும். அத்துடன் குறிக்கோளை அடைய முற்படும் போது அவனுக்கான பாராட்டுக்களும் ஊக்கங்களும் ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் கூட சில சமயங்களில் கிடைக்காமல் போவதுண்டு.

"முயற்சி திருவினையாக்கும்" எனவே இவ்வாறான பிரச்சனைகளுக்கு மத்தியில் தனது குறிக்கோள்களை நிறைவேற்றத் துடிக்கும் உள்ளங்களே! இதோ சில ஆலோசனைகளும் வழி முறைகளும்

**1. தன்னம்பிக்கை** (Self Confident)

முயற்சியாளர்கள் அனைவருக்கும் தான் கொண்டிருக்கும் இலட்சியத்தை அடைய முடியும் எனும் சுயநம்பிக்கை உள்ளத்தில் எழ வேண்டும்.

இவ்வாறு தன்னம்பிக்கை கொண்டவன் தனது நோக்கத்தை அடைய அயராது பாடுபடுவான். இன்னும் அவன் இலக்கைப் பூர்த்தி செய்வதில் கண்ணும் கருத்துமாக இருப்பான் அத்துடன் அவர்களது நோக்கம் தெளிவானதாகவும் இருக்கும். தனது குறிக்கோள்களை அடைய முயற்சிக்கும் போது அவன் சந்திக்கும் தோல்வி, பின்னடைவு, வீழ்ச்சி போன்றவற்றைக் கண்டு தயங்க மாட்டான். எந்தவொரு முயற்சியாண்மையின் பின்னாலும் தோல்வி, துக்கம், கவலை, துன்பம், இழப்பு போன்றவை இல்லாமல் இல்லை ஒரு முயற்சியாளன் இவை தனது அன்றாட வாழ்வில் நடக்கும் சாதாரண நிகழ்வுகள் என நோக்குவான். மேலும் அவற்றைத் தனது வெற்றியின் அனுபவமாகவும் முதலீடாகவும் கொள்வான்.

**2. கடின உழைப்பு** (Hard Working)

இரவு பகல் பாராது அயராது முயற்சி செய்யும் முயற்சியாளர்கள் தான் எதிர்நோக்கும் கஷ்டங்களை வெற்றிப் படிகளாக மாற்றி இலக்கை அடைவார்கள். "பசித்திரு தனித்திரு விழித்திரு பதவி நிச்சயம்" என்ற கருத்தும் இதனை பறைசாற்றி நிற்கிறது.

**3. நெகிழக் கூடிய தன்மை** (Flexible)

காலங்களில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப அவன் நெகிழ ஆயத்தமாக இருப்பான் ஆனால் காலம் மாறும் வரை அவன் காத்திருப்பதில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு முன்பே அவன் தொழிற்பட்டு விடுவான் நன்மையோ, தீமையோ எதையும் தாங்கும் ஆற்றல் அவனுக்குண்டு

**4. ஊக்கமாக செயற்படல்** (Motivated)

தான் கொண்ட குறிக்கோளை அடைய வேண்டும் என்ற உறுதிமொழி அவன் உள்ளத்தில் இருப்பதனால் அவன் வெற்றி இலக்குடன் அந்த நோக்கத்தை அடையும் வரை நீண்ட காலத்திற்கு ஊக்கமாகச் செயற்படுவான்.

**5. பெறுபேற்றை நோக்கிச் செல்வான்**

(Achievement Oriented)

முயற்சியாளன் எப்பொழுதும் உயர் நோக்கம் கொண்டிருப்பான். அந்த இலக்கை அடைவதில் குறியாக செயற்படுவான் அத்தோடு தியாக சிந்தனையுடனும், அர்ப்பணிப்புடனும் நேர்மையாகவும் ஈடுபடுவான்.

**6. நல்லெண்ணமுடையவன்**

(Optimistic)

முயற்சியாளன் நல்லெண்ணத்துடனே பார்ப்பான் முடியாது, இயலாது, இல்லை என்ற பதங்களும் களவு பொய் போன்ற தீய செயல்களும் அவனிடம் இல்லை அவனிடம் எப்பொழுதும் நேர்மையான சிந்தனையும் அமைதியும் காணப்படும். ஒரு போதும் எதிர்காலத்தை இருள் சூழ்ந்ததாக எண்ண மாட்டான்.

முயற்சியாளன் தனது இலக்கை அடைய முயற்சிக்கும் வேளை அமைதியான சாந்தமான மனத்துடன் முயற்சிப்பான். நேரத்தைத் திட்டமிட்டு சரியாகப் பயன்படுத்தி கொள்வார்கள். வீணாக நேரத்தைச் செலவு செய்யமாட்டார்கள். "நேரத்தை சரியாகப் பயன்படுத்திக் கொண்டவன் பேரும் புகழும் பெறுவான்" என்ற கருத்தை எந்நேரமும் ஞாபகப்படுத்திக் கொள்வான்.

மேற்கூறப்பட்ட வழிமுறைகளை பின்பற்றுவதன் மூலம் நாம் ஒவ்வொருவரும் இலகுவாக நமது குறிக்கோளை அடைய முடியும்.

**"முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்"**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்மை செய்வோம்

திருமதி. இ. ஜெ. சுரேஸ்
(B.F.A பரதம்)
ஆசிரியர்

**நன்றி யொருவற்கு செயதக்காலந் நன்றி**
**என்று தருங்கொல் எனவேண்டா – நின்று**
**தளராவளர் தெங்கு தாளுண்டநீரை**
**தலையாலே தான் தருதலால்**

என்பது தமிழ் மூதாட்டியான ஒளவைப் பாட்டியார் எமக்குத் தந்த அமிழ்தொத்த அரிய போதனையாகும். "அடுத்தவனுக்கு நன்மை செய், நல்லைத் செய்" என்ற தலையாய போதனை உலகின் செம்மைசான்ற மதங்களெல்லாம் வழங்குகின்ற சிறந்த போதனையாகும்.

"அறம் செய்ய விரும்பு" என்பதும் ஒளவைப் பாட்டியார் ஆத்திசூடியில் அருளிச் செய்த அமுத வாக்காகும். அங்கே அறம் என்பது மற்றவர் களுக்காக தான தர்மங்களைச் செய்ய வேண்டும் என்பதாகும். மற்றவர்களுக்கு நன்மை செய்வ தும் ஓர் அறம், ஓர் கொடை என்றே கொள்ளப் படும்.

"நன்மை செய்யப் பிறந்த நீ நன்மை செய்யா விட்டாலும் தீமையாவது செய்யாதிரு" என்பது பெரியோர் வாக்கு. எம்மில் எத்தனை பேர் இதற் கமைய ஒழுகுகின்றோம். வெறும் பேர் அளவில் மட்டுமே நன்மை செய்துவிட்டோம் செய்யப் போகிறோம் என்று கூறிக் கொள்வதில் அர்த்த மில்லை. மனம், வாக்கு, காயம் என்ற திரிகர ணங்களும் சுத்தியாகச் நன்மையைச் செயலில் வெளிப்படுத்துபவனே உத்தமன். நன்மை செய்ய முடியாத சந்தர்ப்பங்களிலே அவனுக்கு தீமையா வது புரியாதிருப்பதே அறமாகும்.

இன்றைய காலகட்டத்தில் ஒருவன் தனக்கு நன்மையைச் செய்யுமாறு அல்லது ஏதோ ஒருவகை உதவியைச் செய்யுமாறு தேடிவந்து கேட்டாலும் அதற்குப் பின்நிற்பவர்களே மிகப் பலர். நமக்கேன் உந்த வேண்டாத சோலி. உவனுக்கு உதவப் போய் நான் மாட்டிக் கொள்ள வேண்டி வந்தாலும் வரும். வேண்டாம் உந்த உபத்திரவம் என்று பயந்தாங் கொள்ளிகளாகக் கோழைகளாக இருப்பவர்களே இன்று சமூகத் தில் ஏராளம். ஆனால் சமாதான சமூகப் போலிப் பட்டம் பதவிகள் கிடைக்கும் போது மட்டும் இல் லாத பொல்லாத கதைகள் கூறி தாம் செய்யாத பெரும் பெரும் பணிகளைக் கூட செய்ததாகக் கூறிக் கொள்வார்கள். இது இன்றைய சமூகத்தின் சாபக்கேடாகும். உண்மையில் நூற்றுக்கு இரண்டு சதவீதத்தினரே சொல்லும் செயலும் ஒருமித்த செயற்பாடு உடையவராய் மற்றவர்க்கு உதவும் மாசற்ற பெரியோராய் இருப்பதை நாம் அவ தானிக்க முடியும்.

இன்றைய நாளில் அறங்களைப் பின்கோடிக் குத் தள்ளிய நிலையில் மற்றவர்க்கு நன்மை செய்ய விரும்பாத பெரும் பங்கினர். அடுத்தவர் களுக்குத் தீமை செய்வதையே தங்கள் பெரு மைக்குரிய பணியாகக் கொள்கின்றனர். மற்ற வர்களுக்குக் கிடைக்கும் பட்டம், பதவி, புகழ் முதலியவற்றைப் பார்த்து மனம் பொறாமை யால் தீங்கு செய்ய முனைவது தனக்கே அழி வைத் தரும். இந்துமத இதிகாசங்களும், கிறிஸ் தவ மத பைபிள் விவிலிய வேதமும் இஸ்லாமி யரின் குர்ஆனும் போதிக்கும் பாடம் இதுவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவு தான் இவற்றைப் படித்தாலும் உபநியாசம் செய்யக் கேட்டு மகிழ்ந்தாலும் பொறுத்த சமயங்களில் மனிதனின் சுயநலப் புத்தியே மேலோங்கி நிற்கிறது. அறங்களைப் படித்ததற்கும் கேட்டதற்கும் மாறாக நடந்து கொள்ளும் மானிடர்களே பாவிகளாகின்றனர்.

பிறருக்கு நன்மை செய்வதில் "பலா மாவைப் பாதிரியைப் பார்" என்று ஒளவைப்பாட்டியார் கூறியதற்கிணங்க பலா பூக்காமலே காய்த்து நல்ல சுவையான பலாப்பழத்தை நமக்களிக்கிறது. மாமரமே பூத்துக் குலுங்கி புதுப்பொலிவு காட்டி சொல்லிச் செய்யும் பெரியார் போலத் தேன்சுவை மாங்கனிகள் தருகிறது. பாதிரி மரமோ பூத்துக் குலுங்கும் ஆனால் மனிதனுக்கு கனி கொடுத்து களிப்பதில்லை – சொல்லியும் செய்யாக் கயவர் போன்றது அது.

பிரதியுபகராம் கருதிச் செய்யும் நன்மையும் உண்மையில் சுயநலமே.

நாம் பிறருக்குச் செய்யும் நன்மைக்கு எவ்வித கைமாறும் எதிர்பார்க்கக் கூடாது. தளராவளர் தெங்கு தாளுண்ட நிரைத் தலையாலே தான் தருவது போல நலம் எதிர்பாராத சமயம் நாம் முன்பு செய்த நன்மை நிச்சயம் பலன் தரும். பாடநூலில் வரும் "ஒன்றுக்கு ஆயிரம் ஆயிரம்" என்ற சிறுகதையும் இதையே விளங்குகின்றது. எனவே என்றும் பிறர்க்கு நன்மை செய்வோம்.

# நூல்களும் அடைமொழிப் பெயர்களும்

க. அஜந்தினி
தரம் 8A

| நூல் | அடைமொழிப் பெயர் |
|---|---|
| பிள்ளைத்தமிழ் | குழந்தை இலக்கியம் |
| குறிஞ்சிப்பாட்டு | காப்பியப் பாட்டு |
| முல்லைப்பாட்டு | நெடுஞ்சாற்றுப்படை |
| புறநானூறு | வரலாற்று தொல்காப்பியம் |
| இலக்கண விளக்கம் | குட்டித் தொல்காப்பியம் |
| முக்கூடற்பள்ளு | உழத்திப்பாட்டு |
| நேமி நாதம் | சின்னூல் |
| குறுந்தொகை | தொகைநூல் |
| அகநானூறு | நெடுந்தொகை |
| நவாயிர திவ்விய பிரபந்தம் | திராவிட வேதம், தமிழ்வேதம் |
| திருவாய் மொழி | வேளாண் வேதம் |
| நாலடியார் | சாமவேதம் |
| மகாபாரதம் | ஐந்தாம் வேதம் |
| சீவக சிந்தாமணி | மணநூல் |
| சிலப்பதிகாரம் | ஒற்றுமைக் காப்பியம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவில் தோன்றிய ஆராய்ச்சி

ச.சயானி
2013 கலை

மாமா உள்ளே வாருங்கள். இப்பொழுது முன்பு மாதிரி இல்லை. தற்போது எல்லாமே இலக்றோனிக்தான். நீங்கள் இங்கே இருந்து வேடிக்கையை பாருங்கள் என்றான். மருமகன் இரண்டு பட்டன்களை அழுத்தினான். உடனே மின்சாரம் உருவாக்கிய இரண்டு பேரில் ஒருவர் கையில் தேனீரும் சர்க்கரையும் மற்றவர் கையில் இனிப்புப் பண்டங்களும் உறைப்புப் பண்டங்களும் இரண்டு தட்டுக்களில் கொண்டு வந்த நீட்டினார்கள். "மாமா சாப்பிடுங்கள்" என்று மருமகன் கூற மாமா தன் மகளை அழைக்கும் படி கூறினார். அதற்கு மரு மகன் "என் மனைவியுடன் கதைத்த மூன்று நாட்க ளாகி விட்டது" என்றான்.

"என்ன விசேசம்" என்று கேட்க அதற்கு மருமகன் "எனது ஆராய்ச்சியில் சில விசயங் களை மனைவியிடம் கூற மறுத்தேன்" என்றார். விசயத்தை சொல்லுங்கோ இலேசாகப் பிரச் சனையைத் தீர்த்துக் கொள்ளலாமே என்றார் மாமா. அதற்கு "ஆராய்ச்சியில் தோல்வி வந்தால் சந்தோசம் இராத" என்று கூறினார் மருமகன். அம்மாவும் சண்டை போட்டுக் கொண்டிருந்த காரணத்தை இரண்டு பிள்ளைகளும் எப்படியோ அறிந்த விட்டனர்.

அப்பா அம்மாவுக்கு தெரியாமல் அறையின் ஓர் அலுமாரியில் இரண்டு நிறத்தில் இரசாயன மருந்துகளை வைத்த பூட்டி இருந்தார். சிவப்பு நிற மருந்தைப் பூசினால் அந்த ஆள் பெருத்து வந்து ஆட்களை தின்று உலகத்தை அழித்து விடு வான். பச்சை நிற மருந்தைப் பூசினால் சிறிய உருவமாக வந்து அழிந்து போகும். இதனால் தான் குடும்பத்தில் பிரச்சனை எழுந்தது.

இந்த விபரத்தை ஒன்றும் அறியாத இரண்டு பிள்ளைகளும் தங்களில் வீட்டுத் தோட்டத்தில் இருந்து விளையாடிக் கொண்டிருந்தனர். அந்த நேரத்தில் இலக்றோனிக் மனிதர்கள் இரண்டு பெரும் வீட்டில் ஒலியை எழுப்பினார்கள். அப் பொழுது வீட்டில் தாய் மட்டும் தான் இருந்தாள். "நீங்கள் யார் ஏன் ஒலி எழுப்பினீர்கள்" என்று கேட்டாள் நாங்கள் இலக்றோனிக் மனிதர்கள் உங்கள் பிள்ளைகளுக்கு ஆபத்து வரப்போகிறது எங்கள் முதலாளி அலுமாரியில் வைத்துப் பூட்டிய இரசாயன மருந்துகளைக் கொண்டு போய் விளையாடுகிறார்கள். அவர்களைக் காப்பாற்றுங்கள் என்று கூறிவிட்டு மறைந்து விட்டனர். தாய் துடித்துப் போனாள் அதனால் தான் தன் கணவர் எனக்கே சொல்லவில்லை. உடனே கணவனை அழைத்து நடந்ததைக் கூறினாள்.

தகப்பனுக்கோ என்ன செய்வதென்றே தெரிய வில்லை. தம்மக்களே நாட்டை அழிக்கப் போகி றார்கள். என்றபடி தோட்டத்துக்கு ஓடினார்கள் அங்கே பிள்ளைகளை காணவில்லை. ஆனால் பச்சைநிற மருந்து மட்டும் நிலத்தில் கொட்டப் பட்டுக் கிடந்தது. நாங்கள் உங்கள் கால்களுக்குக் கீழே நிற்கிறோம். எங்களைக் காப்பாற்றுங்கள் என்று அலறியபடி தகப்பனின் காற்சட்டைப் பொக்கற்றினுள் ஏறி ஒளிந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்று பலமாக அடித்துக் கொண்டிருந்தது. "அந்த சிவப்பு மருந்து எங்கே? என்று கேட்க அது தவறிவிட்டது. நாங்கள் காற்றில் பறந்து கொண டிருக்கிறோம். எங்களைக் காப்பாற்றுங்கள் என்று அலறினார். தாயும் தகப்பனும் வேகமாகப் பின் தொடர்ந்தனர். பிள்ளைகள் ஒரு வேப்ப மரத்தடியில் சிக்குண்ட வேரடியில் கிடந்தனர். வேம்பு இலைகள் உதிர்ந்து அவர்களைத் தழு வியதால் அவர்களால் பூசப்பட்ட இரசாயனம், வேப்பிலைகளால் உறிஞ்சப்பட்டு மீண்டும் சுய உருவம் அடைந்தனர்.

உடனே தாயும் தகப்பனும் பிள்ளைகளைக் கட்டிணைத்துக் கொண்டனர். வேப்பம் இலை களில் இரசாயணத்தை அகற்றும் சக்தி உண்டென நினைத்துக் கொண்டு விழித்தார்.

# அனைவருக்கும் கல்வி

திருமதி.சரஸ்வதி ஜெயக்குமார்
ஆசிரியர்



**"கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே"** என்று பாடினார் வெற்றிவேங்கை தந்த அதிவீரராம பாண்டியர். அவரது பாடல் கல்வியின் அவசியத்தை நன்றாக பிரதிபலித்துக் காட்டுகிறது. "கல்வி அழகே அழகு" என்கிறது நாலடியார் "கல்வி கருத்தனம்" என்பது நம் முன்னோர் வாக்கு. கல்வி கரையில என்பதை நாம் கருத்திற் கொள்ள வேண்டும். கல்வி அறிவு இல்லாதார் மக்களல்லர்; மாக்களே யாவர்.

கல்வி என்பது நமது கண் போன்றது. கல்விக் கண் இன்றேல் நாம் கண்ணிருந்தும் குருடரா கவே கருதப்படுவோம் அனைவருக்கும் கல்வி அளிப்பதன் மூலமே ஒரு சமுதாயம் ஒளி படைத்த சமுதாயமாகத் திகழ முடியும்.

"விலங்கொடு மக்கள் அனையர் இலங்கு நூல் கற்றாரோடு ஏனையவர்" என்பது வள்ளுவர் வாக்கு. மனிதன் விலங்காக வாழக்கூடாது. அவன் மனிதனாக, மனிதப் பண்புள்ளவனாக வாழ வேண்டும். அதற்கு அச்சாணியாக அமைவது கல்வி "சீனாவுக்கு சென்றேனும் கல்வியைக் கற்றுக் கொள்" என்றார் முகம்மது நபி அவர்கள் கல்வியின் அவசியத்தை இன்று உலகனைத்தும் நன்குணர்ந்துள்ளது. இதனால் உலக நாடுகள் அனைத்தும் கல்விக்காகப் பெருந்தொகை பணத்தை செலவிடுகின்றன.

கல்வியினால் சமுதாயம் அடையும் நன் மையை நன்குணர வேண்டும். அப்படி உணரும் பட்சத்தி லேயே அனைவருக்கும் கல்வி "முழு வெற்றி பெறும் அரசும், சமூக நலன் விரும்பி களும் இதனைக் கருத்திற் கொண்டு செயற்பட வேண்டும் கல்வி அறிவுள்ள சமுதாயம் உருவாக உழைப்பதே நம் கடனாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபத்தில் உதவிய நண்பர்கள்

சி. லக்சனா
தரம் 9A

அது அழகிய கிராமம். அக்கிராமத்தில் மஜா என்னும் வாத்தும் இராஜா என்னும் முயலும் இணைபிரியாத நண்பர்கள். அவர்கள் இருவரும் ஒன்றாகவே இரைதேடச் செல்வார்கள். அவ்வாறே ஒரு சமயம் இருவரும் கிராமத்தை விட்டு இரை தேடி ஒரு குடிக்கரையை அண்டிச் சென்றனர் ஆகா! என்ன அழகு என்றவாறு மாஜா ஓடிச் சென்று குளத்தில் இறங்கி மகிழ்ச்சியுடன் விளை யாடியது. குளக்கரைச் சுற்றியுள்ள வண்ண வண்ண மலர்கள் இராஜாவின் மனதைக் கவர்ந்தது. இராஜா உடனே அந்த வண்ண வண்ணப் பூக்களை உணவு சேகரிக்க கொண்டு வந்த கூடைக்குள் அப்பூக்களை பறித்த நிரப்பி தனது தோழில் மாட்டிக் கொண்டது. ஆனால் மஜா தன்னையே மறந்து நீரில் குளித்து விளையாடிக் கொண்டிருந்தது. மஜா குளத்தில் தன்னையே மறந்துப் பூச்சியின் தலைவி பபி மஜாவைப் பார்த்து ஐயோ! உனக்கு ஆபத்து எனக் கத்தியது.

மஜா பயத்துடன் வெளியே ஓடி வந்தது. அப்போது பபி மஜாவைப் பார்த்து உனக்கு என்ன ஆபத்தத் தெரியுமா எனக் கேட்டது. இவற்றைப் பார்த்துக் கொண்டிருந்த இராஜா அவ் இடத்திற்கு ஓடிவந்தத. அப்படி என்ன ஆபத்து என்று இராஜா பபியிடம் கேட்டது. முதலில் அந்த மரத்தடியில் சென்று அமருவோம் பின்பு உனக்கு என்ன ஆபத்து என்பதைச் சொல்லுகின்றேன். அது ஒரு பெரிய கதை என்றது பபி. அப்படி என்ன பெரிய கதை எனக் கேட்டது மஜா.

பபி கதையைச் சொல்ல ஆரம்பித்தது. முன்னொரு காலத்தில் இக்குளம் பாழடைந்து காணப்பட்டது. இச்சமயம் ஆகாய தேவதைகள் பூவுலகைப் பார்ப்பதற்கு ஆகாயத்தில் இருந்து வந்தனர். அவர்கள் இக்குளம் பாழடைந்து இருப்பதைப் பார்த்து மிகக் கவலையுடன் இக் குளத்தை தமது அருளினால் புதுப்பிக்கும் படி வேண்டிப் புதுப்பித்தனர். ஒவ்வொரு வருடமும் அக் குளத்தில் நீராடும் படி இரவு 9.00 அளவில் அக் குளத்திற்கு வருவார்கள்.

ஆகையால் இக்குளம் ஓர் அற்புதமான குளமாக அதைச் சுற்றி வண்ண வண்ணப் பூக்கள் நிறைந்து காணப்படுகிறது என்று கூறி பபி

கதையை முடித்தது. இதைக் கேட்ட இராஜா அதிர்ச்சியுடன் மஜாவிற்கு ஆபத்து எதுவும் ஏற்படுமா? என்று வாடிய முகத்துடன் கேட்டது. மஜா தெரியாமல் செய்து விட்டது. இனிமேல் கவனமாக இருக்க வேண்டுமென்று கூறியது பபி. சரிசரி நேரமாகிவிட்டது கவனமாக உங்கள் இருப்பிடத்திற்குச் செல்லுங்கள் என்று கூறி விட்டு பபியும் பபியின் நண்பர்களும் பறந்து சென்றன. பின்பும் ஜாவும், இராஜாவும் தமது இருப்பிடத்தை நோக்கி நகர்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வியலுக்கு இயற்கையின் கொடை

இ. அனோஜா
20143 வர்த்தகம்

"முள்ளில் ரோசா" தோன்றின் புகழொடு தோன்றுக" என்பதற்கு சான்றாகத் தோன்றியது. "நிலமுளரி" (ரோசாப்பூ) எவ்வளவு கவர்ச்சி மிக்கது அது குழந்தையர், முதியவர், மகளிர், ஆடவர் என அனைவரின் உள்ளத்தையும் அது கவரவில்லையா! பற்றற்ற துறவோரையும் பற்றிக் கொள்ளும் தன்மையுடையதன்றோ ரோசா!

ரோசாவை நினைக்க அளவில் நம் நினைவில் தேக பெருமகனார் தோன்றுகிறாரே! தோன்றிற் புகழொடு தோன்றுக என்பதை உலகுக்கு என் றென்றும் உணர்த்தும் ரோசா தோன்றும் போதே புகழொடு தோன்றி நேரு பெருமகனாரின் அகத் தையும் முகத்தையும் அமையக் காட்டுவது போல் அவர் சட்டையில் விளங்கி "அழகுக்கு அழகு காணீர்" எனச் சொல்லாமல் சொல்லி நின்றதே!

ரோசா மலரின் நிறமென்ன? அதன் நிறத் தாளே ரோசா! உலகத்திற்கு ரோசா வழங்கிய வண்ணக் கொடை இது! அதன் எண்ணக் கொடைகளைத்தான் எண்ண முடியுமா?

"முடிவிலா அழகுடைய ரோசா முட்செடியி லேயா தோன்ற வேண்டும் முள் இல்லா செடியில் தோன்றக் கூடாதா? என்னும் வினா நம்முள் உண்டாதல் இயற்கை ஆனால் அம்முள்ளின் பயனை எண்ணிப் பார்த்தால் அல்லவா, விந்தை யின் விந்தையாய் வியத்தகு காவலாய்த் திகழ் கின்ற அருமை விளங்கும்.

மெல்லிய தென்றலின் அசைவுக்கும் இதழை உதிர்க்கும் மிக மெல்லிய ரோசவை ஆடு, மாடு முதலிய விலங்குகள் உரசாமல் விட்டு வைக்குமா? அவை உரசாமை எதனால்? அந்த முட்களால் தாமே இயற்கையின் காவல் கடமையை எண் ணிப் பாராமல் எளிதாகத் தள்ளி விடலாமா? வேற்றுமைப்பட்டால் அதில் மானுடர் வேற்றுமை இல்லை என்று தெளியுங்களேன்! எனத் தெரி விக்கிறதே அது.

விதை இல்லாத கனியை கருதிப் பார்த்தார் திருவள்ளுவர். "காழில் கனி" என்றார் அவர். விதை இல்லாத கனியையும் கண்டு தருகின்றது அறிவியல். இவ்வாறே முள்ளில்லாத ரோசாவும் வாராதா என்ன? "மாந்தனே! அறிவுக்கு எல்லை இல்லை" அறிவு நாளும் பொழுதும் வளர்ச்சி யடைவது நாம் வளர வளர அதுவும் வளர்வது "அறியுந்தோறும் அறியாமை" காணக்கூடியது அறிவு. அத்தகைய அறிவை அறிவே வடிவாம் இறைவன் அருளியுள்ளான். கண்டுபிடி கண்டு பாடி மேலும் மேலும் கண்டுபிடி! உன் கண்டு பிடிப்புக்களை எல்லாம் ஆக்கத்திற்கென்றே கண்டுபிடி" என்று ஏவி வேண்டி நிற்கின்றதே முள்ளில்லாத ரோசா!

காணார், கேளார், கால்முடமானோர், பேணா மாந்தர் பிணி நோயுற்றோர் யாவரும் வருக. ஆபுத்திரன்கை அமுதசுரபி என்ற புகழும் வேண்டா செல்வி மணிமேகலையின் அழகு முகம் முள்ளில்லாது ரோசா இல்லையா!

வாடிய பயிரை கண்ட போதெல்லாம் வாடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளலார் பெருமகனார் அழகொழுகும் அருள் முகம் முள்ளில்லாத ரோசா இல்லையா?

துறவின் தூய்மையும் அரிமாவின் துணிவும் அறிவின் உயர்வும் தொண்டின் உறைப்பும் ஒருங்கே கொண்ட வீறுசால் விவேகானந்தரின் முழுமதி முகம் முள்ளில்லா ரோசா இல்லையா.

கோடி கோடிப் பேர் உள்ளங்களை எல்லாம் கொள்ளை கொண்ட அந்த பொக்கை வாய் புன்முறுவல் காந்தியார் தொண்டு முகம் முள்ளில்லா ரோசா முகம் இல்லையா!

எங்கே புயல்! அங்கே அவர் எங்கே நில நடுக்கம்! அங்கே அவர்! எங்கே நோய் அங்கே அவர்! எங்கே பசி அங்கே அவர்! எங்கே பகை அங்கே அவர்! என ஐந்நூறு கோடி உலக மக்கட் கெல்லாம் ஞாயிராய் – ஒரு தாயாய்த் திகழ்ந் தாரே! திரேசா அன்னையர் அவர் திருமுகம் முள்ளில்லாத ரோசா இல்லையா.

இத்தனை முள்ளில்லாத ரோசாக்களும் நமக்கு என்ன சொல்கின்றன? நீங்களும் முள்ளில்லாத ரோசாவாக விளங்க முடியும் என்பதையன்றோ?

# நமது மந்திரிகள்

**வி. ஷயனவி**
தரம் 5A

| | |
|---|---|
| 1. மூளை | பிரதம மந்திரி |
| 2. தண்டுவடம் | இணை அமைச்சர் |
| 3. நரம்பு மண்டலம் | ஊடகத்துறை அமைச்சர் |
| 4. தலை | கல்வி அமைச்சர் |
| 5. தோல் | மனிதவள மேம்பாட்டுதுறை அமைச்சர் |
| 6. எலும்பு | பாதுகாப்பு அமைச்சர் |
| 7. கண் | வெளயுறவுத்துறை அமைச்சர் |
| 8. காது | தபால் தொலைத்தொடர்பு அமைச்சர் |
| 9. மூக்கு | சுகாதாரதுறை அமைச்சர் |
| 10. பல் | கிராமியதுறை அமைச்சர் |
| 11. இதயம் | உள்நாட்டு விவகாரதுறை அமைச்சர் |
| 12. கை | தொழில்த்துறை அமைச்சர் |
| 13. வயிறு | உணவுத்துறை அமைச்சர் |
| 14. கால் | போக்குவரத்து அமைச்சர் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Writing makes an exact man

*Marting*

Good books are store houses of human knowledge and wisdon. Anyone who has the key can enter these store house and help himself. What is the key? simply the ability to read He who can read can store his mind with the great thoughts of great thinkers of the world. The man who never opens a book has a comparatively empty mind. He has no doubts, learns something from his own experiences and from others; but to what mankind has learnt and thought and done, his mind is a blank. But he who reads widely and guidiciously has a full mind. "Reading make a full man"

By 'conference' bacon means discussion delate. To be a good debator, one must have a quick and ready mind. He must be able to see a point quickly, to think quickly and to have a quick reply, to arguments ready. Taking an active part in a keen debating society give one valuable practive in this for one has to be alert and ready for all that can be make a ready man.

By 'writing' here, Bacon does not mean wring books or practice in composition. he means making notes in writing of what we learn in our reading It is not always wish to trust entirely memory expecially when exact words and figures are important. We may remember something in general way' but, unless we have made a note of the details, we may be at a loss in speaking or discussion. Vague statement and more generalization will not always serve the purpose our knowledge must be accurate and exact. So make written notes of what you read, for this kind of ;writing make an exact man.

The completion of this quotation will makes its meaning clever, 'Reading maketh a full manj conference a read man, and writing an exact man. And therefore in man write little, he had need to have a great memory' if he conference little, he had need of a read wit, and if he read little he had need of much curring to seem to know that he knoweth not'

Bacon's words should be taken to heart by young men. Who want to become public speakers. For a public speaker must have a full mind, readiness of speech and on accurate and exact knowledge of his subject.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்பனா செளலா

ச. கௌசிகன்
தரம் 9A

மனித இனமானது விண்ணில் பல சாதனைகளை நிகழ்த்திக் காட்டியிருக்கின்றது. அந்த சாதனைகளிற்குப் பின் பல உயிர்கள் தியாகம் செய்யப்பட்டனர். இந்தப் பட்டியலில் கல்பனா செளலாவும் ஒருவராவார். இந்தியாவில் கர்னால் எனும் ஊரில் தந்தை பனார்சிதாஸ் தாய் சன்யோகிதாதேவி ஆகியோருக்கும் 1962ல் பிறந்தார். இவருக்கு தந்தையின் ஊக்குவிப்பும் ஜே.ஆர் டாடாவின் ஊக்குவிப்பும், கற்கும் போது கிடைத்த நல்லா சிரியர், கணவன் ஹர்ரிஸனும், கலையும், இசையும் எல்லாம் சேர்ந்து விவேகம் மிக்க வீர மங்கை கல்பனாவை விண்ணில் பறக்க வழி சமைத்தது. இவர் தனது சகோதரனுடன் போட்டியிட்டு சைக்கிள் ஓடிக்காட்டியது. விமான நிலையத்துக்கு அருகில் சென்று விமானம் ஏறுவதையும் இறக்குவதையும் அவதானித்து தானும் இவ்வாறான விமானத்தில் பறக்க வேண்டும் என்று உளம் கொண்டது முதலிய பண்புகளெல்லாம் ஆணுக்கு நிகராக வளர்க்கப்பட்ட கல்பனா விடம் காணப்பட்டன. இவர் பஞ்சாப் பல்கலைக் களகத்தில் கற்று விஞ்ஞானமானிப் பட்டத்தைப் பெற்றார். பின் டெக்ஸஸ் பல்கலைக்கழத்தில் சேர்ந்து விஞ்ஞான முதுமானிப் பட்டத்தைப் பெற்றார். கல்பனா செளலா ஓா அமரிக்கரை திருமணம் செய்தார். இவரது கணவன் ஒரு விமானப் பயிற்சியாளர் ஆவார். கல்பனா செளலா 1994 டிசம்பரில் நாசா விண்வெளி மீள் கப்பல் பயணங்களில் குறிப்பணிப் பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1997ல் திட்டமிட்ட முதல் கொலம்பியா விண்வெளிக் குறிப்பணி எஸ்.ரி.எஸ்.87 நுண்ணீர்ப்பியல் பழுதூக்கிப் பயணத்தில் கல்பனா "சுய நகர்சிக்கா" இயக்குனராக வேலை செய்து முன்நூற்று எழுபத்தாறு மணிநேரம் அன்ட்வெளிப் பயண அனுபவம் பெற்றார். இவர் இசையின் மீது அதிக நாட்டம் கொண்டவராவார். இவரது பண்புகளே இவரை கொலம்பிய விண்வெளிக் கப்பலில் செல்ல வழிசெய்தது.

1958ல் அமெரிக்ன் தலைநகர் வாஷங்டனில் "நாசா விண்வெளி ஆராய்ச்சிக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது. நாசாவின் விண்வெளி ஓடங்களில் மிகப் பழையது கொலம்பியாவாகும். 1979ல் கட்டி முடிக்கப்பட்ட இது விண்வெளிக்கு 27முறை சென்று திரும்பியது. இது 2003ல் ஜனவரி 16ம் திகதி கனாவரல் முனை ஏவு தளத்திலிருந்து தனது இறுதிப் பயணத்தை தொடர்ந்தது. விண்வெளியிலிருந்து 16 நாட்கள் தனது பணிகளை முடித்துக் கொண்டு பூமிக்கு மேல் 39மைல் உயரத்தில் பவணிக்கும் போது பிளாரிடா தொடுதளத்தில் இறங்குவதற்கு 16 நிமிடத்தக்கு முன் டெக்ஸஸ் மாநிலத்தில் வெடித்துச் சிதறியது. விண் கப்பலில் பறந்த 7 விண்வெளி வீரர்களை மகிழ்ச்சியோடு வரவேற்க வந்த தாய், தந்தையர், கணவன், மனைவிமார், சின்னஞ்சிறு பிள்ளைகள் ஆகியோர் மனமுடைந்து மயக்கமுற்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Whose Bride

*N.Laksana*
2013 Com

There were once four friends. They were a carpenter, a tailor, a goldsmith and a brakman. They went out of their town to earn money in a big city. They went about fifteen miles and stopped at a well on the road. They decided to spend the night there.

Ther ate their dinner and made their beds. Then the goldsmith said, 'Friends, I have some gold with me. So three of us will go to sleep and the fourth will keep watch". The tailor said, 'That is right we will keep watch by turns'. The other two also liked this plan.

The brakman, the gold smith and the tailor went to bad and the carpenter began to keep watch. But he was very tired and so he began to keep watch. But he was very tired and so he began to doze. He said to himself. 'I am steepy. I will do something to keep a wake' And he took a piece of wood and some tools out of his bag and started making a doll. In about two hours he made a beautiful doll and then he woke up the tailor and went to bad.

The tailor saw the doll on the ground. He picked her up and looked at her. She was beautiful! He took some pieces of beautiful coloured cloth out of his box and started making clothes for the doll. He made a goldsmith and went to bed.

The goldsmith was plased to see the beautiful doll. He took some gold out of his box and made beautiful ornaments for her. He put them on her body and looked at her. She looked very beautiful. Then he woke up the brahman and went to bed.

The brahman looked at the beautiful doll and was very preased. He said, "I will put like into this beautiful doll" And started raciting the holy 'mantras' and sprinkling water on the doll. In about two houes the little doll became a beautiful young girl.

It was morning now. The tailor and gold smith woke up and saw the beautiful girl. The brahman said to them, "I put life into her. I am going to marry her. She is my bride"

The carpenter said, "How can she be your bride? I made the doll. So the girl is mine. I am going to marry her"

The tailor said, 'Neither of you will


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

marry her. I made beautiful clothes for her. She is my bride"

The goldsmith was very angry. He said, 'None of you will marry. her I have given her costly ornaments. She is mine I am going to marry her?"

An old man saw them guarrelling. He came to them and asked. "What is the matter? Why are you quarrelling" They told him the whold story.

Then the old man said, "Listen to me the carpenter made the doll and the brahman gave her life. They are her parents. Neither of them can marry her. The tailor made clothes for her. He is her uncle. So he can't marry her either. The gold smith gave her ornaments. He is her bride groom. He will marry her".

The four friends stopped quarrelling. The gold smith married the firl and returned to his house with her.

ஒருவர் உங்கள் மனதைப் புண்படுத்தி விட்டால் அதனால் மூளையில் உட்காயம் ஏற்பட்டால் என்ன செய்வீர்களோ, அதை உடனே செய்யுங்கள். அதாவது புண்ணுக்கு மருந்து போடுங்கள். இல்லாவிட்டால் நிலைமை கட்டுமீறிப் போய்விடும். உங்கள் மனதைக் காயப்படுத்தியவரை மன்னித்து அவரது நலனுக்காகப் பிரார்த்தனை செய்வதேயாகும். உங்கள் புண்ணை ஆற்றக்கூடிய மருந்து வன்ம உணர்ச்சி வடியும் வரை விடாது பிரார்த்தனை செய்யுங்கள்

–நார்மன் வின்சென்ட் பீல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எயிட்ஸ் (HIV/AIDS) நோயைத் தடுப்போம்

த.ஜீவிதா
தரம் 10A

தொற்றுநோய் என்பது பாலியல் திரவங்கள் பரிமாற்றம் செய்ய முடியுமான விதத்தில் நிகழ்கின்ற பாலியல் தொடர்பு மூலம் தொற்றுள்ள ஒருவரிடம் இருந்து மற்றொருவருக்கு தொற்றும் நோய்கள் ஆகும். அவற்றில் HIV/AIDS உம் ஒன்றாகும். இது முதன்முதலாக 1981இல் அறியப்பட்டது. மனித எதிர்ப்பாற்றல் குறைப்பு வைரஸே எயிட்ஸ் நோய்க்கான காரணியாகும். இது 1983ஆம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்டது.

A Acquired / பெறப்பட்ட
I Immuno / எதிர்ப்புச்சக்தி
D Defeciency / குறைபாடுகள்
S Syndrome / அறிகுறிகள்
H Human/மானிட
I Immuno deficiency / எதிர்ப்பாற்றல் குறைவு
V Virus / வைரஸ்

**HIV உடலுக்குள்**

எதிர்ப்புச்சக்தி திறனை செயற்படுத்துவதற்கு அவசியமான குருதியில் உள்ள கூறுகளுக்குள் நுழைந்து அந்த உயிரணுக்குள் வைரஸ் துரிதமாக விருத்தியடையும்.

இதனால் HIV தொற்றியுள்ள நோயாளியை பக்ரீரியா மற்றும் வைரஸ் மூலமான பல்வேறு நோய்கள் இலகுவில் தொற்றிக் கொள்ளும். எதிர்ப்புச் சக்தி குறைவாக உள்ள இக்காலப் பகுதியில் காசநோய், நியூமோனியா, புற்று நோய் போன்ற நோய்களால் பீடிக்கப்படுவர்.

HIV உடலுக்குள் நுழைந்து 8–10 வருடங்கள் செல்லும் வரையில் நோய் அறிகுறிகள் வெளிப்படுத்தப்படமாட்டாது. என்றாலும் இக் காலப்பகுதியிலும் அவரில் இருந்து வேறாருவருக்கு HIV தொற்றலாம்.

உலகத்தில் HIV உடன் வாழ்வதாக மதிப்பிடப் பட்டுள்ள பிள்ளைகள் மற்றும் வயது வந்தோரின் மொத்த எண்ணிக்கை 2007ம் ஆண்டு 33 மில்லியன் ஆகும்.

HIV மனித உடலுக்கு காவுவதற்கு கலிச் சுரப்பி சவ்வு போன்று மிகவும் மெல்லிய சவ்வின் மூலமே செல்ல வேண்டும்.

Eg : ஜோனிதுவாரம்
பின்துவாரம்

**HIV / AIDS தொற்றும் முறை**

எயிட்ஸ் தொற்றியுள்ள ஒருவருடனான பாலியல் தொடர்புகள் மூலம்

எயிட்ஸ் தொற்றியுள்ள ஒருவரின் இரத்தம் or இரத்த உற்பத்தி உடலுக்குள் நுழைவதால்

HIV தொற்றியுள்ள தாய் மூலமாக பிறக்கின்ற பிள்ளைக்கு நோய் தொற்றுவதற்கு 33% எச்சரிக்கை நிலை காணப்படுகின்றது.

1. கர்ப்ப காலப்பிரிவில் = 5%
2. பிரசவத்தின் போது = 10-20%
3. தாயப்பால் ஊட்டுகையில் = 15-20%

90% இற்கு மேலாக AIDS பாலியல் தொடர்புகள் மூலமே தொற்றும் எயிட்ஸ் தொற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுள்ள ஒருவர் பாவித்த தொற்று நீக்காத ஊசி, சிரின்ஜர் பாவனையின் மூலம்

**எயிட்ஸ் தொற்றாத முறைகள்**

1. தொற்றியுள்ள ஒருவருடன் விளையாடுதல்
2. தடிமல் or தும்மல் மூலம்
3. தொற்றியுள்ள ஒருவருடன் ஒன்றாக வாழுதல்
4. கழிவறை இருக்கைகள் மூலம்
5. நுளம்புகள், கிருமிகள், பேன் என்பவை தீண்டுவதால்

**எயிட்ஸ் பரவுவதை தடுக்கும் முறைகள்**

1. பொறுப்பான பாலியல் பழக்கங்கள்
2. இரத்தத்தின் மூலமாக HIV/AIDS பரவுவதை தடுத்துக் கொள்ளல்
3. எயிட்ஸ் தொற்றியுள்ள கர்ப்பிணித்தாய்மார் கள் சில சிகிச்சை முறைகளை பின்பற்றல்
4. தாய்ப்பால் ஊட்டாதிருத்தல்
5. குடும்ப அலகினை பலப்படுத்தல்
   1. பொறுப்பு
   2. பரஸ்பர விசுவாசம்
   3. பரஸ்பர புரிந்துணர்வு

## கசப்பான உண்மைகள்

| | | 2004 | 2006 | 2007 |
|---|---|---|---|---|
| புதிதாக தொற்று நிலைக்கு உட்பட்டோர் | ஒரு நாளைக்கு | 10,656 | 11,781 | 6,849 |
| | ஒரு மணித்தியாலயத்திற்கு | 444 | 490 | 285 |
| மரணங்கள் | ஒரு நாளைக்கு | 7,337 | 7,945 | 5,753 |
| | ஒரு மணித்தியாலயத்திற்கு | 307 | 331 | 240 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கிலிருந்து பாதுகாப்பு பெறுவோம்

ஜெ. லோஜனா
தரம் 11

**டெங்கு**

இது ஒரு வைரஸ் நோய். இந்த வைரஸில் Den1, Den2, Den3, De-n4 என வகைகள் (serotype) உண்டு. ஒரு வைரஸின் தாக்கத்தின் பின்னர் இன்னொரு வைரஸ் தாக்கும் போது நோயின் தீவிரம் அதிகமாகும்.

**டெங்கு தொற்றல் எவ்வாறு ஏற்படும்?**

ஈடிஸ் (Aedes) சாதி பெண் நுளம்பு நோய் வாய்ப்பட்ட மனிதரைக் கடித்து சுகதெகியான ஒருவரின் உடலினுள் டெங்கு வைரஸ் நுளம்பி னால் உட்செலுத்தப்படுவதால் தொற்று ஏற்படும்.

**ஈடிஸ் நுளம்புகளை எவ்வாறு அடையாளம் காணலாம்?**

இந் நுளம்புகளின் உடலில் வெண்ணிற வளையங்கள் (ring) காணப்படும். இவற்றில் இரு இனங்கள் உண்டு. அவை டெங்கு வைரஸை காவும் காவிகளாக (Vector) செயற்படுகின்றன. அவையாவன

a. Aedes aegypti - primory Vector
b. Aedes albopicts - Secondary Vector

**இந் நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்கள் எவை?**

இவை தெளிவான சுத்தமான மாசடையாத நீர் தேங்கியுள்ள இடங்களில் உற்பத்தியாகும். டயர், சிரட்டை, யோகட், கோப்பை, கூரை, பீலிகள், திறந்த போத்தல்கள், டின்கள், பொலித்தீன் பைகள், பிளாஸ்டிக் போத்தல்கள், குளிர்சாதன பெட்டிகளின் பின்புறம், நீர் சேரும் தட்டு, நீர்த் தாங்கிகள், வாழை மர இலை அடியிலுள்ள இடைவெளி, திறந்த தயிர் சட்டி, ஓடாத சலன மில்லாத நீர் நிலைகள் போன்ற நீர் தேங்கி நிற்கும் எல்லா இடங்களிலும் பெண் நுளம்பு முட்டை இட்டு இனப்பெருக்கம் செய்யும்.

ஒரு ரூபாய் நாணயத்தின் தடிப்பும் அகலமும் உள்ள நீர் தேங்குமிடம் இன் நுளம்புகள் உற்பத்தியாக போதுமானதாகும்.

**நுளம்பின் வாழ்க்கைவட்டம் எத்தகையது?**

இது 4 பருவங்களைக் கொண்டது. அவை யாவன; முட்டை, குடம்பி, கூட்டுப்புழு, நிறை யுடலி முதல் 3 பருவங்களும் நீரில் காணப்படும்.

முட்டை : ஒரு முறையில் நுளம்பு 100–200 வரையான முட்டைகள் இடும். இம் முட்டைகள் நீர் மட்டத்திற்கு சற்று மேலால் நீர் தாங்கியின் சுவரில் ஒட்டியவாறு காணப்படும். இவை 12 மாதங்கள் உயிர் பிழைக்கக் கூடியது. முட்டையி லிருந்து நுளம்பு விருத்தியடைந்து வெளிவர சுமார் 7 நாட்கள் செல்லும்.

**ஈடிஸ் நுளம்பு (டெங்கு நுளம்பு)**

இந் நுளம்பு பகலிலே கடிக்கக் கூடியது. காலையில் 7–10 மணி வரையும் மாலையில் 3–5 மணி வரையும் கடிக்கும் தன்மை உச்சம மாகும். இவை 3–4 வாரங்கள் உயிர் வாழும்.

**தங்குமிடங்கள்**

வீட்டினுள் தளபாடங்களுக்கு கீழாக, தொங்கும் பொருட்களில் (ஆடைகளில்) வீட்டு திரைகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவர்கள், வீட்டின் வெளியே மரம், செடி, தாவரங்கள் மற்றும் பாதுகாப்பான இடங்கள்.

**பறக்கும் தூரம்**

ஏறத்தாள 500m பறக்க கூடியது

**டெங்கு தொற்று ஏற்பட்டதற்கான அடையாளங்கள் யாவை?**

டெங்குக் காய்ச்சல்

டெங்குக் குருதிக் கசிவு காய்ச்சல்

Dengues Shock Syndrome

**நோய் அடையாளங்களும் அறிகுறிகளும்**

டெங்க காய்ச்சல், தலைவலி, மூட்டுவலி, வாந்தி (Vomiting) தோல் சிவத்து தடித்தல்) Rash

**டெங்குக் குருதிக் கசிவுக் காய்ச்சல்**

- கடுமையான காய்ச்சல்
- வலிப்பு
- தோலில் சிவப்பு ஊதா நிற புள்ளிகள் அல்லது அடையாளங்கள்
- வாய், மூக்கு, முரசு என்பவற்றில் இரத்தக் கசிவு
- இரத்த வாந்தி அல்லது கோப்பி மண்டி நிற வாந்தி
- கறுப்பு நிற மலம்

**டெங்கு தீவிர தாக்குநிலை**

நோய் உக்கிரமடைந்து குருதிச் சுற்றோட்டம் செயலிழந்து ஈண்ண நிலைக்குச் செல்லும். இந்நிலை ஏற்பட்டு 12-24 மணித்தியாலங்களில் நோயாளி இறந்து விடுவார்.

**காய்ச்சல் ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்?**

- அருகிலுள்ள வைத்தியரிடம் சென்று ஆலோசனை பெறவும்.
- சுயமான வைத்தியம் செய்வதைக் கண்டிப்பாக தவிர்க்கவும்.
- டெங்கு நோயாளி என சந்தேகிக்கப்படுபவரை எவ்வாறு வீட்டில் பராமரிக்க வேண்டும்.
- ஓய்வாக இருக்கச் செய்யவும்.
- சிவப்பு கருமைநிற பானங்களைத் தவிர்க்கவும்.
- Aspirin/Desprin அல்லது Aspirin உள்ளடங்கிய மருந்துகள் கொடுக்க வேண்டாம்.

**வைத்தியசாலையை கண்டிப்பாக எப்போது நாட வேண்டும்?**

- டெங்கு குருதி கசிவு நோய்க்கான ஏதும் அடையாளங்கள் அறிகுறிகள் தென்படும்
- காய்ச்சல் குறைந்த பின்பு சுகயீனமாக உணர்தல்
- காய்ச்சல் 3 நாளைக்கு மேல் இருத்தல்
- நோய் பரவுவதை கட்டுப்படுத்த தினமும் பத்த நிமிடம் வீட்டையும் சூழலையும் சுத்தமாக வைக்கவும் நமது வீட்டை சுத்தமாக வைத்திருப்பதால் மாத்திரம் டெங்கிலிருந்து தப்பிக்க முடியாது இது கூட்டுப் பொறுப்பாகும் எனவே அனைவரும்பொறுப்புடன்செயற்பட வேண்டும்.
- குப்பைகளை எரித்து or புதைத்து விடவும். அல்லது சூழலுக்கு பாதுகாப்பான வேறு முறையில் அகற்றவும்.
- பாதை ஓரங்களில் வீச வேண்டாம்
- நுளம்பு உற்பத்தியாகும் இடங்களை சுத்தம் செய்து உற்பத்திகளைத் தடுக்கவும், கூரை பீலிகளை தேய்த்த சுத்தம் செய்யவும்
- கொங்கிறீட் தட்டில் நீர் தேங்காதவாறு அவதானித்துக் கொள்ளவும் நீர்த்தாங்கிகளை (Overtank) நுளம்பு உட்புக முடியாதவாறு மூடி வைக்கவும்

நீர்த்தேக்கங்களில் நுளம்பின் குடம்பிகளை உண்ணும், மீன்களை வளர்க்கவும் சுகதேகிகள் மற்றும் டெங்கு நோயாளிகள், நுளம்புக் கடிக்குள்ளாவதை தடுக்கவும். ஏனெனில், தொற்றுதலுக்குள்ளான ஒருவரை கடித்து அவரிடமிருந்தே டெங்கு வைரஸை நுளம்பு பெற்றுச் சுகதேசிகளுக்கு தொற்றச் செய்யும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நுளம்பில் இருந்து பாதுகாப்பு பெற**

நுளம்புச் சுருள் பாவிக்கலாம் நுளம்புகளை வெளியேற்றும் மின் குமிழ்களை பயன்படுத்தலாம். (Mosquitoe reprellent light) வீட்டு ஜன்னல்கள் மற்றும் ஜன்னல்களுக்கு மேலுள்ள லூகஸ்காளுக்கு நுளம்பை உட்புகவிடாது வலைகளை பொருத்தலாம். வீட்டை மூடிவிட்டு பிரயாணம் செல்லும் முன் அனைத்து நீர் தேங்கும் இடங்களையும் கவனித்து அகற்றி விடவும். சிறு பிள்ளைகளுக்கு ஆடை அணிவிக்கும் போது தடித்த ஆடைகளை உடலின் பெரும் பகுதி மூடுமாறு அணிவிக்கலாம். காலையும், மாலையும் வீட்டில் சாம்பிராணி போன்ற வாசனை புகை பிடிக்கலாம். இந்த விடயங்களை கருத்தில் கொண்டு எம்மையும் எமது சமூகத்தையும் டெங்கின் அபாயத்திலிருந்து பாதுகாப்போம்.

# படிப்பது எப்படி?

- தூங்கி எழுந்தவுடன் புத்துணர்வு கிடைக்கும் அந்த அதிகாலை வேளையில் படிப்பதால் மனதில் நன்கு பதியும்
- புரியாமல் மனப்பாடம் செய்தால் மறந்து போய்விடும். அதனால் பாடத்தை நன்கு புரிந்து கொண்டு படிப்பதால் எவ்வளவு காலம் ஆனாலும் மறக்காது.
- ஆங்கிலம், கணிதம் மற்றும் அறிவியல் (சூத்திரங்கள்) செய்யுள் பகுதிகள் படித்த பின்னர் உடனே எழுதிப் பார்க்க வேண்டும். எழுதியவற்றை புத்தகத்துடன் ஒப்பிட்டுத் திருத்திக் கொள்ள வேண்டும்.
- மனதுக்குள் படிப்பதோ அல்லது வாய் விட்டுப் படிப்பதோ அதுவாக இருந்தாலும் உங்கள் பழக்கத்தைப் பின்பற்றுங்கள்
- கடினமான பகுதிகளிற்கு முக்கியத்துவம் கொடுத்துப் படிக்க வேண்டும்.
- தேர்விற்கு முதல்வாரம் மட்டும் சிரமப்பட்டுப் படிக்காமல், அன்றைய பாடத்தினை அன்றே படித்தால் தேர்வு காலத்தில் திரும்பிப் பார்த்தாலே போதும். இதனால் தேர்வுப் பயம் வராது.
- தேர்விற்கு முதல் நாள் அதிகநேரம் கண் விழிக்க வேண்டாம். அது தேர்வு எழுதும் போது சோர்வடையச் செய்யும்.
- "நம்மால் முடியும்" என்று நினைத்துக் கொண்டு தேர்வுக்குச் சென்றால் அந்தத் தன்னம்பிக்கையே பெரிய பலத்தையும் வெற்றியையும் தரும்.

உ.ஷயந்தன்
தரம் 6A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்க்கோளம்

கி. அர்ஷனா
தரம் 9A

நீர்கோளம் என்பது புவி மேற்பரப்பில் நீரினால் மூடப்பட்ட பிரதேசங்கள் யாவும் நீர்க்கோளம் எனப்படும். புவியில் காணப்படும் நீர் திண்மம், திரவம், வாயு போன்ற வடிவங்களில் காணப்படுகிறது. நீரானது மனிதனுக்கு பலவிதமாக பயன்படுகிறது. என்றாலும் மனிதன் பயன்படுத்தும் நீரானது மிகவும் சொற்ப அளவிலே காணப்படுகிறது. (0.03%) இவற்றில் 97% நீர் சமுத்திர நீராகக் காணப்படுகின்றது. புவி மேற்பரப்பில் நீர்ப் பரம்பலானது பலவாறு காணப்படுகிறது. அவையாவன சமுத்திரங்கள், கடல்கள், குளங்கள், அருவி ஓடைகள், ஆறுகள், பனிப்படலங்கள், உள்ளூர் கடல்கள் என்றவாற காணப்படுகின்றன. உயர் அகலக் கோட்டுப் பிரதேசங்களிலும் உயர் மலை உச்சிகளிலும் பனிப் பாறைகளாக திண்ம வடிவிலே காணப்படுகிறது.

உலகிலுள்ள இயற்கை வளங்களில் நீர் முதலிடம் பெறுகிறது. ஏன் என்றால் அது நீரின் பயன்பாட்டினால் அவையாவன

- உயிர் நிலைப்புக்கு
- குடிநீர்
- நீர்ப்போக்குவரத்து
- பொழுதுபோக்கு செயற்பாடு
- வீட்டுப்பாவணை
- விவசாயம்
- மின்வலு உற்பத்தி இவை நீரினால் மனிதனுக்கு கிடைக்கும் பயன்களாகும்.

இதனால் தான் நீர்நிலை மதிக்க முடியாத ஒரு பொருளாகும்.

சனத்தொகை விரைவில் அதிகரித்து செல்வத னால் மனித தேவைகளும் அதிகரித்து செல்கின்றன. இதனால் நீர் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்பு உண்டு. இதனால் பல பிரச்சனைகள் ஏற்படுகின்றன. அவையாவன



- விவசாயம் பாதிக்கப்படல்
- மின்சார உற்பத்தி பாதிக்கப்படல்
- சுற்றுலா பாதிக்கப்படல்
- நோய் ஏற்படல்

அது மட்டுமல்லாது "ஐக்கிய நாடுகள் சபையின் கணிப்பீட்டின் படி 2050ம் ஆண்டில் 66 நாடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவிரமான நீர்ப்பற்றாக்குறையை எதிர்நோக்கலாம் என கூறியுள்ளது. இதன் காரணமாக பல்வேறு பிரச்சனைகள் உருவாகலாம். இதன் விளைவாக நீரை அடிப்படையாகக் கொண்ட முரன்பாடுகளும் சமூகத்தில் அமைதியின்மையும் ஏற்படலாம். நீர் தொடர்பான மற்ற ஒரு பிரச்சனை வெள்ளப் பெருக்கு ஆகும். தென்னாசிய வலயத்தில் உள்ள பங்களாதேஷில் அடிக்கடி வெள்ளப்பெருக்கு ஏற்படுவதால் உயிர்ச் சேதங்கள், சொத்துக்கள் இழப்ப, என்பவற்றிற்கு முகம் கொடுக்கிறது. அதே வேளை நீர்ப்பற்றாக்குறையை அனுபவிக்கும் நாடாக பாகிஸ்தான் உள்ளது. நீர்ப்பற்றாக்குறையை போன்று நீர் மாசடைதலும் மற்றொரு பிரச்சனையாகும்.

மனிதன் நீரை பயன்படுத்த கூட அதனை மாசுபடுத்துகிறான். நீர் மாசடையும் பிரதான வழிகளாவன

- விவசாயத்திற்கு பயன்படுத்தப்படும் இரசாயன பதார்த்தம் நீருடன் கலத்தல்
- கைத்தொழில் கழிவு நீர், ஆறு ஓடைகளில் வந்து சேரல்
- வீடுகளில், ஹோட்டல்களில் உள்ள கழிவு நீரானது கால்வாயத்தொகுதி என்பவற்றை குறிப்பிடலாம்

உலக சுகாதார அமைப்பானது 2020ம் ஆண்டாகும் போது மாசடைந்த நீர் காரணமாக நேரம் அதிகரிக்கலாம் என எதிர்வு கூறியுள்ளது. இதன் அடிப்படையில் பார்க்கும் போது எதிர் காலத்தில் மக்களின் தீவிரமான குடிநீர் பிரச்சனையை எதிர்நோக்குவார். அதனால் உலக சமூகத்தினராகிய எமது பிரதான கடமை என்னவெனில் நீர் வளத்தைப் பேணி பாதுகாத்தலாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஹிந்துஸ்தானி இசையில் பிரபல்யம் வாய்ந்த வாக்கேயகாரர்


க.வனித்திரா
2014 கலை


**பாக்** (Bach)

இவர் Eiseach இடத்தில் இசைக் குடும்பத்தில் பிறந்தார். இவரது முன்னோர்களும், உறவினர்களும் சிறந்த ஆர்கன், பிடில், ஓபோ (Obde) விற்பன்னர்களாக இருந்தனர். பாக்கின் தந்தை ஜோஹான் அம்போருஸியஸ் (John Ambornsiwa) அரண்மனை வித்துவானாக விளங்கியவர் இவரே பாக்கின் முதற் குருவாவார். பாக் இளம் வயதிலேயே ரசிப்பவராக விளங்கினார். தன் தாயாரிடம் தோட்டத்தில் அமர்ந்திருந்து மத சம்பந்தமான விளக்கங்களையும் பெறுவார்.

பாக் தனது 9வது வயதிலேயே தாயையும் அதன் பின் தந்தையையும் இழந்தார். பாக்கின் மூத்த சகோதரரான Johana Christoph பாக்கையும் அவரின் மற்றைய சகோதரரையும் பொறுப்பேற்றார். Christoph ஆர்கன் வாசிப்பதில் திறமை பெற்றவர். இவர் Dhrdruf என்னும் இடத்தில் பாடசாலைக் கல்வியை மேற்கொண்டார். இவர் பெரும்பாலும் வாக்கேய காரர் இயற்றிய பாடல்களை பார்த்தெழுதுவதை பொழுதுபோக்காக மேற்கொண்டார். இவரது 15வது வயதில் தன் நண்பருடன் Lunebury எனும் இடத்திற்கு சென்றார். அங்கு Sentmichal (சென்மைக்கல்) Cdnuent இல் (கான்வெட்டில்) சமயப் பாடல்களை பாடுபவராக (Choirboy) ஆகச் சேர்ந்தார்.

இவர் முதன் முதலாகத் தனது 18வது வயதில் Arnstalt என்னும் இடத்தில் கிறிஸ்தவ தேவாலயத்தில் பாடகக் குழுத் தலைவராகவும் (Choir Master) ஆர்கன் வாசிப்பவராகவும் பொறுப்பேற்றார். இவர் Easter Cantata என்னும் இசையாக்கத்தை தம் மாணவர்களுக்காக எழுதினார். இவர் தம் உறவினரான மரியா பாபராவை (Maira Barabara) மணந்தார்.

Saxeweimar இல் உள்ள சீமான் (duke) இவரது திறமையை உணர்ந்து இவரை ஆர்கன் வாசிப்பவராகவும் நியமித்தார். முதன்முறையாக பாக் தன் வேலையில் திருப்தியும் மகிழ்ச்சியும் அடைந்தார். இக்காலத்திலேயே இவர் சிறந்த ஆர்கனுக்குரிய இசை வடிவங்களை (Drgan Music) ஆக்கினார்.

Tpccato fugue-D Minpri Preludufugue என்பவை இக் காலத்தில் இவரால் எழுதப்பட்டவையாகும். இர் கிளேவிகோர்ட் (Clavichdrd) வயலின் வாசிப்பதிலும் திறமை உள்ளவராக இருந்தார். இவர் 1714ம் ஆண்டில் Concert Moster ஆக நியமனம் பெற்றார். இவர் தாம் ஒருவராகவே கூட்டிசைகளை ஆக்கவும் நேரத்தை ஒதுக்கவும் திறமை பெற்றிருந்தார்.

இவரது முதல் மனைவி இறந்ததும் இவர் இரண்டாவது முறையாக Anna Mgdalona என்னும் பெண்ணை மணந்தார். இவரும் ஓர் சிறந்த பாடகியாவார். பாக் மிகவும் பிரபல்யமான 6 Banden Burg Concertps இயற்றினார். தனது 9வயது மகளுக்காக "Little bodk for the key board" எழுதினார் இவரது ஆக்கங்களில் பிரபல்யமானவை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mass in B-Minor
St Mathew Passion
Christmas Oratorid என்பவையாகும்.

இவர் ஒரு குருடராக இருந்த போதும் "நான் சிங்காசனத்திற்கு வருகின்றேன்" என்ற கூட்டினைப் பாடலை இயற்றியிருந்தார். பாக் குடும்பம் ஆறுதலை முறையாக ஜேர்மனிக்கு பிரபல்யமான இசையறிஞரை அளித்தது. இவர் கிளிவிகோர்ட் என்ற வாத்தியமும் இசை கூட்டப்படும் முறையை பரிபூரணப்படுத்தினார். இவரது இசையை பிரபலமாகிப் பலராலும் போற்றப்படுவதற்கு 100 ஆண்டுகள் சென்றன. இசைக் கருவிகளை வாசிக்கும் போது விரல்களைப் பயன் படுத்தும் முறையை அறிந்தர். இடைக்காலத்தில் கண் பார்வை முற்றாக நீங்கி பாரிசவாதத்தால் பீடிக்கப்பட்டு 1750ம் ஆண்டு இவ்வுலக வாழ்க்கை நீத்தார்.

# My Ambition

My ambition is to be a doctor. It is one of the noblest professions of the world. If I become a doctor. I will be able to serve the general public well. becoming a doctor is not an easy task. We have to score high marks at the G.C.E A/L examination. in Bio-science stream. The duration of the course is five or six years.

Today there is a great competition in our country to enter the medical cd lade. There fore we have to study. Hard to reach or goal. When we pass out from the medical collage. We get the Bachelor of Medicine degree. There after we have to do our intem ship and then practies as a general physician. either in a government hospital or a private hospital.

As a doctor I will have to spend most of my time with patients thousands of patiends come to me of treatment some of them may have chronic diseases. Which may some times hard to diagnoses. As a doctor I have to be toerate. I have to be kind hearted at al times. Medicine is not the only treatment. Doctors must peak the patients with kind word. Some times we may be able to cure certain ailments by that way.

As a doctor I will have to be devoted to my profession. Always I will have to pay attention. To words the new medical science discoveries being a doctor is more of a service Then a profession what is more a doctor is respoted by al. 'That's why I like to be a doctor'.

*S.Mithusha*
Grade 10A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையின் முன்னேற்றத்திற்குச் சிறந்தது அறிவே

ச. சோபிகா
2014 கலை

அறிவு நுண்ணியது; விரிந்தது; ஆழமானது ஆம்! அதனைத் திருவள்ளுவர் நுண்மான் நுழைபுலம் என்பர். இறைவன் நுண்ணியவன்! விரிந்தவன்! ஆழமானவன்! ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே என்பது மணிமொழி. அறிவே கடவுள் என்பது பழமொழி. ஆகவே ஆண்டவனுக்கு ஒப்பான அறிவின் மாண்பைக் கூற வேண்டுவதில்லை.

அறிவின் சிறப்பும் செயலும் பலப்பல. அவற்றின் கூறுகள் பலப்பல. அவை அனைத்தையும் கூறுதற்கு இயலாது. அறிவு மனிதனைப் போன போக்கில் போக விடாது தடுப்பது; நன்னெறியில் திரும்பிச் செல்ல வைப்பது.

எவரெவர் எவ்வெப் பொருளைச் சொன்னாலும் உண்மையை ஆய்ந்து கொள்வது அறிவு. பிறிதோர் உயிர்க்குத் துன்பம் இழைப்பதைத் துளியும் நினையாமையே அறிவு. இன்னவாறெல்லாம் பொய்யா மொழியார் புகழ்வார். இதனை

**“சென்ற இடத்தால் செலவிடாது தீ தொரிஇ**
**நன்றின்பால் உய்ப்ப தறிவு”**



**“மெய்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு”**

**“எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு”**

**“அறிவினால் ஆகுவ துண்டொ பிறிதின் நோய்**
**தம் நோய் போல் போற்றாக்கடை”**

என்று விரித்துப் பலபடக் கூறுகின்றார். அவ் அறிவே வாழ்க்கையின் முன்னேற்றத்திற்குச் சிறப்பானது.

பொருள் சிறந்தது என்பர்; ஆம்! பொருள் வேண்டுவதே! ஆனால் அறிவிலார்க்குப் பொருள் எவ்வாறு கிடைக்கும்? அறிவின் வழியாக அல்லவா பொருளே வந்தது. நமக்கு அறிவு இருப்பதால் தானே புதுப்புதுப் பொருள்கள் உருவாகின்றன. ஆகவே அடிப்படை முன்னேற்றம் அறிவே என்பதை உணரலாம்.

ஆதலால் தான் கல்வி, கேள்வி, அறிவுடைமை, பண்படைமை ஆகியவை எல்லாம் செல்வம் என்றும் பொருள் என்றும் ஆன்றோர்களால் சொல்லப்பட்டுள்ளன. அவ்வனைத்தையும் சேர்த்தே “அறிவுடையார் எல்லாம் உடையார்” என்பார் வள்ளுவர் அவர் கண்ட தலையாய உடைமை அறிவு உடைமையே எனில் சரியான முடிவேயாம்.

ஒருவன் கையில் இருக்கும் சிறிய இருப்பின் விலைமானம் சில காசுகள் ஆகின்றது. அதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுடையான ஒலிபெருக்கியாய் அமைத்த விடுகின்றான். அப்பொழுது அவ்விருப்பின் விலை பன்மடங்கில் பெருகி விடுகின்றது. இது இருப்பின் விலையா? அறிவின் விலையா? அறிவின் விலையே ஆகும். ஆதலால் அறிவுடைமையே முன்னேற்றத்திற்கு சிறந்தது என்பதாம்.

அறிவிலான கைப்பொருள் அவன் அழிவுக்கே துணையாம். பிறர்க்கும் கேடு பயப்பதாம் சுற்றிலும் முட்காடு செறிந்த சுடுகாட்டின் இடையே உள்ள காய்க்காத பனை மரத்தால் பயன் உண்டா? அறிவலான் கொண்ட பொருளால் கொண்ட பயனும் அப்படிப்பட்டதேயாம்.

அறிவுடையான் செல்வமே "நடுவூர் நன் மரமாகவும்" "மருந்து மரமாகவும்" "ஊருணி நீராகவும்" பலர்க்கும் பயன்படும். அறிவு இல்லான் செல்வமோ ஊர் நடுவே பழுத்து நிற்கும் நச்சுமரம் போலாகிக் கெடுக்கும்.

அகல் விளக்குக் கண்டவனே மின் விளக்குக் கண்டு இரவையும் பகல் ஆக்கியுள்ளான். இனிக் கதிரில் இருந்தே கை விளக்கை காணும் அளவுக்கு முயல்கின்றான். ஞாயிறு மண்டலத்திற்கும் புள்ளி வைக்கின்றான். புதிய புதிய திங்களைப் படைத்த உலகைச் சுற்றி வரச் செய்கின்றான். எல்லாம் அறிவின் செயல். ஆதலால் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்குச் சிறந்தத அறிவேயாம்.

ஒருவன் இப்போது இருக்கும் வேலை அல்லது பதவியில் அது எவ்வளவு சாதாரணமாக இருந்தாலும் மிகச் சிறப்பாகப் பணியாற்றுவது தான் முன்னேற்றத்துக்கு வழி. பதவி உயர்வுக்காக அவன் ஏங்க வேண்டிய தில்லை. அது வழி விசாரித்துக் கொண்டு தானாக அவனை வந்தடையும். எனது நகரத்தின் மேயராக நான் இருந்தபோது நாட்டின் தலைவனாகும் நாள் பற்றிக் கனவு கண்டு நேரத்தை வீணாக்கிக் கொண்டிருக்காமல் நகரத்தின் பிரச்சினைகளைச் சமாளிப்பதில் மூழ்கியிருந்தேன். தானே அந்த நாள் வரத்தான் செய்தது.

மே.ஜெர்மனி சான்ஸலர் அடினாயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விக்கும் பொருளாதாரத்திற்கும் இடையிலான உறவு

திரு. செ. இராஜேஸ்வரன்
B.A (Hons) Dip.in.Edu
ஆசிரியர்

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி, பொருள் உற்பத்தி பெருக்கத்திலேயே தங்கியுள்ளது. பொருள் உற்பத்திப் பெருக்கம் மூலதனத்திலும் நாட்டின் இயற்கைச் செல்வத்தைப் பயன்படுத்துவதிலும் மட்டுமல்லாது மனித சாதனத்தைப் பல்வேறு திறன்களிலும் ஆற்றல்களிலும், ஆற்றல்களும் அறிவும் படைத்த மனித சாதனம் இல்லையாயின் பொருளாதார வளர்ச்சி பின்தங்க வேண்டிய நிலையே ஏற்படும். இவ்வாறு பொருளாதாரப் பயனுடைய மனித சாதனத்தைப் பயிற்றுவதில் கல்வி முறைக்கு முக்கிய பங்கிருப்பதால் பொருளாதார வளர்ச்சிக்குக் கல்வி வளர்ச்சி முக்கியத்துவம் வாய்ந்ததாகின்றது. எனவே இன்று பல்வேறு உலக நாடுகளிலும் கல்வியின் மீதான செலவை மனித சாதனங்களின் மீதான முதலீடாக மாற்றும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நாடுகளின் பொருளாதார வளத்தைப் பெருக்குவதில் கல்வி எப்போதுமே பங்கு கொண்டு வந்துள்ளது. புராதன காலங்களில் ஓய்வு நேரத்தைப் போதிய அளவு கொண்டிருந்த பொருளாதார வசதி படைத்தவர்களே கல்வி பயிலக் கூடியதாக இருந்தது. ஆனால் இருப்தாம் நூற்றாண்டில் தோன்றிய பொதுநல அரசுகள் கல்வித்துறையை நன்கு விரிவு செய்து கல்வி பெறுவதிலிருந்து பொருளாதாரத் தடைகளை நீக்கப் பல நடவடிக்கைகள் மேற்கொண்டன. எனினும் அவ்வாறான நடவடிக்கைகள் நாட்டுக்கு நாடு வேறுபட்டு விளங்கின. கல்வி வசதிகள் என்றுமில்லாதவாறு விரிவாக்கப்பட்ட நிலையில் இன்று பொருளாதார அமைப்பின் வளர்ச்சிக்குத் துணைபுரியக் கூடிய திறனும் அறிவும் படைத்து உற்பத்திப் பணியில் விவேகத்துடன் ஈடுபடக்கூடிய மக்கட் கூட்டத்தை உருவாக்கும் வகையில் கல்விமுறை மாற்றியமைக்கப்பட வேண்டும் என்ற கருத்து உலக நாடுகளில் நன்கு பரவியுள்ளது. பாடசாலைக் கல்வி பல்வேறு திறன்களைப் பயிற்றுவதோடு அமையாது, சேமிப்பு, இயற்கை மூலவளங்களைப் பாதுகாத்தல் குடித்தொகைப் பெருக்கம் (சனத்தொகைக் கல்வி) பற்றிய அறிவு போன்றனவற்றின் நன்மைகளை இளந் தலைமுறையினருக்கு உணர்த்துதல் மூலமும் வாழ்க்கை நீடித்த கல்வி மற்றும் முதியோர் கல்வி ஏற்பாடுகள் மூலமும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குச் சாதகமான மனப்பாங்கையும் வளர்த்தல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே, பொருளாதார வளர்ச்சியைப் பொறுத்தவரையில் கல்வி மனித சாதனத்திற்குத் திறன்களை வழங்குதல், மனப்பாங்குகளை ஏற்படுத்தல் ஆகிய இரண்டு முக்கிய கடமைகளைப் புரிகின்றது.

பொருளாதார வளர்ச்சி கல்வியிலும், கல்வி வளர்ச்சி பொருளாதாரத்திலும் தங்கியுள்ளன. பொருளாதார வளர்ச்சிக்கென மனித சாதனத்தைப் பயற்றுவதில் கல்வி முறைக்கு முக்கிய கடமையுள்ள அதேவேளையில் கல்வி வளர்ச்சிக்கான மேலதிக நிதியைப் பொருளாதாரமே வழங்க வேண்டியுள்ளது. பொருளாதாரம் வளர்ச்சியுறவில்லையாயின் கல்வியை விரிவு செய்வதற்கு வேண்டிய நிதியைப் பெற்றுக் கொள்ளமுடியாது. அபிவிருத்தியுறும் நாடுகளை அவதானிப்பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலைமை தெளிவாகத் தெரியும் அபிவிருத்தியடைந்த நாடுகள் பொருளாதார வளர்ச்சி காரணமாகக் கல்வியலும் அதிக விருத்தியை அடைந்துள்ளன. எனவே கல்வியும் பொருளாதாரமும் ஒன்றில் ஒன்று தங்கியுள்ளமை தெளிவாகின்றது.

கல்வியின் மீதான செலவை முதலீடாகக் கொள்ளுமிடத்து அதிலிருந்து உடனடியாக நன்மைகளை எதிர்பார்க்கமுடியாது. கல்வி முறை திட்டமிடப்படும் போது நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களுடன் இணைக்கப்பட்டதாய் அமைதல் வேண்டும். கல்விக் கொள்கைகளுக்கும் பொருளாதாரக் கொள்கைக்கும் நெருங்கிய பிணைப்பு இல்லாவிடில் பொருளாதாரத் திட்டங்களால் கல்விமுறை தனது முக்கிய பங்கினை ஆற்ற முடியாத நிலை ஏற்படும். ஆகவே பொருளாதாரத் திட்டத்தின் இலக்குகளை அடைவதற்கான துணைக்கருவியாகக் கல்விமுறை செயற்பட வேண்டியுள்ளது. சமுதாயத்துடனும் சமுதாய மேம்பாட்டுக்கான பொருளாதாரத் திட்டங்களுடனும் இணைக்கப்படாத புறம்பான நோக்கங்களுடைய கல்வி முறையின் மீதான செலவுகள் நுகர்வுச் (Consumption) செலவுகளாகவே அமையும். அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் தேசிய வருமானத்தின் கணிசமான அளவு நிதி கல்விக்கு ஒதுக்கப்பட வேண்டியிருப்பதால், அந்நிதி இந்நாடுகளின் பல்வேறு துறைகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யும் பிரச்சினை பொதுவான நிதித்தட்டுப்பாட்டின் காரணமாகப் பெரு முக்கியத்துவம் பெற்றுள்ளது. பற்றாக்குறையாகக் காணப்படும் நிதி மூலவளங்கள் நேரடியான சமூகநலச் சேவைகளில் விரயம் செய்யப்படாது உற்பத்திப் பெருக்கத்துக்காகப் பயன்படுத்தப்பட வேண்டியுள்ளது. கல்வித்துறை பெருகிவரும் குடித்தொகைக்கேற்றவாறு விரிவு செய்யப்பட வேண்டியிருப்பதால் தவிர்க்க முடியாத வகையில் அதிகரிக்கும் கல்விச் செலவைப் பொறுத் தளவில் கல்வி முறை பொருளாதார அமைப்பை மையமாகக் கொண்டு மாற்றிமைக்கப்பட வேண்டியுள்ளது.

ஒரு நாட்டின் பொருளாதாரத் திட்டங்களின் வெற்றிக்கு அவற்றிற்குரிய மனித சக்தித் தேவைகள் நிறைவேற்றப்படல் வேண்டும். சோவியத் ரஷ்யா பொருளாதார முறைக்குத் தேவையான திறன்களை வழங்கும் நோக்குடனேயே இடைநிலைக் கல்வி நிலையங்களையும் அமைத்துப் பொருளாதாரத்தில் முன்னேறியுள்ளமை குறிப்பிடக்கூடியதாகும். கல்வியின் மூலம் மனித சாதனத்தைப் பயற்றுவதற்கும் மனித சக்தித்தேவைகளை நிறைவேற்றுவதற்கும் நீண்ட காலத்திட்டங்கள் தேவைப்படுகின்றன. குறுகிய காலத்திட்டங்களாற் பொருளாதார அமைப்புக்கு நிரந்தரமான பயனை அளிக்கும் மாற்றங்களை ஏற்படுத்திவிட முடியாது. கல்வித்திட்டங்கள் திறமை மிக்க மனித சாதனத்தை உருவாக்க நீண்டகாலம் செல்லும் எனவே குறுங்காலத் திட்டங்கள் நற்பயனைத் தரா. நீண்ட காலத்திட்டங்கள் மூலமே நாட்டு மக்களிடையே புதிய திறன்களையும் புதிய அறிவையும் புதிய மனப்பாங்குகளையும் பரவலாக விருத்திசெய்ய முடியும். கல்வித் திட்டங்களை வரைபவர்கள் பல்வேறு விடயங்களைக் கருத்திற்கொள்ள வேண்டும். பாடசாலை மாணவர் தமது கல்வியை முடிக்கும் காலத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பல. இன்றைய விஞ்ஞான யுகத்தில் நடைமுறையிலுள்ள தொழில்நுட்பவியல் அறிவும், சாதனங்களும் நாளடைவல் மாற்றமுறுவதால் ஏற்படக் கூடிய பிரச்சினைகள், தொழில் திறன்களையும் ஆற்றல்களையும் கற்பிக்கக் கூடிய ஆசிரியர் பற்றாக்குறையால் ஏற்படக் கூடிய பிரச்சினைகள் என்பன அவற்றுட் சிலவாகும். எனவே, மாற்றங்களை உடனடியாகப் புகுத்துவது கடினமாகும். கல்வித் திட்டங்களை வரையும் போது ஆசிரியர்களைப் பயிற்றவும், புதிய பாடசாலைகளைக் கட்டவும் போதிய காலத்தை வழங்குவதற்கு வசதி செய்யும் வகையில் நீண்ட காலத்திட்டங்களே கல்வி மாற்றங்களுக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தமானவையாகும்.

ஒரு பொருளாதார அமைப்பின் எதிர்கால மனித சக்தித் தேவைகளை முற்கூட்டியே மதிப்பிடுவதில் பல பிரச்சினைகள் உண்டு. எதிர் கால மனித சக்தித் தேவைகள் மாறுதல்களுக்கு உள்ளாகக் கூடும். எனவே கல்வித்திட்டம் இவ்வா றான மாற்றங்களுக்கேற்ப நெகிழ்ந்து கொடுக் கும் இயல்புடையதாய் விளங்குதல் வேண்டும். நவீன பொருளாதார அமைப்புகளில் பயிற்சி அற்ற தொழிலாளரின் முக்கியத்துவம் குறைந்து வருகின்றது. பொருளாதார வளர்ச்சிக்குப் பல்வேறு வகைப்பட்ட, அதிக அளவான திறன்கள் தேவைப்படுகின்றன. அவ்வாறான திறன்களின் விருத்தி அவற்றை உருவாக்குவதைக் குறிக் கோளாகக் கொண்ட கல்வித் திட்டத்திலேயே தங்கியுள்ளது. வளர்ச்சியுறும் பொருளாதார அமைப்பில் உள்ள தொழிலாளர்கள் முதலில் ஒரு விசேட திறனைப் பெறத் தங்களை ஆயத்தம் செய்துகொள்ள வேண்டியுள்ளது. எனவே தான் பொருளியலாளர்கள் மாறிவரும் தொழில்நுட்ப விஞ்ஞான அறிவுக்கேற்றவகையில் தம்மை அனுசரனையாக்கிக் கொள்ளும் தொழிலாளர் வகுப்பொன்றை உருவாக்கக் கூடிய நெகிழ் வுள்ள கல்வித்திட்டத்தை எப்போதுமே வலியுறுத்தி வந்துள்ளனர்.

ஆதாரங்களை வைத்து நோக்கும் போது பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்திய காரணி களால் தரமான கல்விமுறையே மிகவும் முக்கி யத்துவம் வாய்ந்ததென்று கூறுவதற்கில்லை. உலகின் முதலாவது கைத்தொழில் நாடான பிரித் தானியாவின் சராசரிக் கல்வித் தரம், பிற ஐரோப் பிய நாடுகளை விடக் குறைவாக இருந்தது. எனி னும் யப்பான், ஐக்கிய அமெரிக்கா, சோவியத் நாடு, டென்மார்க் ஆகிய நாடுகள் கூடிய வீதப் பொருளாதார வளர்ச்சியையும், கூடிய வீதக் கல்விச் செலவையும் கொண்டு விளங்குகின்றன. டென்மார்க்கின் கல்வமுறை அந்நாட்டின் பொரு ளாதார வளர்ச்சிக்குத் திட்டவட்டமான தொண்டை ஆற்றியுள்ளது. சோவியத் நாட்டைப் பொறுத்த வரையிலும் கல்விமுறை பொருளாதார வளர்ச் சிக்குப் பெரிதும் காரணமாக இருந்தது. பிறநாடு களின் பொருளாதார வளர்ச்சி வீதத்திற்கும் கல்விச் செலவின் அதிகாப்பு வீதத்திற்கும் நெருங்கிய இணைப்பு இருந்த போதிலும், இரண்டிற்குமி டையே ஏதேனும் விளைவை உண்டாக்கும் காரண காரியத் தொடர்பு இருந்ததாகக் கூற முடியாது. ஆயினும் ஒரு பொருத்தமான கல்வி முறையின்றிப் பொருளாதாரம் வளர்ச்சிபெற முடியாது என்பதை மறுப்பதற்கில்லை.

**அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் கல்வியும் பொருளாதாரமும்**

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் பொருளாதார விருத்திகளை அடையக் கல்வி இன்று முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. இந் நாடுகளில் அபிவிருத்தி அடைந்த நாடுகள் போன்று கல்வித்துறைக்குப் பணம் செலவிடப்படுகின்றது. ஆனால் இச்செலவிற்கேற்பப் பயன் கிடைக்கின் றதா என நோக்கின் அவர்களின் குறிக்கோளை அடையக்கூடிய அளவிற்கு அவற்றினது கல்வி சாதகமாக அமையவில்லை என்றே கூறலாம். எனவே, கல்வி பொருளாதார வளர்ச்சிக்குத் தொண்டாற்ற வேண்டுமாயின் கல்வியின் பல்வேறு நிலைகளையும் சமச்சீராக விருத்தி செய்வதை விடுத்து அந்நிலைகளைத் தேவை அடிப்படையில் வரிசைப்படுத்தி ஒவ்வொன்றாக விருத்தி செய்தல் வேண்டும். பொருளாதார வளர்ச்சிக்கு எழுத்தறிவு மிகவும் தேவைப்படு மிடத்து ஆரம்பக் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்படல் வேண்டும். விரைவான கைத் தொழில் மயமாக்கம் தேவையாயின் தொழில் நுட்பக் கல்வியை முதலில் விருத்தி செய்தல் வேண்டும். இந்நாடுகளில் கல்வி முறையில் பொருளாதாரக் கடமைகள் மிகவும் முக்கியத்து வம் வாய்ந்தனவாக இருந்த போதிலும் கல்வி முறையிற் பல குறைபாடுகள் காணப்படுவதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கடமைகளைச் சிறப்பாக நிறைவேற்ற முடியாதுள்ளது. பொதுவாக இந்நாடுகளில் நிலவும் கல்வி திறமையற்றதாயும் செலவுமிக்கதாயும் காணப்படுகின்றது. இந்நாடுகளிற் பெரும்பாலானவை முன்பு ஐரோப்பிய ஆட்சியாளரின் குடியேற்ற நாடுகளாக இருந்தமையால் குடியேற்ற நாட்டு தேவைகளைக் கருத்திற்கொண்ட கல்வி முறையே அமைக்கப்பட்டிருந்தது. இந்நாடுகளில் சுதந்திரம் பெற்ற பின்னர் புதிய தேவைகளுக் கேற்பக் கல்வி முறையில் மாற்றம் செய்யப்படவில்லை. அதற்கு மாறாகக் குடியேற்ற நாட்டுக் கல்விமுறை ஆளுவோருக்கும், ஆளப்படுவோருக்கும் இடையில் தொடர்பை ஏற்படுத்தும் ஒரு கல்வி கற்ற வகுப்பினரை உருவாக்கும் நோக்குடையதாக விளங்கியது. அத்துடன் அரசாங்க நிர்வாகப் பதவிகளை ஏற்பதற்குத் தேவையான அந்நிய மொழிக் கல்வியை வழங்கும் கல்வி முறை நாட்டின் பொருளாதார அமைப்பின் தேவைகளைக் கருத்திற் கொள்ளாத முறையில் அமைக்கப்பட்டிருந்தது. நாட்டினது மிகவும் அத்தியாவசியப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க உதவுவதற்குப் பதிலாக இந்த நடைமுறைகள், நாட்டின் அபிவிருத்தித்துறைகளின் ஆக்கபூர்வமான ஈடுபாடு கொள்ள முடியாத ஏட்டுக் கல்விச் சிந்தனையுள்ள மேதாவிகளை உற்பத்தி செய்கன்றது. சுதந்திரத்தின் பின்னர் இந்நாடுகளின் கல்விமுறை தொழில்நுட்பத் திறன்களுக்கு முக்கியத்துவம் வழங்காது கலைகள், சமூகவியல், மொழிகள் முதலிய நூற்கல்விப் பயிற்சி நெறிகளுக்கே முக்கியத்துவம் வழங்கின. மேலும் பெருந்தொகையான பயிற்சி பெற்ற தொழில் வல்லுநர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கும் வகையல் இந்நாடுகளற் கைத் தொழில் வளர்ச்சியும் ஏற்பட்டிருக்கவில்லை. விவசாய நாடுகளாக இருந்தும் விவசாயத்தில் ஒரு பூரண மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்குத் தேவையான துணிவையும் திறமையையும் வழங்குவதற்குப் பதிலாக இக்கல்வி முறை பட்டணங்களையும், வெளிநாடுகளையும் நோக்கிச் செல்லக்கூடியவர்களை உருவாக்கும் முகவர் நிலையங்களாக மாறியுள்ளன எனவும் குறிப்பிட முடியும்.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிற் பல, அந்நியர் ஆதிக்கத்தில் இருந்ததன் காரணமாக அவற்றின் பொருளாதாரமும் கல்வியமைப்பும் ஆதிக்கம் செலுத்திய நாட்டினை அடிப்படையாகக் கொண்டு அமைந்ததில் வியப்பில்லை. இந்நிலையை முற்றாக மாற்றிப் பொருளாதார வளர்ச்சிக்குப் பயனளிக்கும் திறமையுள்ள கல்வி அமைப்பை ஏற்படுத்துவதில் இந்நாடுகள் பெரு முயற்சி எடுத்து வருகின்றன. இந்நாடுகளின் கல்வி, அளவில் பெருகும் அதேவேளையில் தரத்திலும் உயர வேண்டியுள்ளது. ஒரு நாட்டைக் கட்டிஎழுப்ப அந்நாட்டுக்கு மக்களின் விவேகமும் படைப்பாற்றலும் நன்கு பயிற்றப்



படல் வேண்டும். அப்போது தான் மனித சாதனம் பொருளாதார வளர்ச்சிக்குப் பயனுள்ள முதலீடாகின்றது. அபிவிருத்தி அடைந்து வரும் நாட்டின் பொருளாதார வளர்ச்சி, அந்நாட்டிற் கிடைக்கும் இயற்கைச் செழிப்பிலும், முதலீடு செய்யப்படும் நிதியிலும், இயந்திர சாதனங்களிலும் மட்டும் தங்கயிருக்கவில்லை என்பதைக் கருத்திற் கொள்ள வேண்டும். அவற்றை வெளிநாடுகளிலிருந்து கடனாகவோ நன்கொடையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவோ பெற்றுக் கொள்ளலாம். ஆனால், பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான மனித சாதனம் உள்நாட்டிலேயே உருவாக்கப்படல் வேண்டும் இதனால் அபிவிருத்தியும் நாடுகளிற் பயிற்சி பெற்ற, தொழில்நுட்ப அறிவுடைய தொழிலாளர்களை உருவாக்கிக் கொடுத்தல் கல்வியின் தலையாய பணியாகத் தற்போது விளங்குகின்றது. நாட்டின் இயற்கை வளங்களுடன் பயிற்றப்பட்ட மனித ஆற்றல் இணையும் போது தான் பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளம் அமைக்கப்படுகின்றது. முதலீட்டு நிதியின் பற்றாக்குறையிலும் பார்க்க எல்லா நிலைகளிலும் நிலவும் தொழிற்பயிற்சி பெற்றவர்களின் பற்றாக்குறையினாலேயே அபிவிருத்தி வீதம் அதிகம் பாதிக்கப்படும் என்பதை அவதானிக்க வேண்டும். சில வருடங்களுக்கு முன்னர் இலங்கை வந்த உலக வங்கித் தூதுக்கோஷ்டியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டது போல் நாட்டில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்துவதற்குப் போதிய ஆராய்ச்சியாளர், விஞ்ஞானிகள், திட்டமிடும், செயற்படுத்தும் பொறியியலாளர், விவசாயம் – உற்பத்தி ஆகிய துறைகளில் விசேடத்துவம் பெற்றவர்கள் போதிய அளவு இல்லை. இதைப்போலவே தொழில்முறை மேற்பார்வையாளர்கள், குறிப்புப்படம் வரைபவர்கள், இரசாயனத்துறை நிபுணர்கள், வெளிப்புல மேஸ்திரிகள், பல் கைத்திறனுடைய வேலையாட்கள் தேவையான அளவிற்கு இல்லை. இதே நிலை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளெல்லாவற்றிலும் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். பயிற்றப்பட்ட மனித சக்தி இல்லையாயின், இயற்கை வளங்களை முற்றாகவும் சிக்கனமாகவும் பயன்படுத்தி அதிக வீத உற்பத்தியைப் பெற முடியாது போய்விடும்.

அபிவிருத்தியுறும் நாடுகளைக் கட்டி எழுப்புவதற்குக் கல்வி முதற் கருவியாக அமைகின்றது. இதனை உணர்ந்துள்ள நாடுகளில் ஆரம்ப இடைநிலைக் கல்வியை நாடுவோரின் தொகை பன்மடங்காக அதிகரித்துள்ளது. ஆனால் கல்வியின் முக்கியத்தை உணர்ந்த நாடுகள் அனைத்தும் கல்வியைப் பொருளாதார அமைப்புடன் இணைத்துத் திட்டமிட்டுள்ளன என்று கூற முடியாது. இந்நாடுகளில் கல்வியின் உள்ளடக்கத்தில் எதுவித மாற்றமும் செய்யப்படாது கல்வியை உழைப்புடன் தொடர்புடைய தொழில்களில் ஈடுபடுவது இழிவானதென்ற தவறான மனப்பான்மை இளந்தலைமுறையினரிடையே பரவி விட்டது. அவ்வாறான தொழில்களை விடுத்து உடை நலுங்கா உத்தியோகங்களையே அவர்கள் பெரிதும் நாடி வருகின்றனர். ஆனால் அவ்வாறான உத்தியோகங்கள் மிகவும் குறைவாகவும், அவற்றை நாடுவோரின் தொகை அதிகமாகவும் காணப்படுவதால் வேலையின்மைப் பிரச்சினை ஏற்படுகிறது. கல்விமுறை வழங்கிய தகுதிகளுக்கும் பொருளாதாரத் துறைக்குத் தேவைப்பட்ட திறன்களுக்குமிடையில் அதிக வேறுபாடுகள் காணப்படுகின்றன.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் கல்வி விரிவடைந்த அளவிற்குப் பொருளாதாரம் வளர்ச்சி அடையாததனால் கல்வி கற்றவர்கள் யாவருக்கும் அவர்களின் ஆற்றலுக்கும் தகுதிக்கும் ஏற்ற வேலைகள் கிடைப்பதில்லை. கற்றோரின் வேலையில்லாப் பிரச்சினை ஒரு வகையில் கல்வி வளர்ச்சி ஏற்பட்டுள்ளதை சுட்டிக் காட்டியதாக விளங்கிய போதிலும், அரசாங் கத்துக்கு இது ஒரு இக்கட்டான பிரச்சினை யாகும். கற்ற இளைஞர்களைப் பொருளாதாரம் அபிவிருத்தியுறும் வரைக்கும் காத்திருக்கும் படி கூறமுடியாது வேலையில்லாப் பிரச்சினை ஒரு சமூகப் பொருளாதாரப் பிரச்சினையாகும். கற்றவர்க்கு வேலை கிடைக்காமையாலும் அதன் காரணமாக நாட்டின் ஆக்க வேலைகளுக்கு அவர்கள் பயன்படாமையாலும் அவர்களின் அறி வும் சக்தியும் விரயமாகின்றன. இன்று எல்லா நாடுகளிலும் கல்விக்குச் சமூகம் வழங்கும் முக்கியத்துவம் அதிகரிப்பதால்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியன் சமூகத்தேவை அதிகரிக்கின்றது. சமூகத் தேவையை முன்னிட்டுக் கல்வி திட்ட மிடப்படாமலும், பொருளாதார அமைப்புடன் தொடர்புபடுத்தப்படாமலும், விரிவுபடுத்தப்படும் போது இவ்வாறான பாதகமான விளைவுகளே ஏற்படு கின்றன.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் எழுத்தறிவு வீதம் விருத்தியடைந்த நாடுகளோ ஒப்பிடும் போது குறைவாக உள்ளது. பொருளா தார விருத்தியை ஏற்படுத்துவதற்கு மக்களின் எழுத்தறிவை வளர்க்க நடவடிக்கைகள் எடுக்கும் அதே நேரத்தில் முதியோர் கல்வி வாழ்க்கை நீடித்த கல்வி என்பவற்றிலும் கவனம் செலுத்த வேண்டும் தன்சானியா, பெரு போன்ற அபிவிருத்தியுறும் நாடுகள் முதியோர் கல்வி மூலம் பெரும் முன்னேற்றம் அடைந்தது குறிப்பிடத்தக்கதாகும். இன்று ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞான கலாச்சாரத்திற்கான நிறுவன மும் இக்கருத்தினை ஏற்று அங்கத்துவ நாடு களிடையே இக் கருத்தினைப் பிரபல்யப்படுத்தி யும் நடைமுறைப்படுத்தியும் வருகின்றது. இன் றைய விஞ்ஞான உலகில் றொக்கெட் வேகத்தில் மாற்றமுறும் விஞ்ஞானக் கருத்துக்களை விளக்கி பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த வாழ்க்கை நீடித்த கல்வியும் முக்கியமான தாகும். வீட்டுப்பணி முதல் அணு ஆராய்ச்சிவரை வாழ்வின் ஒவ்வொரு திசையிலும் கல்வியை வாழ்நாள் ஊடாகத் தொடர்தல் இன்று அத்தியா வசியமாகிவிட்டது. அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதார விருத்தியைக் கல்வியூடா கப் புத்தாக்கங்களை ஏற்படுத்தியும் முன்னேற்ற மடையச் செய்யலாம்.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் கல்வி முறையில் இடம்பெறும் கலைத்திட்ட மாற்றங்களின் சில இயல்புகள் பற்றியும் ஆராய வேண்டும். கல்வியில் எல்லா திசைகளிலும் அறிவியல் முக்கிய இடத்தைப் பெறவேண்டும். ஒவ்வொரு மாணவனும் தனது இயற்கைச் சூழல் உயரியற் சூழல் முதலியவற்றை உணர்ந்தவனா கவும் எப்பிரச்சினையையும் அறிவியல் முறை யில் சிந்தித்து விடைகாணும் ஆற்றல் உடையவ னாகவும் விளங்க வேண்டும். அத்துடன் மாண வனின் ஆக்கத்திறன்களை வளர்க்கும் வகையி லும் அவன் சமூகத்திற் சிறப்பாகவும் மகிழ்ச்சி யுடனும் வாழும் திறனை அளிக்கும் வகையிலும் (பாடவிதானம்) கலைத்திட்டங்கள் மாற்றிய மைக்கப்பட வேண்டியுள்ளன. பாடங்கள் வெவ் வேறு பாடக்கூறுகளாகப் பிரித்துக் கற்பிக்கப் படாது, எல்லாப் பாடங்களும் ஒரு முகப்படுத்தப் பட்ட நிலையில் கற்பக்கப்பட வேண்டும். செயற்றிட்டம், தொழிற்பயிற்சி என்பனவற்றற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் ஒன்றான இலங்கையின் கல்வி முறையில் 1972ஆம் ஆண்டு தொடக்கம் ஆறாந்தரத்தில் இவ்வடிப் படையிற் பாடவிதானம் மாற்றி அமைக்கப்பட் டமை குறிப்பிடத்தக்கது. ஆறாந்தரம் தொடக்கம் பத்தாம் தரம் வரை புவியியல், வரலாறு, பொருளியல், குடியியல் ஆகிய பாடங்கள் சமூகவியல் பாடமாக ஒன்றிணைக்கப்பட்டுள் ளன. பௌதீகம், உயிரியல், இரசாயனம் ஆகிய பாடங்கள் பொது விஞ்ஞான பாடமாக ஒன் றிணைக்கப்பட்டுள்ளன. அத்துடன் இப்பாடங்கள் அனைத்தும் மாணவர்கள் வாழும் சமுதாயச் சூழலுடன் தொடர்புபெறும் முறையில் கற்பிக் கப்படுகின்றன. பொதுவாகக் கல்விமுறையில் தொழிற்பாடங்களுக்குக் குறைந்த மதிப்பும், நூற் கல்விச் சார்புடைய பொதுக்கல்விக்கு அதிக மதிப்பும் அளிக்கப்படுவது வழக்கம் இங்கிலாந் தில் மிக நீண்டகாலமாகச் சமூக சித்தாந்தம் நூற் கல்விக்கு அடுத்த இடத்தையே தொழில்நுட்பக் கல்விக்கு வழங்கி வந்தது. இதனாலேயே ஜேர்மனி, சோவியத் குடியரசுடன் ஒப்பிடும் போது தொழில்நுட்பத் துறையில் பின்தங்கிய தாகக் காணப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1971ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட ஐந் தாண்டுத் திட்டமும் கல்விமுறை, பொருளாதார அமைப்புடன் இணைக்கப்பட வேண்டுமென் பதை வலியுறுத்தியது. ஆனால் அத்திட்டமும் நிறைவேறவில்லை. கல்வியின் நோக்கம் சமு தாயத்தின் பண்பாட்டையும் அறிவாற்றலையும் மேம்படுத்தும் என்றும், அதன் வழியாக முழு வாழ்க்கை வாழ உதவி புரிவது என்றும், பொது வாகக் கூறப்படுவது வழக்கம். உண்மையில் பொருளாதார அபிவிருத்தியின் நோக்கமும் மக்கள் திருப்திகரமானதும் மகிழ்ச்சி நிறைந்தது மான வாழ்க்கையை நடாத்த உதவுவதுமே யாகும். அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் பொருளாதார விருத்திக்கும், கல்வி விருத்திக் கும் சமநிலை இல்லாத காரணத்தினாலேயே விருத்தி தடையாகவுள்ளது. 1981ஆம் ஆண்டின் வெள்ளையறிக்கையில் வாழ்க்கைத் தொழிற் றிறன்கள் என்னும் புதிய பாடம் தொழில்நுட்பப் பாடங்களுக்குப் பதிலாக இடம்பெற்றுள்ளது. மாணவன் கற்கும் போதே தொழிலுலகை அறி வதும், நல்ல மனப்பாங்குகளைப் பெறுவதும், தொழிற் திறமையுடையவனின் ஆற்றலை வளர்ப்பதும் இப்பாடத்தின் நோக்கமாகும். இவ் வாறான மாற்றங்கள் எதிர்காலத்தில் இளைஞர் கள் தம்மைப் பொருளாதார அமைப்புடன் பொருந்திக்கொள்ள உதவுவனவாக அமையும். இவ்வெள்ளையறிக்கை நிறைவேறுமா என்பது கேள்விக்குரியதாகவே உள்ளது. கல்வியல் ஏற்படும் புத்தாக்கங்கள் சமூகத்தினால் ஏற்றுக் கொள்ளப்படாத போது அவை தோல்வியுறுகின் றன. எனவே கல்விமுறையின் பயிற்சி திறன், மனப்பான்மை என்பன சமூகப் பொருளாதார அரசியல் சூழலுடன் இணைந்தவையாக அமைய வேண்டும். இல்லாவிடில் எதிர்பார்த்த இலக்கு களை அடைய முடியாது.

கல்வியானது பொருளாதார விருத்தியோடு தொடர்பான முறையில் திட்டமிட்ட செயற்படுத் தப்படும் போதே பொருளாதாரம் வளர்ச்சியுறும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளான கியூபா, சீனா போன்றவை முதியோர் அறியா மையைப் போக்கி குறுகிய காலத்தில் வெற்றி பெற்றன. அபிவிருத்தியுறும் நாடுகள் உறுதி யளிக்கப்பட்ட மகிழ்ச்சியான வாழ்விற்குத் தங் களை இட்டுச் செல்லக்கூடிய துரித பொருளா தார சமூக மாற்றங்களைக் கொண்டு வரும் பாரிய பணியை எதிர்நோக்கியுள்ளனர். இதை நிறைவேற்றுவதில் கல்வியைச் சக்திமிக்க துணையாகக் கொள்ள விழைகின்றன. கல்வியை மீளாய்வு செய்கின்றன. கல்விக் கொள்கைகள், திட்டங்கள் ஆகியவற்றுக்கும் சமுதாயத்தின் அடிப்படை அரசியல் பொருளாதார சமூக நோக் கங்களுக்குமிடையில் ஒன்றிலொன்று தங்கி நிற்றலின் அவசியம் இன்று ஏற்றுக் கொள்ளப் பட்ட உண்மையாகிவிட்டது. கிராமியத் துறை யைப் புறக்கணித்ததால் அபிவிருத்தி பின்தங்கி யுள்ளது. அதே நேரத்தில் படித்த தொழிலற்றோ ரின் தொகையும் தோற்றுவித்துள்ளது. எனவே உறுதியான ஒரு சமுதாயத்தை உருவாக்க தொழில்நுட்ப, சமூக, விஞ்ஞான துறைகள் இரண்டும் இணைந்த கல்வித்திட்டம் உருவாக வேணடும். இன்றைய உலகைச் செயற்படவைக் கத் தேவையான நிபுணத்துவத் திறமை, மனப் பாங்குகளில் மாற்றம் இருந்தால், புதியதொரு சமுயதாத்தைக் கட்டியெழுப்ப முடியும்.

**உசாத்துணை நூல்**


1. கலாநிதி ச.முத்துலிங்கம் – கல்வியியல் (முதலாம் பாகம்)


> **நம்மிடமுள்ள குறைகளை நீக்கிக் கொள்வதே நமக்கு ஏற்படக்கூடிய பெரிய அதிர்ஷ்டமாகும்.**
> – கதே




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த காலப் பதிவுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Good Health Habbits

S.Kobika
A/L Arts (2014)

In everyday life we see people who live in many different ways. Some clean. Some dirty. and some who got both of these qualities. But everyone should learn to stay clean and of course healthily. Creating a healthy environment in home and school is sufficent. This health environment can be made by growing plants around your home and putting out things such as plastic wrappers and old tyres. These things pollute not only your home but the whole environment you can grow even flowers and plants that can be useful. Such as mango. These kinds of trees even makes your garden beautiful and they also such up unhealth gases such as carbondiocxide.

Creating a health environment in your school is the easiest you can organize a shramadhana campaign and grow trees around the schoold. You can clean up the whole school easily. If you can advise and make the children not to throw plastic bags and cups every where and advice them to put them in proper places you can easily create a healthy environment at your school as well as your own home.

Taking healthy food is another essential thing. Infact it is the most important. You should always eat the very best of food. You must always wash fruits before you eat and must eat nutrious foods every time. You eat carbohydrates, propteins. Minerals are needed to provide your body with energy and that is why you must take nutrisons foods not only to keep you fit but also to keep you healthy.

'Working out" or excercisiting is another important thing if you have to stay healthy and fit excecising means not only running and weight lifting. You have to do a sport Because sports keep the body in good shape and it helps you to stay healthy by burning fat and reducing the fatty tissue inside ourbody. This keeps us healthy because it prevents us by being fat.

Exercising a good healthy environment and mostly healthy food is essential to a healthy body and by doing these habbit. Every one will have a great healthy life.

*"Early to bed, and Early to rise*
*Make a man, healthy, wealthy and wise"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயன்பு

ஜெ. அகஷ்யா
தரம் 6A

"அன்பகத்தில்லா உயிர் வாழ்க்கை – வன்பாற்கண்
வற்றல் மரந் தளிர்தற்று"

என வள்ளுவப் பெருந்தகை கூறியுள்ளார். அதாவது வற்றலாகிய பாலை நிலத்திலே பட்ட மரம் தளிர்தற்கு ஒப்பாகும். உலகில் பிறந்த சகல ஜீவராசிகளும் முதலில் கூறும் வார்த்தை "அம்மா" என்பது தான் ஆகவே அத்தகைய அன்பில் தாயன்பானது சிறப்பானதாகும். இதிலிருந்து தாயின் மகத்துவம் புரிகின்றதல்லவா?

பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த பாலூட்டி சீராட்டி வளர்ப்பவள் தாய். தன் உதிரத்தையே பாலாக ஊட்டுகின்றாள். தன் பிள்ளை நன்றே செய்தாலும் தீதே செய்தாலும் அதைப் பொறுத்துக் கொள்பவள் தனக்கு பசி வந்த போதும் சாப்பிடாமல் பிள்ளையை பாதுகாப்பவள் எமக்கு நோவு வலி வரும் போது "அம்மா" என கூறுவோம். இதிலிருந்த தாயன்பு தனி அன்பு என்பது புரிகின்றதல்லா?

ஏன் மனுநீதி கண்ட சோழன் கதையை பாருங்கள்

இளவரசன் தேர்சில்லில் அகப்பட்டு பசுக்கன்று இறந்த செய்தியைக் கேட்ட தாய் பசுவானது அரண்மனை வாயில் இருந்த ஆராய்ச்சி மணியை அடிக்கவில்லையா?

மேய்ச்சலுக்காக சென்ற பசு தன் பிள்ளைக்கு பால் கொடுக்கும் நேரம் வந்ததும் கதறிக் கொண்டு ஓடி வரும் போது அதன் மடியிலிருந்து பால் சுரந்து வீதியோரம் வடிகின்றதை நாம் கண்ணால் பார்க்கின்றோம் அல்லவா?

இதிலிருந்து தாய் அன்பு தனி அன்பு எனக் கூறி அது மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளமையிற் கல்வி

ப. சுதர்சன்
தரம் 6A

"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பது முதுமொழி நாம் கற்க வேண்டியவற்றை இளமைப் பருவத்திலேயே கற்க வேண்டும். கற்றற்குரிய பருவம் இளமைப்பருவமே. இந்த உண்மையை சகலரும் ஏற்றுக் கொள்வர். இளமைப் பருவம் கவலையற்ற பருவம். இப் பருவத்தே நாம் பெற்றுக் கொள்ளும் அறிவும் திறனும் அனுபவமும் நமது எதிர்கால வாழ்வுக்கு அடிக்கற்களாக அமையவல்லன. எனவே தான் பெரியோர்கள் "இளமையிற் கல்" என்று வலயுறுத்துகிறார்கள். இளமைப் பருவத்தில் நாம் பெறும் கல்வி கல்லிற் பொறித்த எழுத்துப் போல என்றும் அழியாது இருக்கும். முதுமையிற் பெறும் கல்வி பல்வேறு காரணிகளால் நிலைத்து நிற்காது. இதனையே "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா" என்ற பழமொழியும் நமக்கு நினைவூட்டுகிறது.

நாம் இளமைப் பருவத்திலேயே கல்வி அறிவினைத் தேடவேண்டும். முக்கியமாக இளமைப் பருவமே கல்வியை மனதிற் பதித்துக் கொள்வத ற்கு ஏற்ற பருவம் என்று உளவியல் அறிஞர்கள் உரைக்கின்றனர். இப்பருவத்தில் மாணவர்களுக் குத் தொல்லை மிக்க உலகநடைச் சூழலில் நேரும் துன்பங்கள், துயரங்கள் தோன்றா எல்லையற்ற ஆர்வம் தலைதூக்கி நிற்கும் காலம் இது.

இக் காலத்தை நல்லமுறையில் மாணவர்கள் பயன்படுத்திக் கொள்ள முன்வர வேண்டும். கல்வியும் ஒழுக்கமும் நமது இரு கண்களுக்குச் சமமாகும். "ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது" என்பது முதுமொழி நாம் பெறும் கல்வியானது வெறும் ஏட்டுக் கல்வியாக மட்டும் இருக்கக் கூடாது அது வாழ்க்கைக்கு உகந்த கல்வியாக இருத்தல் வேண்டும்.

இவற்றை நன்குணர்ந்து இளமையிலேயே பயன்பெறும் கல்வியைப் பெற்றிட முயல வேண்டும். முயற்சி திருவினையாக்கும் என்பதை மறந்து விடக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞான பொதுஅறிவு

ம.ஜெசிதா
தரம் 11A

| | |
|---|---|
| நவீன விண்வெளியின் தந்தை யார்? | சியோஸ் கோவ்ஸக் |
| தாவரத்தின் முக்கிய ஊட்டச்சத்த எது? | N.P.K |
| ஒலி வேகத்தை கண்டறிந்தவர் யார்? | மைக்கல்ஸன் |
| மின்சாரத்தை கடத்தும் ஒரே அலோகம் எது? | கிரபைட் (காரீயம்) |
| பிராண வாயுவிற்கு ஒட்சிசன் என பெயரிட்டவர் யார்? | லாவோசியர் |
| அணுக்கொள்கையை முதன்முதலில் வெளியிட்டவர் யார்? | ஜோன்நாற்றன் |
| இரசப்பாரமானி யாரால் கண்டுபிடிக்கப்பட்டது? | தொரிசொல்லி |
| அமுக்கத்தை அளக்கும் சர்வதேச அலகு எது? | பஸ்கால் |
| ஒரு மனிதனின் வாழ்க்கை காலத்தில் எவ்வளவு உணவு சிறுகடலினூடாகச் செல்கிறது | 11.5 தொன் |
| காசநோயை அதிகளவில் பரப்பும் பற்றீரியா எது? | ஸ்ரெப்போ கொக்கஸ் பெனியுமோனியா |
| சுகதேகி ஒருவரின் குருதி அமுக்கம் எவ்வளவு? | 120{80mmHg |
| உலகின் முதல் பெண் மருத்துவர் யார்? | பிளாக் வெல் அம்மையார் |
| உலகின் முதன்முதல் மருத்துவமனை தோன்றிய நாடு எது? | ரோம் |
| இதயமாற்று சிகிச்சையை அறிமுகப்படுத்தியவர் யார்? | Dr.கிரிஸ்ரிய பேர்னாட் |
| குருதிச் சுற்றோட்டம் பற்றி விளக்கியவர் யார்? | வில்லியம் ஹார்வே |
| இதயத்துடிப்பை குறைக்கும் இரசாயன பொருள் எது? | அசற்றையில் கொலின் |
| விஞ்ஞான கற்பனைக் கதைகள் எழுத பெயர் பெற்ற இலங்கை அறிஞர் யார்? | ஆதர் C.கிளாக் |
| செயற்கை இதயத்தை கண்டறிந்தவர் யார்? | மைக்கல் பேக்ஜே |
| உலகிலே வைரம் அதிகமாக கிடைக்கும் நாடு எது? | தென்னாபிரிக்கா |
| அணுகுண்டை கண்டுபிடித்தவர் யார்? | றொபட் ஒபன்ஹமர் |
| சூரியன் கதிர் வீச்சை அளக்க உதவும் கருவி எது? | கனற் கதிரளவி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Science and Technology

*S. Tisanthu*
Grade 11B

Science feeds technology and technology helps science to uncover unexplored fields. So, intert wined are these two fields of knowledge and skill that without them the world would not be as what we see it today. The advancement of science equips technology with new concepts which find their application in different technology. These advances bring about changes in our life styles.

The development of science and technology is so rapidly changing the world that keeping pace with in has become a problem specially in societies of the third world countries. A product trurned out to suit modern life becomes outdated even before it finds utility. With the introduction of yet another more advanced type. It is therefore necessary that we keep ap with the standards of the developed. countries in science and tehnology.




Advances in biological science had let to the development of bio technology which is today one of the major faotiers that lead us into the 21st century. Like wise unclear and computer sciences have given us unclear and computer technologies.

When I say good morning I mean to say
G - God
O - Offers us his
O - Outstanding
D - Devotion to
M - Make us
O - Obedient
R - Ready for a
N - New day with him
I - Inspire others please
N - Never forget
G - God loves you

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையும் வாழ்க்கையும்

திருமதி. மேரிஸ்ரெலா
பகீரதன்
ஆரம்பக்கல்வி ஆசிரியர்

அரங்கு இன்றி வட்டு ஆடி யற்றே – நிரம்பிய
நூல் இன்றிக் கோட்டி கொளல் எனும் குறளை மாற்றி
ஒருமைக் கண் தான் கற்ற கல்வி ஒருவற்(கு)
எழுமையும் ஏமாப்(பு) உடைத்து என்பதை நிலைநாட்டி
எழில் பொங்கும் ஏற்றமுடன் நிற்பது பாடசாலை

பிறந்து விட்டால் இறப்பு வரை நற்பண்புகளும் பகுத்தறிவும்
மனிதனுக்குத் தேவை – அதை
பிறழாமல் போதிப்பதும் நல்மனிதங்களை பிறப்பிப்பதும் பாடசாலை

சின்னச் சிட்டுக்களாய் சிறகடித்துப் பறந்தவரை
ஆறகவை என்றவுடன் ஆரம்பக் கல்விக்காய் அழைத்துவர
அழுகையும் விம்மலும் பொங்க அம்மாவின் அப்பாவின் கரம்பிடித்து
ஒழித்துக் கொண்டவரை அன்புடன் அரவணைக்கும் கல்விக்கூடம்

வகுப்பறையில் சிலகாலம் பழகிய பின் – வழிநெடுக
தாம் கண்டு வந்த கதைகூறி குசலம் விசாரித்து குதூகலித்து
சண்டை பிடித்து சமாதானமாகி சமமாக நல்ல கல்விபெறுவதும் இங்கு தான்

வயதும் கல்வியும் கலைகளும் வளர
கடமையுணர்வும் கண்ணியமும் கூடவே வளரும்
உதவுதல், விட்டுக்கொடுத்தல், ஏற்றுக் கொள்ளல், மதிப்பளித்தல், புரிந்து கொள்ளல்
போன்ற பண்புகளும் இங்குதான் ஊற்றெடுக்கும்

நல்லவனாய் உயருவதும் கெட்டவனாய் உருவாகுவதும் இங்கு தான்
தோழமையின் தெரிவுதான் இரண்டையும் தீர்மானிக்கும்
ஆரம்பக் கல்வி முடித்து இடைநிலைக் கல்வி தொடர
இதமாக ஆசான்கள் இயன்றவரை வழிகாட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னச் சிட்டுக்களின் சிருங்காரம் மறைந்து
பட்டாம் பூச்சிகளாய் பரிமளிப்பர் பலரும்.

ஓ எல் என்றவுடன் ஒருவித மிரட்சி
பரீட்சையில் வெற்றி பெற்றோர் உயர்கல்வி, பட்டங்கள், அரசதொழில் என உயர
பரீட்சையை வெல்லாதோர் தம் வழியே தாம் உயர்வர்

கட்டிளமைப் பருவத்தின் மாற்றமதில் மனம் மயங்க
காதலும் ஊற்றெடுப்பது இயல்புதான்
சிலர் வாழ்வில் தொடருவதும் சிலர் அதை மறைப்பதும் கண்கூடு

ஆறாம் அகவையில் கால்பதித்து ஈரெட்டாம் அகவையில் தடம் அழிய
கனத்த நெஞ்சுடனும் கண்ணீர் பொங்கும் விழியுடனும்
கட்டியணைத்து முதுகுதட்டி கைபிரியும் நேரமது
கண்முன்னே தெரிகிறது.

யார் யார் எப்படி எங்கெல்லாம் வாழ்ந்தாலும்
வாழ்க்கையில் வெளிப்படுவது பாடசாலைக் கல்விதான்
வாழும் போது இன்முகத்துடன் சேரும் கூட்டமும்
இறப்பின் போது விடையளிக்க கூடும் கூட்டமும்
கல்வித்தாயும் பாடசாலையும் பெற்றுத்தந்த பரிசுகளே.

உன் வாயிலிருந்து வரும்
ஒவ்வொரு வார்த்தையும்
பொருள் நிறைந்ததாகவும்,
இன்பம் பயப்பதாகவும் இருக்கட்டும்.
எக்காலத்திலும் ஒழுக்கத்தை உயிரினும்
மேலாகக் கருதுவாயாக.

- ஜேம்ஸ் ஆலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவரின் கல்வி வளர்ச்சியில் ஆசிரியரின் பங்கு

திருமதி. சு. நிர்மலன்
B.A Dip.in.Ed
ஆசிரியர்

கற்பித்தல் தொழிலை செய்பவர்கள் அனைவருமே ஆசிரியர் என்ற வகைக்குள் அடங்குவர். எனினும் கற்பித்தல் தொழிலில் ஈடுபடும் சமய முதல்வர்கள் தத்துவ ஞானிகள் தவிர்ந்த ஏனையோர் ஒரு நிறுவனத்தில் கற்பித்து தொழிலில் ஈடுபட்டு வரின் அவர்களையே நாம் ஆசிரியர் என்று குறிப்பிடுவோம். ஆசிரியத் தொழிலின் தேவைக்கு சமுதாயத்தின் எதிர்பார்ப்புக்களுக்கும் அமைய ஆசிரியர்களின் எண்ணிக்கையும் அவர்களது கடமைகளும் பொறுப்புக்களும் அதிகரித்துள்ளதாகத் தெரிகிறது. ஆசிரியருக்குள்ள இந்த பரந்த பொறுப்பே ஆசிரியரின் பங்கு எனச் சுருக்கமாகக் கூறலாம்.

ஆசிரியரின் பங்கில் மாணவர்களை நன்றாக விளங்கிக் கொள்வதனூடாகவே மாணவரின் கல்வி வளர்ச்சியில் பெரும் பங்களிப்பை செய்ய முடியும்.

யுனெஸ்கோ நிறுவனத்தினால் பிரசுரிக்கப் பட்டதும் எம் சம்சியூட்ட என்ற கல்விமானால் எழுதப்பட்டதுமான "Education on the more" என்ற நூலில் ஆசிரியரின் பங்கு பிடமாறு கூறப் பட்டது.

- கற்கும் முறைகளை திட்டமிட்டு செயற்படுத்தல்
- மாணாக்கரின் சிந்தனையை தூண்டுதல்
- கல்வியின் மூலவளங்களை சேகரித்தல்
- மாணவர்களின் தேவைகளையும் கல்வியின் நோக்கங்களையும் நிறைவு செய்யும் வகையில் முழுக் கல்விச் செயற்பாட்டையும் ஒருங்கிணைத்தல் என்பனவாகும்.

மாணவர்களின் உடல், உள தேவைகளை அறிந்து அவற்றிற்கான தீர்வினைக் கண்டபின் மாணவர்களுக்கு கல்வி வழங்கப்பட வேண்டும். மாணவருக்கு வேண்டிய நேரங்களில் ஆலோசனை வழிகாட்டலை மேற்கொண்டு கற்றலை வளர்ச்சியடையச் செய்வது ஆசிரியரின் அதீத பங்காக காணப்படுகின்றது.

மேலும் பல்வேறுபட்ட முறைகளைக் கையாண்டு கல்வியூட்டுவதோடு கற்றல் கற்பித்தல் அம்சங்களை சிறந்த முறையில் ஒழுங்குபடுத்த வேண்டிய பொறுப்புண்டு வெறும் அறிவை வழங்குவதுடன் மட்டுமன்றி கிடைக்கப்பெறும் மூலவளங்களை நன்றாகப் பயன்படுத்தி மாணவர்களின் கற்றலுக்குரிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

சுய கற்றலைத் தூண்டி ஆசிரிய மாணவ உறவில் நல்ல மாற்றங்களை புகுத்த வேண்டும். நூதனமாக கல்வி நுட்பங்களை மிகக் கூடுதலாகப் பயன்படுத்தி அதற்கு வேண்டிய அறிவையும் திறமையையும் பெற்றுக் கொடுப்பதும் ஆசிரியரின் பங்கேயாகும்.

மேலும் மாணவரிடத்தே அறிவைப் பெற்றுக் கொடுத்த பின் மனப்பாங்கினை வளர்ப்பதனூடாகவே அவனிடத்தில் திறனைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவே "அறிவு, மனப்பாங்கு, திறன்" என்ற அடிப்படையில் கற்றலை திட்டமிட்டு கற்பிப்பதன் மூலம் மாணவரின் கல்வி வளர்ச்சியில் ஆசிரியர் பெரும் பங்கு வகிக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் கல்வி வளர்ச்சியில் ஆசிரியரின் பங்கானது பாடசாலையுடன் மட்டும் நின்று விடுவதில்லை. அது மற்றைய சேவைகளிலும் பார்க்க சமூகத்தோடு பின்னிப் பிணைந்து நேரடியாகவும், மறைமுகமாகவும் குறுகிய காலப் பகுதியினுள்ளும் நீண்டகாலப் பகுதியினுள்ளும் மனித வளர்ச்சியுடன் தொடர்பு கொண்டுள்ளது. "எறிக் கொயில்" ஆசிரியரின் பங்கினை இருபெரும் பிரிவுக்குள் அடக்கியுள்ளார்.

1. தொழில்சார் பங்கு
2. சமுதாயப் பங்கு

தொழில்சார் பங்கு இங்கே வகுப்பறையில் ஆசிரியர்களுக்குள்ள அதிகாரம், தனித்தன்மை, ஒரு முடி எடுக்கும் போதுள்ள சுதந்திரம் ஆகியன அதிக செல்வாக்குடையன ஆசிரியர் என்பவர் சமூகத்தின் பிரதிநிதி, நீதி வழங்குபவர், மதிப்பீட்டாளர், அறிவின் மூலமாக உள்ளவரும் கண்டு பிடிப்பாளரும், தீர்மானிப்பவர் இரகசிய சோதனையாளர், உதாரண புருஷா, மாணவரின் நோக்கங்களை உணர்பவர், மாணவரின் அங்கலாய்ப்புக்களை நீக்குபவர், குழுத்தலைவர், பாதுகாவலர் போன்ற பல்வேறு நடி பங்கினைப் பெற்று மாணவரின் கல்வி வளர்ச்சிக்கு பெரும் பங்காற்ற வேண்டிய பாரிய பொறுப்பு ஆசிரியர்களையே சாரும்.

ஆசிரியர் சமூகத் தலைவர்களை உருவாக்குபவர் ஆகையால் அவர் மற்றவர்களைப் பற்றி சிந்திக்காமல் இருக்க முடியாது.

நாட்டின் எதிர்காலத்தை பொறுப்பேற்று சந்ததியினரை சீர்திருத்துவதுடன் பிரதேசத்தின் மக்களுக்கு தலைமைத்துவம் கொடுப்பது தொடர்பாகவும் ஆசிரியருக்கு பாரிய பொறுப்புண்டு. எனவே எல்லா வகையிலும் ஆசிரியர் உதாரண புருஷராக விளங்க வேண்டும். இதனால் தான் ஆசிரியர்களுக்கு ஒழுக்கக் கோட்பாடு அவசியமாகின்றது.

மாணவரின் ஒழுக்கம் மட்டுமன்றி அவர்களது கல்வி வளர்ச்சி, அபிவிருத்தி மற்றும் மாணவரின் பல்வேறு இடப்பாடுகளை அறிந்து தீர்த்து வைக்கும் பொறுப்பும் ஆசிரியரின் பங்காகவே அமைகின்றது. இந்தவகையில் ஆசிரியரின் நிலையை மூன்று வகையாக குறிப்பிடுகின்றனர். அதாவது 3T கடத்துபவர் பரிமாற்றுபவர், நிலை மாற்றம் செய்வர் என்பனவாகும்.

மாணவரின் கல்வி வளர்ச்சியில் ஆசிரியரின் பங்கு அவ்வக் காலப்பகுதியின் தேவைக்கேற்பவும் அரசாங்கக் கொள்கைக்கமையவும் நாட்டின் சமுதாய இயல்புக்கமையவம் காலத்துக்குக் காலம் மாறுபடும். எனவே ஆசிரியரின் பங்கு பற்றி திடமாகக் கூறமுடியாது எனினும் ஆசிரியரின் பங்கை நான்கு துறைகளினூடாக நோக்கலாம்.

1. கற்பித்தலோடு தொடர்புடைய வகுப்பறைப் பங்கு
2. முழுப்பாடசாலையோடும்தொடர்புடைய பங்கு
3. பாடசாலைச் சமூகத்தோடு தொடர்புடைய பங்கு
4. தொழில் வளர்ச்சி, ஆளுமை வளர்ச்சி தொடர்பான பங்கு

கல்வியைப் பொறுத்தவகையில் பரீட்சையை நோக்கமாகக் கொண்டு போட்டி அதிகரித்துள்ளமையால் தனியார் கல்வி நிலையங்கள் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரித்துள்ளது. இக்கல்வி நிலையங்களினால் பெரும்பாலான மாணவர்களின் ஒழுங்கக் கட்டுப்பாடு தளர்வதற்கு வாய்ப்புக்கள் அதிக மாகக் காணப்படுகிறது. இந்நிலைமையை நீக்கி மாணவரின் கல்வி வளர்ச்சியில் அதிக பங்களிப்பை வழங்க ஆசிரியர் தன் நலத்தை தியாகம் செய்ய வேண்டும்.

மேற்கூறிய இத்தகைய சவால்களுக்கு முகம் கொடுத்து ஆசிரியர் தொழிலின் கௌரவத்தைக் காப்பாற்றுவது ஆசிரியரின் கடமையும் பொறுப்பு மாகும். மாணவரின் கல்வியை அதிகரிக்க மாண வரை ஊக்கப்படுத்தி வழிகாட்டுவதனூடாக அவர் களின் கல்வியை வளர்ச்சியடையச் செய்வதே ஆசிரியரின் மிகப்பெரிய பணியாகும் என்றால் அது மிகையாகாது.

# உன்னால் முடியும் பெண்ணே...!

ச. சோபிகா
2014 கலை

போராடு பெண்ணே போராடு
உன் உரிமைக்காய் போராடு
உன் உயர்வுக்காய் போராடு
சாதனையாளர் சரித்திரத்தைப்
புரட்டிப்பார்
சாதனைப் பெண்களை
நினைத்துப்பார்
சிறிய வட்டத்தை விட்டு
வெளியே வா
பரந்த உலகில் – உன்
பாதச்சுவடுகளை
பதித்து நடந்து வா!
அடுக்களை உந்தன்
இருப்பிடம் அல்ல!
அடிமை வாழ்வ உந்தன்
விதியுமல்ல .....!
உன்னால் முடியும் பெண்ணே!
உலகத்தின் சக்தி நீயே....!
தலை குனிந்து நடக்கச் செய்தவர்களை
தலை குனிய வைக்க;
தரணிக்கு பெண்மையின் மேன்மையை
உணர வைக்க;
பாரதி கண்ட புதுமைப்
பெண்ணே வா......!
பௌர்ணமியாய் உலகிற்கு
ஒளி கொடுக்க வா.....!
நீ நினைத்தால் முடியாதது
எதுவுமில்லை
நீயின்றேல் அணுவுமில்லை
எதையும் முடியும்
உறுதி கொள்
எத்தாக்கத்தையும் எதிர்க்கும்
தைரியம் கொள்
நெஞ்சை நிமிர்த்தி .....!
நிமிர்ந்து நில் .....!
நாளைய சரித்திரத்தில்
சாதனைப் பெண்ணாய்
உன் பெயரைப் பதித்துச் செல்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளநல மேம்பாட்டில் அழகியலும் நல்லாசிரியரின் பண்புகளும்

திருமதி. காமினி நாகேந்திரராஜா
நாட்டியக்கலைமாணி
பட்டப்பின் டிப்ளோமா

அழகு பற்றிய உணர்வும் சிந்தனைகளும் தோன்றிய அன்றே அழகியல் கல்வி மனித வாழ்வியலுடன் பின்னிப் பிணைந்துள்ளது. அழகியலானது மனிதனின் அடிப்படை உணர்வுகளில் ஒன்று. தொமஸ் அக்கினாஸ் (Thomas Aquinas) என்பவர் புலன்கள் அல்லது மனதை இன்புறுத்துவது அழகு என்கிறார். எமது நாட்டில் போர் இயற்கை அனர்த்தங்கள் மூலம் பல உயிர்களைக் காவு கொண்டும் பல சொத்துக்களை இழந்தும் குடும்பம் குடும்பப் பாதிப்புக்களையும் சமூகப்பாதிப்புக்களையும் ஏற்படுத்திய இத்தாக்கத்தில் இருந்து மீள்வதற்காக அழகியற்கலைகளைப் பயில்வதன் மூலமும் நயப்பதன் மூலமும் ஆக்குவதன் மூலமும் உளநெருக்கீடு, பதகளிப்பு, மனச்சோர்வு போன்றவற்றிலிருந்து பாதுகாப்பதற்கு இக்கலைகள் உதவுகின்றது என பல அறிஞர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். எனவே இக்கலைகள் மூலம் மாணவர்களிடம் காணப்படும் உளநெருக்கீட்டைத் தவிர்ப்பதற்கு அழகியற் கலைகள் எவ்வாறு உதவுகின்றது என்று நோக்கும் பொழுது

அழகியற் கலைகள் மாணவர்களின் படைப்பாற்றலை வெளிக்கொணர்வதற்கு அருஞ்சாதனமாக விளங்குகின்றன. மாணவரின் உள்ளம் விரிந்து பரந்து அழகு, செம்மை, நன்மை ஆகிய பண்புகள் பரிணமித்து வளர்வதற்கு அவை ஊன்று கோலாக அமைகின்றது.

மாணவர்களின் கல்வி, கற்பனையிலும் எதிர்பார்ப்பிலும் முழுமைத்துவத்தின் உயர் பண்பிற்கு முக்கியத்துவமளிக்கும் முயற்சியின் பங்கிலும் ஈடுபட்டு உதவக்கூடியதாக அமைய வேண்டும் என்கிறார் அறிஞர் "பேர்சிநன்" எனவே அழகியல் கலைகள் மூலம் இரசனைத்திறன், கற்பனைத் திறன், தொடர்பிடல்திறன், ஆக்கத்திறன், விமர்சிக்கும் திறன் போன்ற திறன்கள் உருவாக்கப்படுகின்றது. எனவே உளநெருக்கீட்டுக்குள்ளான மாணவர்களது கற்றல் சூழலை யதார்த்தமாக உருவாக்குவது ஒவ்வொரு ஆசிரியரதும் கடமையாகும்.

ஆக்க இசை நடனங்களை உருவாக்கல் நிகழ்வுகளை இரசித்தல் பாடல்களைத் தனியாகவும் குழுவாகவும் பாடப்பயிற்சியளித்தல் இசைக் கச்சேரிகளை இசைத்து தானும் மற்றவர்களுடன் இன்பம் காணல் மற்றும் மாணவர்களிற்குப் பாடல்களைப் பாடலும் அதற்கமைவாக அசைவை அபிநயத்துடன் வழங்கும் போது உளநெருக்கீடுகள் குறைவடையும் மேலும் போலச் செய்தல், பாத்திரமேற்று நடித்தல், பொம்மலாட்டம் என்பவற்றிற்கு சந்தர்ப்பத்தை வழங்கும் பொழுது மன உணர்ச்சி வெளிப்பாடுகளால் உளம் நெகிழ்ச்சியடைந்து இயைபாகி உளச்சமநிலை ஏற்படும்.

**நல்லாசிரியரின் பண்புகள் சில பின்வருமாறு**

1. உடல் நலனும் வலுவும் உடையவராக இருத்தல்
2. இன்றைய சூழ்நிலையில் பரந்தபொது அறிவினைப் பெற்று இருத்தல் வேண்டும்
3. தம்மிடம் கல்வி பயிலும் மாணவர்களது இயல்பு நடத்தைமுறையுடன் வளர்ச்சிக்கான தேவைகள் பற்றி அறிந்திருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. தனது பாடப்புலத்தில் ஆழ்ந்த அறிவினைப் பெற்று இருத்தல் வேண்டும்.
5. பாடப்பொருளில் அடங்கியுள்ள பல்வேறு கருத்துக்களை மாணவர் நன்கு புரிந்து கொள்ளும் வகையில் விளங்கப்படுத்தும் ஆற்றலும் புதிய கற்பித்தல் முறைகள் பற்றிய அறிவும் இவற்றை வகுப்புச் சூழலுக்குப் பிரயோகிக்கக்கூடிய ஆற்றல் உடையவாக இருத்தல் வேண்டும்.
6. தனது மனவியலிறவு, பொருளறிவு, முறை யறிவு ஆகியவற்றைத் தொடர்ந்து வளர்த்துக் கொள்வதில் ஆசிரியர் என்றும் ஆர்வமுடை யவராக இருத்தல் வேண்டும். இதற்காக கருத்தரங்கு, பயிற்சிகளில் கலந்து புதிய விடயங்களை அறியும் ஆர்வமும் தேடலும் உடையவர்களாக இருத்தல் வேண்டும்.
7. ஆசிரியர் சிறப்பாக பணியாற்ற மனவெழுச்சி முதிர்ச்சியினையும், உளநலத்தையும் பெற்றுக் கொள்ள வேண்டும்.
8. மாணவரிடம் அன்பும் பரிவும் கொண்டு நடத்தல் வேண்டும்.
9. மாணவர்களது தேவைகளையும் அவர்களது பிரச்சினைகளைத் தீர்க்க உதவும் மனப் பான்மை அவசியம் வேண்டும்.
10. நயத்திறன் (teeh) நேர்மை, ஒரு புறச்சார் பின்மை, கட்டுப்பாட்டலும் மதிப்புடனும் சமுதாயத்தில் நடந்து கொள்ளாது நகச்சுவை உணர்ச்சி போன்றனவும் ஆசிரியருக்கு தேவைப்படுவதாகும்.
11. தலைமைத்துவப் பண்புடையவராக விளங்கு தல்
12. இன்முகத்துடன் மாணவர்களிடம் ஏற்படும் ஐயப்பாட்டினை தீர்ப்பவராக இருத்தல் வேண்டும்.
13. ஆசிரியர் பல பாத்திரமேற்று (தாய், தந்தை, உற்ற நண்பராக) மாணவர்களேடு பழக வேண்டும்.
14. மாணவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கு உதவுபவராக, வழிகாட்டியாக, ஆலோசராக ஆற்றுப்படுத்துபவராக இருத்தல் வேண்டும்.

**மனச்சான்று நீதிபதியாயிருந்து தண்டனை தருமுன் நண்பனாயிருந்து எச்சரிக்கை செய்யும்**

– ஸ்டானிஸ்லாஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலுதவியாளன்

திருமதி. நளாயினி காண்டீபன்
ஆரம்பக்கல்வி ஆசிரியர்

முலுதவியாளன் முதலுதவி செய்வதற்குத் தகுதி பெற்றுள்ளார் என்ற ஒரு சான்றிதழை அதிகாரமளிக்கப்பட்ட ஒரு சபையிலிருந்து பெற்றிருத்தல் நன்று. இவ்வாறு பெற்ற ஒருவரையே முதலுதவியாளன் (first Aider) என்று பூரணமாகக் கூறலாம்.

இது 1984ம் ஆண்டு முதலுதவி அமைப்புக்களால் முதன் முதலாக பயன்படுத்தப்பட்டது. இவ்வாறான சான்றிதழ் கோட்பாட்டு ரீதியானதும் செயன்முறை ரீதியானதுமான ஒருநெறியில் பங்குபற்றி உத்தியோக ரீதியாக மேற்பார்வை செய்யப்பட்ட ஒரு பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு

- செண்ட் ஜோண்ஸ் அம்புலன்ஸ் சங்கம்
- செண்ட் அன்றூஸ் அம்புலன்ஸ் சங்கம்
- பிரிட்டிஸ் ரெட்குரோஸ் சங்கம்

ஆகியன வழங்குகின்றன.

**முதலுதவி**

மனிதனின் உலக வாழ்க்கையின் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் பல வகையான விபத்துக்கள் ஏற்பட்ட வண்ணமே உள்ளன.

விபத்து ஏற்பட்டவுடன் அதற்கு வைத்திய சிகிச்சை கொடுக்க வேண்டியது எமது அத்தியாவசியத் தேவையாகும். சில சந்தர்ப்பங்களில் வைத்தியசாலை அருகாமையில் இல்லாததால் உடன் வைத்திய சிகிச்சை அளிக்க முடியாத நிலை ஏற்படுகின்றது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லத் தாமதம் ஏற்படுவதால் அங்கு முதலுதவி அளிக்க வேண்டிய கட்டாயநிலை உருவாகின்றது.

முதலுதவி என்பது காயப்பட்ட ஒருவரை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வரை அளிக்கப்படும் உடனுதவியம் பராமரிப்புமே ஆகும்.

**முதலுதவியாளரிடம் இருக்க வேண்டிய சிறப்பியல்புகள் (தகைமைகள்)**

1. நிலைமையை துரிதமாக அவதானித்தல்
2. நிலைமைக்கு ஏற்ப செயற்படல்
3. அச்சந்தர்ப்பத்தில் அவ்விடத்தில் கிடைக்கும் பொருளைச் சமயோசிதமாகப் பயன்படுத்தல்
4. விரைவாகவும் திருப்திகரமாகவும் உதவுதல்
5. தெளிவாகவும் சுருக்கமாகவும் விளங்கக் கூடிய வகையில் கட்டளையிடல்
6. முதலில் செய்ய வேண்டியவற்றை உடன் தீர்மானித்தல்
7. உயிரின் பால் இரக்கம் கொள்ளல்
8. விபத்துக்குள்ளானவரைப் பாதுகாப்பதுடன் தன்னையும் பாதுகாத்துக் கொள்ளல்
9. தன்னை ஒரு வைத்தியனாக நினைத்தல்கூடாது

**நிலைமையை அவதானித்தல்**

விபத்தில் நீங்கள் உங்களை முதலுதவியாளர் என அறிமுகப்படுத்தி நிலைமையை பொறுப்பேற்க வேண்டியது மிக அவசியமாகும். எவ்வாறு பொறுப்பேற்று உடன் அறிந்து கொள்ள வேண்டியவை

- ஏதாவது ஆபத்து இருக்கிறதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- என்ன நடந்தது
- ஏதும் துன்புறுத்திக் கொண்டிருக்கின்றதா?
- ஏதாவது பொருள் தமது பார்வைக்கு அகப்படாமல் சிக்கியிருக்கின்றதா?

போன்ற விடயங்களை நன்கு அவதானித்தல் வேண்டும்.

**முதலுதவியாளரின் நோக்கங்கள்**

- விபத்துக்குள்ளானவரின் உயிரைக் காத்தல்
- நிலைமையை மேலும் மோசமடையாது தடுத்தல்
- விபத்துக்குள்ளானவரை பழைய நிலைமைக்குக் கொண்டுவர உதவுதல்

**முதலுதவியாளரின் பொறுப்புக்கள்**

- முதலுதவியாளரின் சொந்த நலனுக்கு அல்லது உயிருக்கு ஆபத்து ஏற்படாது நிலைமையை அவதானித்தல்
- விபத்துக்குள்ளானவர் எதனால் பாதிக்கப்பட்டுள்ளார் என்பதை அறிதல்
- உடனடியாக தகுந்த போதுமான முதலுதவியினை வழங்கல்
- விபத்துக்குள்ளானவரின் நிலைமையின் அபாயத்தன்மைக்கேற்ப வைத்தியரிடம் அல்லது வைத்தியசாலை அல்லது வீட்டிற்கு அனுப்புதல் உரிய ஒருவரிடம் ஒப்படைத்தல்

**முதலுதவியாளன் விபத்தின் பின் செய்ய வேண்டியவை**

- விபத்து நடந்த இடத்தை சுத்தப்படுத்தல்
- சாத்தியமானால் மேலதிக தடங்கல்களைத் தருவதற்குக் காரணமானவற்றை அகற்றுதல்
- முதலுதவிப் பொருட்களை அகற்றுதல்
- ஏதாவது விபத்தை சந்தித்த பின் எம் மனதில் கவலைகளும் பயங்களும் நிரம்பி இருக்கும் எனவே எண்ணங்களையும் உணர்வுகளையும் ஒரு நண்பன் அல்லது உறவினரிடம் கதைக்கவும் இச்செயற்பாடு உங்களுக்கு ஆறுதல் தரும்.

**நல்ல தன்மைகளை மதிப்பதால் உள்ளங்கள் ஒன்றுபடுகின்றன**

**இளமை எனும் பக்குவமான வயதில் தான் எந்தவித குணப்பண்பும் உருப்பெறுகிறது. எந்தவிதக் கருத்தும் ஆழமாக வேரூன்றுகிறது.**

– ஓர் அறிஞர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Improve Your GK

T.Kishna
2013 Commerce

1. MRTP act was implemented. Since
2. At present the central issu price for wheat for families BPL (below poverty line) is
3. Which comittee was constituted. For reforms in tax struc - tru?
4. Which year was declared. As customer's satisfacation year by rail ways?
5. The main security guard of Intrnational Trade is
6. Who is considered. As the father of while Revolution is india?
7. Cheque which is crossed, can be enchased only
8. What is the manopsony?
9. A good brand name should
10. The initials SWOT Stand for

**Answers**

1. 1970
2. Rs 415 per Qt
3. cheliah committee
4. 2003 - 04
5. WTO
6. Vergese
7. Trough any bank
8. Market situation where there is only one buijer
9. Be distinctive and easy to remember
10. Strengths - Weakness - Opportunities - Threats

**Geography**

1. The Indus water treaty was signed between
2. What was India's first National park?
3. The highest dam in India is
4. The Iddukki hydroelectric project is located in


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. Everything carried by the stream is called.
6. Slow migration of water in the unsaturated zone is called.
7. The earth diameter is ..................... kilometres
8. The gihhest plateau on the Earth is
9. Which is not a stoney meteorite?
10. Which is not a type of iron meteorite?

**Answers**

1. India and Pakistan. I was signed on 19 september 1960
2. Corbett National Park
3. Hirakud
4. Krala
5. Load
6. Through flow
7. 12,756
8. Everest
9. me sosid erite
10. Quadahe drite

> ***நன்றியை எதிர்பார்க்காதிருக்கப் பழகிக் கொள்வோம். எப்போதாவது அது கிடைக்கும் போது எதிர்பாராத பரிசாக அது இன்பம் தரும்.***
>
> – டேல் கார்னிஜி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிகாட்டல் என்பது வாழ்ந்து காட்டுதல்

செல்வி. அ. யாழினி
உணவுத் தொழில்நுட்பம்
ஆசிரியர்

மிக எளிமையான வாழ்வையும் உயர்வான எண்ணங்களையும் கொண்டிருத்தல் மக்கள் பண்புகளில் ஒன்றாகும். அதுவே உயர்ந்த நாகரீகம் எனக் கூறப்படுகின்றது. ஆடம்பரத்திலோ இடாம்பீக வாழ்விலோ வெளிப்பகட்டிலோ தங்கியிருக்கவில்லை. ஆனால் அவைதான் நாகரீகம் என எண்ணிக் கொண்டிருப்பவரும் சிலர். அது மட்டுமல்லாமல் சந்ததி சந்ததியாக அந்த தவறான எண்ணத்தை வளர்த்துக் கொண்டும் வருகிறோம். உண்மையான நாகரீகம் என்பது எளிய வாழ்விலும் தூய எண்ணங்களிலுமே தங்கியுள்ளது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். நாம் கற்கின்ற கல்வியானது எம்மை அத்தகைய நாகரீகம் உள்ளவர்களாக உருவாக்க வேண்டும் அத்தகைய கல்வியே இன்று எமக்கு தேவை.

எளிய வாழ்வு என்பது ஏழ்மை வாழ்வு அல்ல. அது தன்னையும் பிறரையும் வாழ்விக்கின்ற வாழ்வாகும். உயர்ந்த எண்ணங்களும் அப்படியே சிறுபராயத்தில் பழகிய பழக்கம் நல்லதோ கெட்டதோ தொடரும். அதனால் இளமையிலே பிள்ளைகள் நற்பழக்கத்தை பழகிக் கொள்ள வேண்டும். அதற்கு பெற்றோர், ஆசிரியர், பெரியோர், பிள்ளைகளுக்கு வழிகாட்ட வேண்டும். வழிகாட்டுதல் என்றால் வாழ்ந்து காட்டுதல் என்பதாகும். வழிகாட்டுபவர்கள் எளிமையான வாழ்வினை வாழ்ந்து காட்டுவதன் மூலம் தான் பிள்ளைகளையும் பின்பற்ற செய்ய முடியும். "சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்" என்கின்றார் திருவள்ளுவர் சொல்லுவதிலும் பார்க்க செய்து காட்டுதலே நல்ல பயனைத் தரக்கூடியது ஆகும்.

தன்னிடம் உள்ளது என்பதற்காக ஊதாரித்தனமாகவும் வீண்விரயங்களும் செய்வோர் மனித சமுதாயத்தில் ஒரு பகுதியினராக இருப்பதோடு, இன்னொரு பகுதியினர் உணவின்றி உடையின்றி இருப்பிட வசதியின்றி அடிப்படை வாழ்க்கை வசதிகள் இன்றி ஏழைகளாய் அகதிகளாய் ஆதரவற்றவர்களாய் கஷ்டப்படுவதை அறிந்தும் அறியாதவர்களாய் இருக்கின்றனர். வீண்செலவு செய்யும் பணத்தைக் கொண்டு இவ்வாறு துன்புறுகின்ற ஏழைகளுக்கு வாழ்வளித்தால் அவர்கள் எவ்வளவோ சந்தோசப்படுவார்கள். இன்று எத்தனையோ பிள்ளைகள் வறுமை காரணமாக பாடசாலை படிப்பைப் பெற்றுக் கொள்ள முடியாதவர்களாகவும் கல்வியைத் தொடர முடியாமலும் கல்வியை இடைநிறுத்திக் கொள்கின்றனர். இவ்வாறான மாணவர்களுக்கு உதவி செய்வதால் அவர்கள் மிகுந்த நன்மை அடையக்கூடியதாய் அமைகின்றது.

**"..............................**

**அன்ன யாவினும் புண்ணியங் கோடி**

**ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"**

என்பது பாரதியின் கூற்றாக காணப்படுகின்றது. எளிமை வாழ்வு ஓர் அறம் ஆகும் பொருள் பணம் நம்மிடம் சேர்ந்து விட்டால் அவை யாவும் எமக்கே உரித்தானவை என எண்ணிவிடக் கூடாது. அவற்றின் தர்ம கர்த்தாக்களாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்மை எண்ண வேண்டும். அவற்றை கண்டபடி ஊதாரித்தனம் செய்ய எமக்கு உரிமையில்லை என காந்தியடிகள் கூறுவார் எமது பொருள் பண்டங்களை பகுத்து பலரும் பயன்கொள்ள செய்வதே நீதி அளவு அறிந்து சிக்கனம் பேணி செலவு செய்து வாழ்க்கை நடத்தாதவர்களை வள்ளுவர் திருடர்களுக்கு ஒப்பிடுகிறார். இடாம்பீக வாழ்வுக்கும் திருட்டுக்கும் தொடர்பு உள்ளமையே வள்ளுவர் எடுத்துக் காட்டுகிறார்.

**"அளவின் கண் நின்றொழுகல் ஆற்றார்**
**களவின் கண்கன்றிய காதலவர்"**

என்பது திருக்குறளாகும்.

மகாத்மாகாந்தி அடிகள் மிக எளிமையான வாழ்க்கையை வாழ்ந்து காட்டியவர். எழுதி எழுதி நன்றாகத் தேய்ந்த கட்டை ஆகிவிட்ட பென்சில்களைக் கூட எறிந்து விடாமல் வைத்து பேணுவாராம். சிறு கடதாசி துண்டுகளையும் வீசி விடாது அவற்றில் கடிதங்களுக்கு மறு மொழி எழுதுவாராம். இவ்வாறு சின்னச் சின்ன விடயத்திற் கூட சிக்கனத்தை பேணி வந்தவர் காந்தி மகான் இன்றைய பாடசாலை மாணவர் களும் காந்தியடிகளை பின்பற்றி அவர்களின் பொருட்களைப் பாதுகாத்து வைப்பதற்கு ஆசிரி யர்கள் வழிகாட்ட வேண்டும். அத்துடன் இல்லா தவர்களுக்கு கொடுத்து உதவி செய்யும் மனப் பாங்கையும் பாடசாலைகளில் விருத்தி செய்யப் பட வேண்டும்.

மேலும் மாணவர்கள் தமது பாட நூல்கள் இலவசமாக தானே கிடைக்கின்றது என எண்ணி அவற்றை துஷ்பிரயோகம் செய்தல் ஆகாது இன் னும் நமக்கு பின்னர் படிப்பதற்கு அடுத்து வரும் ஆண்டுகளில் இப்பாட நூல்களைக் கொடுக்க வேண்டும் ஆதலால் அவற்றினை பாதுகாத்து பேணி வைப்பதே மாணவரின் கடமையாகும். எனவே இவ்வாறான நல்ல மனப்பாங்குகளை ஆசரியர்கள் வழிகாட்டுவதன் ஊடாக மாணவர் சிறந்த பயனை பெற்றுக் கொள்கின்றனர்.

ஏழை மக்கள் மானத்தை மறைப்பதற்கு தேவையான ஆடையில்லாமல் இருக்கும் போது தனக்கு மட்டும் ஏன் உடல் முழுக்க மூடத்தக்க ஆடையும் மேல் சட்டையும் தலைப்பாகையும் என்று எண்ணி அவற்றைக் களைந்து விட்டு முழங்கால் வரை மாத்திரம் மறைக்கத்தக்கதாக நான்கு முழத்துணியை அரையில் கட்டிக் கொண்டு ஏழையைப் போல் வாழ்நாள் முழுவ தும் வாழ்ந்து காட்டிய பெருமகனார் காந்தி அடி கள் ஆவார். அந்த அளவிற்கு பெரிய தியாகங் களை செய்ய முடியாவிட்டாலும் தேவையற்ற வீண் ஆடம்பர செலவுகளைக் குறைத்து ஏனை யோரையும் வாழ்வித்து நலம் பெறுவோமாக.

**"ஆற்றிலே போட்டாலும் அளந்து போட வேண்டும்"**

அன்பு சில குறைகளையும் அறிவு சில பிழைகளையும் பொருட்படுத்துவதில்லை.
ஆனால் உண்மை எந்த அவமானத்தையும் மன்னிக்காது.
எந்தக் குறைகளையும் பொறுக்காது.

– ரஸ்கின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A trip you enjoyed

*S. Yalini*
2013 Arts

We went on a trip on 29th June 2012. by a private bus at about 5.30 am we planned to go Anurathapura Thampulla, Mththala. Kandy and nuwaraeiliya we took our break. Fast and lunch from our houses. Our bus left at 5.30 a.m from our school.

We began our trip very enjoyable. My friends sang and danced in he bus. Our bus went Anuradhapuram ruvanvelisaya at 8.15 am we had our breakfast. there in Anuradhapura ruvanvelisaya after hat about at 8.30 am we saw Ruvanvelisaja Srinamahapothiya and me seum in Anuradhapuram. We left to Dampulla golden temple from Anuradhapuram about at 9.30 am There we spend our time in climbing hills very enjoyed.

I took photos with out friends and our teachers told that explained some matters and she asked to write an esay about the trip in past tense.

Tourists from various countries I met money trip. They come from and we took photos with them. Next we went maththala Muththumariyamman temple we had our lunch in the temple after that our bus left towards kandy Thalathamali-kawa. There we saw old cloths, ancient ruings and old things used by old people and kings.

Next we went to botanical garden we saw a lot of various flowers various plants and handing Bridge in mahavali. River we took lot of photos with my friends.

There after we moved towords nuvarliya we stayed. N/Nanuoya Mahavidyalayam. In nanuoya about at 9.30 p.m we had bread and I am for oure dinner at 10.00 p.m after that we got up 3.30 am in the morning Navareliya is very very cool aria.

On Secound day on 30th June 2010 we went to about at 7.30 a.m we saw. As okavanam in navareliya the old books said that this place is used for hinding seethai by king Ravanan.

Next place we went to Haggala garden In Haggala park we met a lot foreigners from various and we took after that we took some photo graphs photos.

Then went nuvareliya shopping centers. There we bought verious frouits


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

frocks. hops sweters verious food items and cloths. I bought a cop at the shopping centres.

Next place we went to victoriya park. the victoriya park is near nuvareliya shooping centers In that park. There are a lot of flowering plants and small beautiful pond. We spent our 1.30 hours in the park.

We went tea after we had left from vidtoriya park to wards. Thejilai factory we saw that factory.

After that we saw a water fall. It is very beautiful and very intersting water fall It is near the main rood.

Then we went is a buddhist temple this is we pray tha Adluthvikarai.

After we went towards our school in vavuniya at about 11.00 p.m we sent our two days trip on 20th June 2010 and 30th June 2010.

I haven't gone one trip. I spent my two days with very very enjoy Anuradhapuram thampulla, Maththala kandy and Nuvareliya.

**ஒரு காரியத்தை நாம் செய்யமுடியும் என்று உணர்வதே அதன் வெற்றியாகும். ஐயப்பட்டு அவநம்பிக்கை கொள்வதே தோல்விக்கு நிச்சயமான வழியாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்காலத்தில் மலரும் நனோத்தொழில்நுட்பம்

திரு. ம. பிரதீஸ்
ஆசிரியர்

நனோ தொழில்நுட்பம் என்பது nm பருமனில் துணிக்கைகளை கையாளும் தொழில்நுட்பமாகும். இத்தொழில்நுட்பமே மனித வாழ்க்கையில் தற்போது ஏற்பட்டுள்ள ஐந்தாவது புரட்சியாகும். ஆதிமனிதன் விவசாயத்தில் ஈடுபட்டபோது முதலாவது புரட்சி ஏற்பட்டது. பிரித்தானியாவில் நீராவி எந்திரத்தின் கண்டுபிடிப்புடன் இரண்டாவது புரட்சி ஆரம்பமானது. பிரான்சு நாட்டில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சி மூன்றாவதாகவும், கலிபோனிய பள்ளத்தாக்கில் ஏற்பட்ட சிலிக்கன் புரட்சி நான்காவதாகவும் கூறப்படும். தற்போது ஆசிய நாடுகளான சீனா, இந்தியாவை மையமாக வைத்து ஐந்தாவது புரட்சியாகிய நனோ தொழில்நுட்பம் மலர்கின்றது.

1951ம் ஆண்டு Richard Feynman என்பவர் இனிமேல் ஆய்வுகள் கீழ் நோக்கிச் செல்லும் என்ற கருத்தை முன்வைத்தார். எனினும் புராதன ரோமர்களையே நனோ தொழில்நுட்பத்தின் முன்னோடிகளாக கருதப்படுகின்றனர். ஏனெனில் தங்கத்தின் ஊசிமுனை அளவிலான துணிக்கைகள் சிவப்பு நிறமாக ஒளிரும் தன்மையுடையது. இவ் இயல்பைப் பயன்படுத்தி ரோமர் தங்கத்தை ஏறத்தாழ 10nm அளவிலான துணிக்கைகளாக மாற்றி சிவப்பு கண்ணாடி தயாரிக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். அத்துடன் தலைமுடியில் நிறத்தை கருமையாக்க ஏறத்தாழ 5nm துணிக்கைகளை பயன்படுத்தி சாயத்தை தயாரித்துள்ளனர்.

Eric Dexler நனோ தொழில்நுட்பத்தின் தந்தையாகக் கொள்ளப்படுகின்றார். 1947ல் Transister, 1950ல் IC கண்டுபிடிப்பைத் தொடர்ந்து ICI மேலும் சிறிதாக்க முடியாத காரணத்தினால் விஞ்ஞானிகள் மாற்றுவழி பற்றிச் சிந்தித்தனர். இதன் விளைவாக காபனின் புற திருப்பங்கள் பற்றி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது.

நனோ சிறிய துணிக்கைகளை அளக்கப் பயன்படும் சிறிய அளவீடு. 1m இன் பில்லியன் ஒரு பகுதி (1nm=10-9nm) நனோ மீற்றர் பரிமாணத்தில் ஆரம்பித்து நடைபெறும் உற்பத்தி செயன்முறைகளை நனோ தொழில்நுட்பம் எனப்படும். 1nm-100nm அளவுள்ள துணிக்கைகள் இச் செயன்முறையில் பயன்படுத்தப்படுகின்றன. இத்தகைய பதார்த்தங்களை உருவாக்குதல், கையாளுதல், பிரயோகித்தல் போன்ற செயற்பாடுகள் இதனுள் அடங்கும்.

நனோ தொழினுட்பத்தில் பென்சில்கரியின் (கிரபைட்) ஒற்றை காபன் படையை பாய்போல் சுருட்டி உருவாக்கும் மிக நுண்ணிய நனோ (10-9m) விட்டம் கொண்ட மின்னையும் வெப்பத்தையும் கடத்தக்கூடிய உறுதியான பாரம் குறைந்த இழைகளை குறிக்கும்.

நனோத் தொழினுட்பம் 2 வகைகளில் காணப்படும்.

1. இயற்கை நனோத்தொகுதிகள்
2. செயற்கை நனோத்தொகுதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இயற்கை நனோத் தொகுதிகள்**

உயிரங்கிகளின் அடிப்படை அலகான உயிர்க் கலத்தினுள் பல்வேறு உயிர்ச் செயன்முறைகள் நடைபெறுகின்றன. இவை அனைத்தும் நனோ பரிமாணத்தினாலான செயன்முறைகளே.

உதாரணம் : உயிர்க்கலங்கள், இலைகளின் புறத்தோல்

**செயற்கை நனோத்தொகுதிகள்**

வெட்டுதல், வளைத்தல், தகடாக்கல், ஒட்டுதல் போன்ற தொழினுட்பங்கள் Top Down Approach நனோத் தொழினுட்பம் Bottom up Approach ஆகும்.

| Bottom Up Approach | Top Down Approach |
|---|---|
| 1. உயர்தரம் கொண்டது | அவ்வாறில்லை |
| 2. பொருட்களின் உற்பத்தியின் போது அணுக்கள் குறித்த ஒழுங்கில் ஒழுங்கு படுத்தப்பட்டிருப்பதால் ஒப்பமுடையன | ஒப்பமற்றவை |
| 3. வெடிப்புக்கள் ஏற்படாது | வெடிப்புக்கள் ஏற்பட சந்தர்ப்பமுண்டு |
| 4. இலகுவில் நிறமாற்ற மடையாது | விரைவில் நிறமாற்ற மடையும் |

- நனோ தொழினுட்பத்தில் பயன்படும் பிரதான மூலகம் காபன், காபனின் புற திருப்பங்கள் வைரம், காரியம் போன்றன. புளொரின் (Fullerencce) என்பது செயற் கையாக உற்பத்தி செய்யப்பட்ட காபனின் புறதிருப்பமாகும்.
- புளொரினின் உற்பத்திகளாக காபன் பக்கிப் பந்து, காபன் நனோ குழாய், காபன் நனோ ஊதுகுழாய்.
- அமைதியான வளிமண்டலத்தில் கிரபைட் மின்வாயுக்கிடையே தோன்றும் மின்னன் பிறைவடிவ ஒளியால் கிரபைட்டை பலமாக தாக்குவதன் மூலம் புளொரின்கள் உற்பத்தி செய்யப்படும். இதன் அமைப்பை அமெரிக்க கட்டக் கலைஞரான Richard Buckminster Fuller என்பவர் கண்டுபிடித்தார். இது குவி மாடத்தின் அமைப்பை ஒத்திருந்தபடியால் பக்கிப்பந்து என அழைக்கப்பட்டது. இது மஞ்சள் நிற பளிங்குத் திண்மம், பென்சீனில் கரையும்.

1. காபன் நனோக்குழாய்

மின்னின் பிறை ஒளித்தாக்கம் மூலம் 60c விளைவுடன் குறைந்த எண்ணிக்கையான 70c கொண்ட புளொரின்களும் உருவாக்கப் பட்டது. இதன் மூலம் காபன் நனோக் குழாய் / பக்கிக் குழாய் ஆக்கப்படும். இது உயரிய விறைப்புடைய உருக்கிலும் பார்க்க 20 மடங்கு வலிமையானது. அலுமினியத்திலும் அரைவாசி நிறையுடையது அறுகோண வடிவ ஊ சிலண்டர் அமைப்புடை யது.

காபன் நனோக்குழாயின் பண்புகள்

1. மருந்துகளை நோயாளியின் உடலுக்கு விநியோகம் செய்தல்
2. புற்றுநோய்ச் சிகிச்சைக்குப் பயன்படல்
3. பல் தொழிலுக்குரிய உயிரியல் கடத்தி
4. DNAயை கண்டுபிடிக்கும் உயிரியல் உணரியாக செயற்படல்
5. குருதியில் வெல்லமட்டத்தை கண்டுபிடிக்கும்

2. காபன் பக்கப்பந்து

சமச்சீரான கட்டமைப்பை ஒழுங்குபடுத்தி செய்யப்பட்ட 60C துணக்கைகளைக் கொண் டது. தோற்றத்தில் காற்பந்தின் அமைப்பை கொண்டது.

3. காபன் நனோ ஊதுகுழாய்

அறுகோண வடிவம் கொண்ட CMல் ஆன கூம்பு வடிவம் இதன் மூலம் நனோ இயந்திர மனிதர்களை உருவாக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நனோத் தொழில்நுட்பத்திற்கு அவசியமான கனிப்பொருள் வளம் இலங்கையில் காணப் படுகிறது. காரீயம், அப்பரைற்று, சேர்க் கோன், இல்மனைற்று, மொனோசைற்றுப் படிகம் என்பன இதற்கு உதாரணமாகும்.



காபன் நனோக்குழாய்



காபன் பக்கிபந்து

காபன் நனோ ஊதுகுழாய்

**நனோ தொழில்நுட்பவியலின் பயன்கள்**

1. எரிபொருள் உற்பத்தி – சூரியகலம், ஐதரசன் பொருட்கலம், மீள் மின்னேற் மின்கலங்கள், கலப்பின மின் வாகனங்கள், நனோ மிகை கொள்ளளவி

2. கைத்தொழில்துறை பயன்பாடுகள்
   - நனோ கண்ணாடிகள், நனோ உடைகள் தயாரிப்பு
   - மின்சாதன உற்பத்தி
   - மீள்மின்னேற் மின்கலங்கள்
   - நனோ பொருட்கள் – கட்டிடப் பொருட் கள், ரயர்கள்
   - அதிஉயர் வலிமை கொண்ட பீங்கான் தரை ஓடுகள்
   - நனோ வர்ணப்பூச்சு

3. மருத்துவத்துறை
   - நோய்வராது தடுத்தல் – நுண்ணுயிர் எதிர்க்கவசமிடல், கொல்லித் திரவங்கள் கிருமியளிக்க உதவும் பதார்த்தங்கள் தயாரித்தல், நனோ வடிகட்டிகள்
   - நோயை இனங்காணல் – குருதியமுக் கம், உடல் வெப்பநிலை இதயத் துடிப்பு என்பவற்றை அளப்பதற்கான மருத்துவ உபகரணங்கள்
   - சிகிச்சை அளித்தல் – வலிநீக்கி ஆஸ்துமா நோய்க்கான மருந்துகள், புற்று நோய்க் கான சிகிச்சையளித்தல், நீரிழிவு நோயை கட்டுப்படுத்தல், ஓசுயல ஒளியியல் தொகுதி, நீர்ப்பீடனப் பிரித்தெடுத்தல், செயற்கை என்பு, உயிரியல் ரோபோக் கள்

**நனோத் தொழினுட்பம் நன்மையளித்த போது சில தீமைகளையும் தருகிறது**

நனோத் தொழினுட்பவியலின் விருத்தி மனி தனுக்கும் சூழலுக்கும் ஏற்படுத்தும் பாதிப்புகள்

1. நச்சுத்தன்மையான நனோத் துணிக்கைகள் மண், வளி, நீரில் சேர்ந்து அங்கிளின் உடலை சென்று சுகாதார பிரச்சனை ஏற்படுத்தலாம்.
2. நச்சுத்தன்மையான நனோதுணிக்கைகள் இரசாயன பொருட்கள் உற்பத்தி, இரசாயன ஆயுதங்களாக பயன்படுத்தும் சாத்தியம் உள்ளது.
3. நனோத் துணிக்கைகள் நச்சுத் தன்மை யானவை இவற்றை மருந்தாக உள்ளெடுக் கையில் அவை மூளை, தொண்டைக்குழி, நுரையீரல் போன்ற பாகங்களில் ஒன்று திரண்டு வேறு நோய்களோ உயிர் ஆபத்துக் களோ ஏற்படலாம்.
4. நனோ தொழிநுட்பம் மூலம் எதிர்காலத்தில் நச்சுத் தன்மையான இரசாயனப் பொருட் களை உற்பத்தி செய்து யுத்தத்தின் போது இரசாயன ஆயுதங்களாகப் பயன்படுத்தும் சாத்தியங்கள் உள்ளன.
5. நனோத் தொழினுட்பத்தால் திறன்மிக்க, சக்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ந்த ஆயுதங்களைப் பருமனில் சிறிய தாக மிகவும் குறைந்த செலவில் வடிவமைக் கலாம். இது தனிநபர் நாடுகளின் பாது காப்பை அச்சுறுத்தலாம்.

6. நனோத் தொழினுட்பம் மூலம் மரபனுக்கள் மாற்றியமைக்கப்படலாம். இதனால் உயிரி னங்களின் இயற்கையான வாழ்வியல் மீறப் படலாம். இதனால் ஏற்படப் போகும் விளைவு கள் எதிர்வு கூறப்பட முடியாதன.

எனவே நனோப்பதார்த்தங்களை உற்பத்தி செய்யும் போது ஏற்படும் பக்க விளைவுகளால் தோன்றும் பிரச்சனையை கட்டுப்படுத்த இலங் கையில் முன்கூட்டியே "பொறுப்புள்ள நனோத் தொழினுட்பவியல் மத்திய நிலையம் என்ற நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆய்வுகளும் கண்டுபிடிப்புகளும் களம் அமைத்து கொடுப்பதுடன் மற்றைய நாடுகளுடன் போட்டி யிடச் செய்வதற்கான ஆரம்ப நடவடிக்கையா கவும் இருக்கும் எனவே எதிர்காலத்தில் நனோ தொழினுட்பத்தை நன்மைக்காகப் பயன்படுத்து வோம்.

***வலிமை, உடலினின்று வருவதில்லை. அசைக்க முடியாத மன உறுதியிலிருந்து வருகிறது. நமது மனதின் தூய்மை அதிகமாக இருந்தால், நமது வலிமையும் அதிகமாக இருக்கும். அவ்வளவுக்கவ்வளவு வெற்றி இன்னும் வேகமாகக் கிடைக்கும்.***

– காந்தியடிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை அபிவிருத்திக் குழுக்கள்

**கணிப்பீட்டுக்குழு**

திருமதி.த.சிவலிங்கம்
திரு.செ.இராஜேஸ்வரன்
திரு.சி.இரங்கநாதன்
திருமதி.சீ.கலைவாணி
திருமதி.மி.மன்னவன்
திரு.ம.பிரதீஸ்
திரு.பி.யூட்வில்பிரட்

**தர உள்ளீட்டுக்குழு**

**கொள்வனவுக்குழு**

திரு.சி.முருகானந்தன் (அதிபர், தலைவர்)
திரு.சி.சுதாகரன்
திருமதி.ஜெ.குலேந்திரன்
திருமதி.த.சிவலிங்கம்
திரு.உ.கோகுலன்

**மதிப்பீட்டுக்குழு**

திருமதி.இ.திருநாவுக்கரசு (பிரதி அதிபர்)
திரு.இ.ரமேஸ்குமார்
செல்வன் இ.நிசாந்தன் (மாணவன் உறுப்பினர்)
திருமதி.ஶ்ரீ.இளங்குமரன்
திரு.பி.யூட்வில்பிரட்.

**முகாமைத்துவக்குழு**

திரு.சி.முருகானந்தன் (அதிபர்)
திருமதி.த.சிவலிங்கம்
திருமதி.கோ.சிறீதரன்
திரு.சி.சுதாகரன்
திருமதி.இ.திருநாவுக்கரச
திருமதி.ஶ்ரீ.இளங்குமரன்
திரு.சி.இரங்கநாதன்

**ஒழுக்காற்றுக்குழு**

திரு.சி.முருகானந்தன் – அதிபர்
திரு.இ.ரமேஸ்குமார்
திருமதி.த.சிவலிங்கம்
திரு.உ.கோகுலன்
திருமதி.இ.திருநாவுக்கரசு – பிரதிஅதிபர்
அருட்சகோதரி மேரிறீற்றா
திருமதி.யோ.விஸ்வநாதன்
திரு.க.பிரதீபன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலவசச்சீருடை**

திரு.உ.கோகுலன்

திரு.க.ஜெயக்குமார்

திருமதி.ஜெ.சிவாஜினி

திருமதி.கா.நாளயினி

**இலவசப்பாடநூல்**

திருமதி.ஸ்ரீ.இளங்குமரன்

செல்வி.ந.கவியரசி

திருமதி.சி.ஜெயராஜிதன்

**விளையாட்டுக்குழு**

திருமதி.ஜெ.குமாரகிருஸ்ணன்

திரு.சி.சுதாகரன்

திருமதி.தே.தாரணி

**ஆலோசனையும் வழிகாட்டலும்**

திரு.இ.ரமேஸ்குமார்

திரு.உ.கோகுலன்

திரு.சி.சுதாகரன்

திருமதி.ச.ஜெயக்குமார்

**தமிழ்மன்றம்**

திரு.செ.இராசேஸ்வரன்

திருமதி.சு.நிர்மலன்

செல்வி.பொ.தேவகி

**ஆங்கில மன்றம்**

அருட்சகோதரி மேரிறீற்றா

திருமதி.சி.சிவலோகநாதன்

திருமதி.சி.சிந்துஜா

**சமூக, விஞ்ஞான மன்றம்**

திரு.க.ஜெயக்குமார்

திரு.த.வசந்தநாதன்

திருமதி.த.சிவலிங்கம்

**பரீட்சைக்குழு**

திரு.ம.பிரதீஸ்

திரு.த.ஜெபசுதன்

திருமதி.ஜெ.சேதுகாவலர்

திருமதி.ச.ஜெயக்குமார்

திரு.செ.இராசேஸ்வரன்

**கணித, விஞ்ஞான மன்றம்**

திரு.அ.யோகேஸ்வரன்

திரு.ம.பிரதீஸ்

திரு.பி.யூட்வில்பிரட்

செல்வி.ஆ.லலிதா

**திட்டமிடற்குழு**

அதிபர் சி.முருகானந்தன்

திருமதி.இ.திருநாவுக்கரச

திருமதி.கோ.சிறீதரன்

திருமதி.த.சிவலிங்கம்

**இந்துமாமன்றம்**

திருமதி.மி.மன்னவன்

திருமதி.ஜெ.சேதுகாவலர்

திருமதி.சி.ஜெயராஜிதன்

திருமதி.ஸ்ரீ.இளங்குமரன்

**வகுதித்தலைவர்கள்**

திருமதி.யோ.விஸ்வநாதன் (ஆ.பிரிவு)

திருமதி.ஸ்ரீ.இளங்குமரன் (தரம் 6–8)

திருமதி.கோ.சிறீதரன் (தரம் 9–11)

திருமதி.த.சிவலிங்கம் (தரம் 12–13)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிறிஸ்தவ மன்றம்**
திருமதி.ஜெ.செபக்குமார்
அருட்சகோதரி மேரி றீற்றா
திருமதி.மே.பகீரதன்

**உயர்தர மாணவர் மன்றம்**
திரு.த.ஜெபசுதன்
திரு.க.பிரதீபன்
திருமதி.ம.வானதி
திருமதி.தே.காமினி

**வணிக மன்றம்**
திரு.த.ஜெபசுதன்
திரு.க.பிரதீபன்

**சாரணர் குழு**
திரு.உ.கோகுலன்
திருமதி.கா.நளாயினி
செல்வி.அ.யாழினி

**மதிய உணவு**
திரு.உ.கோகுலன்
திரு.இ.ரமேஸ்குமார்
திருமதி.வி.சிவகுமார்
செல்வன்.பானுசாந் (மாணவன்)
செல்வி.ம.விதுரா (மாணவி)

**பொருட்பதிவு**
திரு.ம.பிரதீஸ்
திருமதி.ஜெ.சர்மிலா

**விளையாட்டுக்குழு**
திருமதி.ஜெ.குமாரகிருஸ்ணன்
திரு.சி.சுதாகரன்
திருமதி.தே.தாரணி

**கலை நிகழ்வுகள்**
திரு.செ.இராஜேஸ்வரன்
திருமதி.ம.வானதி
திருமதி.சுரேஸ்
திருமதி.காமினி
திருமதி.கலைவாணி

**உள்ளக மேற்பார்வை**
திரு.சி.முருகானந்தன் – அதிபர்
திருமதி.இ.திருநாவுக்கரசு – பிரதி அதிபர்
திரு.யோ.விஸ்வநாதன்
திருமதி.கோ.ஶ்ரீதரன்
திருமதி.த.சிவப்பிரகாசம்
திருமதி.ஶ்ரீ.இளங்குமரன்

**மாணவர்தினவரவுப் பதிவேடு**
திருமதி.ஜெ.செபக்குமார்
செல்வி.ச.க.சங்கீதா

**நூலகக்குழு**
செல்வி.பொ.தேவகி
செல்வி.ஆ.லலிதா
திரு.சி.இரங்கநாதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழையமாணவர் சங்கம்

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | திரு.சி.முருகானந்தன் (அதிபர்) |
| 2. | செயலாளர் | திரு.க.பிரகலாதன் |
| 3. | பொருளாளர் | திரு.அ.சஜீவன் |

**உறுப்பினர்கள்**

திரு.இ.விஜயகுமார்

திரு.ந.சண்முகலிங்கம்

திரு.நா.அரவிந்தன்

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்**

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.முருகானந்தன் (அதிபர்) | தலைவர் |
| 2. | திருமதி.இ.திருநாவுக்கரசு (பிரதிஅதிபர்) | உபதலைவர் |
| 3. | திரு.தெ.நிகேதரன் (செயலாளர்) | |
| 4. | திரு.சி.இரங்கநாதன் (பொருளாளர்) | |

**உறுப்பினர்**

1. திரு.நா.இராசசேகரம்
2. திரு.கருணாநிதி
3. திரு.இராமச்சந்திரன்
4. திரு.சி.மணிகலநாதன்
5. 
6. திரு.க.யோகேஸ்வரன்
7. திரு.பா.சந்திரகுமார்
8. திருமதி. கல்பனா
9. திரு. முனீஸ்வரன்
10. திரு.மேரி எமல்டா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசில் தினம்
# 2012
# கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2011 இல் தவணைப் புள்ளி அடிப்படையில் பரிசில் பெறுவோர் விபரம்

**தரம் 1**

அனைத்து மாணவர்களும் பரிசில் பெறுகின்றனர்

**பாடங்களில் உயர்புள்ளி பெற்ற மாணவர்கள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.உதயநிலா | – | தமிழ் | த.ரக்சகன் | – | கணிதம் |
| அ.மரிஸ்ரெலா | – | கணிதம் | கோ.திரிசிகா | – | சுற்றாடல், சமயம் |
| ச.நிஷானா | – | சமயம் | | | |

**தரம் 2AB**

சராசரி 757 இற்கு மேற்புள்ளிகள் பெற்ற மாணவர்கள்

| 2A | 2B |
|---|---|
| 1. ச.கம்சிகா | 1. ப.அகிலன் |
| 2. ச.யதுர்ஷனா | 2. ப.கொட்பிறிஜோயல் |
| 3. உ.தனுசியா | 3. மு.அபிநயன் |
| 4. ந.சங்கீர்ணவி | 4. ம.ஒலிம்பியல் |
| 5. இ.புவில்தன் | 5. ந.ஹரிசாந் |
| 6. ஜெ.அஷ்விதன் | 6. ம.டனுசன் |
| 7. ப.சர்மிலன் | 7. த.சபித்தா |
| 8. இ.யதுர்சினி | 8. கு.மதுசாளினி |
| 9. யோ.அபிஷாந் | 9. பி.தசானிக்கா |
| 10. கே.டிவேனிகா | 10.ச.டனுஷா |

**உயர்புள்ளி பெற்ற மாணவர்கள்**

| | | |
|---|---|---|
| 1. தமிழ், சுற்றாடல் | – | ச.கம்சிகா |
| 2. சமயம் | – | ச.யதுர்சனா |
| 3. கணிதம் | – | மு.அபிநயன் |

**தரம் 3AB**

1. ர.அகநிலா
2. ம.டனோஜா
3. பி.சார்மதி
4. ஜெ.நிதர்சிகன்
5. இ.கிருத்திகா
6. சு.கலைமதி
7. ஜீ.விதுஷா
8. செ.கிஷாளினி
9. தே.ஜக்சன்
10. க.றஜீனா
11. சோ.ருஜிகா
12. இ.மதுஷா
13. செ.வர்ஷாயினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உயர்புள்ளி பெற்ற மாணவர்கள்**

1. தமிழ், சமயம், சுற்றாடல் – ர.அகநிலா
2. கணிதம், ஆங்கிலம் – இ.கிருத்திகா
3. சுற்றாடல் – செ.வர்ஷாயினி

**தரம் 4AB**

1. ஜெ.அக்ஷயா
2. வி.ஷயனவி
3. அ.டிலக்சனா
4. இ.துஷா
5. ச.விபசாரனி

**உயர்புள்ளி பெற்ற மாணவர்கள்**

1. தமிழ், கணிதம், சுற்றாடல் – ஜெ.அக்ஷயா
2. சமயம், ஆங்கிலம் – வி.ஷயனவி

**தரம் 5**

தவனைப்புள்ளி அடிப்படையில் 75% மேல் பெற்றவர்கள்

1. கி.நிலவன்
2. சி.ஜானுயா
3. ர.அபிநயா
4. வி.மதுசனன்

**பாடரீதியாக உயர்புள்ளி பெற் மாணவர்கள்**

1. தமிழ், கணிதம், சமயம் – கி.நிலவன்
2. சுற்றாடல், ஆங்கிலம் – சி.ஜானுயா
3. கத்தோலிக்கசமயம் – அ.ரிலக்ஷன்

## 2010 இல் புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர் விபரம்

1. கமலநாதன் நிலக்சன் – 148
2. சத்தியநாதன் ரிக்ஷாங்கன் – 142
3. அற்புதராசா ரிலக்ஷ்கா – 142

**100 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள்**

1. நிகேதரன் ஜிதுர்சிகன் – 135
2. ஜெகதீஸ்வரன் அனோஜா – 135
3. சின்னராசா திலக்சி – 132
4. அற்புதராஜஸ்ரின்ராஜ் – 127
5. ரகுநாதன் விதுஷா – 124
6. சசிகரன் கிருஷாளினி – 124
7. செல்வநாதன் பிரணவன் – 123
8. சௌஷந்தராஜா சங்கீர்த்தனா – 115
9. அருளானந்தம் கர்சன் – 108
10. நடராசா சியானுகா – 113
11. வரதராசா பிரவீணா – 108
12. குலம் உதயசாளினி – 107
13. தர்மராசா சஜீந்திரன் – 103



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2011 இல் புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர் விபரம்

| | | புள்ளி | மாவட்டம் |
|---|---|---|---|
| 1. | கிருஸ்ணசீலன் நிலவன் | 169 | 15 |
| 2. | விஜயகுமார் மதுசனன் | 160 | 59 |

**100 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள்**

| | | |
|---|---|---|
| 1. | ரவிச்சந்திரன் அபிநயா | 145 |
| 2. | இரவீந்திரன் நோவாப்பிரதீப் | 137 |
| 3. | பரமராஜ் வினுயன் | 135 |
| 4. | அலோசியஸ் விஜயலுட்சிகா | 132 |
| 5. | விவேகானந்தராஜ் விதுஷா | 132 |
| 6. | அன்பழகன் சயந்தன் | 130 |
| 7. | மோகனேஸ்வரன் யதுசன் | 126 |
| 8. | சிவலிங்கம் ஜானுயா | 125 |
| 9. | அற்புதராஜ் ரிலக்ஷன் | 124 |
| 10. | ஜெயச்சந்திரன் கீர்த்திகன் | 122 |
| 11. | கந்தசாமி நிறோஜினி | 121 |
| 12. | அகிலகுமார் திபிசாத் | 120 |
| 13. | குகஞானபண்டிதர் சர்மிலன் | 119 |
| 14. | நவநேசன் கவர்ணா | 105 |
| 15. | மகாலிங்கம் விபூசனா | 103 |
| 16. | கருணாநிதி கோகிலகீதன் | 103 |
| 17. | டார்வின்பேஸ் கீர்த்திகா | 101 |
| 18. | கேதீஸ்வரன் தனுசன் | 101 |
| 19. | கதிர்காமநாதன் நிலவன் | 119 |
| 20. | வசந்தரூபன் சஜீபன் | 122 |
| 21. | பாஸ்கரன் பார்த்தீபன் | 100 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசில் பெறுவோர்

### இடைநிலைப்பிரிவு

2011இல் தவணைப் பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் உயர்புள்ளி பெற்ற மாணவர்கள்

### தரம் 6

1. தமிழ், வரலாறு, நடனம், r.c – அ.ரிலக்சிகா
2. கணிதம், ஆங்கிலம், குடியியல், சங்கீதம் – வி.பிரசாளினி
3. சுகாதாரம், செ.மு.தொழில்நுட்பம் – தி.திலக்சி
4. சமயம் – க.நிலக்ஷன்
5. புவியியல் – இ.பகிர்தன்

### தரம் 7

1. தமிழ், கணிதம் – பு.கிருசாளினி
2. தமிழ் – சு.துவாரகா
3. தமிழ் – கி.பிரியங்கா
4. சமயம் – நா.துர்க்கா
5. வரலாறு – சோ.பிரசாந்
6. புவியியல், சித்திரம் – ம.மோனுஷாந்
7. சங்கீதம் – மோ.மிதுஷா
8. நடனம் – சு.துவாரகா
9. வாழ்க்கைத்தேர்ச்சியும் குடியியல் – யோ.அபிராமி
10. ஆங்கிலம் – இ.அபிரா
11. செ.தொழில்நுட்பம் – வே.கிரிதாகரன்
12. சுகாதாரம், விஞ்ஞானம் – ந.கரீந்திரன்

### தரம் 8

1. சமயம், தமிழ், கணிதம், விஞ்ஞானம்,
   சங்கீதம், சுகாதாரம், குடியியல் – ம.நர்மிஜா
2. வரலாறு – கோ.அபிசன்
3. வரலாறு, புவியியல் – ச.கோசிகன்

### தரம் 9

மாகாண மட்டப் பரீட்சைப் பெறுபேற்று அடிப்படையில் 5A இற்கு மேல் பெற்ற மாணவர்கள்

1. செல்வி ஜீவிதா தயாளன் 11A
2. செல்வன் சந்திரகேரம் அனோயன் 7A
3. செல்வி துர்சிகா கருணாநிதி 7A
4. செல்வி டிசாந்தினி கனகசூரியர் 6A
5. செல்வி சரண்யா சந்திராசா 6A
6. செல்வன் குலேந்திரன் கோவீந்திரன் 5A
7. செல்வன் வன்னியசிங்கம் பிரவிந்தன் 5A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தரம் 10**

| | | | |
|---|---|---|---|
| 1. | தமிழ், கணிதம், விஞ்ஞானம், சங்கீதம், I.C.T | – | ம.யசீதா |
| 2. | சமயம், சங்கீதம், வரலாறு, வணிகம் | – | ஜெ.லோஜனா |
| 3. | சித்திரம் | – | சோ.ரிஷாந்து |
| 4. | இலக்கியநயம் | – | த.டனுசன் |

**க.பொ.த சாதாரணப் பரீட்சை பெறுபேறு - 2011 சித்தியடைந்த மாணவர் விபரம்**

| | மாணவர் விபரம் | பெறுபேறு | | | |
|---|---|---|---|---|---|
| 1. | செல்வன் கோபாலகிருஸ்ணனன் விதுசன் | 6A | B | 2C | |
| 2. | செல்வன் இராசசேகரன் பிரசாத் | 4A | 2B | 2C | S |
| 3. | செல்வன் இறதீஸ்வரன் ஐங்கரன் | 3A | 3B | 2C | S |
| 4. | செல்வன் குமார் அசோக் | A | 2B | 4C | S |
| 5. | செல்வன் ஸ்ரீகந்தராசா அர்ச்சுனா | A | B | C | 4S |
| 6. | செல்வன் விவேகானந்தராஜா தஜீவ் | A | B | 2C | 3S |
| 7. | செல்வி.சின்னராசா ஜெனார்த்தி | 3A | 3B | C | 2S |
| 8. | செல்வி.பரஞ்சோதி ஜீவனி | 3A | 4B | C | |
| 9. | செல்வி.அருளானந்தம் அஜந்தா | 3A | - | 2C | 3S |
| 10. | செல்வி.கிருஷ்ணபகவான் லக்சனா | 2A | 4B | 2C | S |
| 11. | செல்வி.செல்வரத்தினம் கோபிகா | 2A | 3B | 3C | S |
| 12. | செல்வி.அலேசியஸ் கௌசிகா | 2A | 4B | C | S |
| 13. | செல்வி.இராசேந்திரம் அனோஜா | 2A | | 3C | 3S |
| 14. | செல்வி.சர்வானந்தம் சோபிகா | A | 3B | 2C | 2S |
| 15. | செல்வி.தர்மபாலா கேஜினி | A | B | 2C | 3S |
| 16. | செல்வி.நடேசு றஜிதா | A | B | C | 3S |
| 17. | செல்வி.அன்னலிங்கம் லாவண்யா | | 2B | C | 4S |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கா.பொ.த சாதாரணம் - 2010

| | மாணவர் பெயர் | பெறுபேறு | | | |
|---|---|---|---|---|---|
| 1. | செல்வன் ஸ்ரீகரன் பானுசாந் | 7A | - | C | |
| 2. | செல்வன்.நடேசலிங்கம் விஜேந்திரன் | 3A | - | 4C | S |
| 3. | செல்வன்.கணேசலிங்கம் லஜிந்தன் | | B | 6C | 2S |
| 4. | செல்வன் நிமலன் | | B | 6C | S |
| 5. | செல்வன்.சுப்பிரமணியம் கபிலன் | | B | 5C | 2S |
| 6. | செல்வி.முத்துத்தம்பி நிந்துஷா | 3A | 3B | 2C | S |
| 7. | செல்வி.மகாலிங்கம் விதுரா | 3A | 2B | 3C | S |
| 8. | செல்வி.சுப்பிரமணியம் தனுசிகா | 3A | B | 3C | 2S |
| 9. | செல்வி.தெய்வேந்திரம் பிரதா | 3A | 2B | 3C | |
| 10. | செல்வி.கனகலிங்கம் தகிரகா | 2A | B | 5C | |
| 11. | செல்வி.வில்சன்கிளமென்ட் சுகிலா | A | 2B | 4C | 2S |
| 12. | செல்வி.சிவபாதம் சுபாங்கி | A | B | 4C | 2S |
| 13. | செல்வி.தேவராசா ஆன்கிஷானா | A | - | 5C | 2S |
| 14. | செல்வி.சச்சிதானந்தம் சிவகாமி | | 2B | 4C | S |
| 15. | செல்வி. தனுயா | | 2B | 2C | 2S |
| 16. | செல்வி.சவுந்தரலிங்கம் சயானி | | 2B | 2C | 2S |
| 17. | செல்வி.கிருஸ்ணசீலன் விதுஷா | | 2B | 4C | 2S |

## 2012 கலைப்பிரிவு தவணைப்புள்ளி அடிப்படையில் பரிசு பெறுவோர்

| | பாடங்கள் | மாணவர் பெயர் |
|---|---|---|
| 1. | தமிழ் | செல்வி அன்ரன்டயஸ் சகாயராணி |
| 2. | புவியியல் | செல்வி ஸ்ரீகரன் தனுசியா |
| 3. | வரலாறு | செல்வி அன்ரன்டயஸ் சகாயராணி |
| 4. | இந்தசமயம் | செல்வி கனகசபை காயத்திரி |
| 5. | கிறீஸ்தவம் | செல்வி அன்ரன்டயஸ் சகாயராணி |
| 6. | சங்கீதம் | செல்வி நடராசா குந்தவி |

## 2013 கலைப்பிரிவு

| | பாடங்கள் | மாணவர் பெயர் |
|---|---|---|
| 1. | தமிழ் | செல்வி கதிர்காமநாதன் ஜிந்துஜா |
| 2. | புவியியல் | செல்வன் இராஜேந்திரன் தினேஸ் |
| 3. | வரலாறு<br>இந்துசமயம் | செல்வி.செல்வராசா தர்சிகா |
| 4. | நடனம் | செல்வி.மதியழகன் மேதுசா |
| 5. | சங்கீதம் | செல்வி.சிவகுமார் சுபாங்கி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. சித்திரம் — செல்வி.சந்திரலேகா பிரியா
7. நாடகமும் அரங்கியலும் — செல்வி.செல்வராசா தர்சிகா

## 2010 பல்கலைக்கழகம் அனுமதி பெற்றோர்

| மாணவர் பெயர் | பெறுபேறு | | | மாவட்டநிலை |
|---|---|---|---|---|
| செல்வன் யோகராஜா றஜீவன் | A | B | C | 9 |
| செல்வன் நடராஜா ஶ்ரீவிடங்கன் | B | C | S | 65 |
| செல்வன் பொன்னையா சுரேந்திரன் | 3B | | | 51 |
| செல்வன் சபாபதிப்பிள்ளை அர்ச்சுனா | 2A | B | | 05 |
| செல்வன் முத்துநாயகம் அபிராமி | 2A | B | | 03 |
| செல்வி சிவலிங்கம் தீபிகா | A | 2B | | 29 |
| செல்வி கெங்கெஸ்வரன் பிரிந்திகா | 2B | C | | |
| செல்வி கணேசலிங்கம் அமலினி | 2C | S | | |

## 2011 பல்கலைக்கழகம் அனுமதி பெற்றோர்

| மாணவர் பெயர் | பெறுபேறு | | மாவட்ட நிலை |
|---|---|---|---|
| செல்வன் செல்வச்சந்திரன் நிரோஜன் | 2A | S | 19 |
| செல்வன் கோடீஸ்வரன் அஜந்தன் | B | 2C | 46 |
| செல்வி யோகேஸ்வரன் ஜெயதுவாரணி | B | 2C | 36 |
| செல்வி கி.விசிவந்தி | 2B | C | |

## 2009இல் பல்கலைக்கழக அனுமதி பெற்றோர்

| மாணவர் பெயர் | பெறுபேறு | | | மாவட்டநிலை |
|---|---|---|---|---|
| செல்வன் பரமசாமி புகிலன் | 2A | B | | 2 |
| செல்வன் கந்தசாமி ஆதித்தன் | | B | 2C | 17 |
| செல்வன் சுவேதசர்மா யதுகரன் | 2A | C | | 13 |
| செல்வன் ரட்ணம் குலேபா | | B | 2C | 35 |
| செல்வன் லோகேஸ்வரன் ஜீவதாஸ் | | B | 2C | 10 |
| செல்வன் பொன்னையா கஜன் | | 2A | C | 2 |
| செல்வி திருநாவுக்கரசு நிஷாளினி | 2A | B | | 3 |
| செல்வி முத்துநாயகம் துர்காஜினி | | 3B | | 3 |
| செல்வி மகாலிங்கம் கஸ்தூரி | A | B | C | 36 |
| செல்வி யாசோதா | | 2B | | 12 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

**"திணைத்துணை நன்றி செயினும் பனைத் துணையாக்**

**கொள்வர் பயன் தெரிவார்"**

எனும் வள்ளுவன் வாக்குக்கு ஏற்ப இந்த மடலை வெளியிடுவதற்கு சகல வழிகளிலும் ஒத்துழைப்புத் நல்கிய அனைத்து உள்ளங்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

இராமாமிர்தத்தை வெளியிடுவதற்கு முழுமூச்சுடன் உழைத்த மதிப்பிற்குரிய அதிபர் அவர்கட்கு எம் இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். அவருடன் இணைந்து மலர் மணம் பரப்ப பணி செய்த ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றிகள் பற்பல.

மேலும்· இராமாமிர்தத்தை மெருகூட்டும் வகையில் காத்திரமான கருத்துக்களுடனும் பல்சுவையுடனும் ஆக்கங்களை மனமுவந்து ஆக்கித் தந்த அனைவருக்கும் அன்பு கனிந்த நன்றிகள் உரித்தாகட்டும். நூலை வாழ்த்தி ஆசி வழங்கிய அனைத்து உள்ளங்களுக்கும் மனம் நிறைந்த நன்றிகளைக் கூறுகின்றோம்.

அமிர்தத்தை மிளிரச் செய்வதற்கு ஒவ்வொரு ஆசிரியர்களதும் மாணவர்களதும் ஆக்கங்களை சேகரித்து ஒழுங்குபடுத்தி சஞ்சிகை வடிவில் கொண்டு வரும் பொறுப்பாசிரியர், இதழாசிரியர் குழுவிற்கும் நிதியுதவி வழங்கிய அனைத்து உள்ளங்களுக்கும் நன்றிகளை தெரிவிப்பதுடன் எல்லா வழிகளிலும் உதவிய பழைய மாணவர் சங்கத்திற்கும், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கும் மற்றும் பெற்றோர், நலன்விரும்பிகள், பரிசுப் பொதிகள் தந்துவிய உள்ளங்களுக்கும், போட்டோப்பிரதிகளை தந்துவிய தாசன் ஸ்ரூடியோ உரிமையாளரிற்கும், இவ் விதழை அழகுற உதவிய மதி கலர்ஸ் பதிப்பகத்தினருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதுடன்

எமது இக்கையேடு திக்கெட்டும் பிரகாசிக்க பல்வேறு வழிகளிலும் உதவியும், ஆக்கமும், ஊக்கமும் தந்து நின்ற அனைத்து அன்பர்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகள் மீண்டும் மீண்டும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**செயலாளர்**

**திருமதி. ப. சத்தியநாதன்**

**ஆசிரியர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சமைப்பு : மதி கலர்ஸ் நல்லூர்.
0212229285

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org